# காலந்தோறும் பெண்

ராஜம்கிருஷ்ணன்



தாகம்

# காலந்தோறும் பெண்

(சமூகவியல் ஆய்வு)

ராஜம் கிருஷ்ணன்


தாகம்

ஃப்ளாட் எண் G3/8, மாசிலாமணி தெரு
பாண்டி பஜார் தி. நகர் சென்னை—600 017
✆ 434 5904

மின் அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

வெப் தளம் : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

**காலந்தோறும் பெண்** (சமூகவியல் ஆய்வு)

| | | | |
|---|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஜூன், | 1989 |
| இரண்டாம் பதிப்பு | : | டிசம்பர், | 1991 |
| மூன்றாம் பதிப்பு | : | ஜூன், | 1994 |
| நான்காம் பதிப்பு | : | டிசம்பர், | 2000 |
| ஐந்தாம் பதிப்பு | : | மே, | 2002 |

**விலை : ரூ. 55.00**

KALANTHORUM PEN
by **RAJAM KRISHNAN**

© Rajam Krishnan

Fifth Edition : May, 2002
Pages : 192
Cover design : **K. UMA**
Inner illustrations : CHANDRU

●

**DHAGAM**
G-3 /8, Masilamani Street
Pondy Bazaar, T. Nagar
Chennai - 600 017
✆ 434 5904

E-Mail : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

Website : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

PRICE : **Rs. 55-00**

Typest at : Nehru Achagam, Chennai
Printed at : Jaiganesh Offset Printers, Chennai - 4

# இந்தப் புத்தகம்

ஒரு படைப்பாளி தன் சமூகப் பொறுப்பை உணர்ந்து தான் சொல்ல விரும்பிய கருத்தின் வீச்சுக்கேற்ப படைப்பு வடிவை நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை என உருவாக்கிக்கொள்கிறான்.

காலங்காலமாக மரபு வழி பின்பற்றப்பட்டு வந்த பெண் பற்றிய சிந்தனைகளை, செயற்பாடுகளை இங்கு ஆய்வுக் கட்டுரை வடிவில் அலசி ஆராய்கிறார் திருமதி ராஜம் கிருஷ்ணன்.

'பெண் சுதந்திரம்' பற்றிப் பரவலாக மேடைதோறும் உச்ச தொனியில் பேசப்பட்டு வரும் இந்நாளில் ஆழமான பார்வையில் படைக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம். "இலட்சியப்பெண்" இதழில் தொடரப்பட்ட இந்தக் கட்டுரைத் தொடரை முழுவதுமாக நூல் வடிவில் வடித்துத் தந்த ராஜம் கிருஷ்ணன் அவர்கட்கு எமது நன்றி.

உள் ஓவியங்களுடன் இந்நூல் வெளி வருவதற்கு உதவிய டாக்டர் ஜகதீசன், பாரதி ஆகியோருக்கும் நன்றி.

"இலட்சியப் பெண்" இதழில் வெளிவந்த தனது ஓவியங்களை இந்நூலில் பயன்படுத்திக்கொள்ள இசைவு தந்த ஓவியர் திரு. சந்துருவுக்கும் முகப்போவியம் வரைந்தளித்த ஓவியர் க. உமாவிற்கும் எமது நன்றி.

அகிலன் கண்ணன்

தாகம்

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 5 |
| 2. | பெண்ணுக்கு மட்டும் | 12 |
| 3. | சிறகா பொற்கூண்டா? | 21 |
| 4. | வேதத்தில் என்ன இருக்கிறது? | 29 |
| 5. | சுதந்திரத் தாய்—கற்பு விலங்கு | 35 |
| 6. | பட்டைக் கண்ணாடியும் பட்டுக் கறுப்பும் | 42 |
| 7. | கல்வி—வாழ்க்கை விபத்து | 49 |
| 8. | சநாதனத்தின் முரண்பாடுகள் | 55 |
| 9. | வருண பேதங்கள் | 62 |
| 10. | குரு பீடங்கள் | 70 |
| 11. | முன்னுச்சி வகிற்றுக் குங்குமம் தீற்றல்-அடிமைப் பெண் அடையாளம் | 76 |
| 12. | குங்குமச் சின்னம்—பொட்டும் கலையும் | 82 |
| 13. | திருவிளக்குப் பூசையில் கரையாத இருட்டு | 87 |
| 14. | வேத(அ)தர்ம பரிபாலனங்கள் | 95 |
| 15. | ஒடுக்கல் சாத்திரத்தில் ஒப்பனைக் கருவிகள் | 102 |
| 16. | புராணப் புதைகுழியில் மூடப்படும் நட்சத்திரங்கள் | 109 |
| 17. | கீதை ஒளியில் பெண்(சு)தருமம் | 116 |
| 18. | காப்பாளரும் கைவிடப்பட்ட கற்பரசிகளும் | 123 |
| 19. | சதி புராணம் | 129 |
| 20. | வரதட்சணை மகாத்மியம் | 136 |
| 21. | காதல்—சூதாட்டத் துருப்புச்சீட்டா? | 142 |
| 22. | சுமங்கலியும்—பத்துப் புத்திரர்களும் | 149 |
| 23. | சப்தபதித் தோழமை | 159 |
| 24. | வினா—விடை—அச்சுறுத்தல் | 167 |
| 25. | பொருளுரிமைக்காரி பொருளேயானாள் | 175 |
| 26. | விழிமின்! எழுமின்! | 184 |

# காலந்தோறும் பெண்

## 1. அறிமுகம்

'காலந்தோறும்.......பெண்' என்ற தலைப்பில் மக்கள் சமுதாயத்தில் சரிபாதியாக விளங்கும் ஒருபாலரை மையமாக்கி, ஒரு சமுதாய வரலாற்றுப் பின்னணியை ஆராய வேண்டும் என்ற ஓர் உந்துதல் என்னுள் பல நாட்களாகவே முகிழ்த்து, செயலாக்கமாகப் பரிணமித்திருக்கிறது.

படைப்பிலக்கியத் துறையில், முன்பின் என்ற எந்தத் தூலமான தாக்கமும் இருந்திராத நிலையில் தானாகப் பேனாவை எடுத்து விழுந்தும் எழுந்தும் முட்டியும் ஒரு நாற்பதாண்டுக் காலத்தை ஓட்டியிருக்கும் அனுபவம் ஒன்றே என்னுள் முகிழ்த்த உந்துதலுக்கு உரமாகத் துணிவூட்ட இந்தப் புதிய பாதையில் கண்ணோட்டமிடுகிறேன். இது தீர்ந்த ஆராய்ச்சி அன்று எனினும், ஆராய்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்பது அவா.

'கதாசிரியர்கள் அறிவாளிகளாக இருக்க வேண்டு மென்பது அவசியமில்லை; அதுவும் பெண் எழுத்தாளரை அந்த வருக்கத்தில் உட்படுத்த வேண்டியதில்லை!' என்ற ஒரு கருத்து, பத்து ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பெண் எழுத்தாளர் மாநாடு ஒன்றில் 'அறிவார்ந்த பெண்கள்' சிலரிடையே விவாதத்துக்குரியதாக அலசப்பட்டது. அதுகாறும், இப்படி ஒரு கருத்து படைப்பிலக்கியக்காரியான என்னுள் வலிமையான தாக்கத்தை உண்டுபண்ணக்கூடும் என்று நான் சிந்தித்திருக்கவில்லை.

'அவளும் அவனும் பார்த்தார்கள்; காதலித்தார்கள்; கல்யாணம் ஆயிற்று. மாமியார், நாத்தனார் குடும்பத் தகராறுகள் வந்தன என்ற மாதிரியில் கதை பின்னுவதற்கு, அறிவார்ந்த சிந்தனைகள் தேவையில்லை; கண்ணீரை வரவழைக்கவும், மனமுருகச் செய்யவும் உணர்வூக்கிகளே போதும்' என்ற கருத்தை வைத்து, ஒரு பேராசிரியப் பெண்மணி விவாதம் செய்தார். நான் அந்தப் பேராசிரிய அறிஞர் பெண்மணிகளின் விவாதத்தில் கலந்து கொள்ள வில்லை. வெறும் பார்வையாளராகவே அமர்ந்திருந்தேன். இந்தக் கருத்து எனக்கு முற்றிலும் புதிதன்றுதான்.

பெண் எழுத்தாளரிடம் அறிவுபூர்வமாகச் சிந்தனைகளோ தர்க்கரீதியான கருத்தாராய்வுகளையோ எதிர்பார்ப்பதற்கில்லை என்று நமது தமிழ்நாட்டின் புகழ்பெற்ற இலக்கிய விமரிசக மேதைகள் சிலர், தீர்த்திருக்கிறார்கள்.

அலுவலகத்திலிருந்து கணவன் களைத்து வருவதை எதிர்பார்த்துக் கையில் மணமிகுந்த காபியை வைத்துக் கொண்டு காத்திருக்கும் மனைவியைச் சித்தரிப்பதுதான் அவர்களுக்குப் பொருத்தமான இலக்கியம் என்று ஒரு முடிவை, அந்தத் தீர்ப்பில் அவர்கள் குஞ்சம் கட்டிவிட்டாற் போல் எனக்குத் தோன்றியிராமல் இல்லை.

என்னை நானே அலசிப் பார்த்துக்கொள்ளும் அவசியம்கூட நேரிட்டது.

கதைதான் எழுதுகிறோம் என்றாலும், நிகழ்ச்சிகளைக் கோத்து, பிரச்சினைகளை மோதவிட்டு, கதை மாந்தர்களை உயிரும் வடிவுமாக உலவ விடுகையில் , இயங்க வைக்கையில், ஓர் இலக்கியப் படைப்பாளியின் படைப்பு அவஸ்தையில், பங்கேற்பது இந்த உணர்ச்சி நெகிழ்ச்சி அம்சங்கள் மட்டும்தானா? அசலிலிருந்து நகலின் பிரதியெடுக்கையில், மூலமான வாழ்க்கையில் யதார்த்தங்களிலிருந்து படிவங்களை ஒரு படைப்பாளி நேர்ந்து கைக்கொள்ளுகையில், கோத்து

வைத்த அணியாரங்களை வார்த்தைச் சட்டங்களில் பொருத்தி அந்தப் படிவங்களை மாட்டிவிடுவது படைப்புதான் என்றால், ஏன், எதற்காக என்ற சிந்தனை தேவையே இல்லையா? கண்ணீரும் பேரிரக்கமும்தான் வெற்றிகரமான படைப்புக்குரிய அம்சங்களா? பிரச்சினைகளை, வாழ்க்கையின் குறுக்கு வெட்டுப் பதிவினூடே, யதார்த்தபூர்வமாகப் பிரதிபலிக்கச் செய்கையில், அந்தப் பிரச்னைகளின் களம், கனம் காரண காரியங்கள் ஆகிய அம்சங்கள் ஆராயப்பட வேண்டியவை அல்லவா?

ஒரு பெண் அடாங்காப்பிடாரியாக இருக்கிறாள்; வம்பு பேசுகிறாள்; புருஷனுக்கு நஞ்சூட்டுகிறாள்; தீமையே வடிவானவளாக இருக்கிறாள். உண்மையிலே இப்படி ஒரு பெண் இருந்தாலும், அத்தகைய ஒரு பாத்திரத்தைத் தன் படைப்பில் கொண்டுவரும் ஓர் இலக்கிய ஆசிரியர் அவள் ஏன் அந்தமாதிரி ஆனாள் என்று ஒரு சிந்தனையைக் காட்ட வேண்டாமா? (இப்போதெல்லாம், இந்த ஏன் கேள்வி, ஒரு பெண்ணை உடலை வைத்துப் பிழைக்கவோ, பழி தீர்க்கவோ மட்டும் ஆராயப்பட்டு, நியாயப்படுத்தப்பட்டு, அமர்க்களமாக ஆதரவையும் புகழையும் பெற்று ஆசிரியருக்கு விருதுகளை எல்லாம் தேடிக் கொடுக்கின்றன.

அறிவுபூர்வமான சிந்தனை, பெண்ணை வழுக்கி விழும் நிலைக்கு நியாயப்படுத்துவதற்கு மட்டும் உதவாமல் அவள் ஏன் வாயாடியாக, வம்பு பேசுபவளாக, பொறாமைக்காரியாக உருவாகிறாள் என்ற மாதிரியான கோணங்களில் செயல்படாமல் அவள் தன்மைகளுக்கு அப்படியே ஓர் அரக்கு முத்திரையைக் குத்தி, நடைமுறைப் பெண் நெறியாக நிலையாக்கப்பட்டிருக்கிறதே?

பெண்ணாவது மாயப்பிசாசு, சும்மா இருக்கும் ஆணின் மனசில் மோகப் பாம்பாக வந்து சுருண்டு அவனைக் குதறிவிடும் பேய். அவனுடைய (ஆன்மீக) உயர்வை

எஞ்ஞான்றும் அநுமதிக்காமல் தடைக்கல்லாக வழியில் குறுக்கிடும் நாசச் சக்தி. அவளை எந்த நிலையிலும் நம்பலாகாது, இரகசியங்களை வைத்துக்கொள்ளத் தகுதியற்றவள் என்றெல்லாம் பெண்ணின் இருண்ட பரிணாமங்களைத் தாங்கும் அணிமொழிகள் ஏராளம், ஏராளமாகப் புனையப்பெற்று, நெறிப்படுத்தப் பெற்று, பெண்களாலேயே 'பெருமையுடன்' ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இதனால், ஒழுக்கம் என்று பேசப்படும்போது, பொது வாழ்க்கை என்று பேசப்படும்போது, அதில் பங்கேற்கும் இரு பாலருக்கும் உரியதாக வேண்டிய பொறுப்பில் பழிப் பொறுப்பு மட்டும் பெண்ணிடமே சுமத்தப்படும் நியதியும் காலம் காலமாக வலிமை பெற்று அசைக்க முடியாத அரணாக உறுதி பெற்றிருக்கிறது.

இது ஏன்?

பெண்—ஆண் என்று குறிப்பிடும்போது, இருவரும் மனிதப்பிறவிகள். இது நல்லது, இது உகந்ததல்ல என்று பகுத்தறியும் பாங்கு ஆறாவது அறிவாக மனிதப் பிறவிக்கு உரித்தாக்கப்பட்டிருக்கிறது.

அறிவும் மதிநுட்பமும் மிகுந்த ஆற்றல் பெருகுவதனால், இன்பமும் துன்பமும் அதிகமாக உணரப்படுகின்றன.

ஒரு சமயம் ஒரு போரில் பின்வாங்கிய இராணுவப் படையினரிடையே மருத்துவ அறிஞர் ஒருவரும் இருந்தாராம். வருவதை ஏற்றுக்கொண்டு தலைவனின் ஆணைப்படி பின் வாங்கிய படையினர், வழி தெரியாக் கானகங்களிலும், மலைப் பிரதேசங்களிலும் நடக்கையில், மருத்துவ அறிஞரோ, ஒவ்வொரு நிமிடத்திலும், மரணத்தின் திகிலை அனு பவித்தாராம். முடிவில், எவரேனும் ஒரு வீரரைத் தன்னைச் சுட்டுக் கொன்றுவிடும்படி கெஞ்சும் அளவுக்கு பசியும், களைப்பும் மேலிட சித்திரவதையை அனுபவித்தாராம். ஒருவரிடமும் அதற்கும் துப்பாக்கிக் குண்டுகள் இல்லை. அவர்

அந்த கிலியிலிருந்து விடுபடாமலேயே மாண்டுபோக, ஏனைய வீரர் பத்திரமாக உயிர் பிழைத்து, மீண்டார்களாம்.

இதேபோல், அறிவின் வாயிலாகத்தான் இன்பங்களையும் நுட்பமாக ரசிக்க முடிகிறது என்றால் தவறில்லை. தன்னை மறந்து ஓர் இயற்கை காட்சியை ஒரு முழு மூடனால் நுட்பமாக இரசிக்க இயலாதுதான். கலாரசனைக்கும் அறிவின் முழு மலர்ச்சிதான் துணை செய்கிறது.

இதுமட்டுமின்றி, வாழ்க்கையில் இன்ப—துன்ப உணர்வுகளுக்கு அதிகமாக வசப்பட்டுத் தன்னை இழக்காமல் அமைதியுடன் எதையும் ஏற்கும் மனப்பண்பு, அல்லது விவேகமும், அறிவினால்தான் சாத்தியமாகிறது.

இந்த உண்மையான படிக்கற்களை வைத்து ஆண் பெண் சமத்துவத்தை நோக்குங்கால், பெண்ணின் தரம் மிகத் தாழ்ந்து நிற்கிறது. அவள் தூலமாகவும் சூக்குமமாகவும் தன் அறிவாற்றலைக் கட்டுப்படுத்தும் சக்திகளை அறியா தவளாகவே இருக்கிறாள்.

'சவரன்' அவளோடு கூடினாலே அவளுக்கு மதிப்பு உண்டாகிறது. இல்லையேல் எந்த இலக்கமும் இல்லாத பூஜ்யமாகவே அவள் மதிப்பிழந்து நிற்கிறாள்.

சமுதாயத்தின் உற்பத்திக்கான சக்தியாகத் திகழும் அவளுடைய நிலையை இன்றைய சமுதாய அமைப்பின் ஆதிக்கக் கோட்பாடுகள் நாலியும் பீலியுமாகக் குதறி எறிய முற்பட்டிருந்தும் ஒரு வார்த்தை கேட்கத் தெரியாதவளாகவே இருக்கிறாள். உயிரற்ற அணிகளால் கவர்ச்சி என்ற பொய்மையைத் தன்னில் ஏற்றிக்கொள்வதையே நல்வாழ்வுக்கான சாயுச்சியம் என்று கருதி, அதற்காகத் தனது ஏனைய மேன்மை நலங்களைப் பணயமாக்க அவள் தயங்குவதில்லை. கற்பொழுக்கம் என்ற கோலினால் அவளைக் குற்றுயிராக அடித்துக் குப்பையில் தள்ளினாலும், அந்த

அடியை உவந்து ஏற்றுக்கொள்வது போல் தலை வணங்குவதுடன், குப்பையிலும் தானே வீழ்ந்ததாக, அந்தப் பழியையும் குற்ற உணர்வையும் தானே சுமக்கிறாள். இவளுக்கு அறிவு இருக்கிறது. ஆனால் அது இயங்குவது நின்று எத்தனையோ காலமாகிவிட்டது. அதில் இயற்கையான உயிரோட்டம் கிடையாது. குதிரைச் சேணம் போல் அவளுடைய அறிவுக் கண்களும் சேணம் சுமக்கின்றன. அந்தச் சேணங்களின் பார்வைக்கு உட்பட்டு, அவளது இயற்கையான ஆளுமை மலர்ச்சி குறுக்கப்பட்டு—

ஏன் இந்த நிலை?

இந்த முடக்கம் எப்படி நேர்ந்தது?

ஒவ்வொரு படிக்கட்டிலும் இவளது அறிவியக்க மலர்ச்சி கட்டுப்படுத்தப்படுவது எதற்காக?

இவள் தன்னைத்தானே உணர இயலாதபடி, பிறவி எடுத்த நாளிலிருந்து ஒருவனுக்காக என்ற கருத்தைச் சுமக்க வைப்பதன் காரணம் என்ன?

பண்பாடு, கலாச்சாரம், சமய மரபுகள் என்றெல்லாம் இனம் புரியாத, தெளிவில்லாத பாசிக் கட்டையை இவளுக்கு உரித்தாக்கி, உயர் கல்வி, அறிவாற்றல், பல துறை ஆய்வுப் பயிற்சிகள், ஆன்மீக நெறியின் சாதனைகள் என்று விரிந்த எல்லைகளில் ஆணுக்குச் சாசனம் பண்ணிக் கொடுத்திருக்கும் முறையும் நெறிகளும் எப்போது, எப்படி யாரால் ஏற்படுத்தப்பட்டன?

இவளுக்குக் கல்வியும் ஏனைய பிற சலுகைகளும் அளித்திருப்பதாக ஆண் சமுதாய அரசியலமைப்பு, தன் பெருந்தன்மையையும் கருணையையும் பறையடித்துக் கொண்டிருந்தும் பாசிக் குட்டையின் சேற்றிலிருந்து விடுபடாத நிலையிலேயே இருப்பது ஏன்?

பாசிக்குட்டை, தன்னை எப்படிப் பிணிக்கிறது? சேற்று மொத்தையா, பளிங்கில் மூடிய குப்பைக் கசடுகளா

என்பதைக்கூடச் சிந்திக்கத் தெரியாதவளா? இல்லை. பாசிக்குட்டையே பத்திரம்; இதுவே எழில் மாளிகை. கல்வி, சமத்துவம் என்று வெளி உலகை எட்டிப் பார்த்தாலும், இதன் நிழலில் பணிந்து நிற்பதே மோட்ச சாம்ராச்சியம் என்று அவளுக்கு நாள்தோறும் பல்வேறு சாதனங்கள் உள்ளுணர்வில் போதனை ஏற்றிக்கொண்டிருக்கிறது.

அந்நாள் நீதிநெறிக் கதைகள், புராணங்கள் அவள் அறிவைச் சுயமலர்ச்சியும் இயற்கையான மேன்மைகளும் பெற இயலாமல் போதனை ஏற்றின. முதியோர் வாய்மொழியாக, ஆணைகளாக, செயல்முறைகளாக அவளுக்கு உருவேற்றின.

இந்நாள் பெண் 'கல்வி' பெற்றிருக்கிறாள். எனவே, இதே போதனைகளை, உருவேற்றல்களை, நவீனமான சாதனங்கள் செய்துகொண்டிருக்கின்றன. பத்திரிகைகள், திரைப்படங்கள், தொலைக்காட்சி சாதனங்கள், மிகவும் வலிமையுடன், மிகவும் மென்மையுடன் பெண்களையே குறிப்பாக்கி அதே உருவேற்றல்களை வெற்றிகரமாகச் செலுத்திக்கொண்டிருக்கின்றன.

எனவே, இந்தப் பாசிக்குட்டையைத் துழாவுவது அவசியம் என்று படுகிறது. ஆணும் பெண்ணும் சமமாகப் பிறந்த மனிதப் பிறவிகளாக இருக்கையில் இவள் மட்டும் எப்படித் தன்னைச் சுற்றி ஒரு பாசிக்குட்டையை வளரவிட அனுமதித்து, அதனின்றும் விடுபடாமல், விடுபட இயலாமல் விடுபடும் எண்ணமே தேவையில்லை என்று பின்னடைந்து அறிவில்லாத சதைவடிவம் என்று தன்னை முடக்கிக்கொண்டாள் என்று பார்க்க வேண்டும்.

வரலாற்று உண்மைகளை அறிவார்ந்து—ஆழ்ந்து துருவிப் பார்க்க வேண்டும். வரலாற்றுச் சிதிலங்கள், புராணப் பாசிகளில், உருவிழந்த மொத்தைகளாகப் போயிருக்கின்றன. ஆராய்ந்த அறிவியலார் ஏற்கனவே கண்ட சான்றுகள், இந்த நமது பக்கப் பார்வைக்கு உதவுமா என்பது ஐயம்.

அறிவுக் கண்கள் சமையலறை இருட்டிலும், பிள்ளைப் பேற்று அறையிலும் குருடாக்கப் பெற்ற காலங்களில் எத்தனை 'ஆதாரங்கள்' மாற்றப்பட்டனவோ? திருத்தப்பட்டனவோ? .

எனினும், ஆராய்ச்சி அறிவுப் பாதையில் பட்டறிவு பெற்றிராத நான், எங்கேனும் கிடைக்கக்கூடிய, ஆதாரங்களைத் தேடிப் பற்றிக்கொள்ள முற்பட்டு, உங்களுடன் சேர்ந்து சிந்திக்கத் துணிகிறேன்.

இந்தத் துணிவுக்கு, ஆதாரங்களைக் காட்டிலும் 'பிரத்தியட்சங்கள்' விளக்கமாக உறுதியளிக்கின்றன.

கரைகாணாக் கடலில் பயணம் செய்கையில், கடல்நீரில், செடி, கொடிகள், நிலத்தாவரங்களின் சான்றுகள் காணப்பட்டால் நிச்சயமாகக் கரை இருக்கிறதென்றுதானே பொருள்.

'பாவங்களுக்கு மன்னியுங்கள்!' என்று பிரார்த்தனை வருமானால், மனிதன் மனச்சாட்சிக்கு மாறாகச் செயல்புரியத் துவங்கிவிட்டான் என்பதுதானே உண்மை!

காலந்தோறும் பெண்ணின் நிலைபற்றிய இந்தத் தேடல் முயற்சிக்கும், இத்தகைய கண் உறுத்தும் தடயங்களே ஆதாரங்களாகப் பற்றிக்கொள்ளச் செய்கின்றன.

முதல் சான்று—

## 2. பெண்ணுக்கு மட்டும்

கடவுள் வாழ்த்தை வலியுறுத்தும் பத்துக் குறட்பாக் களையும் படிக்கிறோம். வாலறிவன் நற்றாள் தொழார் எனின் பெற்ற கல்வியும் பயனில்லை. தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தாற் கல்லால்— பிறவாழி நீந்தலறிது. தர்மங்கள் நிறைந்த சமுத்திரம் போன்ற பகவானிடம் சரணாகதி அடைபவர்களைத் தவிர, மற்றவர் உலகத் துன்பங்களை நீந்தி வெல்ல முடியாது.

இப்படிப் படிக்கையில் ஆண்—பெண் இரு பாலருக்குமே பொதுவாக இருப்பது போல் ஒரு பிரமை உண்டாகிறது.

அடுத்தாற்போல் வாழ்க்கைத் துணை நலம் அதிகாரத்தைப் புரட்டுவோம்.

*தெய்வந் தொழாஅள், கொழு நற்றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை.*

*தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

"பெண்ணே! உனக்குக் கொழுநன்தானே வாழ்வு? அவன் உயிரோடு இருப்பது ஒன்றில்தானே உன்னுடைய வாழ்க்கையே தொக்கிக் கொண்டிருக்கிறது? அதனால் அவனையே தெய்வமாகத் தொழு, உனக்கு அதுவே வாலறிவன் நற்றாள். அறவாழி அந்தணன்தான் மற்றும் எல்லாமும்"—என்று அல்லவா சொல்லப்படுகிறது?

ஆனால் இதையே ஆணையாகச் சொல்லாமல், விளக்கெண்ணெய் குடிக்க குழந்தைக்கு ஆசை காட்டுவது போல் இவர்களுக்கு ஒரு பூவாரம் சாத்தப்படுகிறது. 'ராஜாவாச்சே! ஜில்லுன்னு இதைக் குடிச்சிட்டு சர்க்கரையை வாங்கிட்டுக் குதிப்பாளே?' என்று சொல்வது போல, 'உன் கொழுநனைத் தொழுவது ஒன்றைச் செய்தால், நீ மழை பெய் என்று சொன்னாலே பெய்யுமடி' என்ற ஒரு பொய்யாரம் மென்மையாகச் சாத்தப்பட்டு இவளுடைய அறிவை மறைக்கும் முட்டாள்தனத்துக்கு ஒரு பட்டுப் போர்வை போர்த்தப் படுகிறது.

'தற்கொண்டான் பேணி' என்ற தொடரே, ஒருவனுக்கு உடைமைப்பொருளாவது நியாயப்படுத்தப்படுகிறது.

'மூத்த பொய்ம்மை' என்ற சொற்றொடரே மனசில் மின்னுகிறது. ஓர் ஆணைச் சார்ந்து அவனில் தன்னைக் கரைக்க, உடல் பொருள் ஆவி அனைத்தையும் இழக்க வேண்டும் என்ற ஒரு பக்க நியாயம் நெறியாக இந்தப் பெயர் பெற்ற உலகப் பொதுமறை நூலில் வலியுறுத்தப்படுகிறது.

பெண்ணின் முழு அறிவு, ஆற்றல், ஆளுமைச் சிறப்பு எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவது கற்பு நெறி, என்ற அழுத்தமான ஓர் ஒழுக்க வளையம்தான் என்பது கூர்ந்து சிந்தித்தால் புலனாகிறது. மணவாழ்வு என்பது, வாழ்வின் இன்பங்களும், பயன்களும் ஆணுக்கே உரித்தாக்கி அதன் கடுமைகளையும், துன்பங்களையும் பெண்ணுக்கு உரியவை என்று ஒதுக்கிவிடும். ஒரு நெறியைப் பெண்ணிற்கு விதிக்கிறது. இந்த விதிக்கு மாறாக அவள் நினைத்தாளேயானால், கற்புக்குப் பங்கம் விளைவித்துக் கொள்கிறாள். பெண்ணுக்கு உயிரையும் விடப் பெரிதாகப் போற்றிக் காக்க வேண்டியது இந்த ஒழுக்கப் பண்பு என்பதை விளக்க, எத்தனையோ கதை, புராணங்கள், வழக்கங்கள், சடங்குகள் அவளுக்கு வலியுறுத்தப்படுகின்றன.

குரூபியான கணவன், தொழுநோய் கண்டு அழுகிச் சொட்டுபவன், அவளை அடித்து இம்சித்து நாள்தோறும் அவள் கண்முன் வேறொரு நங்கையுடன் குலாவுபவன், அவள் நலங்களனைத்தையும் சூறையாடி அவளைச் சக்கையாக உதறிவிட்டுக் காணாமல் மறந்து போனவன், என்றெல்லாம் கதைகளில் வரும் கணவன்மார்களை, அவர்கள் மனைவியரான கற்புக்கரசியர், கடைசி வரையிலும் தெய்வமாகத் தொழுது பணி செய்வர். அவன் உதறினாலும் அவன் காலடியில் அழுது கரைந்து, கெஞ்சி அடிமையாக ஏற்றுக்கொள்ள நிற்பர். இக்கற்புக்கரசியர் கணவன்

தலைசாயுமுன் தன்னாவியை விடுத்து, அவனுக்கு முன் பரலோகம் சென்று அவனை வரவேற்பார்கள்.

இந்தக் கற்பு நெறியில் இருந்து அவள் மாறினாலோ, அவளுக்கு மரணத்தைத் தழுவுவதைத் தவிர வேறு ஒரு கதியும் இல்லை. சமுதாயம் அவளைப் புறக்கணிக்கும்; பெற்றோரும், உற்றாரும், மற்றோரும் அவளை ஏறெடுத்தும் பாரார். இப்படியாகக் கற்பு நெறியின் கூரிய வாள் முனையில் பெண்ணின் சகல மலர்ச்சிகளும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆணும் பெண்ணும் இணைந்து, மக்களைப் பெருக்கும் ஒரே செயலாற்றலில், பெண்ணே கூடுதல் பங்கையும் பொறுப்பையும் ஏற்கிறாள். பெண்ணின் உடல்கூறியல், இந்தச் சிறப்பான அவளுடைய பொறுப்புக்கு ஏற்புடையதாக அமைந்திருக்கிறது. தன்னலம் கருதாத் தியாக இயல்பும், நோவு பொறுக்கும்போது அன்பு வடிவாகக் கனியும் தன்மையும் பாசமும், கருணையும் அவர்களுடைய இயற் பண்புகளாக அப்போது முழுமை பெறுகின்றன. ஆணோ, திருமண பந்தத்தினால், இத்தகைய உடலியல் இராசாயன மாற்றங்களுக்கு இயல்பாக உட்படுவதில்லை. இன்பத்தைப் பெறுகிறான். பின்னர் மக்கட்பேற்றின் பயனையும் எய்துகிறான். இவன் எந்த விலையும் கொடுக்காமலேயே இந்த இரு பயன்களையும் பெண்ணின் வாயிலாகப் பெற்று விடுகிறான்.

இதனால், ஆணுக்கு இன்பம் மட்டும் இலட்சியமாகப் பழகிவிடுகிறது; பெண்ணைப் போகப் பொருளாகக் கொள்ளும் ஒரு பங்கும் மேவுகிறது. இது காலப் போக்கில், அவளுடைய குணாம்சங்களையே அணி, பணிகள், ஆடைகள் மற்றும் உடமைப் பொருள்களால் குழைவாக்கி, தன் அச்சுக்கேற்ப ஒரு வடிவமைப்பையும் அவளுக்கு இசைத்துவிட ஏதுவாக, வாழ்க்கை நாகரிகம் வழி வகுத்திருக்கிறது.

பிறவி எடுக்கும்போது, இரு பாலருக்கும் பொதுவாகவே சித்தம், அறிவு என்று சொல்லக்கூடிய மலரும் கூறுகள் அமைந்திருக்கின்றன. இருவரும் ஒருவருக்கொருவர் என்ற நிலையில், ஒரே சமமான, இரு பாதிகளாக இல்லாவிட்டாலும், இருவரும் இணைந்த சேர்க்கையே முற்றிலும் நிறைவான முழுமையாகப் படைக்கப்பட்டிருக்கின்றனர்.

மிகவும் புராதனமான இந்திய சமயம் சார்ந்த கருத்துப்படி படைப்புக் கடவுள் தாமே இரு பகுதிகளாகப் பிரிந்து ஆணென்றும் பெண்ணென்றும் சக்திகளைத் தோற்றுவித்தார் என்றும், இவரே ஆதி ஸ்வயம்புவன் என்றும் மனைவி சத்ரூபி என்றும் பெயர் பெற்றனர் என்றும் புராணம் கூறுகிறது. இந்தக் கோட்பாட்டின்படியே ஒருவருக்கு மற்றவர் அடக்கம் என்ற குறிப்பு நிச்சயமாக இல்லை.

மனிதகுல வரலாற்றின் வழி நோக்குங்கால், தங்கள் இனத்தை ஏனைய கொடிய விலங்குகளின் தாக்குதலினின்று காப்பாற்றிக் கொள்ளவும், இயற்கையின் கொடிய விளைவுகளில் இருந்து தப்பவும், மனிதர் ஆதியிலிருந்தே இணைந்த குழுக்களாகத்தான் திரிந்தனர். உணர்ச்சி வெளியீடுகளின் விலங்குத்தனமான வெளிப்பாடுகள், ஒலிக்குறிகளாக, மொழியாக மலர்ந்தது. குத்திக் கிழித்துக் கொலை செய்யும் விலங்குத்தன்மையிலிருந்து படிப்படியாக மென்மையான இயல்புகளுக்கு மெருகடைந்தனர்.

அந்த ஆதி நாட்களில், மனித இனக் குழந்தைகளின் தலைவியாக, தாயே முதன்மை பெற்றிருந்தாள். குழுமக்கள் அத்தாயின் பெயராலேயே வழங்கப்பெற்றிருந்தனர்.

ஒரே குழுவுக்குள் கலந்து இனம் பெருக்கிய நிலை மாற, வெவ்வேறு குழுக்களின் ஆண் பெண் இணைந்து சந்ததி பெருக்கும் முறை வந்த பின்னரும், புதிய இனக்குழுக்கள் தாய் வழியே அறியப்பட்டன.

சுவிஸ் நாட்டு பச்சோஃபெண் (Bachofen) என்ற மானிட இயல் அறிஞர், ஆதியில் மனித இனம், எந்த நியதியும் இல்லாத பாலினக் கலப்பில் விலங்கு நிலையில்தான் பல்கிப் பெருகினர்; அந்த நிலையில் தாய் வழிதான் முதன்மை பெற்று, பின்னரே குடும்பத் தலைவர் தந்தை என்ற முக்கியத்துவம் பெற மாற்றம் கண்டனர் என்று தகுந்த காரணங்களுடன் விளக்கினார். ஆனால் பல நூற்றாண்டுக் காலமாக, ஆணே உயர்ந்தவனென்று வலியுறுத்தப்பட்டு, சகல கண்ணோட் டங்களிலும், ஆணாதிக்கம் முதன்மைப் படுத்தப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரபுவாதிகளும், சமய குரவர்களும் இந்தக் கருத்தைத் தம் கோட்டையைக் குறிபார்த்து ஊதப்பட்ட அபாயச் சங்கொலியாகவே கருதினர் எனலாம்.

இந்த நிலையில் 'வெஸ்டர் மார்க்' என்ற அறிஞர் 'மனித இனம் ஒருவனுக்கு ஒருத்தியாகத்தான் ஆதியிலிருந்தே வளர்ச்சி பெற்றது; பின்னரே உயர்வு சிதைவாகப் பலதார மணமுறை வந்தது' என ஒரு போடு போட்டார். இந்த ஒழுக்கப்படுத்தும் ஆராய்ச்சிக் கருத்து தீவிர சமயவாதிகளுக்கும் மரபு வெறியர்களுக்கும் மிகவும் உவப்பாக இருந்தது. இவர் தமது முடிவுக்கு இன்னும் சப்பைக்கட்டுகளும், குஞ்ச ஜோட னைகளும் அமைக்கும் பல பிரசுரங்களை வெளியிட்டார்.

இந்தச் சலசலப்புக்கள், ராபர்ட் ஸ்டீஃபன் ப்ரிஃபால்ட் என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த அறிஞரின் சிந்தனைகளுக்குத் தூபம் போட நுண்ணிய ஆராய்ச்சியை மேற்கொண்டு, 'தாயர்' (mother) என்றொரு நூலைப் படைத்தார்.

பெண் தலைவியாக அரசோச்சினாள் என்று அந்த ஆதி இனக் குழுவினரைப் பற்றித் தீர்மானமாக வரையறுக்காமல், ஆனால், சமுதாயம் சார்ந்து பெண்களே முதன்மை பெற்றிருந்தனர் என்பது அவர் கருத்து.

பொதுவாக, திருமணம் என்று வரும்போது, ஆண் பெண்ணின் வீட்டுக்கு வந்து தங்கிவிடுதல் ஒரு முறையாகவும்,

பெண் ஆணின் வீட்டுக்கு வந்து தங்கிவிடுதல் ஒரு முறையாக வும் இருக்கின்றன.

ஆண் பெண்ணின் வீட்டுக்கு வர, பெண் கணவன் வீட்டுக்குப் போகமாட்டாள். இது தாயர் முதன்மை இடம் பெறும் அமைப்புக் குடும்பங்கள்.

திருமணம் என்ற சொல்லே அதிகப்படியாக இருந்த காலத்தில், ஒரு குழுவைச் சேர்ந்த ஆண் இன்னொரு குழுவைச் சேர்ந்த பெண்ணை வரித்தால், சாதாரணமாக அக்குழுப் பெண்கள் அனைவருடனும் அவர் தொடர்பு கொள்ளும் மணமுறை வழக்காயிற்று. இவ்வாறே, ஆண்கள் பலரும் வரிக்கும் மாற்றுக்குழுப் பெண்ணுடன் நேர்கோட்டு, நியதி பிறந்திராத காலத்தில் இதைப் பலதார மணவழக்கு அல்லது பலநாயகர் மணவழக்கு என்று பெயரிட்டு வழங்குவதற்கில்லை.

ஒரு குழுவுக்குள்ளே கலப்புக்கள், நன்மையானவை அல்ல என்று தெளிந்து கண்ட நாகரிக முன்னேற்றம் பல வேறு குழுக்களின் சம்பந்தத் தொடர்புகளாக மாற்றம் பெற்றன. இந்த மாற்றத்திலும், ஆணே, பெண்ணைத் தேடி வருவதாக இருந்திருக்கிறது.

நீலகிரிப் பழங்குடியினரிடையே, மிக அண்மைக் காலம் வரையிலும், திருமணத்துக்குப் பெண் கேட்கச் செல்கையில், பணம் அல்லது பொன் கொண்டு செல்வதும், அப்படிக் கொண்டுவந்த பெண், வந்த குடும்பத்துச் சகோதரர்கள் எவரை விரும்பினாலும் சம்பந்தம் செய்து கொள்வதும் முறையாக இருந்தது. ஏழையாக இருக்கும் இளைஞன், பெண் வீட்டோடு வந்து இருந்து, அவர்கள் குடும்பத்துக்குரியவனாகவே உழைப்பான். சில ஆண்டுகள் இவ்வாறு கழிந்ததும், பெண்ணை மணந்து கொள்ளுவதற்குரியவனாகிறான். அஸாம் பிரதேசத்துப் பழங்குடியினரிடையே, இத்தகைய மரபுகளின் சுவடுகள் இன்னும் மறைந்து விடவில்லை.

தாய்ச் சம்பிரதாயத் திருமணத் தொடர்புகள், வடநாட்டில் கோன்ட், ஸந்தால், குண்டா போன்ற தொல்குடி இனத்தாரிடம் இன்னும் நிலவுகின்றன. சில இனத்தாரிடையே, கணவன் இரவுணவு முடித்துப் பின்னரே மனைவியைக் காண வருகிறான். வேறு எந்த வகையிலும் அவளைக் கட்டுப் படுத்துவதில்லை. குடும்பத்துச் சொத்துரிமை பெண்ணுக்கே இருந்தது.

தொல்குடி மக்களில் சிலரிடையே இப்படியும் கூட ஒரு வழக்கு நிலவுகிறது. பெண்ணுக்கென்று ஒரு சிறு தொகை கொடுப்பதற்கு இயலாத வறிய இளைஞன், திருமணம் புரிந்து கொண்டபின் மனைவியையோ குழந்தைகளையோ அவள் இடத்தை விட்டுப் பெயர்த்துச் செல்வதில்லை என்று வாக்களிக்கிறான்.

தென் இந்தியாவில், நாயர் சமூகத்தைச் சார்ந்த மக்களிடையே, தாயகச் சம்பிரதாயம் நிலவி வந்திருப்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது.

திருமணம் புரிந்துகொண்டு தனது வாழ்விடத்தை நிர்ணயிப்பது பெண்ணைச் சார்ந்ததாக இருந்து வந்திருக்கிறது. ஒரு வகையில் விலங்குகளின் வாழ்க்கை முறையினின்றும் மனிதர் பின்பற்றிய முறையாக இது கருதப்பட்ட போதிலும், நாகரிக வளர்ச்சியை எய்தியிராத தொல்கடிச் சமுதா யத்தினரிடையே பெரும்பாலும் பெண்ணின் சமுதாய மதிப்பும், சுதந்திரமும், ஆணுக்குச் சமமான உரிமைகளும், போற்றற்குரியவனவாகவே இருக்கின்றன. மிக நாகரிகமான நவீனமான பெண்ணுரிமைச் சமுதாயத்திலும்கூட இந்த மதிப்பும் உரிமைகளும் இந்நாள் பாதிக்கப்பட்டிராமல் இல்லை.

பெண்ணிருக்குமிடம் வந்து ஆண் சம்பந்தம் செய்து கொண்டு தங்கிவிடும் வழக்கு பின்னர், பொன்னோ பொருளோ கொடுத்து அழைத்துச் செல்லும் நடைமுறைக்கு வந்ததும், இந்நாள் பல்வேறு மாற்றங்கள் வந்தாலும்கூட,

மணமகன் வருவதும், பெண் வீட்டிலேயே அந்தச் சடங்குகளை நடத்துவதும், பண்டைய பழக்கத்தின் சிதிலமாகிப் போன சிறு சுவடு என்றுகூடச் சொல்லலாம்.

•

இந்தியாவில் இன்னமும் சில பிரிவினரிடையே திருமணம் முடிந்ததும் உடனே பெண் தாய் வீட்டை விட்டுச் சென்று விடுவதில்லை. குறிப்பிட்ட காலம் வரையிலும் தங்கிய பின்னரே கணவன் வீடு செல்கிறாள் இவள். சில பழங்குடி இனத்தாரிடையே திருமணச் சடங்கு முடிந்ததும் பெண் வீட்டிலேயே, மணமகளையும் மணமகனையும் சில நிமிடங்கள் ஓர் அறையில் இருக்கச் செய்கிறார்கள்.

திருமண விருந்து முதலில் பெண்ணின் வீட்டில் படைக்கப்படுவதாக இருப்பதும்கூட, பெண்ணின் மேலான சமுதாய மதிப்பை விளக்கும் அம்சம்தான்.

"உயர் பதிவிக்குரிய, பரீட்சையில் தேர்வு பெற்ற முதல் வகுப்பு வங்கி அதிகாரியாகப் பதவியேற்றிருந்தாயே, ஏனம்மா வேலையை விட்டுவிட்டாய்?"

"ஓ, என்ன செய்வது அம்மா. என்னை எங்கோ குஜராத்திய மாநிலத்துக் கிராமத்துக்கு மாற்றிவிட்டார்கள். மேலும் திருமணமாகிவிட்டது. கணவன் வீட்டார் வேலையை விட்டுவிடச் சொல்லிவிட்டார்கள். கையில் இப்போது ஒரு வயதுக் குழந்தை இருக்கிறது. வேலை இருந்தால் பிரச்னைதானே? விட்டேன்." இப்படி வேலையை விடும் நமது இளம்பெண்கள் இந்நாள் நம்மிடையே பலர் இருக்கிறார்கள்.

இதுவே பல்லாயிரக்கணக்கான நாகரிக வளர்ச்சியின் அடையாளமா?

# 3. சிறகா ? பொன்கூண்டா ?

அணிமையில் இளந்தோழி ஒருத்தியைச் சந்தித்தேன். மருத்துவக் கல்வியை முடித்து கிராமம் ஒன்றில் பயிற்சிப் பணி ஆற்றினாள்.

மிகுந்த ஆர்வமும் ஆவலுமாகக் கிராமப்பணி அநுபவங்களை என்னிடம் எடுத்துரைத்தாள். பால்வினை நோயுடன் வரும் கிராமத்து ஆணாதிக்க வருக்கங்களைப் பற்றிச் சொல்கையில், அவர்கள் நாவிலிருந்தே உண்மையை வரவழைக்கும் யுக்திகளைப் பற்றி விவரித்தாள். அவளுக்கு உள்ளூற ஒரே வெற்றிக் களிப்பு. அதே சமயத்தில் எளிய மனைவி மக்களின் தீராத பிரச்சனைகளைத் தவிர்க்க உதவுவதைக் கூறுகையில் முகத்தின் ஆழ்ந்த ஈடுபாடு என்னைக் கவர்ந்தது. மனித வாழ்க்கையின் ஜீவாதார உரிமைகளில் குறுக்கிட்டு, கட்டுப்பாட்டை வலியுறுத்தும் போதுகூட ஆணைவிடப் பெண்ணே அதிகமாகப் பாதிக்கப் பெறுவதை உணர்ந்து வருந்துகிறாள். இவளுக்கு கிராமங்களில் ஊன்றி மருத்துவப்பணி செய்யும் பேரார்வம் முகிழ்த்திருக்கிறது. இத்தொழிலை இலட்சியப்பணி செய்யப் பயன்படுத்த வேண்டும் என்று நிற்கிறாள்.

ஆனால்...(ஆனால் போட்டாக வேண்டி இருக்கிறது.)

இவள் பெற்றோர், குடும்பத்து மூத்தோர், இவள் எதிர்கால வாழ்க்கையின் முக்கியத்துவம் திருமணத்தை ஒட்டியதாகவே இருப்பதாகக் கருதுகிறார்கள் 'கருதுதல்' என்று சொல்வது கூடச் சரியில்லை. அதாவது, பெண்ணின் பிறந்த வீட்டுத் தொடர்பாகிய முதல் கட்ட, இரண்டாம் கட்ட வளர்ச்சிகளில் இறுதி நிகழ்வு, கோலாகலமாகிய திருமணம் தான். இந்தச் சோதனையில் அவள் வெற்றி பெற்றாக வேண்டும். சமூக மதிப்புகள் எந்த ஒரு பெண்ணுக்கும் ஆணைச் சார்ந்தே வந்து

இசைகிறது. இந்த நியதியை ஒரு பெண் தனிமனித நிலையில் நின்று உடைக்க முடிந்திருக்கவில்லை, இதுகாறும்.

எனது இளந்தோழியின் வீட்டார் என்ன நினைக்கிறார்கள்? இங்கும் மூன்று தலைமுறைக்காரரின் கருத்துக்கள் குடும்பத்தில் மோதி, பிரச்சனைகளை ஆழமாக்குகின்றன. படிப்பாவது, இன்னொன்றாவது? வயது இருபத்து நான்கென்றால், இதற்குள் திருமணம் முடிந்து ஒரு குழந்தையை ஏந்தியிருக்க வேண்டும். இனிமேலும் தாமதமா? எப்படியேனும் திருமணத்தை முடித்தாக வேண்டும். இல்லையேல் குடி முழுகிப் போய்விடும்...என்பது மூத்த தலைமுறைப் பிடிவாதங்கள்.

அடுத்த தலைமுறைக்காரரான பெற்றோரோ, அரும்பாடுபட்டு, மருத்துவக் கல்லூரியில் இடம்பிடித்து, அவளை எத்தனை நெருக்கத்தினூடே படிக்க வைத்திருக்கிறார்கள். மகளின் ஆர்வமும், அறிவுத் திறனும் துலங்க ஊக்கம் கொடுத்து, அவளை முழுமையாக விளங்கச் செய்திருக்கிறார்கள். எனவே அவள் விருப்பப்படியே மேலும் இன்னும் சிறப்புப் பயிற்சி பெறவும், தொழில் புரியவும் அனுமதிக்கவில்லையெனில் தவறு என்று கருதுகிறார்கள்.

ஆனால் திருமணம் என்ற நிகழ்வு தம் மகளின் வாழ்க்கையில் குறுக்கிடாமலே போய்விடுமோ என்று அஞ்சவும் அஞ்சுகிறார்கள். அவளுக்குரிய கணவரைத் தேட வேண்டும்.

அங்கும் பிரச்னை இருக்கிறது. அவன் இவளுக்கு முழு உரிமை அளிப்பானா? சமமாக நினைப்பானா? தொழில் ரீதியான பொறாமை வேறு தூபம் போடாமல் இருக்குமா? இவள் கிராமத்தில் பணிபுரிவதை அனுமதிப்பானா? ஒத்துழைப்பானா? இவள் தனித்திறமையை மதித்துப் பெருமை கொள்வானா?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மருத்துவம் பயின்ற பெண்களால் ஆதாயம் இருக்கிறது என்று உணர்ந்து, மருத்துவம் பயின்ற பெண் வேண்டும் என்று திருமண விளம்பரங்களில், தேவை விளம்பரம் செய்பவர்கூட என்னென்ன முக்கியமான அம்சங்களைக் குறிக்கிறார்கள்!

Slim, Fair, Tall...ஒல்கி, ஒசிந்து உயரமாக சிகப்பாக... என்று எந்த ஆணும் தான் திருமணம் செய்துகொள்ள இருக்கும் பெண்ணுக்கு இலக்கணம் வகுத்து நிபந்தனை போடுகிறான்.

எந்தப் பெண்ணும் தனக்கு வாழ்க்கைத் துணைவனாகக் கூடிய ஆண் இப்படி இருக்க வேண்டும் என்பதை வெளிப்படையாக விளம்பரம் செய்துவிட முடியாது. அவள் வேண்டுமானால் கனவு காணலாம். வெளிப்படையாகப் பெற்றோர் கோரக் கூடியதெல்லாம் படிப்பு, உத்தியோகம் அல்லது தொழில், பொருளாதாரம் சார்ந்த நிலை, சாதி போன்ற பொதுத் தகுதிகள்தாம். தனித்தன்மை பற்றிக் கேள்வி கிடையாது. அத்துடன் அவளுக்கு மடமை அச்சம் ஆகிய குறைகள் சிறப்பானவை, 'பேதமை என்பது மாதரணிகலம்' என்று வலியுறுத்தப்பட்ட வாசகம்.

அவள் ஒல்கி ஒசிந்து கொடியாய்த் துவண்டு மானின் மருண்ட விழிகளால் தனது அச்சத்தையும் சஞ்சலத்தையும் குறிப்பால் உணர்த்திக்கொண்டு ஆண் ஒருவனுக்காகத் தவிப்பவளாக இருக்க வேண்டும்.

இந்த இலக்கணங்களில்லாமல், அறிவு, சிந்தனைத் திறம், உடலாற்றல், தொழிற்பயிற்சி ஆகிய கூறுகளுடன் ஒரு பெண் இருந்தால் அவளுடைய மேன்மை ஆற்றலை அவனால் பொறுக்க இயலாது. அவள் தலைமீது கை வைத்து (அல்லது கால் வைத்து) அழுத்திக் கொண்டு ஆதிக்க அரசோச்ச முடியாது. அதற்காக அவளுடன் எதிரிட்டுப் போர் புரிய இயலுமா?

பெண் வலிமை மிக்கவளாக முதன்மைக் கூறுகளுடன் விளங்கினால் நேருக்கு நேர் நின்று விரோதிகளை முறியடிப்பதுபோல் போராடவும் இயலாது. ஆதித்தாய்—இவளில்லாமல் சமூக உற்பத்தியே நடக்காது. எனவே இவள் பகையரசன் அல்ல.

மிருகங்களையும், ஏனைய பறவையினங்களையும் அடித்துத் துன்புறத்தி, அடங்கினால்தான் உயிர் வாழத் தேவையான உணவு என்று வழிக்குக் கொண்டு வரலாம்.

ஆனால் பெண்—இவள் சூக்குமமான அறிவுடையவள். நுட்பமான உணர்வுகளால் இன்ப துன்பங்களைப் புலப்படுத்தக் கூடியவள். அவனுக்கு இல்லாத மென்மையான ஆற்றல்கள் இவளுக்கு இயல்பாக இருக்கின்றன.

இவள் தாய்; ஆக்குபவள்; பெற்றுப் பேணி வளர்ப்பவள்; அன்பும் கனிவும் கொண்டவள்; அத்துடன் வலிமை பொருந்தியவள்; வேட்டையாடுகிறாள், பகைவர்களை மூர்க்கமாக எதிர்க்கிறாள். குருதி கண்டு அஞ்சுபவளில்லை. பாதகம் செய்பவரை மோதி மிதிக்கும் ஆங்காரமும் இவளுக்கு இயல்பு. பழிவாங்கும் குரூர வெறியும் இவளுக்குப் புறம்பானதல்ல. இயற்கையுடன் ஆணைவிட நெருங்கியவள். நெருப்பாகவும், நீராகவும், கல்லாகவும், கனியாகவும் இருக்கக்கூடிய எதிர்மறைத் தன்மைகளின் இருப்பிடம்.

இன்றைய என் இளந்தோழி Slim, Fair என்ற ஒல்லி சிவப்பு இலட்சணங்களில் நெருங்காதவள். அவள் வாட்டசாட்டமாக இருக்கிறாள். உடை உணவு என்ற தேவைகளில் வசதி வலிமை என்ற கூறுகளையே முதன்மைப்படுத்துகிறாள். உழைப் பாற்றலும் சோர்விலா மகிழ்ச்சியும் உடையவளாக இருக்கிறாள்.

இவளில் அந்தப் பழந்தாயாரின் ஆதிப்பெண் மக்களின் அழகை நான் உணருகிறேன். வாயைத் திறந்து வைத்துக்கொண்டு பல்லைப் பிடுங்கிக் கொள், பொம்மையாக

அழகுப்பொருளாக வளைய வருகிறேன் என்று இவள் சொல்லமாட்டாள்.

இவளைக் கண்டபின் மீண்டும் சிந்தனை அந்த ஆதித் தாயாரின்பால் செல்கிறது. பல்லைப் பிடுங்குவதுபோல் ஆற்றல்களைப் பறிக்க, அறிவை முடமாக்க அந்தத் தாயார் எப்படி அநுமதித்தார்கள்? பெண் என்ற மொத்த சக்தியின் கூறுகள்; ஒட்டுமொத்தமாக சிதைக்கப்பட்டனவா, அன்றி அழகு என்ற தங்கக் கூட்டுக்குள் அவளுடைய இயல்புகள் மென்மையாகச் சிறை செய்யப்பட்டு வளர்ச்சிகள் முடமாக்கப்பட்டனவா?

மனித இனம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த நாட்களிலிருந்தும், நாகரீகமடைந்து ஆண்-பெண் சேர்ந்து வாழ்தலுக்குரிய நிகழ்ச்சிகள் திருமணங்களால் பரிணாமம் எய்தின. பிறகுகூட பெண் சமுதாய முதன்மை பெற்றிருந்தாள் என்பது தெளிவாகிறது.

சீனத்தின் மிகத் தொன்மையான சமூக வரலாறு மிகத் தெளிவாக இல்லை. நமக்கெல்லாம் அணிமைக் காலங்களில் நிகழ்ந்த சோசலிசப் புரட்சிக்கு முந்தைய சமூகம் பற்றித் தெரிந்ததெல்லாம் தந்தை வழி நெறிப்படுத்தப்பட்ட குடும்ப அமைப்புகளும், மிக இறுக்கமாக நிலவிய பெண்ணடிமைக் கொடுமைகளும்தாம். பிஞ்சுப் பருவத்தில் பெண் குழந்தைகளின் கால்களைக் கட்டிப்போட்டு தூலமாக அவளுடைய வாழ்வையே முடக்கி வைத்த ஆணாதிக்க சமுதாய முறையே நிலவி வந்தது.

ஆனாலும் ஆராய்ச்சி அறிஞர் சீனத்தின் தொன்மையான சமூக அமைப்பின் பல சான்றுகள் தாய்வழி முதன்மையைத் தெளிவாகத் துலக்குவதாகக் கண்டறிந்திருக்கின்றனர்.

மனைவியின் வீட்டுக்குறியவனாகவே கணவன் வாழ்வதும் மனைவியின் குடும்பப் பெயரையே தனக்கு ஏற்றுக் கொள்வதும் பரம்பரையைத் தாயின் தரப்பாகவே கணிப்பதும் வழக்கில் இருந்திருக்கின்றன.

சில பகுதிகளில் பெண்கள் கணவன் வீட்டுக்குச் சென்று அவர்கள் ஆதிக்கத்தில் அல்லலுறும் வழக்குக்கு எதிராகத் திருமண மறுப்புச் சங்கங்களைத் தோற்றுவித்த செய்திகளும் தெரிய வருகின்றன. இச்சங்கம் சார்ந்த பெண்கள், மணம் புரிந்துகொள்ளும் கணவன்மார், தங்கள் வீடுகளில் வந்து தங்க வேண்டும் என்ற நிபந்தனைமீதே திருமணத்துக்கு உடன்பட்டனர்.

சீனத்துத் திருமண முறையே, சீன சமுதாய நாகரீகத்தின் தந்தையாக மதிக்கப்பெறும் (Fuhi) ஃப்யூஹி என்ற நாயகரால் நிலையுறுத்தப் பெற்றதாகக் கருதப்படுகிறது. அவரே தம் தந்தையை அறியாதவர். எனவே அதுவரையிலும் தாய்வழிச் சமுதாயமே வழக்கில் இருந்திருக்கிறது.

பல அரசிகளின் ஆட்சி வரலாறுகள் தெரிகின்றன. அரச குடும்பங்களில் பதினெட்டு வயசுக்கு வராத சிறுவன் ஆட்சி உரிமை பெறுபவனாக இருந்தால் தாயே ஆட்சி புரிந்தாள்.

ஜப்பான் நாட்டில் தந்தை வழி நடைமுறை, பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிறகே வந்தது எனலாம். அதற்கு முந்தைய காலத்தில் கணவன், மனைவி வீட்டுக்கு வந்து போவான். குடும்பம் தாயின் பெயராலேயே துலங்கியது.

இதேபோல் பண்டைய யூதர்களிடையேயும், அரேபியாவிலும், தொன்மையாகக் கிடைக்கக்கூடிய சான்றுகள் பெண்ணின் முதன்மையையே தெளிவாக்கு கின்றன. மிகத் தொன்மையான ஹீப்ரு மொழி இலக்கியம் ஹீப்ரு இனத்தாரை, ஒரு பெண்ணே தலைமை தாங்கி நடத்திச் சென்றதாகச் செப்புகிறது. அரேபியா நாட்டில் நீதி வழங்குவோரும் அரசோச்சுபவரும் பெண்களாக இருந் திருக்கின்றனர். ஷீபா மகாராணியைக் கேள்விப் பட்டிருக்கிறோம் இல்லையா? பண்டைய அரேபியர் களிடையே பெண்ணே சொத்துரிமை பெற்றிருந்தாள்.

கால்நடை மந்தைகளுக்குச் சொந்தக்காரர்களாகப் பெண்களே திகழ்ந்தனர். கணவன்மார் அம்மந்தைகளைப் பேணிக் காப்பவர்களாகத்தான் இருந்தனர். இஸ்லாமிய சமய ஸ்தாபகரமான நபிகள் நாயகம் அவர்களே தம் மனைவியின் வாயிலாகப் பெற்று செல்வம் கொண்டே தம் கொள்கைகளை எங்கும் பரப்ப முடிந்தது.

பண்டைய ஆரோக்கியர்களிடையே ஏழு சான்றோர் இருந்ததாகத் தெரிய வருகிறது. அவர்கள் அனைவரும் பெண்களேயாம்.

இன்றைய அரேபியா, மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தின் இரும்பு ஆணைகளுக்கிடையே மனித உரிமைகளையே இழந்த பூச்சிகளாக வேதனைப்படும் பெண்களை இங்கே நினைத்துப் பார்ப்போம். எத்தனை வீழ்ச்சி!

பண்டைய எகிப்திலும் தாய்வழி முறையே குடும்ப அமைப்பின் ஆதாரமாக நிலவியது. 'தாலமி' வமிசத்தினரின் சான்றாதாரங்களாகக் கிடைத்திருக்கும், "கணவனான உன்னை நான் வெறுத்தாலோ அல்லது வேறு ஒரு மனிதனை விரும்பினாலோ நான் நீ அளித்த பரிசுப் பொருளைத் திருப்பி விடுகிறேன்" என்பது ஒரு பதச்சோறு.

பண்டைய எகிப்தில் சொத்து சகோதரனுக்கன்றி சகோதரிக்குச் சென்றுவிடக்கூடியதொரு காரணத்தினாலேயே சகோதரன் சகோதரி திருமணம் அதிகமாக வழக்கிலிருந்ததாகத் தெரிய வருகிறது.

இத்தகைய மணமுறை கிறிஸ்து பிறந்து இரண்டாம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்ததாம். வேதகால ஆரியச் சமுதாயம் தந்தை வழிக்குடும்பங்களின் சமுதாய அமைப்பாகவே திகழுகிறது. ஆனால் அதற்கும் முந்தைய சமுதாய உண்மைகளை, பல்வேறு தொல்குடி இனத்தாரிடையேயும் மலை மக்களிடையேயும் நிலவும் பழக்க

வழக்கங்களில் இனம் காண முடிகிறது. நாயர் வகுப்பினரின் கூட்டுக்குடும்பம் 'தறவாடு' எனப்படும். மூத்த ஆண், சகோதரி மக்களின் உரிமைகளை, தான் பாதுகாத்துப் பேணுவார்.

ஆசாம் பிரதேசத்து 'காரோ' இனத்தினர் 'காஜி' குடியினர் இதேபோல் தாய்வழி மக்களாகவே அறியப் படுகின்றனர்.

வருணம், மற்றும் சாதிப்பிரிவுகள் தோன்றியதும் உயர்வகுப்பு ஆண், தாழ்ந்த வகுப்பு என்று கருதக்கூடிய பல பெண்களைத் திருமணம் செய்துகொண்டதும், குழந்தை மணத்தை வழக்காக்கியதும், 'சதி' என்று நெருப்பிலிட்டுப் பெண்ணை எரித்ததும் பெண்ணின் வீழ்ச்சியை முழுமை யாக்கித் தீர்த்தன.

இந்நாள் ஒட்டுமொத்தமாக பாரத சமுதாயம் என்று வளர்ந்துவிட்ட சமுதாயத்தினரிடையே எத்தனை பிரிவுகள்!

ஆனால் பெண்ணை இரண்டாம் பட்சமாக வைக்கும் ஒரே நெறியான அத்தனை வேற்றுமை இழைகளையும் பின்னி இறுக்குகிறது.

சிறகைப் பிய்த்துக் கூண்டில் அடைத்து அலங்காரமாக வீட்டில் தொங்கவிட்டு "வீட்டுக் கிளி கொஞ்சுகிறது" என்று சொல்லுகிறோமே, அது நினைவுக்கு வருகிறது.

"பாரத கலாசாரத்தையும் ஒருமைப் பண்பையும் பெண்களே காப்பாற்றுகிறார்கள்! ஆனால் எத்தனை மாறினாலும் வழிதவறிப் போனாலும் பெண் தனது கோட்டிலிருந்து வழுவாமல் நின்று அவனை வாழ வைக்கிறாள். அவளாலல்லவோ பாரதப் பண்பாடு காப்பாற்றப்படுகிறது."

இந்தப் புகழாரம், சிறகு பிய்த்தெறியப்பட்டது தெரியாமலிருக்க வழங்கப் பெற்றிருக்கும் பொற்கூண்டு.

# 4. வேதத்தில் என்ன இருக்கிறது?

'ருக்வேத காலத்துப் பெண்கள்' என்ற நூலுக்கு முன்னுரை எழுதுகையில் இந்திய தத்துவப் பேரறிஞர் டாக்டர் ராதாகிருஷ்ணன், திருமணம் என்ற ஓர் ஒழுங்குமுறையும் அதன் பல்வேறு கூறுகளும் வராலற்று ரீதியான ஆய்வில் அந்தந்தக் காலத்துச் சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சார்ந்து அமைவதாகத் தெளிவுபடுத்துகிறார்.

"திருமணம் என்பது வெறும் இயல்பூக்க விவகாரமன்று. ஆனால் இயல்பூக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப் பெற்ற ஓர் ஒழுங்குமுறை. இருவேறு உள்ளங்களின் ஆளுமை ஆற்றல்கள் ஒருவருக்கொருவர் என்று பிணையும் அநுபவங்களில் மகிழ்ச்சியும் காதலும், துன்பமும் உடன் பாடுகளும் துயரங்களும் அடங்கியவை" என்று அவர் குறிப்பிடுகிறார்.

இந்தக் குறிப்பில் 'தற்கொண்டான்' என்று ஒருவனிடம் பெண் தனது தனித்தன்மையை மலர வைக்கும் அறிவு, ஆற்றல், திறமை ஆகிய எல்லா மேன்மைகளையும் கரைத்துத் தன்னை முற்றிலுமாக இழந்துவிட வேண்டும் என்ற கோட்பாட்டின் இழைகூட ஊடாடி இருக்கவில்லை.

வேதங்கள் தொகுக்கப்பட்ட காலத்தை ஆராய்ச்சியாளர் கி.மு. 1300-ம் ஆண்டிலிருந்து 900-ம் ஆண்டு வரைக்குட்பட்ட காலமாக, ஏறக்குறைய வரையறுக்கின்றனர். பண்டைய ஆரிய சமுதாயத்தைப் பற்றிய தகவல்களை, முதன்முதலாகக் கொடுக்கும் இலக்கியச் சான்றுகளை இந்த வேதப் பாடல்களின் வாயிலாகவே அறிய முடிகிறது. இவற்றுள், **1028** பாடல்களை உள்ளடக்கியதும் மிகவும் புராதனமாக விளங்குவதுமாகிய ருக்வேதமே நமக்கு அக்கால வாழ்வைப் பற்றிய ஏராளமான சான்றுகளைத் தருகிறது.

அடுத்து யஜுர்வேதம், ருக்வேத காலத்துக்கு ஏறக்குறைய ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகும், அதர்வண வேதம் இன்னும் பிந்தியும் முறைப்படுத்தப்பட்டதாகவும் ஊகிக்கின்றனர்.

இவற்றுள் முந்தைய யஜுர்வேதம், யாகங்கள் செய்யும் முறைகளைப் பற்றிய முக்கியமான வழிமுறைகளை முதன்மையாக்கியும், அதர்வண வேதம், மந்திர தந்திரங்கள், மருத்துவ முறைகள் ஆகியவற்றை முதன்மையாக்கியும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஸாம வேதம், ருக் வேதத்தைச் சார்ந்த துதிப்பாடல்களே. எனவே, சமுதாய வாழ்க்கை பற்றிய வரலாற்றுச் சான்றுகளை, முதல் வேதமாகிய ருக் வேதப் பாடல்களிலிருந்தே பெற முடிகிறது.

இந்தப் பாடல்களில் பெண்கள், ஒளியும் வீரியமும் ஒடுங்கிப்போன இல்லத்துப் பறவைகளாகவோ, உரிமைகளற்ற உடமைப் பொருளாகவோ விவரிக்கப்பட்டிருக்கவில்லை. இக்காலத்தில், சமுதாயம் தந்தை வழிக் குடும்பங்களின் தொகுதிகளாகவே நெறிப்படுத்தப்பட்டுவிட்டன. என்றாலும், சில குடும்பப் பெயர்கள் தாய் வழி நினைப்பூட்டுவதாகவும் இல்லாமல் இல்லை.

'வேதகால' ஆரியர் யார், அவர் எவ்வாறு இந்தியாவுக்கு உரியவராக ஆயினர் என்ற ஆராய்ச்சியே மிக ஆழமானது.

'ஆரியர்' என்ற சொல் 'அரி' என்ற மூலத்திலிருந்து உருவானது என்றும் அச்சொல்லுக்கு அந்நியர் என்று பொருள் கொள்ளலாமென்றும் கருதப்படுகிறது. இக்குழுவினர் இந்தியாவிற்கு வடமேற்கில் வட்சு நதிக்கரையில் இருந்து காந்தாரத்தில் புகுந்து பாஞ்சாலத்தை நோக்கி முன்னேறி வந்திருக்கலாம் என்றும், இவர்களை இந்தோ இரானியர் என்று குறிப்பிடலாம் என்றும் புகழ் பெற்ற வரலாற்று இலக்கிய ஆசிரியர் ராகுல்சாங்கிருத்யாயன் குறிப்பிடுகிறார். அவருடைய 'வால்காவில் இருந்து கங்கை வரை' என்ற நூலில்

மானிட சமுதாயத்தினரின் வாழ்வு எவ்வாறு நாகரிகப் பரிணாமம் பெற்று வந்திருக்கிறதென்பது விவரிக்கப் பெறுகிறது.

கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முந்தைய அந்த இந்தோ இரானிய சமுதாயத்தினரைப் பற்றி அவர் விவரிக்கிறார்:

வட்சு நதிக்கரையின் வடபுலம், இன்றைய சோவியத் ஒன்றியத்தின் தாஜிகிஸ்தான் குடியரசிலும், தென் பகுதிகள் ஆப்கானிஸ்தானத்துக்கு உரிய பிரதேசங்களாகவும் இன்று திகழ்கின்றன.

வடபுலத்தில் அந்நாள் வாழ்ந்த சமுதாயத்தினர் 'மனிதன் ஒரே இடத்தில் இருப்பதற்காகப் படைக்கப்படவில்லை' என்ற கொள்கை உடையவர்களாக வாழ்ந்தனர். மலைச்சரிவுகளிலும் சமவெளிகளிலும், ஆடுமாடுகளையும் குதிரைகளையும் பழக்கி அவற்றையே செல்வமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

ஆனால் தென்புலத்து மக்கள், விவசாயம், உலோகங்களைப் பயன்படுத்தும் கலை, என்று நாகரிகத்தில் மிகவும் முன்னேற்றம் கொண்டிருந்தனர்.

அப்போது, வடபுலத்து முதியவர் ஒருவர் பிரலாபிப்பதால் ஆசிரியர் இந்நூலில் இவ்வாறு சித்தரிக்கிறார்:

"பூமியை மாதா என்றும் தேவி என்றும் கூறுகிறோம். பூசையும் செய்கிறோம். இந்தப் பாவிகள் பூமியின் நெஞ்சைப் பிளந்து விவசாயம் செய்கிறார்களாம்? பூமி மாதாவை எங்கள் முன்னோர் இப்படி அவமானப்படுத்தியதுஇல்லையே? பூமித் தாய், தானாக நமது ஆடுமாடுகள், குதிரைகளுக்குக் கனிந்த பசும்புல்லை ஏராளமாகத் தருகிறாள். நமக்கோ காய் கனிகள் பறிக்கப் பறிக்கக் குறையாது. காடுகளில் கோதுமை தானாகச் சிறு மணிகளாகக் கதிர் முற்றி இருக்கும். நமது ஆடுமாடுகள் கொழுக்க மேயும். நமக்கு உணவுக்குப் பஞ்சமிருந்ததா?

"இப்போது இவர்கள் பூமிமாதாவை அகழ்ந்து கோதுமை விளைவிக்கிறார்கள். நமக்குப் புல் செழித்து வளருவதில்லை.

நமது ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் இடம் இல்லாமலாகிறது. அவை கொழுத்து வளருவதில்லை. கோதுமையை விதைப்பதாம், ஒரே இடத்தில் மனிதன் கட்டுண்டு கிடப்பதாம்!" என்றெல்லாம் பிரலாபிக்கிறார். பின்னும் "இந்த விவசாயத்தோடு விட்டதா?...அங்கே பெரிய தொழில் நகரம் என்று இந்த ஆண்களும் பெண்களும் பல பொருள்களுக்கு ஆசைப்பட்டுப் பித்துப்பிடித்து அலைகிறார்கள். குதிரையைக் கொடுத்து தாமிரப் பாண்டம் என்று வாங்குகிறார்கள். பெண்களோ, மஞ்சளாய், வெள்ளியாய், காதிலும், கழுத்திலும் உலோக ஆபரணங்களை வாங்கி மாட்டிக் கொள்கிறார்கள். இரண்டு குதிரைகளைக் கொடுத்து, ஒரு சிறு ஆபரணம், காதுக்கு மாட்ட...! இன்னும் சிறிது நாட்கள் போனால் நம் மிடையே உணவுக்கு ஒரு பிராணி மிஞ்சாது. தாமிரப் பாண்டமும், இந்த ஆபரணங்களுமே மிஞ்சும்!" என்று விவரிக்கிறார்.

மனிதன் ஓரிடத்தில் தங்கி விவசாயம் செய்யும் நாகரிகத்தையும், பெண்கள் தங்கள் இயற்கை அழகை மேம்படுத்திக் கொள்வதாகக் கருதி, உலோக அணிமணிகளுக்கு அடிமையாகத் தொடங்கிய காலத்தையும் ராகுல்சாங் கிருத்தியாயன் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இது பெண்களின் சமுதாய வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பமாகும்.

அவர் குறிப்பிடும் தென்புலத்து மக்கள், விவசாயம் செய்ததுடன், உழுவைக் கருவிகள், மற்றும் தங்கம், வெள்ளி ஆபரணங்களைச் செய்யவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தனர். பருத்தி விளைவித்து ஆடைகள் நெய்யக் கற்றிருந்தனர். அது மட்டுமல்ல, அரசன், அமைச்சு, படை என்று ஒரு சமுதாயக் கட்டுக்கோப்புடன், நகரங்களை நிர்மாணித்து, வாழ்ந்தனர். ஆடுமாடுகளைப் பழக்கி வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதைப் பழக்கப் படுத்தினார்கள் என்றும் தெரிய வருகிறது. அரசன், அரசப் பிரதிநிதிகள், படைத்தலைவர்கள் ஆகியோரது இலட்சியங்கள்

அனைத்தும் உடல்பரமான எல்லா இன்பங்களையும் அநுபவிப்பதையே சார்ந்து இருந்தன.

ஆணும் பெண்ணும், இணைவதற்கடையாளமான லிங்க சின்னத்தை இந்தத் தென்புலத்து மக்கள் வழிபட்டார்கள். வடபுலத்து வெள்ளைச் சாதியினர் தாமிரத்தையும் தங்கத்தையும் ஒதுக்கி ஒதுங்கி செல்பவர்களாக நின்று விடவில்லை. அவர்கள் தென்புலத்தாரோடு வந்து மோதினர்.

காலப்போக்கில், இவர்களை வென்றும் இமயத்தை ஒட்டி வாழ்ந்த இன்னும் பல கருப்பு இன மக்களோடு போராடியும் வடபுலத்துக்காரர் இந்திய நாட்டின் வடபகுதிகளில் தங்களை ஊன்றச் செய்து கொண்டனர். இவர்களே ஆரியர்கள் என்று பொதுவாக வழங்கப் பெற்றனர். இவர்களில் முந்தைய தனித்தன்மை போய், ஒருவரை ஒருவர் விலக்க ஒண்ணாமல் கலந்தும் காலா காலம், பழக்க வழக்கங்களில் பலவற்றை மாற்றிக் கொள்ளவும் அவசியங்கள் நேர்ந்துவிட்டன. இந்த இனத்தாரிடையே நிகழ்ந்த பல போர்களை அடித்தளமாகக் கொண்டே, இந்நாட்டின் புகழ்பெற்ற இதிகாசங்களாகிய இராமாயண மகாபாரதங்கள் உருவாயின எனலாம்.

இந்தோ—இரானியராக இருந்த சமுதாயத்தினர், இவ்வாறு இந்தியா வந்து பல இனத்தாரோடு மோதி வென்று, கலந்து ஆரிய சமுதாயமாக ஊன்றிய காலவரையை, கி.மு. 2500–லிருந்து, 1500 வரையிலான நீட்சியில் உட்படுத்துகிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

இந்தக் காலத்தில், பல்வேறு முனிவர்கள், அல்லது குரவர்களின் கவித்துவ மலர்ச்சியினால் உருவாகிய மிக இனிய சந்தங்களை உடைய பாடல்கள், இயற்கையைக் கடவுளராகப் புகழ்ந்து போற்றுகின்றன. இப்பாடல்கள், பல நூறு ஆண்டுகளாக மனித இனத்தின் நினைவாற்றல் மற்றும் நுட்பமான மொழித்திறன், ஓசை நயங்களுக்குச் சான்றாக, வரி வடிவம் காணாமலே காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன என்றால், வியப்பாக இல்லையா?

இந்நாட்டில் எழுத்தறிவு தோன்றிப் பரவலாகப் பயன்பட வந்துவிட்ட காலங்களில்கூட, வேதங்கள் மட்டும் குரு சீட பரம்பரையாய், எழுதாக்கிளவியாய், மானிடர் நினைவுக் கருவூலங்களில் இருந்து ஒலி மலர்ச் சரங்களாக எழும்பி சூழலின் புனிதத்துவத்தையும் மக்களின் தூய உணர்வுகளையும் பாதுகாக்கும் தெய்வீகக் கவசமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. ஆயிரமாயிரமான இப்பாடல்களை இசைத்துப் பாதுகாப்பதற்கென்றே ஆரிய சமுதாயம் தம்முள் ஒரு சிறு பிரிவினரை நெறிப்படுத்தி, அவர்களுக்கு மிக உயர்ந்த சமுதாயப் பொறுப்புக்கான மதிப்பை அளித்தனர்.

இந்தப் பாடல்கள், இன்றும் இந்து சமய-சமூகச் சடங்குகளில், இசைக்கப்படுகின்றன. எனவே, வேத கால சம்பிரதாயங்கள், புதையுண்ட வரலாற்றுச் சிதிலங்களாக உயிரிழந்து போய்விடாமல் இன்றளவும் தொடர்ந்து வரும் சமுதாயப் பரம்பரையின் சின்னங்களாகக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன என்றால் தவறில்லை.

இவற்றுள் மிக முக்கியமான திருமணச் சடங்குதான். ருக் வேதம் விவரிக்கும் ஒளித்தேவனின் மகளுடைய திருமணச் சடங்கை ஆதாரமாக்கி, அந்த மந்திரங்களை ஒட்டியே இன்றளவும் இந்துத் திருமணங்கள் நெறிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஆனால், இன்றைய, காசி யாத்திரை, சவரன் தாலி, வெள்ளி மற்றும் உலோகப் பாத்திரங்கள், ரிசப்ஷன், கச்சேரி, பட்டுச் சேலைகள், ஹனிமூன், பயணச்சீட்டு என்ற குவியலிடையே, புரோகிதர் கண்களை மூடிக்கொண்டு சொல்லும் சில மந்திரங்களிடையேதான் அந்த நெறியைத் தேட வேண்டும். மந்திரங்களின் உயிர்த்துவம், ஒளி பெருக்கியில் கேட்கும் நாடாப் பதிவாக வாணிப சினிமா ஒலிகளிடையே தொக்கிக்கொண்டு ஊசலாடுகிறது. உலகாயதம் விழுங்கிவிட்ட எச்சங்களாகிய புரோகிதங்களுக்கு, அம்மந்திரங்களின் ஆதியும் தெரியாது, அந்தமும் தெரியாது.

பொருள்......காண்ட்ராக்டாகப் பேசிவிட்ட நோட்டுக் கற்றையில்தான் மையம் கொள்கிறது.

இந்நிலையில், இன்றைய பெண்கள் பத்திரிகை ஒன்றில் அஞ்ஞானிகளான பெண்களின் கேள்விகளுக்கு ஞான சூரியனாக, சனாதன தர்மத்தைக் காப்பாற்றிக் கொண்டு, உலகாயதம் மிஞ்சிவிட்ட உலகுக்கு நல்வழி காட்டி வரும் சமயக் குரவராகிய அருள்மிகு சங்கராச்சாரிய சுவாமிகள், அருள்பாலிக்கும் பதில் ஒன்றைக் குறிப்பிட விழைகிறேன்.

அஞ்ஞானக் கேள்வி: பிற மதத்தினரிடையே பெண்கள், வேத நூல்களைப் படிப்பதற்குத் தடை இல்லையே, இந்து மதத்தில் மட்டும் பெண்கள் வேதங்களைப் படிக்கக்கூடாது என்றிருப்பது ஏன்?

ஞான அருள் பதில்: வேதங்களில் உள்ள கருத்துக்களே புராணங்களில் இருக்கின்றன. நீங்கள் புராணக் கதைகளையும், நீதி நூல்களையும் பகவத் கீதையும் படிக்கலாமே?......

"அம்மா நான் பால் குடிக்கக்கூடாதா? ஏனம்மா?" என்று அஞ்ஞானக் குழந்தை கேட்கிறது. "பாலிலிருந்து தானம்மா, இந்தப் புளித்த மோர் பிறந்தது! இந்த நீராகாரத்தில் மோரின் சுவை உண்டு. கடுகு, கறிவேப்பிலை உப்பு எல்லாம் உண்டு. உனக்கு இதுவே நல்லதம்மா!" என்று தாய் பெண் குழந்தைக்கு ஒதுக்குவதைப் போலில்லை? அப்படி, அந்த வேதத்தில் பெண்கள் படிக்க முடியாதது, கூடாதது என்ன இருக்கிறது? எதற்காக இப்படித் தடை பெண்ணுக்கு விதிக்கப்பட்டது? பார்க்க வேண்டாமா?

## 5. சுதந்திரத் தாய்-கற்பு விலங்கு

**கா**னகச் சூழல். அவள் கணவன் அவள் மடியில் தலையை வைத்துக் கண்ணயருகிறான். உறங்கி விழித்து எழுந்து பிஞ்சுக் குழந்தை தவழ்ந்து தணலாய்க் கிடக்கும்

அடுப்பருகே செல்கிறது. அவள் கத்தினால் கணவனின் உறக்கம் கலைந்துவிடும். அவன் தலையை அசைக்கும்படி இம்மியும் நகரலாகாது; நகர்ந்தால் இவளுடைய "பதிசேவை"க்குப் பங்கம் வந்துவிடும், ஆனால் மறுபக்கம் குழந்தை. வினாத் தெரியாத குழந்தை; அது நெருப்பை நாடிப் போகிறது. கணவன் சேவை உயர்ந்ததா? குழந்தை உயிர் பெரிதா? சந்தேகமென்ன? பதி சேவைதான் பெரியது. மனசோடு அவள் அக்கினித் தேவனை வேண்டிக் கொண்டாளாம், "தேவனே! என் குழந்தையைச் சுட்டு விடாதே! அவனுக்குச் சந்தனமாகக் குளிர்ந்திடு" என்று அவள் இறைஞ்ச, இவளுடைய பதி சேவையைப் போற்றும் வகையில் அக்கினித் தேவன் குழந்தையைச் சுடாமல் இருந்தானாம்.

பெண்மை என்ற முழுமையில் விகசிக்கும் முதல் இயல்பாம் தாய்மைக்கும் கற்பு வளையமிட்டுப் பிணிக்கும் இத்தகைய சிந்தனையின் ரேகையும்கூட ருக்வேதப் பாடல்களில் இல்லை.

வேத காலத்துக்கும் முந்தைய ஹரப்பா நாகரிகத்தில் மனிதர் வழிபட்டதாகக் கருதப்படும் பிரதிமைகள் சில உண்மைகளைத் தெரிவிக்கின்றன. பெண்ணுருவும்; கிளைத்து வரும் செடி போன்ற வடிவமும், பூமிவண்மை, மற்றும் மக்கட்குலம் பெருக்கும் தாய்மை இரண்டையுமே சுட்டுகின்றன. ஆனால் ருக்வேதப் பாடல்களில் உண்மையான மாறும் வடிவில், பெண்மையின் பல்வேறு இயல்புகளும் தாய்மைக்கு இலக்கணமாகத் திகழும் பண்புகளும் கவினுற வருணிக்கப்படுகின்றன; சில தெய்வீக வடிவங்களைப் பார்ப்போம். அதிதி என்ற தேவதை தாயின் முழுவடிவாகப் போற்றப்படுகிறாள். அதிதி என்ற சொல்லுக்கு எல்லை யற்றவள், கட்டுப்படாதவள், சுதந்திரமானவள் என்று பொருள். செவிச்செல்வம் பழுதானவர் அதற்குரிய

மருத்துவரிடம் சென்றால் அவரே காது கேட்க ஒரு கருவியைப் பொருத்திக் கொண்டு எதிர்ப்பட்டால் நம்பிக்கை விழுமா?

எனவே இந்தத் தாய்த் தேவதை எல்லையற்ற செல்வாக்குடையவளாக மூப்பும் வாட்டமும் அறியாதவளாக விளங்குகிறாள். மிகவும் அக்கறையுடன் மக்களைப் பேணி நல்வழி நடத்திச் செல்லும் திறமையும் கருணையும், அன்பும் உடையவளாக இருக்கிறாள். இவள் மித்ரன், வருணன், அர்யமான், இந்திரன் அதித்தயர்களாகிய நிகரற்ற புதல்வர்களின் அன்னை.

இந்த அதிதியாம் தேவதை எண்பத்தெட்டு பாடல்களில் போற்றப்படுகிறாள். ஆனால் இவளுடைய புதல்வர்களாகிய ஆதித்யர்களுடனே (அதிதியின் மைந்தர்கள்) இவள் வருணிக்கப்படுகிறாளே ஒழிய, கணவனுடன் காட்சி தருபவளாகக் குறிக்கப்படவில்லை. ஆனால் வசுக்களின் புதல்வியாகவும், ஆதித்யர்களின் சகோதரியாகவும் குறிக்கப்படுகிறாள்.

ருக்வேத பாடல்கள், பல்வேறு காலங்களில் பல்வேறு கவிக்குரவர்களால் பாடப்பெற்றவை. ஆசிரியர் இந்தியாவுக்குள் வந்து தங்களை இம்மண்ணுக்கு உரியவர்களாக்கிக் கொள்வதற்கு முன்பே புனையப் பெற்ற பாடல்களும் அதில் உண்டு என்று கருத்துரைப்பாரும் உண்டு. பெண்மையின் நல்லியல்புகள், மகள், சகோதரி, அன்னை என்ற உறவு நிலைகளில் பொருந்துவதையே இங்கு அருமையாகக் காட்டப்படுகிறது.

மனிதப் பிறவியின் துன்பங்கள், பாவங்களில், இருந்து விடுபட, இந்த அதிதியாகிய தாயே துதிக்கப்படுகிறாள். இவள் மாந்தரின் உடல்பரமான துன்பங்களை மட்டுமின்றி, உள்ளங்களின் கசடுகளையும் நீக்க வல்லவள். இயற்கையில் இனிய காட்சிகளும், வண்மை வரிசைகளும், இந்தத் தெய்வீகம் செறிந்த அன்னையின் ப்ரதிபிம்பங்களே. இவளே சுவர்க்கம்; இவளே ஆகாயம்; இவளே ஒளி; இவளே காமதேனு;

இவளே எசமானி, என்றெல்லாம் வேதகால கவிஞர் அதிதியைப் பாடிப் பரவுகின்றனர்.

கீழை நாட்டு அறிவுச் செல்வங்களையும் ஆன்மீகக் கருவூலங்களாகிய இலக்கியங்களையும் உலகுக்கு மீட்டுத் தந்த மாமுனி என்று போற்றப்படும் மாக்ஸ்முல்லர், அதிதியை வானுக்கும் மண்ணுக்கும் அப்பால் விரிந்த எல்லையற்று விளங்கும் ஒரு பொருளின் நற்பண்புகளுக்கும் ஆற்றலுக்கும் பண்டு பண்டு முன்னோர் உணர்ந்தளித்த தெய்வீக வடிவு என்று வியந்து கருத்துரைக்கிறார்.

இருளில்லாமல் ஒளியில்லை. இவளுக்குக் குளிர்மையும், ஒளிக்கு மாட்சிமையும் அவை ஒன்றுக்கொன்றாய் இருப்பதனாலேயே மேவுகின்றன. இவ்வகையில் திதி என்ற பெண் தெய்வமும் இரண்டு பாடல்களில் அதிதியுடன் குறிக்கப்படுகிறாள். இந்தக் குறிப்பில் இவள் எல்லை கடந்தவள் என்ற பொருளுக்கு மாறாகக் கட்டுப்படாத தாய்த் தன்மையின் சிறப்பு விளக்கமாகிறது.

ஆனால் பிற்காலப் புராணங்களில், பெண்மைத் தத்துவத்தில் பிளவுகளைக் கற்பிக்க, இவளை அசுரர்களின் அன்னை என்றும் தீமைகளின் இருப்பிடம் என்றும், அதிதிக்கு இவள் விரோதி என்றும் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறாள்.

அடுத்து ப்ருத்வி என்ற தேவதை போற்றப்படுகிறாள்.

ப்ருத்வி— இவளே மண்ணாகிய அன்னை. இவள் மடியில் மனிதர் கண் விழிக்கின்றனர். இவள் மார்பில் அமுதத்தை உண்டு, இவள்மீது தவழ்ந்து, ஓடி, ஆடி வளர்ந்து பல்வேறு மொழிகள் பேசிப் பல்கிப் பெருகுகின்றனர். மாந்தர், பூமியை அண்டி, அவள் இதயம் சுரந்து தரும் வண்மைகளினால் வாழ்ந்து பெருகுவதை நன்றியுணர்வோடும் அளப்பரிய பாசத்தோடும் உன்னிக் கனிந்து பாடிப் பரவும் அற்புதப் பாக்களை, ப்ருத்வி ஸூக்தம் என்ற பகுதியில் காண்கிறோம்.

மண் அன்னையின் தோற்றமும் இந்தப் பாடல்களில் விவரிக்கப்படுகிறது. முழுதும் நீராக இருந்த காலத்து, காற்று அசைந்து மண்ணை வெளிக் காட்டியது. மண் பரவிப் பரவிப் பூமியாக விரிந்து பரவியது.

மண் அன்னைக்கு நாயகனாக வானும் குறிக்கப்படுகிறது. மழையைப் பொழிய வைக்கும் மேகங்களும் நாயகன் என்றே தொடர்பாக்கப்படுகிறது. வானின் மைந்தன் மழை.

இவ்வாறு, நாயகர்களை உருவகப்படுத்தும் நோக்கிலே, பிற்காலக் கற்பு நெறியின் ஓர் இழையோட்டத்தைக் கூடக் காண்பதற்கில்லை.

ஸீதா என்ற தேவதையைப் பின்னர் காண்கிறோம். 'ஸீதா' என்ற சொல்லுக்கு உழுபடைக்கருவியாகிய கலப்பை என்று பொருள் கொள்ளலாம். பிற்கால இலக்கியங்களில் ஸீதா மழைக்கு அதிபதியான இந்திரனின் மனைவி என்று குறிப்பிடப்பட்டாலும், ருக்வேதப் பாடல்களில் அத்தகைய குறிப்பு இல்லை. (இராமாயண இதிகாசம், இந்திரனையே இராமனாக்கி சீதையை நாயகியாக்கிப் புனையப் பெற்றது என்பதும் ஒரு கருத்து.)

நல்ல பயிர் விளைச்சலுக்கு, ஸீதையின் அருள் வேண்டப்படுகிறது.

ஓ, பேரருள் மண்ணகமே ஸீதா என்ற பெயரை உடையவளே! எங்களின் செல்வங்கள் பெருக உன்னைப் போற்றுகின்றோம்.

*"காலமெல்லாம் பால்வளம்செறிந்து வண்மை செழிக்க*
*ஸீதே நீ அருள்வாய்*

*கலப்பையின் உழுமுனைகள் எங்களுக்காகப் பூமியில்*
*நன்கு பதிந்து செல்லட்டும்*

*எங்கள் ஆயர்கள் கன்று காலிகளை மகிழ்வுடன்*
*மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லட்டும்"*

என்று துதிக்கப் பெறுகிறாள். அன்னை என்ற முழுத் தன்மைக்குரிய பல்வேறு பரிமாணங்களை இவ்வாறு பல தேவதைகளில் உருவகப்படுத்திப் பாடல்களை யாத்திருக் கின்றனர், அந்த ஆதிகவிகள்.

உஷஸ் அல்லது உஷா மிக அழகான தேவதையாக வருணிக்கப் பெறுகிறாள். ருக் வேதத்தில் இவளுக்கு இருபது பாடல்கள் இருக்கின்றன. இவள் பெயர் முந்நூறு இடங்களில் குறிக்கப்படுகின்றன. இவள் வானுக்கும் ஒளித் தெய்வத்துக்கும் பிறந்த மகளாக உருவகப்படுத்தப்படுகிறாள்.

காலையில் எழுந்ததும் வீட்டின் செல்வ மகள் எப்படி இயங்குகிறாள்?

வானிலே திரியும் இந்த எழில்மிகு ஒளிக்கன்னி கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் மாட்சியைக் கண்டு இவளில் மனம் பறி கொடுக்காதவருண்டோ?

*விண்ணகத்து நன் மகள் நம் முன் தோன்றினாள்*
*எழிலார்ந்த உடைகளணிந்து இன்பப் பூரிப்புடன்*
*மண்ணகத்துப் பெருநிதியாம் பொன்னொளிப் பாவை*
*மங்களக் கன்னியே, உதயமே எம்மீது இந்நாள்*
*செம்மை பொழிவாய்!*

*வானின் விளிம்புகளெல்லாம் ஒளிவெள்ளம் பாய்ச்சி*
*இருளின் துகில்களை விலக்கி எறிந்தனள்.*
*பொன்னின் குதிரைகளின் குளம்படி ஏரியில் பூதலம்*
*விழித்தெழ,*

*உதய கன்னிதன் நற்றேர் ஏறி வந்தனள்*
*எழுமின் மூச்சுக் காற்றே! உயிர் நம்மை மீண்டும்*
*வந்தடைந்தது*

*இருள் தொலைந்து ஒளி பாய்ந்து பரவுகிறது.*
*கதிரோனின் பயணத்துக்குக் கட்டியம் கூறி*
*ஒளிமகள் பாதை அமைக்கிறாள்; நீண்டு வாழ்வோம்—*

என்றெல்லாம் பலவாறாக இவள் சுறுசுறுப்பாய் மண்ணகத்து உயிர்களைத் துயிலெழுப்பும் நேர்த்தி பாடப்படுகிறது. இவள் புராணியாய் என்றும் குன்றா இளமையும் வண்ணமுமாய், புதுமகளாய் நிதம் நிதம் குறித்த நேரம் தவறாமல் தோன்றுகிறாள். செல்வத்தை அன்றாடம் கரைக்கும் சூதாட்டக் காரனைப் போல் மாந்தர் தம் வாழ்நாளை மெலியச் செய்வதாகவும் ஒரு குறிப்பு வருகிறது.

இவள் தன் காதலனின் ஒளிக் கிரணங்கள் பட்டதும் முகம் சிவக்கப் பூரிக்கிறாள். மண்ணகத்துக் கன்னியர் கட்டுப்படாத சுதந்திர நிலையில் நடமாடுகையில் தொடர்ந்து செல்லும் இளைஞர்களைப் போல், இவளையும் பல தேவர்கள் தொடர்ந்து வருகின்றனராம். ஆனால் இவளோ மனம் கவரும் காதலன் நெருக்கத்திலே முகம் சிவக்கப் பூரிக்கிறாள். அந்தக் காதலன் ஒளியோனாகிய சூரியன்தான். அக்னியும் இவளுக்குக் காதலன், சந்தித் தேவர்களாகிய அசுவினி தேவர்களென்ற இரட்டையர்க்கும் இவள் உகந்தவள். சந்திரனுடன் தொடர்பு கொண்டவளாகவும் பேசப்படுகிறாள்.

ராத்ரி—இரவுத் தேவதையாகத் துதிக்கப்படுகிறாள். ஒரே ஒரு பாடல்தான் இவளுக்கு உரியது. உஷையின் இளைய சோதரியாக இவளும் வானவனின் புதல்வியாக வருணிக்கப்படுகிறாள். இவள் இரவுக்குரியவளாக இருந்த போதிலும் நட்சத்திரங்களாகிய ஆயிரம் கண்களுடன் ஒளிர்ந்து மலை முகடுகளையும் இருண்ட பள்ளத்தாக்குகளையும் அவ்வொளியால் இருளகற்றுபவளாகவே சித்திரிக்கப் படுகிறாள். மக்களெல்லாரும் இவள் வரவை உணர்ந்ததும் தத்தம் இல்லங்களுக்கு விரைகின்றனர். உழைப்பின் களைப்பை நீக்கிப் புத்துயிரளிக்க இவள் மாந்தரை மட்டுமி ன்றி நாற்காலிகளாகிய விலங்கினங்கள் பறவையினங்களையும் ஓய்வு கொள்ளச் செய்து அவர்கள் மீது தீமையின் நிழலும் படியாமல் பாதுகாக்கிறாள்.

உஷையும் ராத்ரியும், வானும் மண்ணும் மகிழ்ந்து குலாவும் தெய்வீகக் கன்னியர். வெவ்வேறு வண்ணங்களுடைய இவ்விரு சோதரியரும் மாறி மாறி வந்து உலகை வாழ வைக்கின்றனர். இருவருக்கும் ஒரே நோக்கம், ஒரே இலட்சியம், இவர்கள் ஒருபோதும் மோதிக்கொள்வதுமில்லை. நின்று விடுவதுமில்லை. இவர்கள் ஒரே குழந்தையைப் பேணிக் காக்கும் அன்னையராகவும் குறிப்பிடப்படுகின்றனர்.

சகோதரிச் சண்டை மட்டுமின்றி பெண்ணுக்குப் பெண் உறவுகளிலேயே வேற்றுமையும் விரோதமும் புகுத்தப்பட்டு காலம் காலமாக நெறிப்படுத்தப்பட்டு, இந்நாள் பெண்ணுக்குப் பெண்ணே யமனாக நிற்கும் நடைமுறையில் வாழும் நம்மை வேதம் படிக்க அருகதை இல்லை என்று எதற்காகக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று புரிகிறதல்லவா?

இது ஒரு ஈர்க்கு நுழையும் வெளிச்சம்தான். இன்னும் மேலே பார்க்கலாம்.

# 6. பட்டைக் கண்ணாடியும் பட்டுக் கறுப்பும்

**வி**டியற்காலையில் மூன்று மணிக்கே எழுந்து, லட்சுமி பூசைக்கு உரிய பணிகளில் ஈடுபட்டுவிட்டாள் கௌரி. இத்தகைய லட்சுமி பூசை, கௌரி பூசை என்றால் பெண்களுக்கு எத்தனை பொறுப்பு? வீட்டுப் பொருள்கள் பாத்திரம் பண்டம் சுத்தமாக்கி, வீடு பெருக்கி, மெழுகிக் கோலமிட்டு மாவிலை வாழைத் தோரணங்கள் கட்டி, மலர் சேகரித்து வைத்து, பூசைக்கு முதல் நாளிலிருந்தே உழைக்க வேண்டும். பூசைக்கு முக்கியமான அடுத்த தேவைகள், நிவேதனமாகப் போகிற பலகாரங்கள். அன்றே அரிசி ஊற வைத்து மாவிடித்து தேங்காய் துருவி அரைத்து மாங்கு மாங்கென்று பலகாரங்கள் அனைத்தும் செய்தாக வேண்டும்.

லட்சமி, கௌரி விரதங்கள் பூசனைகள் பெண்களுக்கே உரித்தானவை. அவர் தம் மாங்கல்யம் விளங்கவும் குங்குமம் மஞ்சள் வாடாது துலங்கவும் இன்னும் பிற சௌபாக்கியங்கள் பெருகவும் செய்யப் பெறும் பூசைகள்தாம். இந்தப் பூசையில் இவளுடைய உடலுழைப்பு மட்டுமே தொண்ணூற்றொன்பது விழுக்காடு, ஏனைய குடும்ப உறுப்பினர் ருசித்து உண்ணும் பலகாரம் செய்வதிலேயே ஈடாக்கப்படுகிறது. அலுவலகம், பள்ளி நேரத்திற்கு முன் பூசை முடிக்க வேண்டும். 'ராகுகாலம்' என்ற ஒன்று குறுக்கே நிற்கும். முக்கியமான பூசை செய்யும் 'குரு' வானவர் நூறு வீடுகளுக்குப் போக வேண்டும். காலை ஆறு மணிக்குக் கௌரிக்கு நேரம் கொடுத்துள்ளார். அதற்குள் இவள் ஒருத்தியே, இடித்து அரைத்து, எடுத்துப் போட்டு கிண்டிக் கிளறி, இட்லி, கொழுக்கட்டை, அதிரசம் வடை என்று செய்ய வேண்டும். அம்மன் அலங்காரம் முடிக்க வேண்டும். இன்னும் எத்தனையோ சிறுசிறு நச்சுப்பணிகள் நிறைவேற்ற வேண்டும்.

குருவானவர், வந்து மெயில் வேகத்தில் மந்திரங்களைச் சொல்லி மணியை அடிக்க இவள் மலரைத் தூவி, அர்ச்சனையை முடிக்கிறாள். பதினைந்து நிமிடம்கூட இல்லை. தட்சணையைப் பெற்றுக் கொண்டு அடுத்த பூசைக்குச் சைக்கிளிலோ, ஸ்கூட்டரிலோ விரைகிறார் அவர்.

ஏன், இப்படி ஒரு குருவை எதிர்பார்த்து, அவசர பூசை செய்ய வேண்டும்?

இந்த மந்திரமோ, அல்லது, புரிந்த தமிழ் வாசகமோ அவளே படித்து, ஒன்றிப் பூசையைச் செய்யக்கூடாதா? அதற்குரிய தகுதி அவளுக்கு இல்லையா?

பெண் கடவுளைத் தொழுவதன் நோக்கமே கணவனின் ஆயுள், மற்றும் அவன் சுகபோகங்களின் வண்மையைச் சார்ந்ததாகிறது. அந்தப் பூசனையல்லாது, அறிவுக்கும் ஞானத்துக்குமான சரசுவதிதேவியின் பூசனைகூடப் பெண்

ணுக்கு உரிமையானதாக ஆக்கப்படவில்லை. அந்த மாங்கலிய சௌபாக்கியத்துக்கான வழிபாட்டையும் இவள் வாயசைக்கும் சினிமா நடிகையின் நிலையில்தான் செய்ய வேண்டும். குருவில்லாமல்—அதாவது ஆணாகிய புரோகிதர் இல்லாமல் பூசை முடிப்பது இவளுக்கு உரிமையானதாக இல்லை.

ஏன்?......? இந்தக் கேள்வி இன்றுவரை கேட்கக்கூடாத கேள்வியாக இருக்கிறது. உலகெங்கிலுமுள்ள ஆதி குடியின



ரிடையே, மனித சமுதாயத்தின் இனக் குழு நாகரிகம் சார்ந்த சமயச் சடங்கினைப் பெண்களே நிறைவேற்றினர் என்பது

தெளிவாகத் தெரிகிறது. ஆதிமனிதர் விளை நிலம் சார்ந்த தானியங்களை விதைத்து, விளைச்சலைப் பெருக்கி வண்மை காண, இயற்கை அன்னையைத் தொழுது நலம் விழைந்து செய்யும் சடங்குகளைப் பெண்ணே முன்நின்று நிறைவேற்றினாள் என்பதற்கான ஆதாரங்கள் இன்றளவும் தொடர்ந்து வந்திருக்கின்றன. முதல் மருத்துவரும் பெண் ணாகவே இருந்திருக்கிறாள்.

இனி ருக் வேதம் கூறும் பெண் தெய்வங்களைப் பார்ப்போம்.

வாக் என்று ஒரு தேவதையைப் பற்றிய பாடல் வருகிறது. 'வாக்' என்ற பெயரில் ஒரு ரிஷியே (பெண்) இருப்பதாகவும் அவளே இப்பாடலின் ஆசிரியை என்றும் ஒரு குறிப்பு இருக்கிறது. வேதப் பாடல்களின் ஆசிரியைகள் என்ற குறிப்பைப் பற்றி ஐயத்துடக்கிடமான விவாதங்களும், இருக்கின்றன. எனினும் விவாதங்களைத் தவிர்த்து பாடலின் தேவதையைக் கவனிப்போம். 'வாக்' ஒலிக்குரிய தேவதை, வானையும் மண்ணையும் கடந்து பிரபஞ்சம் முழுவதையும் தன் ஆக்ஞையினால் ஒன்றுபடுத்தும் ஒலிக்குரிய தெய்வம். தத்துவத்துக்கு இவளே மூல தேவதையாம். சக்தியின் மூலாதாரமான ஒலியின் கூட்டுறவின்றி, கடவுளின் எந்தப் படைப்பும் பூரணமாக நிறைவேறுவதற்கில்லையாம். எனவே தெய்வங்களுக்கெல்லாம் மேலான நாயகியாக இவள் போற்றப்படுகிறாள். பிந்தைய சக்தி வழிபாடு நெறிக்கு ஆதாரமான தேவதை இவளேயாம்.

இலா-ஸ்ரஸ்வதி-பாரதி என்று மூன்று தேவதைகள் மேலாம் இன்பத்தையும் நலன்களையும் பயக்கும் தெய்வங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். இலா என்ற தேவதை, வேள்வி செய்வதற்கான விதிமுறைகளை முதன்முதலாக மாந்தருக்குப் போதிக்கும் ஆசான் என்று போற்றப்படுகிறாள். இலா என்ற பெயருக்கே வெண்ணெய்

அப்பிய கையை உடையவள் என்று பொருள். இவள் வெண்ணெயை இட்டு, அக்கினியை வளர்க்கும் மாண்பினள். இவள் அக்கினி தேவனின் அன்னை என்று புகழப்படுகிறாள்.

ஸ்ரஸ்வதி: கசடுகளையும், தீய மலங்களையும் போக்கி ஞான வெள்ளமாகப் பரவும் தெய்வ வடிவினள். அறிவு, விவேகம், சாதுரியம், கற்பனைவளம், படைப்புத்திறன், புதிய கண்டுபிடிப்புக்கள், நுண்கலைகள் ஆகிய அனைத்து மனித ஆற்றல்களையும் பாதுகாத்து நலம் பயக்கும் ஞான தேவதை இவள். குருக்ஷேத்திரத்தில் பாயும் ஆற்றை ஸ்ரஸ்வதி என்ற பெயரால் குறிப்பதற்குப் பாயும் ஞான வெள்ளமாக இவளை உருவகப்படுத்தியிருப்பதாகவும், அந்நதிக் கரையில் தம் வேள்விகளையும் பிற சடங்குகளையும் செய்வதற்கு ஆதி ஆரியர் சேர்ந்தனர் என்ற குறிப்பும் புலப்படுகிறது. பிற்காலங்களில் இந்தச் சிறப்பு, கங்கையும் யமுனையும் கூடும் புனிதத் திரிவேணிக்கு இசைந்தது.

பாரதி: இவள் நாவன்மைக்கு நல்தேவதை. ஒலி மலர்ச் சரங்களாய் கவிதைகள் இவள். அருளாலேயே பிறக்கின்றன. எழுத்து வரிவடிவம் இல்லாத காலத்து, ஒலிகளின் நிகரற்ற ஆற்றலைப் பாகுபடுத்தி ஆயிரமாயிரமாய் அற்புதக் கவிதைகளை வடித்த ருக்வேத காலச் சான்றோர், இவ்வாறு ஒரு தெய்வத்தை உருவகப்படுத்திக் கொண்டதில் வியப்பு எதுவும் இல்லை. இலா-ஸ்ரஸ்வதி-பாரதி ஆகிய மூன்று தேவதைகள், 'வாக்' தேவியின் வெவ்வேறு அம்சங்களைக் குறிக்கும் வடிவினரேயாம்.

ருக்வேதம் விளக்கும் மணப்பெண்ணாக, சூர்யா என்னும் தேவதையை அறிகிறோம். ஆதவனின் ஒளிக் காரணமாகிய தேவதைக்கு இப்பெயரைச் சூட்டி, இவளைச் சந்திரனாகிய ஸோமனக்கு மண முடிப்பதாகப் பாடல் வருகிறது. அசுவினி தேவர்களாகிய இரட்டையர் மணமகனின் தோழனாகவும் அதே சமயம், சுயம்பரத்துக்கான போட்டியில் தேரோட்டி வென்ற

காரணத்துக்கான சூர்யாவை வென்று அவளைத் தம் தேரில் வைத்து ஓட்டிச் செல்லும் உரிமை பெற்றதாகவும் குறிக்கப்படுகிறது. சூர்யாவின் கையைப் பற்றிய ஆண் ஒரே தேவனா என்பது பற்றிய தெளிவான விவரமில்லை. இவளை கேட்டுப் பல தேவர்கள் வருகின்றனராம்.

சூரியனின் ஒளியைச் சந்திரனும் அந்தி சந்தி நேரங்களும் பெறுவதாகிய இயற்கையின் எழிலார்ந்த கோலங்களே இந்தக் கூட்டுப் பாடல் தொகுப்பில் உருவகங்களாயிருக்கின்றன.

இந்திராணி என்ற பெயரை இன்றளவும் அதிகாரத்துக்கும் செல்வத்துக்கும் உரிய பெண்ணுக்குரியதாகக் குறிப்பிடு கிறோம். இவள் தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் தன்னிகரற்ற மனைவியாம். இங்கே நாம் குறிப்பிடத் தகுந்த சிறப்பு, இந்திரனின் ஆற்றல்களுக்கும் மேன்மைகளுக்கும் இவளே காரணமாகிறாள் என்ற தனித்தன்மைதான். ஆணைச் சார்ந்து இவள் மேன்மை பெறுகிறாள் என்றில்லாமல், இவள் தனித்துவம் குறிப்பிடப்படுகிறது.

இத்தகைய தெய்வீக வடிவங்களைத் தவிர, வாழ்க்கையின் இன்பத்துக்கும் உயரிய நலன்களுக்கும் இலட்சியங்களாகக் கூடிய பல்வேறு கூறுகளைத் தெய்வங்களாக உருவகப் படுத்தப்பட்ட பாடல்களும் வருகின்றன.

சிரத்தா—(சிரத்தை) அநுமதி (தெய்வ அருள்) அரமதி (உலகியல் ஞானமாகிய விவேகம்) தம்பதி (ஆணும் பெண்ணுமாக இசைவதனால் பெறும் கூட்டான ஆளுமை ஆற்றல்) ப்ரஷ்னி (புயல் மேகம்) அரண்யானி (கனிகளும் வளங்களும் புரக்கும் வனதேவதை! எவருக்கும் தீங்கிழைக்க மாட்டாள்) வருணானி அகன்யானி (வருணன், அக்னி தேவரின் மனைவியர்) ஸிந்து, கங்கை, ஸரஸ்வதி ஆகிய நதிகள் என்று தேவதைகளின் வரிசை 'நீண்டு' செல்கிறது.

இறுதியாக 'அப்ஸரஸ்' என்ற வருக்கத்தினரைப் புகழும் பாடல்கள் குறிப்பிடத் தகுந்தவை. அப்ஸரஸ் என்றாலே நீர்

மீது உலவித் திரிபவர் என்று பொருள்படுகிறது. ஐந்து பாடல்களில் இந்தத் தேவ மங்கையர் போற்றப்படுகின்றனர். இந்த எழில்மிகு நங்கையரை உழைப்பும் மூப்பும் சாக்காடும் துன்பமும் உடைய மண்ணுலக மானுடருடன் தொடர்பு படுத்தாமல் 'கந்தருவர்' என்ற இனத்தாருடன் தொடர்பு படுத்தியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். 'ஓ! அவனுக் கென்ன கந்தருவன் போல் இருக்கிறான்!' என்றால் அழகு, இளமை, கவலையறியாது சுகபோகங்களில் துய்த்தல் என்ற கூறுகளே முதன்மையாக்கப்படுகின்றன. ஆணும், பெண்ணும் சாவு, மூப்பு, வறுமை என்ற துன்ப நிழல் படாத நிலையில் எந்த விதிக்கும் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் இல்லாமல் இன்பம் துய்ப்பதை ஓர் இலட்சியக் கனவாக வைத்து, கந்தருவர், அப்ஸரஸுகள் என்று கற்பிக்கப்பட்ட வடிவங்கள் என்று கொள்ளும்படி இவர்களுடைய சித்திரங்கள் அமைந்திருக்கின்றன. அப்ஸர நங்கையர், ஆடல் பாடல்களிலும் களியாட்டங்களிலும் வல்லவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்குப் புதல்வரைப் பெறும் உரிமைகள் உண்டு. வஸிஷ்ட மாமுனி ஊர்வசி என்ற அப்ஸரஸின் மைந்தராக விவரிக்கப்படுகிறார். ருக்வேதத்தில் ஊர்வசிக்கும் மண்ணுலக மன்னன் புரூரவனுக்குமிடையே உள்ள காதலை அழகிய பாடல்கள் சித்திரிக்கின்றன. உரையாடல்களுடன், நாடகப் பாணியில் அமைந்த இப்பாடல்களே, பிற்காலத்தில் காளிதாசன் தனது புகழ்பெற்ற விக்ரமோர்வசிய நாடகத்தை உருவாக்க வழிவகுத்தன எனலாம்.

பெண்மை என்ற முழுமையில் விகசிக்கும் தாய்மைக்குரிய அரிய இயல்புகள், மகள், மகளாக அவள் வாழ்வின் எல்லா இயக்கங்களிலும் ஒன்றி மலர்ச்சியைக் கூட்டுதல், ஞானமும் அறிவுச் செம்மையும் இவளுக்குச் சிறப்பான அம்சங்கள். அறிவின் தேட்டமும் ஆன்மீக உயர்வும் இவளுக்கே உரியன என்ற நிலைகள், வாழ்க்கையின் இன்றியமையாத போகங்கள்.

அவற்றின் பயனான சமுதாய வளர்ச்சி என்ற எல்லாப் பிரிவுகளிலும் பெண்ணை உருவகப்படுத்தி, பட்டைக் கண்ணாடியின் வாயிலாக அனைத்து வண்ணங்களையும் சிறப்பிக்கும் மாண்பாக, ஆதி ருக்வேதப் பாடல்கள் நமக்குப் பெண்மையை உணர்த்துகின்றன.

இந்த உயர்கருத்துக்கள் எப்படி ஆட்டம் கண்டன? பெண்ணின் மாட்சியில் அவை எவ்வாறு ஊறு செய்ய நச்சுப் புழுக்களாகப் புகுந்தன? அனைத்து வண்ணங்களையும் எப்படி ஒரே கருப்பாய் மாற்றித் தொலைத்தது? அறிவுக்கண் இருந்தால்தானே இப்படித் தூண்டித் துளைப்பீர்கள்? பெட்டை... பெட்டையாகவே இருந்து தொலையுங்கள்!

# 7. கல்வி-வாழ்க்கை விபத்து

இருவரும் சகோதரிகள்தாம். ஒருத்தி பற்றாக்குறை வருவாயுடைய இடைநிலைக் குடும்பத்துத் தலைவியாக, மூன்று குழந்தைகளுக்குத் தாயாக, தண்ணீர்த் தட்டுப்பாடுள்ள ஒட்டுக்குடித்தனம், ரேஷன் கடை க்யூவரிசை, ஆணாதிக்க மனப்பான்மையுடைய அதிகாரம் செய்யும் கணவன், இவளையே வறுத்தெடுக்கும் அவன் பக்கத்து உறவுகாரர் என்று முளையில் கட்டிய செக்கு மாடாக உழைக்கிறாள். ஊட்டமான உணவுக்குப் பஞ்சம். நல்ல பண்டம் சமைத்தால் இவள்வரை மிஞ்சாது. எஞ்சியவற்றைப் போட்டு வயிற்றை நிரப்ப வேண்டும். ஆனாலும் மஞ்சட்குங்கும மங்கல சௌபாக்யம் இவளுடைய ஒரே உயிரிப்பு. அதை எண்ணி, மங்கலியத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டு, மற்ற வசதிகள், தேவைகள் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கிறாள்; புறக்கணிக்கிறாள்; தியாகம் செய்கிறாள்.

அடுத்த சகோதரி, இளமையில் அந்தப் பாக்கியத்தை இழந்து விட்டாள். அதனால் அவளுக்கு, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, ஆசிரியப் பயிற்சி கிடைத்தது. பள்ளி ஆசிரியையாகி விட்டாள். பொருளியல் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் மதிக்கப் பெறுகிறாள்; பிக்குப்பிடுங்கல் இல்லை, மங்கலமில்லாக் குறையும்கூட, இந்த மதிப்புகளில் கூர்மை இழந்துவிட்டன.

குழந்தைகள்கூட, "பெரியம்மா, சாக்லெட் வாங்கித் தருவாள்" என்று அவளை அண்டி அன்பு காட்டுகின்றன, கணவனும்கூடத் தன் அதிகாரச் செருக்கை மறந்து, பல்லிளித்து, நாற்காலியைக் காட்டி உபசரிக்கிறான்.

தங்கைக்கு உள்ளூறக் குமுறலாக இருக்கிறது.

'என்னையும் படிக்க வச்சிருந்தா படிச்சிருப்பேன். இப்படி வேலை செய்து சம்பாதிப்பேன். இந்தக் கல்யாணம் இல்லைன்னு அழுதேனா...?' என்று ஒவ்வொரு சமயங்களில் நினைக்கிறாள்.

குழந்தை மணக் கொடுமைகளுக்கு மாற்றாக, பெண்ணுக்குக் கல்வி, பொருளாதாரம் சார்ந்த சுய வாழ்வு என்ற சீர்திருத்தங்கள் வந்தன. பெண் கல்வி என்பது, வாழ்க்கையில் விபத்து நேர்ந்தால் மட்டுமே அநுமதிக்கக் கூடியதாக இருந்தது. கல்வி, அவள் அறிவு மலர்ச்சிக்கு வாய்ப்பளித்து, வாழ்க்கையின் பலனாகப் பல சமுதாயச் சிக்கல்களை ஓர்ந்து முழுமை காண வேண்டும் என்றோ, அறிவின் தேட்டத்தில் ஒரு பெரிய கண்டுபிடிப்பையோ, சாதனையையோ நிகழ்த்த வேண்டும் என்றோ எந்தக் கருத்துக்கும் இடமில்லை. ஓர் ஆணைச் சார்ந்து வாழும் வாழ்க்கைக்கு, அண்டி, ஊழியம் செய்து, மஞ்சட்குங்குமப் போர்வையில் தன்னைக் கரைக்கும் வாழ்க்கைக்கு ஊறு வந்தால், நெருப்பில் எரியாமல், முண்டித அலங்கோலங்களில் குத்துப்பட்டு முடக்கப்படாமல், கல்வி கற்று, வயிற்றைக்

கழுவிக் கொள்ளலாம் என்பது, அந்த வரையில் மிகப் பெரிய ஆறுதல்கள் அன்றோ?

இந்நாட்களில் பொருளாதாரத் தேவையை முன்னிட்டு பெண் எவ்வகையிலேனும் பொருளீட்டும் தகுதியையும் பெற வேண்டும் என்ற குறிக்கோளில்தான் பொதுவாகவே பெண் கல்வி பரவலாக்கப்பட்டு வருகிறது.

"கல்லூரியில் பெண்ணைச் சேர்க்கவில்லையா?" என்று கேட்டால், "இல்லை, கல்யாணம் செய்து கொடுத்துவிடுவதாக இருக்கிறோம்" என்ற விடை வரும்.

இப்போதோ, ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள், கல்யாணமாவதற்கென்றே உயர் கல்விக்கு அலைய வேண்டி இருக்கிறது.

"பெண் வங்கியில் வேலை செய்கிறாள்...அதனால் பல வசதிகள் உண்டு" என்ற அவள் மதிப்பு, வெளிப்படையாக, அந்த வேலைத் தகுதியில் மட்டுமே ஒட்டி, அவளை ஒன்று மில்லாமல் ஆக்கிவிடுகிறது.

முந்நாட்களில், உலகெங்கினும் நிலவிய அடிமைச் சந்தை முறை தமிழ்நாட்டிலும் இருந்ததற்குச் சான்றாக, பல கல்வெட்டுக்களும் சான்றுகளும் கிடைத்திருக்கின்றன. 'கொள்வாருளரோ, கொள்வாருளரோ' என்று அடிமையின் பெயரையும் தகுதியையும் பகிரங்கமாகக் கூறி வாங்கு பவர்களை அழைப்பார்களாம். இந்த முறை அடிமைச் சந்தையில் பெண் அடிமைகள்தாம் அதிகமாக விற்பனைக்கு உரியவர்களாக வருவது வழக்கமாக இருந்ததாகவும் தெரிய வருகிறது.

'கொள்வோம்!' 'கொள்வோம்!' என்று வாங்குபவர் கூவிக்கொண்டு அறிவிக்க, விலை நிர்ணயம் செய்யும் நல்லவர் குறுக்கிட்டு வாணிபப் பேரத்தை முடித்தார்கள் என்று தெரிய வருகிறது. ஆனால் இந்நாட்களில் இந்த வாணிபம் மேல்

என்ற வகையில் பெண்ணைக் கொள்வாருக்கு மேலும் பொருள் கொடுக்கும் முறை உயர்ந்து போயிருக்கிறது. அத்துடன் பெண்ணின் பொருளாதாரம் சார்ந்த கல்வித் தகுதி உயர உயர, அதே வகையிலும் மேலும் ஏற்றம் பெற்ற ஆணே இவளை அடிமை கொள்ள முடியும் என்ற நிலையில், மேலும் மதிப்பிழந்து போகிறாள் பெண்.

வேத காலத்தில் பெண்ணுக்குக் கல்வி பயிற்றப்பட்டது, அது எத்தகைய கல்வி? உபநயனம் என்ற சடங்குடன் அந்நாளையக் கல்விப் பயிற்சி-அறிவைத் தேடும் பருவம் ஆரம்பமாகிறது. உபநயனம் என்ற சொல்லுக்கு, இன்னொரு கண்ணைக் கொடுத்தல் என்ற பொருளையும், அறிவினால் மேலும் மேலும் கூர்ந்து காணும் நோக்கில் அழைத்துச் செல்லல் என்ற பொருளையும் கூறுகிறார்கள். ஒரு மேலாம் குருவை நாடி, மாணவ-மாணவியர் தமக்கு அறிவொளியைத் தந்து வாழ்வாங்கு வாழக்கூடிய எல்லா நலன்களையும் அளிக்கும் கல்வியைப் பயிற்றியருள வேண்டும் என்று வேண்டுவதும், குரு சீடரை மனமுவந்து ஏற்று, ஒளியூட்டும் 'காயத்ரி' மந்திரத்தை முதன்முதலாக உச்சரிக்கச் செய்து, குருகுலவாசமாகிய வாழ்வை விதிப்பது மட்டுமே அந்நாட்களில் நடைபெற்ற உபநயனச் சடங்காகும். ஆதி வழக்கில் முப்புரிநூல் பற்றிய பேச்சே இல்லை.

இந்தக் கல்வி பயிற்றுமுறை தொன்மைக்கால ஆரியக் குடும்பங்களில், பயிற்று இருக்கலாம் என்றும் ஊகிக்க இடமுண்டு. தாயும்கூட இதற்குத் தகுதியுள்ளவளாக இருந்தாள். எனவே ஒவ்வொரு குடும்பமும், கல்வியளிக்கும் நிறுவனமாக இயங்கியிருக்கலாம் என்பதையும் அறுதியாக மறுப்பதற்கில்லை.

வேத கால ஆரியர் இந்தியாவில் வந்து ஊன்றிய காலங்களில், கானக விலங்குகளுடன் மட்டுமின்றி, பல்வேறு இனத்தாருடனும் தங்களுக்குள்ளேயே—குழுக்களுடனும்

போராட வேண்டி இருந்தது. இதன் காரணமாகப் பெண்கள் மொழியும் இலக்கியமும் மட்டுமின்றி, போரிடும் கலையையும் பயின்றார்கள். ருக்வேதக் கவிஞர் வரிசையில் பல பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

கோசா, லோபமுத்ரா (அகத்தியரின் மனைவி) அபலா, ஸூர்யா, இந்திராணி, யமி, என்று நீண்டு செல்லும் பட்டியலில், இக்கட்டுரைத் தொடர்களில் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள தேவதைகளின் பெயர்களும் அடங்குகின்றன. இது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகப் படவில்லை.

எனவே, பெண் ரிஷிகளே யாத்தவை, கணவராகிய ருஷியுடன் கூட்டாக யாத்தவை, பெண்களின் பெயரில், தெய்வங்களே யாத்த நிலையில், பிறர் பாடியிருக்கக் கூடியவை என்று பிரிக்கிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும், ருக்வேத காலத் துவக்கத்தில், கல்வியறிவு பெண்களுக்கு மிக உயர்ந்த நிலையில் கட்டாயமாகக் கொடுக்கப்பட்டிருந்ததெனத் தெளிவாகிறது.

போர்க்கலையில் சிறந்து விளங்கிய பெண்களைப் பற்றியும் ருக்வேதப் பாடல்களின் வாயிலாக அறிகிறோம்.

கேல அரசனின் மனைவி விஸ்பலா கணவனுக்கு உதவியாக எதிரிகளைத் தாக்கிக் கடும்போர் புரிந்ததில், ஒரு காலை இழக்க வேண்டியதாயிற்று. அசுவினி தேவர்களின் அருளால், இரும்புக் காலைப் பொருத்திக்கொண்டு மீண்டும் பகைவருக்கு யமனாக நின்றாளாம்.

முத்கலானி என்ற பெண்மணி முத்கலரின் மனைவி. இவளும் போர்க்களத்தில் வீரப்போர் புரிந்த செய்திகள் காணக் கிடக்கின்றன. காற்றில் மேலாடை வீசிப் பறக்க அம்புகளைச் சரமாரியாகப் பொழிந்து, தோற்றோடும் பகைவர் கதிகலங்கத் துரத்திச் சென்றதும், கொன்று குவித்ததும் வருணிக்கப்படுகிறது.

இதே கால கட்டத்தில், இந்தியாவில் வாழ்ந்த ஆதி குடியினர், சீரான பெண்கள் படையே வைத்திருந்ததாகவும் எண்ணிக்கையில் மிக அதிகமான இப்போராளிகளுடன் போர் புரிந்தாக வேண்டிய கட்டாயம், வந்தவருக்கு ஏற்பட்டதென்றும் விவரங்கள் காணக் கிடைக்கின்றன.

அக்காலத்தில், பொதுவாக, உலகியல் கல்வி, ஆன்மிக அறிவுக்கான தேடல், போர்க்கலை ஆகிய எல்லாப் பிரிவுகளுமே பெண்ணுக்கு உகந்ததல்லாததாக மறுக்கப் பட்டிருக்கவில்லை. அவளுக்குக் கல்வி-கேள்வி-வாழ்க்கை இன்பம் என்ற உரிமைகள் பூரணமாக இருந்ததென்றே கூறலாம்.

"மதுரத் தேமொழி மங்கையருண்மைதேர் மாதவப் பெரியோருடனொப்புற்றே முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசி முறைமை" என்று பாரதி குறிப்பிட்டிருக்கும் வழக்கு இருந்திருக்கிறது.

கல்வியும் நல்லறிவும் ஆடல் பாடற் கலைகளுடனும் இசைந்திருந்தது; ஆடற்கலையும், பாடற்கலையும் ஒரு பெண்ணின் இயல்பான குடும்ப வாழ்க்கைக்கு இசையாத நிலையில், 'விலை மகள்' என்ற வருக்கத்தாரைத் தோற்றுவித்து அவர்களுக்கு மட்டுமே உரிய கலைகளாக ஒதுக்கப்பட்டிருக்க வில்லை.

மாலை நேரங்களில், ஒத்த இளைஞர்களுடன் உல்லாசமாக, ஆடல்பாடல்கள், அறிவுக்கும் மனதுக்கும் உற்சாகமூட்டும் விநோதக் களியாட்டங்கள் என்ற வகையில் மாந்தர் கூடும் பொழுதுபோக்குக் கூடங்கள்-சமானங்கள் (சமாஜங்கள்) பெண்கள் பழகுவதற்கு உரிய இடங்களாக இருந்தன.

இவை அனைத்துமே, ஏழு வயசில் அவள் அறிவுக் கண்ணை பூவாலும் பொன்னாலும் பட்டாலும் குருடாக்கித் திருமண பந்தத்தில் இறுக்கிவிட்ட நிலையில், பயனற்றுப் போயின.

# 8. சநாதனத்தின் முரண்பாடுகள்

"இவள் என் அண்ணா பெண் மாமி, ஆசீர்வாதம் பண்ணுங்கள்! சுப்பு, நமஸ்காரம் பண்ணு!"

நான் கண்ணிமைக்க மறந்து அந்தச் சிறுமியையே பார்த்தேன்.

பன்னிரண்டு வயது இருக்குமா இவளுக்கு?

பாவாடை சட்டையணிந்த அச்சிறுமி கழுத்திலிருந்த பவளமாலை, சங்கிலி மற்றும் தொங்கும் தாலிக்கயிறு எல்லாம் தரையில் படிய நிலத்தில் விழுந்து வணங்கினாள்.

"...இவளுக்குக் கல்யாணமாயிட்டுதா?"

எனக்கு வார்த்தைகளே நெஞ்சில் சிக்கிக்கொண்டன. சிறுமியைக் கூட்டிவந்த அவள் தமக்கை புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

"போன தை மாசம் கல்யாணமாச்சு. எங்க வீட்டில் ரொம்ப வைதீகம். எனக்கும் இவளைப்போல் வயசில்தான் கல்யாணம் நடந்தது. கௌரி பிறந்தப்ப எனக்குப் பதினஞ்சு வயது. ராமன் பதினேழு வயசிலே பிறந்தான். டென்த் பரீட்சை அப்புறம்தான் எழுதினேன்..." என்றாள். ஒரே தெருவில் குடியிருக்கும் பெண் என்று அவளைத் தெரியும். இடுப்பில் பையனையும், கைவிரலில் பெண்ணையும் கோர்த்துக் கொண்டு நர்சரிப் பள்ளி ஆசிரியையாக அவள் தெருவில் செல்கையில் என்னைப் பார்த்துப் புன்னகை பூப்பாள்; நானும் புன்னகையுடன் தலையசைப்பேன். சில நாட்களில் மாலை நேரங்களில் இளைஞனான கணவன் சைக்கிளில் உட்கார்ந்து ஓட்ட, முன்னே பெண்ணும் பின் இருக்கையில் இவள் பையனையும் வைத்துக்கொண்டு செல்வதைப் பார்த்திருக்கிறேன்.

இருபத்திரண்டு வயசுக்குள் ஏழும் ஐந்துமாய் இரண்டு குழந்தைகளுக்கு அன்னையாகிவிட்ட விவரம் இப்போதுதான் தெரிய வருகிறது.



"இப்படிப் பன்னிரண்டு வயசில் கல்யாணம் பண்ணுவது சட்டத்துக்கு விரோதம் இல்லையா? பண்ணலாமா? இப்போதைக்கு நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே?"

"ஆ...சட்டம் பார்த்திண்டு நிறுத்தினாத்தான் எல்லாம் தாறுமாறாப் போறது. காலாகாலத்துல பெரியவளாகும் முன்ன கல்யாணம் பண்றது தர்மம்னு எங்கப்பாம்மா ஒரே புடியா இருந்தா. மடத்துல ரொம்ப ஈடுபாடு. நெருக்கம். ஆசாரிய சுவாமிகள் ஆசீர்வாதம் பண்ணி, கூறையும் தாலியும் குடுத்தா. கல்யாணத்தின் போது அவருக்குப் பதினெட்டு வயசு. எஸ்.எஸ். எல்.ஸி. பாஸ் பண்ணிட்டு டைப் அடிச் சிட்டிருந்தார்...அவா. வீட்டிலும் ரொம்ப ஆசாரம்...ஆனா, குழந்தை பிறந்த உடனே குழந்தையையும் யாரும் வச்சுக்க மாட்டேன்னுட்டா. அவருக்கு இருநூறு ரூபாதான் சம்பளம். நான் படிச்சுத்தான் வேலை செய்யணும். கஷ்டம் எத்தனையோ...ன்னாலும், குலாசாரம் விடலன்னு ஒரு திருப்தி..." என்று மூச்சு விடாமல் பொரிந்தாள்.

"இவள் படிக்கிறாளா?"

"ம்; ஆறாவது முடிச்சு ஏழாவது போறா; அவன் ப்ளஸ்-டூ போகணும். போதும் படிச்சதுன்னுட்டா. அவா வீட்ல கடை ஓட்டல் ரெண்டு நடத்தறா. ஆச்சு, ஏதேனும் ஒண்ணுல உட்கார இந்தப் படிப்புப் போதும்னுட்டா. இவளை, வேணுன்னா படி, இல்லாட்டா வேண்டாம்னா. என்னைப்போல வேலை செஞ்சுதான் சம்பாதிக்கணும்னில்ல. ஏதோ எட்டோ பத்தோ படிக்கட்டும், பெரியவளாயி குழந்தை குட்டின்னு ஆனா, தன்னால வீட்டிலதானே இருக்கப் போறா. அதுவரை ஸ்கூலுக்குப் போகட்டும்னேன்."

எனக்கு எந்தக் காலத்தில் இருக்கிறோம் என்று ஒரு கணம் தடுமாற்றமாக இருந்தது.

"குங்குமம் கொடுங்கள். நேரமாகிறது. அவருக்குச் சனிக் கிழமை லீவு. அடுப்பில் குழம்பு வைத்துவிட்டு ஓடி வந்தேன். சமையலை முடிச்சிட்டு அவருக்கு எல்லாம் பரிமாறி எடுத்து வச்சுட்டு நான் ஸ்கூலுக்கு ஓடணும். குழந்தைகள் இரண்டும் ரகளை பண்ணிண்டிருக்கும்." நான் குங்குமத்தை நீட்ட,

அவசரமாக இட்டுக்கொண்டு தங்கை பெண்ணுடன் விரைந்தாள். தெருவில் கழுத்தில் தாலி தொங்கச் செல்லும் சிறுமி அதைப் பற்றிய உணர்வுடன் நடந்ததாகத் தெரிய வில்லை. ஆனால், குலாசாரம் மீட்கும் அவசியத்தை அறிவுறுத்த, இந்தப் பெண்கள், ஒன்பது கஜமும் ஆசாரிய மடமும் நெறிகளாகக் கொண்ட சில பெருமாட்டிகளுக்குத் தூண்டுகோல்களானார்கள்.

"இதுதான் கண்ணுக்கு லட்சணமாயிருக்கு, தெம்மாடி களாட்டம் பொங்களை வளர்த்து வச்சிண்டு கண்டமானிக்கும் டிரஸ்ஸைப் போட்டு வேலைக்கு அனுப்பறா. அதது அநாகரிமா கண்டவனையும் இழுத்துண்டு போறது. எப்ப கல்யாணத்தைத் தள்ளிப் போட்டாளோ, அப்பவே ஆசாரம் போச்சு!"

தருமம் நிலைநாட்ட திமுதிமுவென்று வளர்ச்சியடையும் பெண்களைப் பிடித்திழுத்து, ஒன்பது கஜத்தைச் சுற்றி உட்கார வைத்து, ஒருவன் கையில், கயிற்றைக் கொடுத்துக் 'கட்டடா' என்று சொல்ல படைபடையாக எல்லாரும் கிளம்பவேண்டும் என்று அவர்கள் சொல்லாமல் சொன்னார்கள்.

தஞ்சாவூர் நந்தியைப் பற்றிச் சிறுவயசில் நான் ஒரு கதை கேட்டதுண்டு. கல்லால் பணித்த நந்திகேசுவரர் வளர்ந்து கொண்டே போனாராம், வளர்ந்து வளர்ந்து மண்டபக் கூரையை முட்டிக்கொண்டு உடைத்து விடுவார்போல, அப்போது இறைவன் சிற்பியின் கனவில் வந்து ஓர் உபாயம் சொன்னாராம். அதன்படி இரண்டு கொம்புக்கும் நடுவில் நெற்றிப்பொட்டில் ஓர் ஆணியை வைத்து இறுக்க, நந்தி குறைந்துகொண்டே வந்து நிலைத்ததாம்.

எனக்கு அந்தக் கதை நினைவுக்கு வந்தது.

அறிவு, திறமை, ஆளுமை, ஆற்றல் இதெல்லாம் பெண்ணுக்கு வளர்ந்தால் அவளுக்கென்று தனித்த சிந்தனை,

தன்னுணர்வு மிகுதியாகும். நம்பிக்கை எல்லாம் வந்து விடுமோ? எனவே, உடல் வளர்ச்சியுடன் ஏனைய இதய அறிவுமலர்ச்சிகள் எய்திவிடாமல், உடல் பரமாகவே அவள் தன்னை இழந்துவிட வேண்டுமென்றால், இழுத்து வைத்து மனையில் உட்கார்த்தி, கல்யாணம், கற்பு, சம்சாரம் என்ற முக்கூட்டு ஆணியை பலமாக அவளுள் இறுக்கிவிட்டால் பிறகு அசைய முடியாதல்லவா?

ஆனால், இந்த சநாதனத்துக்கு மறுபக்கம் என்ற ஒன்றை இவர்களால் நினைக்கவே முடிவதில்லை. சநாதன மரபு, பெண்ணைப் பன்னிரண்டு வயசில் கையில் குழந்தையைக் கொடுக்கும் தாயாக்கி, முப்பது வயசில் மூத்த கிழவியாக்கினாலும், புருஷன் அவளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். பொருளீட்ட அவளை வெளியே அனுப்பலாகாது என்று கருதியதே, அதைப் பற்றிய நினைவே அழிந்துவிட்டது. பெண் பொருளீட்டி வர எந்த வேடம் போட்டாலும் அது அனுமதிக்கப்படுகிறது.

பொருள் மட்டும் அவளுக்கு உரிமையானதல்ல. அதற்காக அவள் பெற்ற மதலையையும் எவரிடமேனும் விட்டுச் செல்லலாம். பதிக்கேற்ற சதியாக அவன் சொல்லும் சுகமே தனது வாழ்க்கை இலட்சியங்களாக நடக்க வேண்டுமென்று சநாதன தருமத்துக்குப் புதிய பரிமாணங்களைக் கண்டிருக்கிறார்கள்.

உபநயனம் மறுக்கப் பெற்று அது சம்சாரப் பிணிப்புச் சடங்காக மாற்றப்பட்டதற்கு என்ன காரணம்? அந்த நெறி எப்போது எப்படித் தொடங்கப்பெற்றது? என்கிற ஆராய்வு எங்கெங்கோ நம்மை எட்டிப் பார்க்கச் செய்கிறது. வேதம் ஓதுவதும், வேள்வி புரிவதும், சமுதாய நன்மையை முன்னிட்டென்ற கருத்தில் மக்களில் ஒரு சாராரும், தோள்வலி பெருக்கி எதிரிகளாய் இன்னல் கொடுப்போரை எதிர்த்துப் போராடும் வலிமையுடன் இன்னொரு சாராருமாக

இயங்கிவந்து காலத்து, மக்களிடையே வருணபேதங்கள் ஆழ்ந்து பிரிவுபடுத்தியிருக்கவில்லை.

வேள்விக்கும் வேதத்துக்கும் முதன்மையாக நின்ற குலத்துக்கன்னியர், தோள்வலிமையினால் சமுதாய நலன் காத்த வீரரை மணந்தார்கள். அவ்வாறே வீரர் குலத்து மங்கையர் முனிகுமாரர்களுக்கு மனைவியாவதில் தடையேதும் இருந்ததில்லை. உபநயனம் ருக்வேத ஆசியருக்கு மட்டுமே உரிய சடங்காகவும், அறிவும் ஞானமும் அவர்களுக்கே உரித்தான செல்வங்களாகவும் கருதப் பெற்றிருக்கவில்லை.

தொன்மையான ஆரிய சமுதாயத்தில் எல்லாப் பிரிவு மக்களுக்கும் பெண்களுக்கும் உபநயனம் இன்றியமையாத சடங்கென்றுதான் கருதப்பட்டது. உபநயனச் சடங்கின் விதிமுறைகளில் ஊமையருக்குச் செய்வதற்குரிய முறைகளும் காணப்படுகின்றன. ஆசானே மந்திரங்களை உச்சரித்துக் கற்பிக்கும் முறை விவரிக்கப் பெற்றிருக்கிறது.

வீரியமற்றோர், குருடர், வலிப்பு முதலிய நோயினால் பீடிக்கப் பெற்றோர் யாராக இருந்தாலும் உபநயனம் அவருக்கு விலக்கானது அல்ல. மேலும் பாரத நாட்டில் அப்போது வாழ்ந்த நாகரீகமற்ற வேடர், மற்றும் மலை, வனங்களில் வாழ்ந்த பல்வேறு இன மக்களும் உபநயனச் சடங்கு விரும்பினால் மேற்கொண்டு ஆரிய சமுதாயத்தில் இணைவதற்குரிய விதிமுறைகளும் நெறிப்படுத்தப் பட்டிருக் கின்றன.

'விராட்ய ஸ்தோமம்' என்ற சடங்கினால் அவர்கள் புனிதமாக்கப் பெற்று உபநயனம் பெறுவதற்குரிய தகுதியை அடைந்தார்கள். சமுதாயத்தில் மானிடராகப் பிறக்கும் ஒவ்வொருவரும் தத்தம் அறிவைத் துலக்கிக் கொண்டு மேன்மை பெறவும், ஈனமற்ற தொழில் புரிந்து நல்வாழ்வு வாழ்வதற்குரிய அடிப்படை உரிமை உபநயனம் மறுக்கப்படும்போது, பறிக்கப் பெறுகிறது.

ருக்வேதம் காட்டும் சான்றுகளில் இவ்வாறு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதன் பிரதிபலிப்பு எதுவுமே இல்லை.

ஆனால், ருக்வேதத்தில் பொதிந்துள்ள 'புருஷ ஸூக்தம்' நான்கு வருணத்தவர்களைப் பற்றி விவரிக்கிறது.

ஆதி புருஷனின் நெற்றியிலிருந்து முதல் வருணத்தவரும், தோள்களில் இருந்து இரண்டாம் வருணத்தவரும் தொடைகளில் இருந்து மூன்றாம் வருணத்தவரும், பாதங்களில் இருந்து நான்காம் வருணத்தவரும் உண்டாயினர் என்று கூறப்படுகிறது.

முதல் வருணத்தவர் தன்னலமின்றி சமுதாய நலனுக்காக, பிரும்மத்தை வேட்கவும், வேதம் பயில்விக்கவும் வேள்விகள் நடத்தவும், உரிமை பெற்றவரென்றும், இரண்டாம் வருணத்தவர், தோள்வலி கொண்டு சமுதாயம் காக்க உரிமை கொண்டவரென்றும், மூன்றாம் வருணத்தவர் பொருள்வளம் கண்டு சமுதாயம் பேண உரிமை பெற்றவரென்றும், நான்காம் வருணத்தவர், முதல் மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்வதே கடமையாகக் கொள்ள வேண்டும், வேறு எதற்கும் உரிமையற்றோர் என்றும் சமுதாயத்தில் பெரிய மானுடப் பிளவைத் தோற்றுவிக்கிறது.

உபநயனம் மற்றும் உரிமைகள் மறுக்கப்படும் நிலைமை ஏற்படுகையில் பெண்ணும் நான்காம் வருணத்தவரின் இடத்தில் தள்ளப்பட்டாள்.

ருக்வேதம் காட்டும் சமுதாய உணர்வில், இந்தப் புருஷ ஸூக்தம் பாயசக் கல்லாகக் கடிபடுகிறது.

"நான்காம் வருணத்தவர் யாவர்?" இந்த வினாவை எழுப்பி அதற்கு விடையாக சமூக வரலாற்று அறிவியல் மேதையான டாக்டர் அம்பேத்கார் ஓர் அகன்ற, ஆழ்ந்த ஆய்வை மேற்கொண்டு, மிக ஆச்சரியமான சில கருத்துக்களை முன் வைத்துள்ளார். அது நம்முடைய பார்வைக்கு மிக இசைவாக உள்ளது. அதைக் கூர்ந்து பார்ப்போம்.

# 9. வருணை பேதங்கள்

'அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி' என்று முகப்பைத் தாங்கிய வாயிலுள் பஞ்சையாகத் தெரியும் தொழிலாளத் தாய் ஒருத்தி தன் பன்னிரண்டு வயதுச் சிறுமியைக் கூட்டிக் கொண்டு நுழைகிறாள். நுழைவுக்கான தேர்வு முடிந்து, பணம் கட்டிப் பெயர்ப் பதிவு செய்ய வேண்டும்.

நீண்ட மேசையைச் சுற்றிப் பள்ளித் தலைமை ஆசிரியை மற்றும் ஆதரவாளர் என்ற நிலையில் அரசுத் தொடர்புடையோர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். இந்தப் பஞ்சையான தாயைப் பார்த்ததும், 'ஏம்மா அப்பாவைக் கூட்டிட்டு வந்துதான் சேர்க்கணும்னு சொன்னமில்ல? நீ மட்டும் வந்தா எப்பிடி?... போயி அப்பாரை இட்டுட்டு வா!...' என்று சொல்கிறார்கள். தாய் பதிலேதும் சொல்ல முடியாமல் விழிக்கிறாள். அப்பன் உயிருடன் இருக்கிறான். ஆனால், அவன் தொழிலுக்குப் போயிருப்பது காரணமாகாது. தன் பெண் படிக்க வேண்டும் என்று ஆசையும், அன்பும், குடும்பப் பொறுப்பும் உள்ள தந்தையாக இருந்தால், எந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றுவான். இவனோ "பொட்டக்கயிதக்கி இன்னாடி படிப்பு? நாலு காசி சம்பாரிச்சிட்டுவரத் தெருத்திவுடு!" என்று திருவாய் மலரும் வர்க்கத்தினன். அத்துடன், மகள் சம்பாத்தியமும் சேர்ந்தால், கள்ளுக்கடைக்குச் செல்லத் தட்டில்லாமல் வருமானம் கிடைக்கும் என்று எண்ணும் 'குடித்தலைவன்'

"அவருக்கு வரச் சவுரியப்படாதுங்க—" என்று தாய் தயங்கி விழிக்கிறாள்.

"சவுரியப்படாதுன்னா எப்படி? அப்பாரு வந்துதான் கைநாட்டுப் போட்டு இஸ்கூல்ல சேர்க்கணும்" என்று விதியை எடுத்துரைக்கிறாள் தலைமை ஆசிரியை.

பெண் சமத்துவம், பெண் கல்வி, பெண் எழுச்சி, பெண்ணுரிமை என்றெல்லாம் சொற்கள் முழங்கப் பெறும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில், ஒரு பெண் குழந்தையைப் பெண்கள் பள்ளியில் சேர்க்க, தகப்பனே



முன்னுரிமை பெற்றவன் என்ற விதி திருத்தியமைக்கப் படவில்லை என்பது நமக்கெல்லாம் ஆச்சரியமும் வேதனையும் தரக்கூடிய உண்மை.

பழங்காலத்தில், ஆண், பெண், ஊமை, செவிடு நோயுற்றவர், வனங்களில் வசித்த பழங்குடி மக்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்குமே 'உபநயனம்' என்ற கல்விக் கண்ணைப் பெறும் உரிமை இருந்ததென்று கண்டோம். ருக்வேதம் பெண்ணை எட்டு வயசில் தாலிக்குத் தலைநீட்டச் சொல்லவில்லை.

ஆனால் அதே வேதத்தில் 'புருஷ ஸூக்தம்' என்ற பகுதி மானுட சமுதாயத்தின் பாரபட்சமான வருண முறைப் பாகுபாட்டை நியாயப்படுத்துகிறது. நான்காவது வருணத்தார் என்ற ஒரு பிரிவினரை எந்தக் காரணமும் இன்றிக் குழியில் தள்ளுகிறது.

எழுத்து வடிவம் பெற்றிராத வேதமொழி ஒலி வடிவங்களிலேயே தொன்று தொட்டுத் துலங்கியது; மக்கள் குலத்தை வாழ வைத்தது. சமுதாய நலம் கருதிச் செய்யப் பெறும் வேள்விகளுக்கு இந்த ஒலி வடிவங்களே உயிர் நல்கின. எனவே இந்த வேதங்களைத் தம் மூலாதாரங்களிலிருந்து நாவின் ஒலிப்பூக்களாய் வெளியிடவும், அற்புத ஆற்றலுடன் அவற்றை நினைவில் சுமந்து பாதுகாக்கவும் ஒரு சாரார் பழகினார்கள். அவர்கள் மக்கட்குலத்தின் மேலாம் பணியைச் செய்ததால் முதல் வருணத்துக்கு உரியவர்களாக ஆனார்கள். இந்த வருணத்தாருக்கு, உணவு, மற்றும் உயிர் வாழத் தேவையான பொருளுக்கு உழைக்கும் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. தோள்வலியும் வாள்வலியும் கொண்டு பகைவர் மற்றும் கொடிய கானக விலங்குகளிட மிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பிரிவினரும், மண்ணில் விளைத்தும், வேட்டையாடியும், உணவைச் சேமித்துச் சமுதாயத்துக்களித்த பிரிவினரும், முதல் பிரிவினரை மேலாகக் கருதி அளிக்கும் தானத்தைப் பெறவும் உரிமை பெற்றிருந்தனர். தானம் பெறுவது எதற்காக?

சமுதாய நலன் கருதிச் செய்யப்படும் வேள்விக்காகவே அப்பொருள் செலவிடப்பட்டது. முதல் வருணத்தவருக்குச் சுயநலம், பொருள் சேமிப்பு இருக்கக் கூடாது. சமுதாயத்தின் சொத்து இந்த வர்க்கம். இந்த வர்க்கத்தினருக்கு; அனைத்து மக்களும் கல்விக் கண்ணைப் பெற, 'உபநயனம்' செய்து வைக்கும் அருங் கடமையும் உண்டு. ஏனைய மக்களுக்கும் வேள்வி புரியவும் வேதமோதவும் உரிமை இருந்தாலும், 'உபநயனம்' செய்து வைக்கும் ஆசான் என்ற உரிமை அந்த முதல் வருக்கத்தினருக்கே இருந்தது.

இவர்கள் சமமானவர்கள் என்ற தத்துவத்தை ருக் வேதத்தின் 'ஸம்வனன ஸூக்தம்' என்ற பகுதியில் வரும் பாடல்கள் மிக அற்புதமாக வலியுறுத்துகின்றன, ஒரு சக்கரத்தின் ஆரக் கால்களைப் போன்று, ஒரே மையத்தில் இணைபவர்களாய் எத்தொழில் செய்தாலும் ஒரே நோக்கில் ஒரே சிந்தையில் குவிந்து குவிந்து சமமாக வாழ்வீர்கள் என்று உரைக்கிறது.

ஆனால், புருஷ ஸூக்தம், இதற்கு மாறான பிரிவினைகளைக் கற்பிக்கிறது. ஆதிபுருடனின் முகத்திலிருந்தும், தோள்கள், தொடைகளிலிருந்தும், பாதத்திலிருந்தும் முறையே முதல், இரண்டாம், மூன்றாம் வருணத்தவர் தோன்றினர் என்று உரைக்கிறது.

நான்காம் வருணத்தவர் பாதங்களில் உதித்தவராதலால், கல்வி பெறவும் கடமைகளுக்கு உரியவராகவும், தொழில் புரியவும் தகுதியற்றவர்கள். முதன் மூன்று வருணத்தவருக்கு ஊழியம் செய்து அவர்தம் கருணையில் பிழைப்பதே அவர் தருமம் என்று அறிவுறுத்துகிறது. நான்காம் வருணத்தவர் யாவர்? இவ்வினாவுக்கு, மிகச் சிறந்த சமூக வரலாற்று அறிஞரான டாக்டர் அம்பேத்கார் ஓர் அகன்ற, ஆழ்ந்த ஆய்வை மேற்கொண்டு, மிக ஆச்சர்யமான ஆதாரங்களுடன் சில உண்மைகளை விளக்கியுள்ளார்.

வேதங்கள், உபநிடதம் மற்றும் கிராஹ்ய சூத்திரங்கள், ஜெண்டவஸ்தா முதலிய பல சமய நூல்களில் மூழ்கி அவர் முத்துக்களை அந்நூலில் தந்துள்ளார். அந்த முத்துக்களில் வீசும் இயல்பான ஒளியின் முன், மேலை நாட்டு ஆராய்ச்சியாளரின் கூற்றுக்களும் வேதம், பிரும்மம் என்று பகுத்து ஆராய இடம் கொடுக்காமல் அதில் சேர்ந்துள்ள எல்லா இடைச் செருகல்களையும், அறிவுக்குப் பொருந்தாப் புளுகுகளையும் அப்படியே கட்டித் தூசியையும் புனிதமாக்கிப் பாதுகாக்கும் உடைமைச் சமூகத்தினரின் வாதங்களும் பல்லிளிக்கின்றன.

நான்காம் வருணத்தவரும், பஞ்சமர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களும், இந்திய நாட்டில் ஏற்கனவே தங்கி அரசு, அமைச்சு, படை என்று நாகரிகமாக வாழ்ந்த இனத்தினர் அல்ல; அவர்கள் காடுகளில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளும் அல்ல; ஆரியர்கள் தங்கள் இனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதில் கருத்தாக இருந்தார்கள். அதனால் மற்ற இனத்தவரைத் தங்கள் சமுதாயத்தை விட்டு விலக்கி வைத்திருந்தனர் என்பதும் சரியல்ல.

அவ்வாறானால் பன்னிரண்டு தலைமுறைகளைப் பாவனமாக்கும் 'வ்ராட்யஸ்தோமம்' போன்ற சடங்குகளுக்கு இடமில்லை.

ருக் வேதத்தில் காணப்பெறும் ஒரு சான்று, ஆரியர் இந்தியாவில் ஏற்கனவே தங்கியிருந்த இனங்களுடன் சம்பந்தம் செய்துகொண்டதை விளக்குகிறது.

ஆரியர் இவ்வினத்தாருடன் போர் புரிய நேர்ந்தபோது, போரில் வென்றாலும், தோற்றாலும் சமாதான சம்பந்தங்கள் செய்துகொண்டார்கள். முன்பே குறிப்பிட்டபடி ஆரியரல்லாத இந்த ஆதிச் சமுதாயத்தில் அடிமைகள்—குறிப்பாகப் பெண் அடிமைகள் இருந்தார்கள்.

ஆரியர் வென்றாலும், தோற்றாலும் அவர்கள் பக்கம் பெண் அடிமைகள் வந்தார்கள். இந்தப் பெண்கள், 'வது'க்கள் என்று குறிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆரிய சமுதாயத்தில் சான்றோர் மற்றும் வீரருடன் சம்பந்தம் கொள்வது தவறாகக் கருதப்படவில்லை.

'வது'க்கள் ஆண் மக்களைப் பெற்றால், ஆரிய மனைவியருக்குச் சமமானவர்களாக உயர்ந்த மதிப்புப் பெற்றனர். இந்த அடிமைப் பெண்களின் சந்ததியினரும் கல்வியுரிமை பெற்றனர் என்பதை சாந்தோக்ய உபநிடதச் செய்தி ஒன்று விளக்குகிறது.

ஸத்யகாமன் ஓர் அடிமைப் பெண்ணின் மைந்தன். அவன் மானிடரை உய்விக்கும் மேலாம் கல்வியைப் பெற விரும்புகிறான். 'தாயே, எனது தந்தை யார் என்று தெரியாத நிலையில் எப்படியம்மா குருகுலத்தில் மாணவனாக இடம் பெறுவேன்?' என்று கேட்கிறான்.

அதற்கு ஜாபாலி என்ற பெயருடைய அந்த அன்னை 'மகனே நீ இந்த உண்மையைச் சொல்: 'நான் ஜாபாலி ஸத்யகாமன். என் அன்னை தம் இளவயதில் பல எஜமானர்களுக்குப் பணியாட்டியாக இருந்தார். இதுதான் உண்மை!' என்று நான் உரைத்ததாகச் சொல்' என்று கூறி அனுப்புகிறாள்.

முனிவர், ஸத்யகாமன் கூற்றைச் செவியுற்றதும், 'நீ உண்மையைக் கூறியதால், மேலாம் வருணத்துக்குரியவன் தான். உனக்குக் கல்வி பயிற்றுவேன்' என்று ஏற்றாராம்.

இந்தச் செய்தி அடிமையின் மைந்தனுக்குக் கல்வி யுரிமையை உறுதியாக்கினாலும், தந்தை யார் என்ற சிடுக்கு ஒன்று உபநிடத காலத்தில் தோன்றிவிட்டதை உணர்த்துகிறது.

டாக்டர் அம்பேத்காரின் ஆய்வு நூல் உபநயனச் சடங்கில் மேவிய புதிய பரிமாணங்களையும் விரித்துரைக்கிறது.

வேதகாலத்து உபநயனத்தில் முப்புரி நூலைப் பற்றிய குறிப்பே இல்லை. பிற்காலத்தில்தான் முப்புரி நூல், தந்தைவழிப் பாரம்பரியம் கூறிக் கோத்திரம் உறுதி செய்யும் சடங்குகள் எல்லாம் உபநயனத்துடன் இசைந்தன.

அத்துடன் உபநயனம் செய்து வைக்கத் தகுதியும், உரிமையும் பெற்ற முதல் வருணத்தாருக்கும், பெண்களுக்கும், நான்காம் வருணத்தாருக்கும் உபநயனம் செய்து வைக்கக்கூடாது; மீறிச் செய்தால் பாவத்துக்கு ஆளாவர் என்ற விதி நெறிகள் ஏன் வந்தன?

வேத ஒலியைக் கேட்பதே பாவம் என்று ஒரு சாராருக்குக் கடும் ஆணையும், சொல்லி வைத்தால் கொடு நரகம் என்று இன்னொரு சாராருக்குப் பயமுறுத்தலும் யாரால், எதற்காக இந்தச் சமுதாயத்தில் புகுத்தப்பட்டன?

'ஒன்றாக நடப்பீர்; ஒன்றாகச் சிந்திப்பீர்; உங்கள் குறிக்கோள்களும் எண்ணங்களும் ஒரே மையத்தில் இணையட்டும். உங்கள் உணவு, பருகு நீர் எல்லாம் எல்லாருக்கும் உகந்ததாக இருக்கட்டும்' என்ற சமத்துவ நெறியை எதற்காகக் குதறி எறிந்தார்கள்?

முறைகேடான பிளவுகளை வலியுறுத்த, நியாயப்படுத்த, வேதத்தின் முத்திரை வேண்டும் என்று புருஷஸூக்தம் என்ற புனைவு, ருக் வேதத்தில் திணிக்கப்பட்டது. இதைத் திணித்தவர்கள், சாம்ராச்சியங்களும் அரச பதவிகளும், உடமை வருக்கப் போகங்களும் கூட்டிவிட்ட மோகங்களுக்கு அடிமைகளாகித் தீர்ந்த முதல் வருக்கக் குருமார். பிரும்மகுல ருஷீ என்று முதன்மைப் பதவி அனுபவித்த வசிஷ்டர், க்ஷத்திரிய கலத்தில் பிறந்து தன் விடாமுயற்சியினால் அந்த நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொண்ட கோசிக முனிவராகிய விசுவாமித்திரர் ஆகிய இருவரிடையே தொடர்ந்து வந்த பூசல்களும் வழக்கு வாதங்களும் அம்பேத்காரின் நூலில் ஆராயப்படுகின்றன.

இந்த ஆய்வில், நமது புதிர்களுக்கும் சிறிது வெளிச்சம் தென்படுகின்றது. போர்களும், பழி வாங்கல்களும், பூண்டோடு குலமழிப்போம் என்ற சூளுரைகளும் வேதப் பாடல்களிலும், பின்னர் புராண மரபுகளிலும் தொடர்ந்து வருகின்றன.

'பழி வாங்கின விளைவே, உபநயனம் செய்து வைக்க முன்னுரிமை பெற்றிருந்த முதல் வருணத்தாரை, இரண்டாம் வருணத்தவராக இருந்த ஒரு பிரிவினரான எதிரிகளுக்கு உபநயனம் செய்து வைப்பதில்லை என்று கட்டுப்பாடாக ஒதுங்கச் செய்தது' என்ற முடிவை நூலாசிரியர் கொண்டு வருகிறார்.

உபநயனம் இல்லையேல், வேதம் படிக்க, அறிவொளி பெறத் தகுதி இல்லாதவராகிறார். இதனால் வேள்விகளில் பங்கேற்பு இல்லாமலாகும். இதனால் சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை கழன்றுபோகும். பிறகு அவர்கள் முன் னுரிமை பெற்ற மக்களுக்கு ஊழியம் செய்துதான் பிழைக்க வேண்டும்.

சமுதாயத்தின் ஒரு சாரார் காலப்போக்கில் அறிவுக் கண்களை இழந்து அடிமைத் தளைகளுக்கு உள்ளாயினர். இது தெரியாமலிருக்க, புதிய புதிய தரும சாஸ்திரங்கள், நீதி நெறிகள் எல்லாம் தெய்வீக முத்திரைகளுடன் பெருகலாயின. பழைய மாண்புகள் திருத்தப் பெற்றன.

மூன்றுக்கு மேல் நான்காம் வருணமும், அதன்பின் பல்வேறு சாதிகளும், பஞ்சமர் என்ற ஐந்தாம் நிலை 'அதோ கதி' வருணமும் தோன்ற வழிகள் ஏற்பட்டன.

பெண்...இந்தச் சமுதாயச் சுழற்சிகளில் உயிரற்ற சுழற்சிக் காயாக மாற்றம் பெறலானாள். அவள் இத்தனை பிரிவுகளும் தோன்றக் காரணமாகவும் இருந்து அதே சமயம் தனக்குரிய மனித கௌரவத்தையும் இழந்தாள். எப்படி என்று பார்ப்போமே!

# 10. குரு பீடங்கள்

அம்மன் கோயில் விழா!

மஞ்சள், சந்தனக் காப்புகள், மஞ்சளாடைகள், கொதிக்கும் வெயிலில் தீச்சட்டி தூக்கும் பக்தி வெறிகள், வேப்பிலை ஆடைகள் என்று தெருவே பிதுங்குகிறது. கோயிலில் அம்மனுக்கு மேல் அம்மனின் அருளை மனித உருவில் வழங்கும் சுவாமி இருக்கிறார். அவருடைய வேப்பிலை நீர் மேலே விழுந்ததும் பெண்கள் ஆவேசம் வந்து ஆடுகிறார்கள்...

குரு சுவாமிகள் வருகிறார். பெண்கள் படைபடையாக அருள் கேட்க பாதத்தில் விழுகிறார்கள்.

"கல்யாணமே கூடவில்லையே? என்ன செய்ய?" என்று தாய்மார்கள் பரிதவிக்கிறார்கள்.

"ஆறு வாரம் இக்கோயிலில் மஞ்சள் சரட்டைக் கட்டு, கல்யாணம் ஆகும்!" என்று சுவாமி திருவாய் மலர்ந்து அட்சதை வழங்குகிறார்.

மகளுக்காகத் தாய் பக்தி சிரத்தையாக மஞ்சள் சரட்டைக் கொண்டுவந்து சந்நிதியில் கட்டுகிறார்.

"எலுமிச்சை ரசத்தைப் பிழிந்துவிட்டு, திருப்பி நெய்யூற்றி விளக்கேற்றுங்கள், கல்யாணமாகும்!"—இது இன்னொரு வருக்குப் பரிகாரம்.

ஒரு பெண்ணுக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் ஆணுக்கும் உண்டு. கல்யாணம் என்பது அவளுக்கு மட்டுந்தான் அத்துணை கட்டாயமா என்று இவர்கள் கல்வியும் பொருளாதார சுதந்திரமும் நினைத்துப் பார்க்க ஊக்குவதில்லை.

"இந்து சமுதாயத்தில் ஒரு பெண் கன்னியாக இருக்க உரிமை அனுமதியில்லை. அவள் கைம்பெண்ணாக

இருக்கலாம். அதனால் உசிதமான வயதில் கல்யாணமாகா விட்டால் ஒரு வாழை மரத்தைக் கணவனாக வரித்து மணமானவளாகத் தாலி தரித்துப் பின் மரத்தை வெட்டிவிட்டுக் கைம்மைக் கோலம் பூண்டு வாழ்வதே தரும சாஸ்திரம்'' என்று சொல்லுமளவுக்குக் குரு சந்நிதானங்கள் இங்கே பெண்களிடையே 'மதிப்பை' பெற்று இருக்கின்றன. காவி தரித்துத் துறவறம் என்ற நிலையில், சமயம் பரிபாலிக்கும்



இந்தக் குரு பீடங்கள் உண்மையில் மக்களை வாழ வைக்கத் தான் உருவாயினவா? இதை ஆராயும்போது, பெண்ணின் வீழ்ச்சிப் பரிணாமத்தின் கூறுகளையும் பார்க்க முடிகிறது.

பெண்ணுக்கு அறிவு வேண்டாம்; அவள் உடம்புதான் முக்கியம். அவள் மக்களைப் பெறுவதற்கே படைக்கப் படுகிறாள். அந்த அளவில் அவள் முக்கியத் துவத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற அவசியங்கள், நான்கு வருணச் சமுதாயங்கள் தோன்றிய காலத்தில் ஏற்பட்டு விட்டன. உபநயனம் மறுக்கப்பட்டதும், அது தெரியாமல் இருக்க, அவளுள் மணவாழ்வின் மங்கலங்களும் சடங்குகளும் புதிய நெறிகளும் ஏற்றப்படுகின்றன. அறிவும், அழகும் இணைய, சுதந்திரமாக உலவி, வாழ்வின் மையமான ஓட்டத்தில் இருந்து ஒதுங்காமல், ஓர் ஆடவனை விரும்பிச் சேர்ந்து, மக்களைப் பெற்று வாழும் உரிமை ருக் வேதத்தில் வரும் பெண்களுக்கு இருந்திருக்கிறது.

திருமணச் சடங்குகளும், மந்திரங்களும் பெண்ணை முழு மனித வளர்ச்சி எய்தியவளாகவே காட்டுகின்றன.

திருமணப் பிணைப்பில் இருவரும் ஒன்றுபடுகையில் கணவனுடைய தளையற்ற சுதந்திரமும் பிணிக்கப்படுவதாகவே குறிக்கப்படுகிறது. மணமகன் மணமகளை அணுகுமுன், கூறப்படும் சில மந்திரங்களும், சடங்குகளும் ருக் வேத காலத்தில், பருவமடைந்த பின்னரே பெண்களுக்குத் திருமணம் செய்யப்பட்டது என்பதை ஐயந்திரிபற விளக்குகின்றன.

மணமகன் மணமகளை அணுகுமுன், அவள் உடலுக்கு அதுகாறும் பொறுப்பேற்றிருந்தவர்களாக, நான்கு தேவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். சிறுமியாக பேதைப் பருவத்தில் ‘வருணன்’ அவளுக்கு வளர்ச்சியைத் தருகிறான். ‘ஸோமன்’ என்ற தேவனின் பொறுப்பில் அவள் பூப்பெய்தும் நலன் ஏற்படுகிறது. ‘அக்னி’ அவளுக்கு மலர்ச்சியும், தெளிவும், சக்தியும் நல்குகிறான். ‘விசுவாவசு’ என்ற தேவன் அவளை இறுதியாக உரியவளாக்கிக் கொண்டு மன்மதக் கலையின் இயல்புகளை உணர்த்துகிறானாம்.

எனவே, மணமகன், மணமகளை அணுகுமுன், இந்த விசுவாவசு தேவனைத் தொழுது, “இந்தக் கன்னியை மணம்

புரிந்த நாயகன் வந்துவிட்டான். எனவே அவனுக்கு அவளை அளித்துவிட்டு, தந்தையின் இல்லத்தில் உள்ள வேறு ஒரு கன்னிகையை நீ அணுகுவாயாக!" என்று பொருள்படும் மந்திரவாசகம் சொல்லப்பட்டது. பெண்ணின் அருகில் 'விசுவாவசு' தேவனைக் குறிப்பாக்கும் ஒரு தடி (உலக்கை) போடப்பட்டிருக்கும். அடையாளமான அச்சின்னத்தை, இம் மந்திரத்துடன் மணமகன் விலக்குவான்.

இச்சடங்கு, ஒழுக்கம் என்ற பெயரில் பெண் எப்பொழுதும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை மேலும் மெய்ப்பிக்கிறது. ஒரு பெண்ணைத் தாயாகக் கருவுறச் செய்யும் உடல்பரமான முக்கிய நிகழ்ச்சிக்கு உடல் முதிர்ச்சியும் உள்ள மலர்ச்சிகளையும் நல்குபவர்கள் ஆண் தேவர்களாகவும் உருவகப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த மேன்மைகள், உபநயனம் மறுக்கப்பட்ட கையோடு கட்டாயமாக்கப்பட்ட திருமணத்தில், ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களாக வீழ்த்தப் பெற்றன. உபநயனம் மறுக்கப் பட்டதால், வேதம் படிக்கத் தகுதியில்லை.

வேத மந்திரங்களை உச்சரிக்கத் தகுதியிழந்ததால், வேள்விகளைச் செய்வதற்கும் உரிமையற்றவர்களாவார்கள். அக்காலத்துச் சொத்து உரிமை, வேள்விகளைச் செய்ய உரிமை பெற்றவருக்கே இருந்தது. அக்காலத்து உடமைகள், பெரும்பாலும் ஆடு-மாடுகள் குதிரைகளில்தான் நிலை கொண்டிருந்தன. நில உடமைச் சமுதாயம் பரவலாக வழக்கில் வரவில்லை எனலாம். ஆனால் போராட்டங்கள், நில உடமையின் காரணமாகவே நிகழ்ந்தன என்று கொள்ளலாம்.

பெண்களுக்கு உபநயனம் மறுக்கப்பட்ட நிலையில் சொத்து உரிமையும் இல்லாதவர்களாக ஒடுங்கினார்கள். இவ்வாறு பெண்களின் ஒடுக்கப்பட்ட பரம்பரை, சீராக இருட்டு மாயையையும் குருட்டுப் பழக்கங்களையும் வளர்க்க

அரண்கள் அமைத்து, அவை காவல் மதில்கள் என்று தெரியாமல் இருக்க, பூத்தோரணங்கள், பட்டுக் குஞ்சங்கள் கட்டி அவளை அவற்றிலேயே ஒன்றிடச் செய்தார்கள்.

இப்படிச் செய்தார்கள், ஆக்கினார்கள் என்று விவரிப்பதைக் கண்டு யார் செய்தார்கள் என்ற கேள்வி என்னை நோக்கி எழக்கூடும்.

சமுதாயத்தில் வருண பேதங்கள், மற்றும் பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றுக்கு அவசியம், குருமார்களால் உண்டாயிற்று.

உடல் வலிமையினால் மனிதத் தொகுதிகளை திறம் பெற்றவருக்கும், அறிவு–ஆன்ம வலிமையினால் ஏற்றம் பெற்றவருக்கும், அதிகார வெறியும், பதவிப்பித்தும், சுயநலங்களும் வளர்ந்ததனால், சண்டை சச்சரவுகள், போர்கள் நிகழ்ந்தன. அதன் விளைவாகிய பழிவாங்கலே உபநயனம் மறுக்கப்பட்ட நிலை என்று கண்டோம். அந்த மேலான ஆதிக்க நிலையையும் இன்னும் உறுதியுடன் நிலைப்படுத்திக் கொள்ள, 'குரு வர்க்கம்' உண்டாயிற்று. வலிமையுள்ள க்ஷத்திரிய அரசர்களுக்குக் குருவாகப் பதவி வகிப்பவர்கள், அரசனுக்கும் மேலான மதிப்பையும் நலன்களையும் பெற்றிருந்தார்கள். அரச பரம்பரையில் உதித்த விசுவாமித்திரர், அதனினும் மேலான பதவியாம் 'பிரும்ம ரிஷி'ப் பட்டத்தைக் கேட்க, கடுஞ்சாதனை புரிந்தார் என்பது யாவரும் அறிந்த புராண வரலாறு. இத்தகைய குருபீடங்கள், கத்தியின்றி, இரத்தமின்றி, மக்கள் தொகுதிகளைத் தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவர ஏதுவாக பலப்பல புதிய உண்மைகளை, ஆன்மீகக் கருத்துக்களை அள்ளித் தெளிக்க வேண்டி இருந்தது. அவற்றில் முக்கியமானது, இறந்தபின் மறு உலகம் என்ற கண்டுபிடிப்பு. மரித்தவர் மீண்டும் பிறவி எடுப்பார், என்று மரணத் துக்குப்பின் உள்ள ஒரு வாழ்வைப் பற்றிய நம்பிக்கைகள் கற்பிக்கப்பட்டன.

இந்த நம்பிக்கைகளின் மூலம் பெண்ணை இன்னும் ஆழக் குழியில் வீழ்த்திவிட முடிந்தது. மூளைச் சலவை செய்ய, குருபீடங்களுக்குப் பெண்களே உகந்தவர்களாயினர்!

ருக்வேத காலத்தில், பெண் குழந்தைகளுக்காகத் தனிப்பட்ட வேள்வி செய்யப்படவில்லையெனினும், பெண் குழந்தைகள் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மிக முக்கியமான பால் கறக்கும் உரிமையை அவள் பெற்றிருந்தாள். இதனால் பெண்ணின் பெயரே 'து ஹித'—(பால் கறக்கும் உரிமை பெற்றவள்) என்று குறிக்கப்படுகிறது.

ஆனால் ருக் வேதத்திற்குப் பிற்பட்ட அதர்வ வேதத்தில் தான், சடங்குகள், நெறிப்படுத்தப்படும் விவரங்களைக் காண்கிறோம். 'ருக் வேத' காலத்தில் 'ஸ்திரி' என்ற சொல்லுக்குப் 'பெண்' என்ற பொருள், முழுமையானதாகக் குறிக்கப்படுகிறது. அதர்வ வேதத்தில், 'ஸ்திரி' என்ற சொல் 'மனைவி' என்று நெறிப்படுத்தப்படுகிறது. ருக் வேதத்தில், சடலங்களை எரித்ததற்கான சான்றுகளே இல்லை. புதைப்பதற்கான சான்றுகளே இருந்ததெனக் கூறலாம். ஆனால் அதர்வ வேதத்தில், புதைக்கும் பழக்கம் மாறி, எரிக்கும் வழக்கம் வந்தது. சடலங்களை எரித்த பின், நீர்க்கடன் செய்யும் வழக்கங்கள் தோன்றின. நீர்க்கடன் செய்வதற்கு ஆண் சந்ததியினரே உரியவராயினர். எனவே உலக வாழ்நாளின் கவலையைவிட மறு உலகின் நற்பலன்களைப் பற்றிய கருத்தும் கவலையும் மக்களிடையே முக்கியமானதாக ஊன்றப்பட்டன. இதனாலெல்லாம் பெண் ஆண் மக்களைப் பெறுவதற்கு மட்டும் உரிய கருவியாக நிலைப்படுத்தப்பட்டாள்.

கருவில் இருக்கும் குழந்தை, பெண்ணாகி விடாமல் ஆணாகப் பிறப்பதற்குரிய சடங்குகள் உருவாயின.

ருக் வேத வழக்குப்படி சமுதாயம் இருந்து பின்னர் அதர்வ வேத வழக்கப்படி மாறிற்று என்று காலத்தைக் கணக்கிடு

வதற்கில்லை. அதர்வ வேதம் ஆரியர்களின் இன்னொரு பிரிவினரை, முன்னும் பின்னுமாக வந்தவரைச் சார்ந்தது என ஊகிக்கலாம். எனினும்,

பிற்காலத்தில் சமுதாய மாறுதல்கள், அதர்வ வேதத்தில் பரவலாகக் காணப்படும் முக்கியமான சடங்குகள் வாயிலாக, பெண்ணின் கீழ்முக இறக்கம் உறுதிப்படுத்தப்படுகிறது.

# 11. முன்னுச்சி வகிற்றுக் குங்குமம் தீற்றல் - அடிமைப் பெண் அடையாளம்

**வ**ட இந்தியாவில் உள்ள பழங்குடி இனத்தாரில் 'ஓரான்' என்ற இனத்தாரிடையே ஒரு நாடோடிக் கதை வழங்கி வருகிறது.

இந்த 'ஓரான்' இனத்தாரிடையே நான்கு பேர் இளமைப் பருவந் தொட்டே நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவன் ஸிந்தூரம் எனப்படும் குங்குமம் விற்பவன்; ஒருவன் துணி நெய்யும் தொழில் செய்பவன்; ஒருவன் மரச் சிற்பச் செதுக்கு வேலையில் தேர்ச்சி பெற்றவன்; எஞ்சியுள்ள இன்னொருவன் பொன் நகைகள் செய்யும் மரபில் பயின்றவன்.

இந்த நால்வகைத் தொழிற் கலைஞர்களுக்கும் கிராமத்தில் ஒரே இடத்தில் தங்கி இருப்பதில் அலுப்பு ஏற்பட்டது. புதிய புதிய இடங்களைப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். தத்தம் தொழிலுக்குரிய சாதனங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். வழியில் இரவைக் கழிக்க ஒரு மாந்தோப்பில் அவர்கள் தங்கினார்கள்.

ஒரே சமயத்தில் எல்லோரும் உறங்கி விட்டால், பொருள் ளவு போய்விடலாம் என அஞ்சி, அவர்களில் மூவர் உறங்க, ஞ்சியவர் விழித்திருக்க வேண்டும் என்று ஒரு நேர



வரையறை செய்துகொண்டு முறை போட்டுக்கொண்டு விழித்திருந்தார்கள்

முதலில் மரச்சிற்பம் செய்யும் கலைஞனின் முறையாக இருந்தது. அவன் சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் ஒரு காய்ந்த மரத்துண்டை எடுத்துச் செதுக்கி, அழகிய பெண் வடிவம் ஒன்றை உருவாக்கினான். அதை முடித்து நிற்கச் செய்துவிட்டு, அடுத்தவனை எழுப்பினான். இந்த முறைக்காரன் பொன் நகைகள் செய்யும் கலைஞன். அழகான மரப் பிரதிமையைக் கண்டதும் நகை செய்து போட்டால் நன்றாக இருக்குமே என்று கருதினான். பிரதிமையில் சங்கிலிகள் ஏறின. கம்மல்கள், கைவளையல்கள் என்று அழகு செய்தான்.

இதற்கு அடுத்த முறைக்காரன் துணி நெய்பவன். 'ஓ இந்த அழகிய பிரதிமைக்கு ஆடை இல்லாதது குறை அல்லவா?' உடனே அழகிய சேலை ஒன்றை நெய்து, பிரதிமைக்கு அணிவித்தான்.

இறுதியாக விழித்திருக்க வந்தவன் குங்குமம் விற்பவன். பொழுது விடியுந் தறுவாயில் அந்தப் பிரதிமையின் நெற்றியில் குங்குமத்தை எடுத்துத் தீற்றினான். மரப்பிரதிமை உடனே உயிர் பெற்று, நாணமும் எழிலும் குலவும் நங்கையாக நின்றாள்.

நான்கு நண்பர்களும் அந்தப் பெண்ணை யார் மனைவியாக்கிக் கொள்வது என்று தமக்குள் பூசலிடத் தொடங்கினார்கள். மரச்சிற்பி அவளைத் தானே உருவாக்கியதால், தானே அவளுக்குரியவன் என்று வாதிட்டான். பொன் அணிகள் செய்து பூட்டியவனும், ஆடை நெய்து அணிவித்தவனும் தங்களுக்கே அவள் உரியவளாக வேண்டும் என்று உறுதியாக நின்றார்கள்.

குங்குமக்காரனோ, தான் குங்குமம் வைத்ததாலேயே அவள் உயிர் பெற்றாள் என்று உரிமை கோரி வாதாடினான்.

இவர்கள் இவ்வாறு சச்சரவிடுகையில் அங்கொரு பெரியவர் வந்தார். அவர் நால்வரின் வாதங்களையும் கேட்டபின், இவ்வாறு தீர்ப்புக் கூறினார்.

"அவளை உருவாக்கிய சிற்பி, தந்தையாகிறான். ஆடை அணிவித்தவன் மூத்த தமையன் ஆகிறான். அணிகள் செய்து அலங்கரித்தவன் தாய் மாமனாகிறான்; அவளைத் தொட்டு நெற்றியில் குங்குமம் தீற்றியவனே கணவனாகும் உரிமையைப் பெறுகிறான்."

திருமணம் என்பது, ஓர் ஆண் ஒரு பெண்ணை உடைமையாக்கிக் கொள்வது என்று பொருள் படுவதாக இக்கதை வலியுறுத்துகிறது. அவ்வாறு உடைமைப் பொருளாக ஆக்கிக் கொள்வதற்குரிய அடையாளமே குங்குமத் தீற்றல் சடங்கென்பதும் தெளிவுறுத்தப்படுகிறது.

இன்றும் வடஇந்திய மக்களிடையே குங்குமத்தீற்றல் ஒன்றே திருமணம் நிறைவேறிவிட்ட பெண்ணுக்குரிய அடையாளச் சின்னமாக இருக்கிறது.

தென்னிந்தியரிடையே வழக்கில் உள்ள தாலி, அல்லது 'மாங்கல்யம்' வட இந்தியத் திருமணங்களில் இல்லை. மேலும் தென்னிந்தியச் சிறுமிகள் போல், வடஇந்தியாவில் திருமணமாகாத சிறுமிகள் குங்குமப் பொட்டு அணிவதை முக்கியமாகக் கருதுவதில்லை. ஏன், அணிவதில்லை என்று கூடச் சொல்லலாம். (இந்நாட்களில் அழகு அலங்காரப் பொருள்களாக மலிந்துவிட்ட பிளாஸ்டிக் ஒட்டுப் பொட்டுகள் விதிவிலக்கானவை)

இவ்வழக்கைப் பற்றி நான் வேடிக்கையாகக் குறிப்பிடுகையில் வங்க எழுத்தாள சோதரி ஒருவர் என்னிடம் ஒரு தகவல் கூறினார்.

"மனிதர் கூட்டம் கூட்டமாக வீடு வாசலின்றித் திரிந்த நாட்களில், ஆங்காங்கு காடுகளில் உறங்குவதும் வேட்டையாடி

உண்பதும், இனம் பெருக்குவதுமாகத்தான் வாழ்ந்தனர். அந்நாட்களில் ஒருவன் ஒரு பெண்ணைக் கருவுறச் செய்யுமுன், அவளைக் கையில் உலோக வளையமிட்டு (இரும்பு) இழுத்துச் சென்று, தனிமையில் உறவு கொண்டான். அவ்வாறு அவள் பயன்படுத்தப் பெற்றதற்கு அடையாளமாக, கூரிய கல்லை எடுத்து, அவள் நெற்றியில் குத்திக் குருதி வரச் செய்து, முன்னுச்சியில் அடையாளக் கோடிட்டான். அதுவே இன்றளவும் திருமணத்தின் ஸிந்தூரச் சடங்காக முதன்மை பெற்றிருக்கிறது.''

இந்தக் கூற்றுக்கு ஆதாரம் தெளிவாகத் துலங்கவில்லை என்றாலும், இது நம்பற்குரிய சான்றாகத் தோன்றுகிறது. இந்தியப் பழங்குடி இனத்தாரிடையே இருந்து இந்த வழக்கம் வேதகால ஆரியரிடையே பரவிற்றா என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும்.

'பரிஃபால்ட்' தம் நூலில் பழங்குடி வழக்கங்களைப் பற்றி எழுதுகையில், திருமணச் சடங்குகளில் ஆதிக்குடியினர், மணமகள் குருதி அடையாளம் தரிக்கும் வழக்கைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு குருதியினால் அடையாளம் இடுவது அவளுடைய கணவனாக வருபவனுக்கு அவள் புனித மானவளாகவும், ஏனைய ஆடவருக்கு அவள் களங்க முடையவளாகவும் கருதப்படுவதற்கான சின்னமாக இருந்ததென்றும் குறிக்கிறார். இந்தச் செய்தி வங்கச் சோதரியின் கூற்றுக்குச் சான்றாகவே இருக்கிறது.

பெண்ணுக்கு மருதோன்றி இடும் சடங்கு, சிவப்பு ஆடையினால் அவளை அலங்கரிப்பதும்கூட, இன்றளவும் வடஇந்தியாவில் மிக முக்கியமான வழக்கங்களாக இருக் கின்றன. மணப்பெண்ணின் கைகளிலும், கால்களிலும் செம்பஞ்சுக் குழம்பில் நேர்த்தியாகக் கோலங்களிட்டு

அலங்கரிப்பதும் வடஇந்தியத் திருமணங்களில் முதன்மை பெற்றிருக்கின்றன.

வங்கத்தில் இன்றளவும் சுமங்கலிப் பெண்களுக்குரிய சின்னங்களாக உலோக சங்கு வளையல்களும் ஸிந்தூரமும் துலங்குகின்றன. பழங்குடி மக்களிடையே, ஒருவனுக்கு ஒருத்தி என்ற பரிணாம வளர்ச்சி தோன்றியிராத நாட்களிலும் சில அநுபவங்களின் மீது நிர்மாணிக்கப்பட்ட நெறிகள், ஏற்கனவே கருவுறச் செய்த நங்கை, புனிதமானவளல்ல என்று காட்டும் அடையாள அவசியத்தை உணர்த்துவதாக இருக்கலாமல்லவா...!

ருக்வேத கால ஆரியர் திருமணம் செய்து கொள்வதனால் பெண்ணை உடைமைப் பொருளாகப் பாவிக்கக்கூடிய சடங்குகளும், வழக்குகளும் இருந்திருக்கவில்லை.

ஆனால் அடிமைகளாகப் பிற இனத்தாரிடம் இருந்து ஆரிய சமுதாயத்தில் வந்து சேர்ந்த வதுக்களை இங்கே நினைவில் கொண்டு வரலாம்.

ஆரியர் சிந்து—கங்கைச் சமவெளிகளில் ஊன்ற வந்தபோது, போராடுவதற்கும், நிலைப்பதற்கும், எண்ணிக்கையில் குறைவாக இருந்த காரணத்தினால், இனப் பெருக்கத்துக்காக வதுக்களுடன் தொடர்பு கொள்வது உகந்ததாக இருந்தது.

இந்த வதுக்களுக்கும், 'விலை மகள்' என்ற வழக்கில் பெண்டிரை அடிமைப்படுத்திய நிலைக்கும் மிகுந்த வேற்றுமைகள் உண்டு.

ஓர் அரசன், அல்லது செல்வச் சீமான் தனது ஆடம்பர சுகபோக சுய மதிப்பை உலகுக்கு அறிவிக்கும் வகையில் அழகிய பெண்டிரை அந்தப்புர அடிமைகளாக வைத்த நிலை முழு ஆணாதிக்கச் சமுதாயத்தின் பிரதிபலிப்பாகும்.

ஆனால் பரிசிலாக வந்த 'வதுக்கள்' தத்தம் எசமானருடன் தொடர்பு கொண்டு ஆண்மக்களை ஈன்றதும், ஆரிய மனைவியருக்குச் சமமாகவே சமுதாய மதிப்பையும் பெற்றார்கள்.

குங்குமத் தீற்றலை மணச்சடங்காக வழக்கில் கொண்டு வந்தவர்கள், வதுக்களாக இருக்கலாமோ என்பது சிந்தனைக்குரியது. இன்னும் ஒரு படி முன்னேறினால், அடிமைப் பெண்கள் வதுக்களாயினர் என்று அடையாள மிடப்பட்ட சின்னமே, குங்கும மங்கலத் தீற்றலாயிற்றென்றும் கொள்ளத் தோன்றவில்லை?

# 12. குங்குமச் சின்னம் பொட்டும்-கலையும்

லெனின் கிராத் நகரின் தெருவொன்றில் நடை பாதையில் நான் தனித்து விடப்பட்ட சுதந்திரத்தை அநுபவித்தவளாய் நடந்து கொண்டிருக்கிறேன்.

காலை எழுந்தவுடன் நம்மைப் பிணைக்கும் எத்தனை எத்தனையோ கடமைக் கயிறுகளிலிருந்து விடுபட்ட மகிழ்ச்சி; தெரிந்தது பழகிய இடம், முகங்கள் என்ற பிணைப்பும் இல்லாத புதுமைகள்; எனது ஆர்வக் கண்களால் பருக இயலாத புதுமை வெள்ளமாய் விரியும் வேற்று மொழிச் சூழல்.

சட்டென்று எனது பாதை தடைபட்டுப் போகின்றது. என்னைச் சுற்றி ஒரு வியப்பு வளையமே நெருங்கிவிட்டது. அந்த முகங்களுக்கும் மின்னிய கண்ணொளிப் பார்வை களுக்கும் கேள்விக்குறியாக நானே நிற்கிறேன். புரிந்து கொள்ளச் சில மணித்துளிகள் ஆகின்றன. எனது சேலை உடை மட்டும் அந்நிய உடையைப் பறையடிக்கவில்லை.

ஒரு மூதாட்டி மெல்லிய பறவைக் கதகதப்புடன் என் கையைப் பற்றி இழுக்கிறார். நெற்றிப் பொட்டை இன்னொரு கை சுட்டுகிறது, வியப்பு விழிகள் மின்ன வினா எழும்புகிறது.

“இந்தச் சிவப்புப் பொட்டு அணிவதன் நோக்கமென்ன? இது சமயக் குறியா?”

இதைத் தெரிந்துகொள்ளவே அத்துணை நாட்கள் தவம் கிடந்தாற் போன்றும், திடுமென்று நகரத்து நடைபாதையில் நான் அகப்பட்டுவிட்டாற் போன்றும் புத்தார்வம் குமிழியிடும் புன்னகைகள் என்னைச் சுற்றி மொய்க்கின்றன.

“இந்து சமயச் சின்னமா? சடங்குக்ளுக்குரியதா? ஆண்களும் தரிக்கலாமா?” பல்வேறு வினாக்கள் என்னைத் தாக்க நான் திக்கு முக்காடினாலும் சமாளித்துக்கொண்டு கோர்வையில்லாமல் ஏதேதோ கூறுகின்றேன்.

உண்மையில் எனது அறியாமை எனக்கே வெட்ட வெளிச்சம் ஆயிற்று.

“சமயச் சின்னமா சடங்குகளுக்குரியதா?” என்னால் ஆங்கிலத்தில்தான் கூற முடியும். அவர்களில் எத்தனை பேருக்குப் புரிந்ததோ புரியவில்லையோ? என்ற இயலாமை வெட்ட வெளிச்சமாகப் புரியாத புண்ணியத்தை மொழித் தடை கட்டிக் கொண்டது.

இத்தகைய சந்தர்ப்பங்கள் இந்தியாவிலிருந்து செல்லுகின்ற பல பெண்களுக்கும் நேர்ந்திருக்கும். குங்குமப் பொட்டு திலகமிடுதல் குறித்து இன்றுவரையிலும் திட்டவட்டமான கருத்தை யாரும் எடுத்துரைத்ததாக என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை.

ஒரு சமயம் பலப் பல ஆண்டுகளுக்கு முன் புறநகர்ப் பேருந்து ஒன்றில் கிராமத்து முதியவர் ஒருவரும், கிராமத்து பள்ளி ஆசிரியர் போல் தோன்றிய இள வயதுக்காரர் ஒருவரும் ஊர்தியில் உள்ளோர் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் விவாதித்துக்கொண்டு இருந்தனர். பெண்களின்

தியாக உணர்வைப் பாராட்டும் வகையில் இளம் ஆசிரியர் பேசிக்கொண்டு இருந்தார்.

“பொம்பளைங்க எதுக்கு நெத்தியிலே சிவப்பு பொட்டு வைக்கறாங்க? அவங்க தியாகம் பண்ணுறவங்க, சிவப்பு பொட்டு தியாகத்தின் லட்சியம்; லட்சணம், இந்தியப் பெண்கள் தியாகத்துக்கு இருப்பிடங்கள். ஆம்பிள எப்படி எப்படியோ இருக்கலாம்; ஆனா பொம்பளைங்க தியாகத்துக்கே பிறக்கறாங்கங்கறதை வலியுறுத்தத்தான் குங்குமப் பொட்டு அவங்களுக்கே என்று வைக்கறாங்க— வைக்கணும்.”

இவ்வாறு அடித்துக் கூறிவிட்டு, மீசையை நீவிக் கொண்டு சுற்றும் முற்றும் பெருமையுடன் பார்த்துக் கொண்டார்.

முதியவர் தோல்வியை ஒப்புக்கொண்டு, இளம் நண்பரின் அறிவுக்குத் தலை வணங்கினார். வண்டிக்குள் இருந்த எந்தப் பெண்மணியும் (நானும்தான்) தியாகம் செய்ய நாங்கள் பிறவி எடுக்கவில்லை என்று சீறிக் கொண்டு எழுந்திருக்கவில்லை.

சிவப்புப் பொட்டுக்கு இத்தகைய அடிப்படைப் பொருள் உண்டு என்ற கருத்து என்னுடன் பல்வேறு வினாக்களை உலுக்கிவிட்டதுதான் காரணம். என்னுடைய அன்னையின் வயது முதிர்ந்த தாய் அந்த நாட்களில் சில கேள்விகளைக் கேட்பதுண்டு. அவற்றுக்கு அவர் விடைகளை எதிர்பார்த்த தாகத் தெரியவில்லை. அதற்காக வினாக்களை வெளி யிடாமல் இருந்ததுமில்லை. அவர் தமது முப்பத்தைந்து வயதில் கைம்பெண்ணாகிப் பல ஆண்டுகள் முடியற்ற தலையை மூடிக் கொண்டு வெள்ளைச் சேலையும் ரவிக்கையில்லாத மேனியுமாக வாழும் மரபைக் கடைப்பிடிக்கும் கட்டாயத்தில் வாழ்ந்தவர். எண்பதைக் கடந்து அவர் வாழ்ந்த நாட்களிலும் முடி முற்றிலும் வெண்மையாகிப் போய்விடல்லை.

“தலை பண்ணிண்டா இன்னும் வண்டா விழறது. சவம்” முடியை நாவிதர் வழிக்கும் போது அந்தக் கழிவு கருவண்டு போல் இருக்கிறதாம்! என்பார்.

"புருஷன்காரன் தாலியையும் மடிசார்க் கட்டையும்தானே கொண்டு வந்தான்? அதைத் தொலைச்சிட்டுப் போகட்டும். தலை மயிரையும் குங்குமத்தையும் எதுக்கு விடணும்?"

எதற்கு விட வேண்டும்? தலைமுடி இந்நாட்களில் மீட்கப்பட்டிருக்கிறது. ஆனால் குங்குமத் தீண்டாமை ஏன் தொலையவில்லை.

ஓ! புருவ மத்தியில் குங்குமம் எதற்காக வைக்க வேண்டும் பெண்கள்? அங்குதான் மூலாதாரமான அவன் சக்தி நிலைகொண்டு இருக்கிறது. அந்த இடத்தை உற்றுநோக்கி எந்த ஆண் மகனும் அவளை வசியம் செய்ய முடியாது. குங்குமப் பொட்டு கவசமாக வீற்றிருந்து அவள் கற்பைக் காக்கின்றது என்ற விளக்கமும் கொடுக்கப்படுகிறது.

அதுசரி, அப்படியானால் புருஷன் இறந்த பிறகு அவளை எவரும் வசியம் செய்ய இடமுண்டு என்றுதானே பொருள் படுகின்றது? புருஷன் இல்லாதபோது குங்குமமில்லை. எனவே இன்னொரு திருமணம் புரிந்துகொள்வதற்கும் தடை இருக்கக் கூடாதே! இப்படி எதிர்க்கேள்வி விடுத்தால் சனாதன மரபுக் குடுக்கைகளுக்குப் பேரதிர்ச்சியாக இருக்குமே? அதற்குத்தான் எல்லாம் எரிந்து பொசுங்கிவிட்டதென்று பொருள்படும் திருநீற்றைத் தரிக்கச் செய்கிறார்கள்.

எது எப்படியெனினும் குங்குமம் விடுக்கும் புதிர்கள் திருப்திகரமாக விடுவிக்கப்படவில்லை என்பதே உண்மையாக இருக்கிறது.

முன்னுச்சி வகிட்டில் கோடாகத் தீற்றப் பெறும் சிந்தூர அடையாளத்துக்கும், புருவ மத்தியில் நெற்றியில் அலங்கார மங்கலமாக வைக்கப் பெறும் குங்குமத் திலகத்துக்கும் அடிப்படைத் தொடர்பு உண்டா?

இது இன்னமும் ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கிறது.

வாத்ஸ்யாயனரின் காமசூத்திரம் விவரிக்கும் அறுபத்து நான்கு கலைகளில் நெற்றித் திலகங்களின் வாயிலாகச் செய்தி சொல்லல் ஓர் அழகுக் கலையாகவே விவரிக்கப்படுகின்றது.

ருக் வேத காலத்தில் இளவயதுடைய ஆடவரும் பெண்டிரும் ஆடல், பாடல், அறிவார்ந்த உல்லாசக் களியாட்டங்கள் என்று இன்பமாகப் பொழுதைக் கழிப்பதற்குரிய சமானம் (அல்லது சமாஜம்) என்ற அமைப்புகள் இருந்தன. திருமணமாகாத இளைஞர்களும் திருமணம் ஆன இளைஞர்களும் இங்கே குழுமுவார்கள். காதலொழுக்கம் கட்டுப்பாடுகள் நிறைந்ததாக இருக்கவில்லை. தனித்துக் காதலர் சந்திக்கக்கூடிய வாய்ப்புகளுக்கு, செய்திகள் பரிமாறிக்கொள்ள இந்த அழகுக்கலை பயன்பட்டதா என்று தெரியவில்லை. ஆனால் வாத்ஸயாயனரின் காலம் மிகவும் பிற்பட்டதாகும். 'குப்தர் காலம்' என்று கருத்துரைக்கப் படுகிறது.

பல்வேறு மகரந்தப் பொடிகளால் உடலுக்கு வாசனையும் அழகும் நறுமண மூட்டல், கண்களுக்கு மையெழுதல் ஆகிய அலங்காரங்களைப் பற்றிய குறிப்புகள் ருக் வேத கால மகளிரைப் பற்றிய விவரங்களில் காண இயலுகின்றது. ஆனால் மங்கலப் பொட்டு என்ற குங்கும திலக வழக்கம் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. எப்படியாகினும் குங்குமத்திலகம் கணவனுடன் வாழும் ஒரு நிலைக்குரிய அலங்காரக் காப்பாக முற்காலங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை.

இராமாயண, மகாபாரத இதிகாச காலம் காவியப் பெண்களின் சித்தரிப்புக்கும், அவற்றை ஒட்டிய தமிழ் வடிவக் காவியப் பெண்களின் சித்தரிப்புக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை இந்த உண்மையினால் உணர முடிகிறது.

ஒரு சிறு எடுத்துக்காட்டாக கைகேயி, தசரதனிடம் வரம் பெறுமுன் தன் கோலங்களைக் களைந்து சோக

வடிவுள்ளவளாகக் கிடந்த நிலையைப் பார்க்கலாம். வால்மீகியின் சித்தரிப்பில் கைகேயி கூந்தலை ஒற்றைப் பின்னலாகக் கிடத்திப் பின்னிக்கொண்டு கிடந்தாள் என்றும் கம்பரின் சித்தரிப்பில் அவள் திலகத்தை அழித்துக் கொண்டாள் என்றும் பார்க்கிறோம். இந்த மாறுதல் பெண்ணின் அலங்காரங்கள், கணவனுடன் வாழும் நிலைக்குரிய முக்கியத்துவமாக மாறி திட்டத்தை விளக்குகிறது. மேலும் கம்பர் திலகத்தைக் குறித்திருப்பது, பின்னால் அவள் மங்கலமிழக்கப் போவதை சூசகமாக அறிவிப்பதாகவும் விரிவுரையாளர் கூறுகின்றனர்.

நெற்றித் திலகங்களின் வாயிலாகச் செய்தி சொல்லல் என்ற கலையில் இந்த 'மங்கல' முக்கியத்துவம் கற்பிக்கப் பட்டிருப்பதாகக் கொள்ள முடியாது. வாசவதத்தை என்ற நாடகக் காவியத்தில் இந்த முறைத் தூது விவரிக்கப்படுகிறது. அரசனின் மனைவிக்குத் தோழியாகப் பணிபுரியும் வாசவதத்தை அரசனின் காதலி, காதலனாகிய அரசனுக்கு சந்திக்குமிடம் பற்றிச் செய்தி அனுப்ப அரசியின் நெற்றியில் மாறி மாறி இவர்கள் தீட்டும் திலகமே குறிப்பாகிறது.

இந்தப் பயன்படு கலைகுறிக்கும், திலகத்துக்கும் 'புருஷன்' என்ற மிகப்பெரிய அழுத்தமான பிணைப்புக்குரிய சின்னத்துக்கும் எத்தனை வேற்றுமை?

# 13. திருவிளக்குப் பூசையில் கரையாத இருட்டு

வீடு தேடி வந்து, வாயிற்கதவைத் தட்டி அழைத்து இப்படி ஒரு விளம்பரத்தாளை ஒரு பையன் கொடுக்கிறான்.

ஸ்ரீ பக்த ஜன ஸபா
ஸ்ரீ ஸ்வாமிகள்
நடத்தும் திருவிளக்கு பூசை

*...ஸ்ரீ லஸ்ரீ ஸ்வாமிகள், வரும்... தேதி, ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ அம்பாள் கல்யாண மண்டபத்தில் 108 ஸுவாஸினிகளின் 108—வது திருவிளக்கு பூஜை நடத்துகிறார்கள்.*

*இந்த பூஜையில் பங்கு கொள்ள விரும்பும் ஸுவாஸினிகள் ரூ. 101/— செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு, முன்னதாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.*

*ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் ஸுவாஸினிகளுக்குக் குத்து விளக்கு, இரவிக்கைத்துண்டு மற்றும் பூஜைக்கு வேண்டிய பொருள்கள் கொடுப்பார்கள். ஸுவாஸினிகள் பூஜைக்கு வரும்போது, பணம் செலுத்திய ரசீது கொண்டு வந்தால் போதும்...*

*நிகழ்ச்சி நிரல்*

*காலை 8.30 மணியளவில்... வில்விநாயகர் கோயிலில் இருந்து ஸுவாஸினிகள் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளை ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகி இருக்கிறது.*

*முற்பகல் 11 மணி முதல் 12 மணி வரையிலும் குத்துவிளக்குப் பூஜை, ஊர்வலம் முதலிய அனைத்து நிகழ்ச்சிகளும் வீடியோ படமாக எடுக்கப்படும்.*

*வீடியோவுக்குச் சிறந்த இடம்...*

**லைகோ வீடியோ ஸென்டர்**

திருவிளக்குப் பூசை வழிபாட்டின் ஒரு பரிமாணம் இது. இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்வதற்காகவே, வண்ண வண்ணப் படங்களை நேர்த்தியாக அச்சிட்டு, உருத்திராட்ச, தாடி சாமியார்கள், காவி மடாதிபதிகள், கோயில் கருவறைகளில் வீற்றிருக்கும் தெய்வங்கள் ஆகியோருடன் மஞ்சட் குங்குமப் பெண்களையும், கன்னியரான செல்வியாரையும், பூசைகளையும் விளக்கமாக்கி விநியோகிக்கும் பத்திரிகைகளின் செல்வாக்கை அறிந்திருக்கிறேன். இந்தச் சுவாமி ஊர்வலம் எனக்குப் புதிதாகத் தோன்றுகிறது. விளம்பரம் வீடியோ சென்டருக்கா, விளக்குபூசை செய்யும் மங்கலப் பெண்டிருக்கா, அல்லது ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளுக்கா என்ற யோசனை என்னைக் குடையலாயிற்று. வீடியோ நாடாச் சுருள் பிரதிகளை ஒவ்வொரு ஸுவாஸினியும் மேற்கொண்டும் பணம் கட்டி வாங்கிக் கொள்ளலாம் என்பதும் மறைந்திருக்கும் ஓர் உண்மையாகும்.

மஞ்சள் குளித்து, கூந்தலில் பூப்பாரம் ஏற்றிக்கொண்டு, நெற்றியில் குங்குமப் பொட்டுகள் ஒன்றோ, இரண்டோ வைத்துக்கொண்டு, மையார்ந்த கண்களும், சுடர்பொழியும் தோடு, மூக்குத்தி மாட்டல், சங்கிலிகள், காசுமாலைகள், வளையல்கள் என்று பொன்னும் மணியும் சுமந்து, பளபளக்கும் காஞ்சிப் பட்டாடைகளுடன், மருதோன்றிச் சிவப்பு நகங்களில் ஏறியிருக்க கால்களில் வெள்ளிக் கொலுசு, சிவப்பு ஏறிய குதிகால் தெரிய, பொருத்தமான வண்ணச் செருப்புகள் அணிந்து, வண்ணக்களஞ்சியமான ஊர்வலம், காவிச் சுவாமிகளைச் சூழ்ந்து நகருவதைக் கற்பனை செய்து பார்க்கிறேன்.

இந்தப் புதிய ஸுவாஸினிகளுக்கு வீடியோவில், தோன்றும் ஆர்வமே, மஞ்சள்குங்குமம், சுவாமி, பூசை என்று பேரார்வத்தைக் கிளப்பிவிட்டிருக்கும். ஞாயிற்றுக்கிழமையில் இந்தப் பூசை ஏற்பாடு செய்தவன் தத்துவம், இவர்களில் பலர் அலுவலகப் பணியாளர்களாகவும் இருப்பதில் நிலை கொண்டு

இருக்கிறது. இவர்களில் சிலர், அலுவலக மேலாளருக்குப் புகை பிடிக்கத் தீ மூட்டும் சேவை செய்பவர்களாகவும் இருக்கக்கூடும். 'பார்ட்டிகளில்' ஸுராவும் மந்தகாசமுமாக வெற்றி கொள்ளும் நாயகியராகவும் விளங்கக்கூடும். அவர்களையும் இந்திய கலாச்சாரப் பெருமை வட்டத்துள் கவர்ந்து இந்தியப் பண்பாட்டைக் காக்கும் அருந்தொண்டையும் இத்தகைய ஸ்வாமிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமய நிறுவனம், இந்தத் திருவிளக்கு சோதிக்குள் நானும் வந்த அருள் பெறவேண்டும் என்று உவந்து அழைத்தது. 'தமஸோர்மா ஜோதிர் கமய'— 'இருளிலிருந்து வெளிச்சத்துக்கு அழைத்துச் செல்வாயாக...!' என்ற வாக்கியம் எல்லோருக்கும்தானே பொது!

குப்பத்திலிருந்து தள்ளாத வயதில் கீரைக்கூடையைச் சுமந்து வந்து தெருத் தெருவாய்ச் சுற்றும் பொன்னம்மாளை இந்தப் பூசையில் சேர்த்துக்கொள்கிறீர்களா? ஐந்து குழந்தைகளுடன், புருஷன் இல்லாமல் சீவியம் செய்து அவர்களை ஆளாக்கிய பிறகும் அநாதையாக வயிறு பிழைக்க உழைக்கிறாள். இவளைவிடத் தகுதியானவர் இந்த அருளுக்குப் பாத்திரமாக இருப்பார்களா?

என்றோ புருஷன் முகம்கூட நினைவில் பதிந்திராத சுருக்கில், அவனைக் கொள்ளை நோய் பலி கொள்ள, கூந்தலை முடிந்து, வெள்ளைச் சீலைக்குள் ஒடுங்கியவளாக மடம், ஸ்வாமிகள் என்று, அங்கேயே பெருக்கி, மெழுகி, ஊழியம் செய்கிறாளே முத்தம்மை அவளுக்கு இந்தப் பூசையில் கலந்துகொள்ள அருகதை உண்டா?

நான் இந்தக் கேள்விகளைத் தொடுத்து அவர்களையும் பூசையில் இணைத்துக்கொள்ள நிபந்தனை போட்டபோது சமயத் தூண்கள் சொல்லாமல் நழுவிவிட்டன. இப்போது இந்த விளம்பரந்தான், என்னை ஐம்பது ஆண்டுகள் பின்னோக்கித் தள்ளுகிறது.

அகண்ட காவிரி பாயும் கிராமம் அது. எங்கள் வேதபுரத்து வீதியிலே, வெள்ளைச் சேலையும் முக்காட்டு முகமுமாக முடங்கிவிட்ட அனாதைகள் எண்ணமுடியாத வர்கள். இவர்கள் கோலோச்சுவதற்கு ஒரே ஒரு இடம் உண்டு. காவிரிப்படித்துறைதான் அது. இந்தப் படித்துறையின் இரு மருங்கிலும், பக்கச் சிறகு முளைத்தாற் போன்று சில கற்களைப் பரவி நீர்த் துறைகள் அமைத்திருந்தார்கள். பிரதானமான படிகளில் இறங்கி, அரண்கள் போன்றமைந்த கற்களைத் தாண்டினால் வசதியாகத் துவைக்கும் கல், துணி பிழிந்து உலர்த்தத் தோதான கற்சுவர் என்று இருவர் குளிக்க வசதியாக அமைந்திருக்கும். பிரதானமான படிக்கட்டுத் துறையின் இரு மருங்கிலும் உள்ள இத்துறைகளைக் குட்டிப் படித்துறை என்று சொல்லலாம். ஆனால் எனக்கு நினைவு தெரிந்து அவை மடிப்படித்துறை என்றே வழங்கி வந்தன. ஏனெனில் எங்கள் வேதவீதியின் வெள்ளைச் சேலை அநாதைகள் அங்கே புலராப் பொழுதின் விடியற்காலையிலிருந்து பகல் பன்னிரெண்டு மணி வரைகூட ஆதிக்கம் செலுத்துவார்கள்.

அந்தக் கால் அகன்ற காவிரியை இப்போது நீர்ப் பெருக்குக்குக் கற்பனைதான் செய்ய வேண்டும். இந்த நடுப்படித்துறை, 'மஞ்சள் பூசும் வர்க்கத்தின'ருக்கு உரியது. வண்ணச் சேலைகளுக்கும், வயிர, தங்க மினுமினுப்புகளுக்கும் உரியது. மஞ்சள் உரைத்த தடங்கள் பொன்னாய் மின்னிக் கொண்டிருக்கும். ஆங்காங்கு ஊறிய மஞ்சள்துண்டுகள், அறைத்த விழுதுகள், வெற்றிலைப் பாக்கு முதலியன சிதறிக் கிடக்கும். ஆனால் மடிப்படித்துறைக்கு மங்கலங்கள் கிடை யாது. அவற்றைச் சுவாதீனமாக வைத்திருக்கும் சில அனாதை களில் மிகக் கடுமையான புள்ளிகள் சிலர் உண்டு. அவர்களுக்கு இந்த மஞ்சள் உரைக்கும் இனத்தினரிடம் அடிமனத்துப் புகைச்சல் குமுறிக்கொண்டிருக்கும். ஆனால் அதை எப்படி வெளிக்காட்டுவார்கள்?

எங்களைப் போன்று சோப்புத் தேய்த்துக் குளிக்கும் சிறுமிகளின்மீது வெடிக்கும். "ஏண்டி சோப்பைப் போட்டுக் கரைச்சு ஜலத்தைப் பாழாக்கறே? பாவி! முகரையைப் பாரு! இதுக்கு என்ன சோப்பு வேண்டியிருக்கு? சுண்ணாம்பு நாத்தம் சொல்ல முடியலே. இத்தப் போட்டுத் துணிய வேறு தோய்க்கறதுங்க...! சனியனே! ஏண்டி தோய்க்கிறே? ஜலம் தெறிக்கறது, அத்தனையும் போச்சு! மறுபடியும் ஸ்நானம் பண்ணனும்...!" இப்படி வசைகள் தொடர்ந்துகொண்டே போகும்.

எங்கள் வளர்ச்சியை நாளொரு நூலாக அளந்து கலி முற்றி, ஆசாரம் கெட்டு வருவதற்கான பீடைகளாக உருப்பெறுவதையும் வாயில் மென்று துப்புவார்கள். 'திமுதிமுன்னு வளர்ந்து நிக்கறது. பாவாடை, சட்டை, மேலாக்கு...கோரம்...சகிக்கலை. இப்படித்தான் பெத்தவா வளர்த்து வச்சிண்டு; கூச்ச நாச்சமில்லாம காவேரிக்கு அனுப்புவாளா? பத்து வயசாகுமுன்ன பறயன் கையிலானும் புடிச்சுக் குடுக்க வாணாமோ?"

இவர்களின் பார்வைத் துழாவலில் வார்த்தை அடிகளில் சுருண்டு, காவிரிக்குப் போகும் ஆசையை விடவும் முடியாமல் ஒரே ஒரு முங்கலுடன் ஓடிவந்த நாட்கள் பல. இந்த அநாதைகளின் கடுத்த முகங்களுக்குப் பின்னால் இவர்களுடைய வாழ்க்கைகளை எண்ணிப் பார்க்கும் ஆர்வம், எனக்குச் சிறிது வயது வந்த பின்னரே தோன்றியதுண்டு. என்னுடைய இரு பாட்டிமார், ஒரே அத்தை என்று நான் கண்விழித்துக் கண்ட உறவினர் இந்த வர்க்கத்தினரே. மிகச் சிறியவளாக இருந்த காலத்தில் அத்தை, பாட்டி, உறவுக்காரர் இப்படி வெள்ளையும் முக்காடுமாக இருப்பார்கள் என்றே எண்ணியிருந்திருக்கிறேன். எங்கள் வீதியிலே புரோகிதக் குடும்பங்கள் பல இருந்தன. அந்தக் குடும்பங்களில் சுங்கடியோ, கொட்டடிச் சேலையோ உடுத்தக்கூடிய பிரகிருதி

ஒருத்தி இருந்தாலே பெரிது. ஓ! ஒரு பெரிய வீட்டை, மூன்று நான்காகத் தடுத்து, பிறைகள் போன்ற அறைகளில், அண்ணன் தம்பிப் பாகம் செய்ததினால் கிடைத்த பகுதிகளில், வெள்ளைச்சேலைத் தாயும், இதே வெள்ளை வாரிசாக இளம்பெண்கள் பலரும் வாழ்ந்த நிலையை இன்று எண்ணிப் பார்க்கிறேன். இவர்களில் சிலர் நன்றாக வேலை செய்வார்கள். 'குரோஷா' வலை அட்டைப் பூ நூல் வேலை செய்யத் தெரிந்தவர்களாக இருப்பார்கள். பின்னலுக்குத் தாழம்பூ, மல்லிகைப்பூ தைக்கும் அலங்கார வேலையில் திறமை பெற்றிருப்பார்கள். திருவிளக்கு, துளசியம்மன் தோத்திரங்கள், மீனாட்சி கல்யாணம், லலிதாம்பாள் சோபனம் போன்ற பாடல்கள், கல்யாணப் பாடல்களான நலங்கு ஊஞ்சல், லாலி, பத்தியம், ஓடம் என்ற வகைப்பாடல்கள் எல்லாம் பாடக் கூடியவர்களாக இருப்பார்கள். அந்தக் குருட்டுப் பிறைகளுக்குள் சென்று, பழுப்பேறிய நோட்டுப் புத்தகங்களில் இருந்து சில பாடல்களை எழுதிக்கொண்டு அவர்கள் பாடுவதைக் கேட்டு வியந்திருக்கிறேன்.

ஆனால், இத்தனை தெரிந்தும் அவர்கள் எந்தக் கல்யாணங்களிலும் விசேடங்களிலும் முகம் காட்டமாட்டார்கள். அப்பளம் இடுவார்கள். வயதான தாயார் வீடுகளில் கொண்டு கொடுப்பாள்.

ஒரு வீட்டில், பெரிய தலையான மாமியார், அவளுடைய மங்கலமிழந்த பெண் வயசுக்கு வருமுன் ஏழு வயசிலேயே வெள்ளை வாங்கியவள். ஒரே மகனும் இறந்துவிட மருமகளும் முடங்கி, இரண்டு பிள்ளைகளை வேதம் படிக்க விட்டுவிட்டு ஒரே வீட்டில் வாழ்ந்தாள். நாத்தியின் கொடுமை வசைகள் சகிக்க முடியாதவை. ஜீவனாம்சம் என்று எதுவும் புருஷன் வீட்டில் கொடுக்கவில்லை. தாயை அண்டியே வயிறு வளர்க்க வேண்டும்.

வீடு மட்டும் பொது. மருமகளுக்கு ஏதோ சிறிது நிலம் இருந்ததென்று நினைக்கிறேன். மாமியாருடையதாகவும்



இருக்கலாம். நெல் பொதுவாக அளக்கப்பட்டு இரண்டு பிரிவாகப் பிரிக்கப் பெறும். வீட்டில் பாதி பாதிப் பகுதிகளில் குடும்பம் நடத்தினார்கள்.

மாமி—நாத்தியின் வசைகள், புலம்பல்களை அந்த மருமகள் பொறுத்தது பெரிதல்ல. இந்த வேதபுரம் இவள் புகுந்த

வீடாதலால் பொழுது விடிந்து அவள் வெளியே தலை நீட்டியதில்லை. விடியற்காலை மூன்று மணிக்கு வீதியில் சாணமிட்டுப் பெருக்கிக் கோலம் போடுவாள். விடியுமுன் மயானத் துறை சென்று காவிரியில் நீராடி வருவாள். ஓ! இந்தச் சமயச் சம்பிரதாயங்கள் இவர்களை உயிரோடு நசுக்கியதற்கு எந்த நியாயம் சப்பைக் கட்டுக் கட்ட முடியும்? இதற்கு வேத இசைவு உண்டா?

# 14. வேத (அ) தர்ம பரிபாலனங்கள்

**சி**ல ஆண்டுகளுக்கு முன் எங்கள் பேட்டை மாதர் சங்க உறுப்பினர்கள் காஞ்சியில் சென்று அங்கு தங்கியிருக்கும் ஆசாரிய சுவாமிகளைத் தரிசித்து அருள் பெற்று வர ஒரு 'சுற்றுலாப் பயணத்திட்டம்' போட்டிருந்தார்கள். இந்தத் திட்டத்தில் நானும் புகுந்துகொண்டேன். சுமார் ஐம்பது பெண்மணிகள், பிராமணர், அல்லாதார், முதியவர், இளையவர் என்று பாகுபாடில்லாத வகையில் சேர்ந்திருந்தனர். அது சித்திரை மாசக் கோடை நாள்—காலையில் கிளம்பி, சுவாமிகள் தங்கியிருந்த குளக்கரை ஓரத்துக் கோயில்முன் எங்கள் வண்டி வந்து நிற்கையில், மணி பன்னிரண்டரையாக இருந்தது. அடியும் பொடியும் ஓட்டும் உச்சி நேரம். பலருக்கும் தாகம். சில சிறுமிகள், குழந்தைகளும் இருந்தனர். இந்த நேரத்தில் எப்போது நிழல் கண்டு, விடாயாற்றிக் கொண்டு, மூச்சு விடுவோம் என்று வெம்மை நெருக்கடியேற்றியிருந்தது. சில சிறுவர்கள் பசி பசி என்று கட்டுச் சோற்றுக் கூடைகளைப் பார்த்துப் பிடுங்கி எடுத்தார்கள். வண்டி, நின்று பெண்கள் இறங்கத் தொடங்கியதும் உள்ளிருந்து ஒரு பிராம்மணர்...(வெளி வேடம் அப்படி) வந்தார்.

"நில்லுங்கோ, இங்கே தலைமுடி வச்சிண்டவா, ஸ்மார்த்தா, வடகலைக்காரா, புருஷனில்லாதவா வரப்படாது. மத்தவா வரலாம்..." என்றார். எனக்கு இச்சொற்களைக் கேட்டதும் பேயறை கொண்டாற்போல் இருந்து. உண்மையில் இதை ஏற்பாடு செய்த பெருமாட்டிகளில் முக்கியமானவர், அவர் குறிப்பிட்ட ஸ்மார்த்தப் பிரிவினில் வந்தவர். கணவரை இழந்து ஒரு வருடமே ஆகியிருந்தது. தலைமுடி வைத்திருந்தார். அவர் கணவர் இருந்த காலத்தில் சுவாமிகளை மாதர் சங்கத்துக்கே அழைத்து, பாத பூசை விமரிசையாகச் செய்து மகிழ்ந்திருக்கிறார். இப்போது இவர் உள்ளே வருவதற்கே தடைக்கோடு கிழிக்கப்படுகிறது. இந்த அவமானம் என்னைத் தவிர அங்கே யாருக்குமே உறைத்ததாகத் தெரியவில்லை. அந்தத் தடைச் சொற்களைவிட, பெண்மணிகள் தலைவணங்கி அதை ஏற்றுக்கொண்டது எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

சங்கத்தின் காப்பாளர் போல் ஊழியம் செய்த பெண்மணியும் கைம்பெண்தான். ஆனால் அவள் பிராம்மண வகுப்பில் உதித்தவளல்ல. எனவே அவள் உள்ளே, வரலாம். வைணவ சம்பிரதாயத்தில் தென்கலை, வடகலை என்ற இரு பிரிவினர் உண்டு. அவர்களில் வடகலை மரபில் வந்து கைம் பெண்ணானவர் மட்டுமே மகா பாபிகள். எனவே அத்தகைய பெண்டிரில் சிலர் உள்ளே வர இயலாது. தென்கலை மரபினரில் ஒரே ஒரு பெண்மணி, கைம்பெண்ணானவள் உள்ளே வந்தாள். வரக்கூடாதவர்கள்! அந்த இடத்தை ஒட்டிய நீர்க்கரைத் தோப்பொன்றில் தங்கிவிட, மற்றவர், காணிக்கைகள் அடங்கிய தட்டுகள் தாம்பாளங்களுடன் சுவாமி களைத் தரிசித்து, கோலாகலமாக அருள் பெறச் சென்றார்கள். பாடல்களைப் பாடினார்கள். தனித்தனியே அறிமுகம் பெற்றார்கள்.

எனக்கு உள்ளே அடிவைக்க மனச்சாட்சி மறுத்தது. எனது நியாய அநியாய உணர்வை வெளிப்படுத்தி யாருமே உள்ளே

செல்லக்கூடாது என்று சொல்லிப் பார்த்தேன். அது எடுபடாதென்பது மட்டுமில்லை, அந்த அமைப்புக்கே ஒவ்வாத ஆசாமியாக ஒதுக்கப்பட்டேன். பெண்களுடன் நிற்க மன மின்றி, வெதும்பி, அந்த நீண்ட பொழுதைக் கழித்தேன். விலங்கினத்திலும் கேடு கெட்ட மனப்பாங்காக இது தோன்றியது.

இந்த நிலையில், ஸ்மார்த்த வடகலை, தென்கலைச் சம்பிரதாய மரபு, என்னுள் ஒரு கேலிக்கூத்தாகவும் ஓர் ஆர்வத்தைக் கிளப்பியது. தங்கள் தோழிகளாக உற்றவர்களாக மகிழ்ந்து பழகியவர்கள், இவ்வாறு மனிதப்பண்பு இல்லாத கொடூரமான சொற்களுடன் விலக்கப்படும்போது, அதனால் ஒரு சிறு பாதிப்பும்கூட இல்லாதவர்களாக, மற்றவர் அந்தப் பிராமணரை வணங்கி உள்ளே செல்கிறார்கள் என்றால், பெண்களின் கல்வியும் பல முன்னேற்றங்களும் ஒட்டு மொத்தமாகப் பயனே அளிக்கவில்லை என்றுதான் தோன்றிற்று. ஏன் என்று கேட்கும் அறிவு யாருக்குமே இல்லை. அந்த அறிவு அன்று ஏழு வயதில் உபநயனம் முடக்கப்பட்டு கல்யாண பீடத்தில் இவளைத் தள்ளிய நாளிலேயே மழுங்கடிக்கப்பட்டதாகி விட்டது. இந்நாள் வரை, அந்த அறிவுக் கண் துலங்கி நல்லொளியைக் காட்டவில்லை.

சமுதாயக் கட்டுக்கோப்பு, குழந்தைகள் அன்பும் அரவணைப்புமாக வளர்ந்து, நல்ல சமுதாயத்தை உருவாக்கி விரிக்க வேண்டும் என்ற நோக்கில், காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த ஆதிமக்கள், திருமணம், குடும்பம், இல்லாமல் சொத்து, சுகம் என்று நாகரீகமடைந்தவர்கள். பாரத நாட்டுப் பழங்குடியினர், தாய்வழி மக்களாகவே இருந்தனர் என்பதையும் பல சான்றுகளால் ஊகிக்க முடிகிறது.

ஆரியர் வருகைக்கு முந்திய ஸிந்து வெளி நாகரிக மக்கள், மொஹஞ்சதாரோ அகழ்வுகளின் சான்றுகளை ஒட்டிப்

பார்த்தால், தாயின் முதன்மையும், தாய்வழிபாடும் முதன்மை பெற்றிருந்தது என்பதை முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தியாவில் தாயர் உரிமை (Mother right in India) என்ற நூலில், மானிட இயல் வரலாற்றறிஞர் (O. R. Ehrentfels) எஹரன் ஃபெல்ஸ், இந்தியாவில் தாய்வழி சம்பிரதாயத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த கேரள நாயர் இனத்தாரை, அந்த ஸிந்து வெளி நாகரீக இனத்தாருடன் தொடர்புடையவர் களெனச் சான்றுகள் கொடுக்கிறார். அது மட்டுமின்றி, இன்றளவும், நம்மில் பல பிரிவினர்க்கும், தாய் வீட்டில் திருமணம், பிள்ளைப்பேறு, மற்றும் எல்லாச் சடங்குகளுக்கும் தாய் மாமனே முக்கியத்துவம் பெறுதல் ஆகிய எல்லா வழக்கங்களும், அந்தத் தாய் வழிச் சம்பிரதாயம் தேய்ந்து வந்ததன் சிதைவுகள்தாமென்று கருதவும் இடமிருக்கிற தென்பதை வலியுறுத்துகிறார்.

ஏனைய எல்லா இடங்களிலும், இஸ்லாமியப் பெண்கள் பர்தாவுக்குள் முடக்கப்பட்டாலும் கேரளத்தில் வரவில்லை. தாய்வழிச் சம்பிரதாய நாயர்குல மகளிர், சுதந்திரமுடையவர் களாக, பொது வாழ்வில் ஈடுபடக்கூடிய துணிவு பெற்ற வர்களாக விளங்குவதைக் காண்கிறோம்.

இந்தத் தாய்வழிச் சம்பிரதாயம், பெண்ணைக் கற்புக் கூட்டுக்குள் முடக்கவில்லை. அவளைப் புருஷன் வீட்டுக்கு ஊழியம் செய்ய வழி கோலவில்லை. கணவன் இவளுடன் தொடர்பு கொள்ள வருவான்.

இந்தத் தாயுரிமை மாற்றி, தந்தை வழி நாகரீகம் கேரளத்தில் வடக்கிலிருந்து வந்த நம்பூதிரி இனத்தாரால் வந்தது. நாயர் இனத்தில், மகளிர் வயது வந்து அறிவும், தேர்ச்சியும் பெற்றபின், தனக்குரிய மணவாளனைத் தேர்ந்து, மக்களைப் பெறும் சுதந்தரத்தையும் கட்டுப்படுத்தி விட முடியவில்லை. எனினும், சம்பிரதாயமாக பெண்

பூப்படையுமுன் திருமணம் செய்வதுதான் உகந்தது என்ற வழக்கம் புகுந்தது.

இளம்வயதுச் சிறுமியர் பலரை உட்கார்த்தி வைத்து, ஓர் ஆண் தாலி கட்டும் சடங்கு புகுந்தது. பின்னர் சம்பந்தம் செய்யும் கல்யாணமாக, அதாவது வயது வந்த பெண்ணின் மனைவியாக விரும்பியவனுடன் வாழ்வதற்குரிய சம்பந்தம் செய்துகொண்டனர். இந்தச் சம்பந்தத்தில், மரபுச் சடங்குகள் என்று பெண்ணின் ஒவ்வொரு இயக்கத்தையும் பிணிக்கும் வழக்கங்கள் இருந்திருக்கவில்லை.

இந்தியா முழுவதுமாக ஆதிகுடிகளின் வழக்கங்களிலுள்ள தாய்வழி முதன்மை, தந்தை வழி முதன்மையாக மாறத் திணிக்கப்பட்ட வழக்கங்களில், முதலாவது, மேன்மையான கல்வி, செல்வம், வயது, மதிப்பு என்று ஆணை உயர்ந்த நிலையில் வைத்து சம்பந்தமாகத் திருமணம் செய்து கொடுத்தல் (Hypergamy) இரண்டாவது, குழந்தை மணம், மூன்றாவது, கைம்மை நிலை என்ற கொடிய வழக்கங்களுக்குப் பெண்ணை உள்ளாக்குதல்.

தாழ்ந்த சாதி, தாழ்ந்த படிப்பு, தாழ்ந்த செல்வ நிலை, பெண்ணுக்கு இருக்கலாம். சரிசமமான வயதும்கூடத் திருமணப் பொருத்தமில்லை. பெண் அடங்கிப் போக வேண்டும். இந்த நாகரீகம் பெண்ணின் சுதந்திரமான உரிமைகளைப் பறிக்க முதல்படியாக வந்தது. கல்வி உரிமை போய், கற்பொழுக்கமும், குழந்தை மணமும், பெண்ணின் வாழ்வுக்குக் கடிவாளங்களாகப் பூட்டப் பெற்றதுடன், கைம்மைநிலை என்ற கொடிய தண்டனை அவள் செய்யாத பாவத்துக்கு உரியதாக ஆயிற்று.

கைம்பெண் என்ற கொடுமை வேத காலத்தில் இருந்திருக்கவேயில்லை. கணவனுடன் மனைவியை எரிக்கும் பழக்கம், மிக மிகத் தொன்மையான காலத்தில் ஆரியர்

இந்தியாவுக்கு வருவதற்குமுன், இந்தோ, ஐரோப்பியக் குடிமக்களிடையே இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் இந்தியாவுக்கு ஆரியர் வந்த காலத்தில் இது நடைமுறையில் இல்லை.

ருக் வேதத்தில் காணப்படும் ஒரு பாடலிலும்கூட, 'அக்ரே' என்ற சொல், 'அக்னே' என்று திருத்தப்பட்டதன் சான்று வெளிச்சமாகிறது. கணவன் இறந்ததும் மனைவியைத் தீயில் புகும்படி செய்வதற்கு 'வேத அங்கீகாரம்' வேண்டுமே? உண்மையில் பெண்ணுக்கு வாழச் சகல உரிமைகளையும் கொடுக்கும் பாடல்களாக அல்லவோ ருக் வேதத்தில் இருக்கிறது?

பிற்காலத்திய பண்டிதப் புலிகள் கண்களில் நெய்யூற்றிக் கொண்டு பாடல்களைத் துழாவினார்கள்.

'ஓ! பெண்மணியே! நீ இன்னும் இவ்வுலகில் வாழ வேண்டியவள். அவன் உயிர் போய்விட்டது; நீ இங்கே வா. இன்னொரு கணவரைத் தேர்ந்துகொண்டு தாயாக வாழ்வாய்'—என்று அழைக்கும் பாடல் இருக்கிறது. தொடர்ந்து "மங்கலப் பெண்டிரே, தாயாரே துயரின்றி, கண்ணீரின்றி, முன்னே ஏகுவீர், அவளை மீண்டும் வாழ்வுக்குரியவளாகச் செய்வீர்..." என்று பொருள் படும் பாடல், அந்த இடத்திலேயே அவர் கையை விரும்பி ஏற்கும் ஆணுக்குரியவளாகச் செய்யும் மறுவாழ்வுக்கு வழிவகுக்கிறது. இந்தப் பாடலில், முன்னே என்று பொருள்படும் சொல் என்று நுட்பமாகத் திருத்தப் பட்டிருக்கிறது. முன்னே அழைத்து வரவேண்டாம்—நெருப்பில் தள்ளலாம் என்று, வேதம் சொல்வதாக, அநுமதி பெற்று விட்டார்கள்; மனச்சாட்சிக்கா, அல்லது மறுக்கும் நியாயவாதிகளுக்கா என்று தெரியவில்லை.

இந்தப் பாட்டைக் கண்டுபிடித்தவர், வேதநூல் ஆராய்ச்சியாளராகிய மாக்ஸ்முல்லர் என்றும், வில்ஸன்

என்றும் சொல்லப்படுகிறது. வேதங்களில் மட்டும் இவ்வாறு புரட்டுகளைச் செய்திருக்கவில்லை. பின் எழுதப்பட்ட கோட்பாடுகளிலும் பெண்ணை நசுக்குவதற்குரிய கூறுகள் தந்திரமாகப் •புகுத்தப்பட்டன.

பெண் சமுதாய உற்பத்திக்கான மக்களைப் பெற்றுப் பேணுகிறாள். அவளை எந்த நிலையிலும் பாதுகாக்க வேண்டும். 'இளமையில் தந்தையும்; பின்னர் கணவனும்; முதுமையில் மகனும் அவளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று விதிக்கப்பட்ட சாத்திரக் கோட்பாடே, பெண் இளமையில் தந்தையின் ஆளுகையிலும் பின்னர் கணவனின் ஆதிக்கத்திலும், முதுமையில் மகனுக்குக் கீழ்ப்பட்டும் இருப்பதற்கு உரியவள், சுதந்திரம் அவளுக்குரியதல்ல' என்று ஒரே போடாக மாற்றப்பட்டது. ஆனால் இந்த மனுவும்கூட, பெண் கணவனை இழந்ததும், முடியை இழந்து மூடுண்டவளாக மூலையில் முடங்க வேண்டும் என்று சொல்லவில்லை; நிச்சயமாக இல்லை.

இப்போது, இந்தச் சமயக் குரவர்கள்தாம் வைதீகமான தரும சூத்திரக் கோட்பாடுகளின்படி சமூகத்தைப் பரிபாலிக்கிறார்களாம்.

பதைபதைக்கும் வெயிலில் வாயிலில் வந்து நிற்கும் பெண்களை, குரூரமான கோடிமுத்துத் தடுத்து நிறுத்தும் அநாகரிகம், எந்த வைதீக தருமத்துக்கு உரியது?

# 15. ஒடுக்கல் சாத்திரத்தில் ஒப்பனைக் கருவிகள்

'புடவைத் தலைப்பில் ஒரு துண்டு மஞ்சளைக் கட்டிக்கொண்டு போம்மா' என்று முதிய பெண்கள், இளையவர்களுக்கு, மரணம் நிகழ்ந்த வீட்டுக்குச் செல்லும்போது சொல்லுவார்கள். மரணம் சம்பவித்த வீட்டிலிருந்து தலை முழுகாமல் திரும்ப முடியாது. கிராமங்களில் ஆறு அல்லது குளங்களில்தானே தலை முழுகுவார்கள்? நீராடும்போது, உடலழுக்குத் தேய்ப்பதோ, துணி துவைப்பதோ முக்கியமில்லை. ஆனால் கட்டுக் கழுத்திகளான மங்கலப் பெண்கள், வெறுமே நீராடக்கூடாது. மஞ்சளை உறைத்துப் பூசிக்கொண்டுதான் நீராட வேண்டும். அதற்கு அந்தக் காப்பு மஞ்சள் சேலைத் தலைப்பில் முன்னெச்சரிக்கையாக வைத்திருக்க வேண்டும். அறிவார்ந்த ரீதியில் வேறு பல காரணங்களுக்காக மஞ்சள் பூசிக் குளிப்பது வழக்கமாக இருக்கலாம். முகத்திலும், மேனியிலும் மழமழப்பும் ஒளியும் கூடுவதாக வைத்துக் கொள்ளலாம். ஆனால், அழுக்கு உடம்பில், சிக்குத் தலையுடன், ஒரு காய்ந்த மஞ்சள் துண்டை சாஸ்திரத்துக்காகக் கல்லில் தேய்த்து நெற்றியில், கன்னங்களில் வைத்துக்கொண்டு அழுக்குத் தேய்க்க நேர மில்லாமல், அல்லது அவசியமில்லாமல் நீராடும் முக்கியம், அறிவுறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

அதேபோல், ஒருவரை ஒருவர், குங்குமம் தொட்டு வாழ்த்திக் கொள்ளும் வழக்கம் வேரூன்றி இருக்கிறது. 'மஞ்சளும், குங்குமமுமாய் இரம்மா' என்ற வாழ்த்துதலில்தான் பெண்ணின் உயிர் நாடியே தொக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த மஞ்சள் குங்குமங்கள், சாதாரணமாக ஒப்பனை அலங்காரங்களுக்குரிய பொருள்களே. ஆனால் இவை கணவனுடன் வாழ்வதற்கான சின்னங்களாகப் பரிபாலிக்கப் படுவதன் காரணம் யாது?

கோழி, ஆடு, பன்றி முதலிய வீட்டுப் பிராணிகள், மாமிசத்துக்காகவே பரிபாலிக்கப்படுகின்றன. அவற்றைப் பேணிப் பராமரித்து, ஊட்டமளிப்ப தெல்லாம், அவற்றை அடித்துக் கொல்லும் செயலில் பூரணமாகிறது. அவற்றைக் கொன்று, இரையாக்கிக் கொள்வதற்கே அவற்றின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஒரு பெண்ணின் மஞ்சள்-குங்குமம், மங்கலச் சேர்க்கைகளின் முக்கியத்துவம், கணவனைச் சார்ந்தே கரிசனம் காட்டப்படுவது எதனால்? அவற்றின் இழப்பைப் பெண்ணுக்குக் கொடூரமாக்குவதற்குத்தான் என்றால் தவறில்லை. மேனியழகைப் பராமரிக்கக்கூடிய சில பொருள் கள், கணவனுடன் வாழும் மேன்மைக்குரிய மங்கலச் சின்னங்களாக 'சக்தி'யேற்றப்பட்டு, அவள் உள்ளத்தை, உயிரனைய உள்ளொளியைக் கவ்விப்பிடிக்கும் பிணிப்புக்காக மாறிப் பதிந்துவிடுமளவிற்கு, அவள் கணவனுக்கே உரிய பாவையாக தனித்த உணர்வோ, அறிவோ, சிந்தனையோ இன்றி ஒடுக்கப்படுகிறாள். இந்த ஒடுக்கல் மஞ்சள், குங்கும மங்கலத் தாலியுடன் பூரணமாகிறது.

கோழிக்கும், ஆட்டுக்கும், பன்றிக்கும் தங்களை யமன் வட்டமிடும் முன்னுணர்வு இல்லாமல் இருக்காது. பகுத்தறிவு அற்ற விலங்கினங்களுக்கு 'இயல்பூக்கம்' என்பது இயற்கையாக அமைந்த சிறப்பாகும். ஆனால் மனிதரை அண்டி, அவர் போடும் உணவுக்காக அடிமை வாழ்வுக்குப் பழகிய 'நாகரீகம்' விலங்குகளை வந்தெய்திய பிறகு, மனிதரை விட்டுப் போகத் தெரியாமலே, இயல்பூக்க முன்னுணர்வு மழுங்கிப் போகிறதோ என்னவோ?

இத்தகைய அண்டிப்பிழைக்கும், நாகரீகமடைதல் என்ற வகையில்தான் பெண்ணும் தன் தனித்தன்மையை இழந்து வந்திருக்கிறாள். இந்த நாகரீகப் பின்னோட்டத்தில் மஞ்சளும், குங்குமமும் மிக முக்கியமான கருவிகளாகப் பயன் பட்டிருக்கின்றன என்றாலும் மிகையில்லை.



கணவன் இறந்தபிறகு, அவளுக்குச் செய்யப்படும் பல சடங்குகளில் முக்கியமான ஒன்றாக, மஞ்சள் குங்குமம் இழத்தலை அவள் உணரச் செய்வதாக அமைந்ததாகும். இந்தச்

சடங்கை, அவமானத்தை, அவள் உள்ளத்தைக் குதறிப் பிடுங்குவது போன்ற கொடூரத்தை, அவளைப்போல் கணவனை இழந்த பாவிகள்தாம் செய்வார்கள். இந்த நிகழ்ச்சிகளை, அவளுடைய சொந்த மகளோ, அன்னையோ கூட, சுமங்கலிகளாக இருந்தால் பார்க்கலாகாது.

அவளை நீர்க்கரையில் நிற்கச் செய்து, அடித்துக்கொண்டு அழுது, கொடுமையாக, மஞ்சள் பொடியை வீசி எறிந்து, இந்தா, கடைசி, கடைசி, தொலைத்துக்கொள் என்று கடுமையான சொற்களால் குதறுவார்கள். அதாவது இந்தக் கொடுமையை ஏற்றி, இதற்குள்ளாகும் நிரபராதியான பெண்ணை உருக்குலைப்பதே, இந்த மஞ்சள் குங்குமங்களின் உட்பொருளோ என்று இத்தகைய காட்சியைக் காண நேர்ந்த நான் உள்ளம் துடிதுடித்துப் போனேன்.

இந்நாட்களில், எத்தனையோ சீர்திருத்தங்கள் வந்திருக்கின்றன. கணவனை இழந்த பெண்கள் வண்ணச் சேலை உடுத்துவதும் பொட்டணிவதும் முகம் திருத்திக் கொள்வதும் வழக்கம் என்று வந்திருக்கிறது. ஆனால் அவள் உள்ளத்தில், கணவன் இழந்ததால் தான் ஒரு குற்றவாளி போன்றும், துர்ப்பாக்கியவதி என்றும் ஏற்பட்டுவிடும் வடு, அகலுவதில்லை. அந்த வடுவை அப்படியே சமுதாயத்துக்கு ஒப்பாதவளாக வைத்திருக்க, இதே குங்குமம்-மஞ்சள் சிலும்பிக் கொண்டு கேள்விக்குறி நிற்கின்றன. இந்த ஒடுக்கல் கொள்கை, இந்த இருபதாம் நூற்றாண்டில் சக்தி வாய்ந்த சாதனமாகிய திரைப்படங்களின் வாயிலாக, கல்வி கற்று, அறிவியலாளராக வளர்ச்சி பெற்ற பெண் பாலரையும்கூட அக்குற்ற உணர்வினின்று விடுபட இயலாதவராக அறிவுறுத்தப்படுகிறது. கணவன் இறந்ததைக் காட்ட, கொடூரமாக, ஒரு கை வந்து அவள் பொட்டை அழிக்கும். வளையல்களை உடைக்கும். முடியை அவிழ்க்கச் செய்யும். ஏன்? இருபத்தொன்றாம் நூற்றாண்டிற்குச் செல்லும் இந்த நூற்றாண்டின் இறுதிக்

காலங்களிலும்கூட, கைம்பெண் வெள்ளைச் சேலையை விரும்பி ஏற்பவளாகச் சித்தரிக்கப்படுகிறது.

திருமணம் கணவனையும், மனைவியையும் ஈருடல் ஓருயிராகச் செய்யும் முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்பட்டு, கருத்தொருமித்த காதலராக இருவரும் இன்பமாக வாழ்ந்த கணவன் மறைந்ததும் மனைவி விரும்பி, கைம்மைக் கோலம் ஏற்பதை தர்ம நியாயமாகச் சித்தரிப்பவர்கள், மனைவி இறந்ததும் அதே வகையான இழப்புக்குள்ளான கணவன் எந்தப் போகத்தையும் துறப்பவனாக, மறந்தும் யாரும் சித்தரிப்பதில்லை. மாறாக அவளை, இழந்த சோகத்தை மறக்க, அவளையே உரித்து வைத்தாற் போலிருக்கும் அவள் சகோதரியையோ, வேறு ஒரு பெண்ணையோ காதலிப்பான்; அல்லது கல்யாணம் செய்துகொண்டு அவளே இறுதியில் அவனிடம் கேட்டுக்கொண்ட வரத்தை நிறைவேற்றுவான். 'திருமணமே செய்துகொள்ள மாட்டேன்' என்று பிடிவாதமாக இருப்பவனைக்கூட, இன்னொரு பெண்ணின் நற்குணம், தர்ம நியாயக் கல்யாணத்துக்கு அவனை இணங்கச் செய்யும்.

வேத காலத்திலும், ஸ்மிருதிகள் என்ற கோட்பாடுகள் தோன்றிய காலத்திலும், 'கைம்பெண்கள்' என்று அறிவும் மனமும் முற்றிலும் ஒடுக்கப்பட்டு, பதப்படுத்தப்படும் நெறிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை எனலாம்.

தர்ம சூத்திரங்கள் என்ற பெயரில் குறிக்கப்பட்டு, ஆதியில் சட்ட நெறிகளைத் தோற்றுவித்த ஆசிரியர்கள், கைம்பெண்கள் மணம் புரிவதற்கு இடமளிக்கிறார்கள். ஒருவன் சந்ததியில்லாமல் இறந்துபோனால், அவனுடைய மனைவி, அதே கோத்திரத்துக்குரிய ஒருவருடன் கூடி ஒரு மகனைப் பெறலாம். அந்த மகன் இறந்துபோன கணவனுடைய சொத்துக்களைப் பெறவும், அவனுக்கு நீர்க்கடன் செய்யவும் உரிமையுள்ளவனாகிறான்.

இதே கண்ணோட்டத்தில், 'மனு'வும் கைம்பெண்கள் இறந்த கணவனின் சொத்துரிமையைப் பெற, அதே கோத்திரத்தில் உதித்த ஒருவனுடன் கூடி (மறுமணம் கொண்டு) மகனைப் பெறலாம் என்று அனுமதிக்கிறார். ஆனால் அடுத்த சில பாடல்களில் இவ்வாறு மக்களைப் பெறுவதற்கு ஒன்று அல்லது இரண்டு என்று உச்சவரம்பு காணப்படுகிறது. தொடர்ந்து, இதே மனுவின் பெயரால் அறியப்படும் நெறி முறைகள், முற்றிலும் மாறான கருத்துடன் வருகின்றன. கணவனை இழந்தபின் மறுமணம் செய்துகொள்வதனால், தரும நெறிகளை மீறி பாவத்துக்குட்படுறாள். அவள் தன்னை ஒடுக்கி போகங்களைத் துறந்து, கனிகளை மட்டுமே உண்டு, இன்னொரு ஆணின் பெயரைக்கூட மனதில் எண்ணாத வளாகத் தவ வாழ்வு வாழ்ந்து முடிய வேண்டும்.

'மனுஸம்ஹிதை' குறித்து எழுதும் சிறந்த ஆராய்ச்சி அறிஞரான திருமதி சகுந்தலாராவ் சாஸ்திரி 'மனுஸம்ஹிதை' என்ற தொகுப்பு, ஆதியில் தோன்றிய தர்ம சூத்திரங்கள் சட்ட நெறிகளுக்கும் இடையே பாலமாக 'மனு' என்ற ஆசிரியரின் பெயரில் பலரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தொகுப்பு எனலாம் என்று கருத்துரைக்கிறார். ஏனெனில் பெண்ணின் உரிமைகள், திருமணம் என்ற மிக முக்கியமான சமூக வழக்கங்களைச் சார்ந்து பெண்ணின் மதிப்பை வலியுறுத்தும் பல சட்ட நெறிகளுக்கும் 'மனு' என்ற பெயருடைய ஆசிரியர் பொறுப்பானவராகக் கருதப்படுகிறார். எனவே இவர் பெயரிலேயே, முன்னுக்குப் பின் முரணான சட்டநெறிகள் வலியுறுத்தப்படுகின்றன.

கைம்பெண்கள் மணம் புரிந்துகொண்டு சொத்துரிமை யைப் பெறவும், நீர்க்கடனுக்கு உரிய மகனின் தாய் என்ற மதிப்பைப் பெறவும் அனுமதி இருந்ததனால்தான் இன்றளவும் வசைச் சொல்லாக வழங்கப் பெறும் 'கைம் பெண் மகன்' என்ற தொடரே வழக்கு மொழியில் தோன்றியிருக்க வேண்டும்

இதேபோல் ஒரு மனிதனுக்கு தாசியிடம் பிறக்கும் மகனுக்கும் சொத்துரிமை, மற்றும் நீர்க்கடன் உரிமை வழங்கப் பெற்றிருந்தால்தான் அந்த வழக்குச் சொல்லும் இன்று வசைச் சொல்லாக மாற்றம் பெற்றிருக்கிறது.

ருக்வேத காலத்திலிருந்து, தரும சூத்திரங்கள் நெறிப்படுத்தப்பட்ட காலங்களில் அதாவது, கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும், பெண்ணின் மதிப்பு திருமணம் சார்ந்தும், கல்வி மறுக்கப்பட்டும் மிகவும் இழிந்துவிடவில்லை.

பிறகு குழந்தை மணம், நெறிப்படுத்தப்பட்டதும் உபநயனச் சடங்கு வெறும் பாவனையாகி; வேண்டியதே இல்லை என்று தீர்ந்து, இன்னும் ஒரு கீழ் நிலையில், கல்விக்குரியவள் இல்லை என்றும், கணவனைத் தவிர வேறு பற்றுக்கோலே இல்லை என்றும், படிப்படியாகக் குருடியாக்கப்பட்டாள். இதற்குரிய நெறிகள் முந்தைய ஆசிரியர்களின் பெயரிலே முரணாக இணைக்கப்பட்ட காலங்களில், இந்தக் கீழ் முகத்தை எதிர்த்துப் போராடியவர்களும் இருந்திருக்கிறார்கள். 'காதம்பரி' என்ற நாவல் போன்ற காவியத்தை எழுதிய பட்டபாணர், பெண்ணை நெருப்பில் போடும் உடன்கட்டையை எதிர்த்துப் போராடியிருக்கிறார். 'பெண்ணை எரிப்பதும், கைம்மைக் கொடுமையில் அழுத்துவதும் கொலைக்குரிய பாவம்' என்று உரைத்திருக்கிறார்.

தந்திரவாதிகளும், (மஹா நிர்வாண தந்திரம்) பெண்ணை தெய்வீக வடிவினள் என்று போற்றி, அவளைச் சிதையில் வைத்து எரிப்பவர்கள் மிகக் கொடிய நரகத்துக்குரியவர்கள் என்று இயம்புகின்றனர்.

இவ்வாறு, சதியும் கைம்மைக் கொடுமையும் வலுப்பெற்று, கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து, பத்தாம் நூற்றாண்டு கால கட்டத்தில் முழுதுமாக நெறியாகித் தீர்ந்து போயிற்று.

சங்கராசரிய மடத்தில், தென்கலை வைணவப் பெண், கைம்பெண்ணாக இருந்தால் முடியெடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று விலக்கு அளித்தார்களே, அந்த மர்மம் என்ன தெரியுமா? அடுத்து அதைப் பார்ப்போம்.

# 16. புராணப் புதைகுழியில் மூடப்படும் நட்சத்திரங்கள்

ஈராண்டுக்கு முன்போ, இன்னும் சில மாதங்களுக்கு முன்போ, (குறிப்பாக நினைவில்லை) சென்னை தொலைக்காட்சியில், ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறு குறித்து ஒரு நாடகம் ஒளிபரப்பாயிற்று. அந்த நாடகத்தில், ஆதிசங்கரரின் அன்னையார் முண்டிதமும் முக்காடுமாகக் காட்சி அளித்தார். சேலைக் கட்டும் தென்னிந்திய ஸ்மார்த்தப் பெண்கள் அணியும் விதமாக இருந்தது. தொலைக்காட்சி நிறுவனம் ஒரு மிகப்பெரிய சமய குருவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கின்றோம் என்ற பொறுப்புணர்வு சிறிதும் இன்றி ஏதோ புனை கதைகளைக் காட்சிகளாக்குவது போன்ற (அ)சிரத்தையுடன் செயல்பட்டிருந்ததைக் குறித்து வருத்தமாக இருந்தது.

ஆதிசங்கரரின் காலத்தில் அந்த வழக்கம் இருந்ததா? இல்லையா? என்ற வினா ஒருபுறம் இருக்கட்டும்; ஆதிசங்கரரின் தந்தை, நம்பூதிரி இனத்தவர் என்பது உண்மை. அண்மையில் ஆதிசங்கரரின் வரலாறு சமஸ்கிருத மொழியில் படமாக்கப்பட்டு இந்திய திரைப்பட விருதையும் பெற்றிருக்கிறது. இந்தப் படம் சில மாதங்கட்குமுன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாயிற்று.

நமது தொலைக்காட்சி சித்தரிப்புக்குப் பிராயச் சித்தமாகவும் இது அமைந்திருந்தது.

இந்தப் படத்தில், சங்கரரின் அன்னை-இளமையும் எளிமையும், எழிலுமாகக் காட்சியளித்தார். ஆரோக்கியமும் சுதந்திரமான வனப்பும் உடைய நாயர் இனப் பெண்ணின் பிரதிநிதியாகவே தோற்றம் தந்தார். நம்பூதிரி பிராம்மணர் இடையே மூத்த மகன் மட்டுமே தம் இனத்துப் பெண்ணை முறையாக மணந்துகொள்ளும் வழக்கம் உண்டு. ஏனைய சகோதரர்கள் நாயர் இனப் பெண்களுடன் 'சம்பந்தம்' வைத்துக் கொள்வார்கள், அவ்வளவே; நாயர் இனப் பெண்கள், கணவன் வீடு வரமாட்டார்கள்.

இது குறித்து ஏற்கனவே, சில சான்றுகளை இந்தக் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டிருக்கிறேன். 'மருமக்கத்தாயம்' என்ற தாய்வழிச் சம்பிரதாயத்தில் சுதந்திரமாக விளங்கிய பெண்களை, தந்தைவழிச் சம்பிரதாய முதன்மையில் வளைக்க, வடக்கிருந்து நம்பூதிரி இனத்தார் வந்தனர் என்று இந்தியாவில் தாயர் உரிமை என்ற நூலில் எஹ்ரென் ஃபெல்ஸ் என்ற மானிட இயல் அறிஞர் குறிப்பிடுகிறார்.

ஆதிசங்கரரின் காலத்தில் சமுதாய நிலைமை, நம்பூதிரி-நாயர் இனப்பெண் தொடர்புகள் முழுதுமான தந்தைவழிச் சம்பிரதாயங்களில் நிலைப்பட்டிருக்காது எனக் கருதவே இடமிருக்கிறது. ஆதிசங்கரரின் இளமைப் பருவம் குறித்து தெளிவான வரலாற்றுத் தடயங்கள் கிடைக்கவில்லை. சங்கரரின் இளம் பருவத்திலேயே தந்தை இறந்தார் என்று ஒரு வரலாற்றுக் குறிப்பும், தந்தை இவர் பிறக்குமுன்பே இறந்து போனார் என்று ஒரு வரலாற்றுக் குறிப்பும் வழக்கில் இருக்கின்றன. ஏனைய நம்பூதிரி சமூகத்தினருடன் ஒட்டாமல் தனித்தே ஆர்யாம்பாள் வாழ்ந்ததாகவும் வரலாற்றிழைகள் கிடைக்கின்றன. எனவே தாய் தம் மகன் துறவறம் மேற் கொள்வதாகச் சொல்லும்போது, எஞ்சிய காலத்

தனிமையையும் அந்திம கால நினைவையும் மிகுந்த கவலையுடன் கருத்தில் கொள்கிறார்.

இறுதிக்காலத்தில் சங்கரர் தம் அன்னைக்கு அந்திமக் கிரியை செய்ய வருவதாக வாக்களிக்கிறார்.

இந்த வரலாற்றுத் தரவுகளை ஆய்வுக்கண் கொண்டு பார்க்கும்போது, சில உண்மைகள் புலப்படுகின்றன.

நாயர் இனத்துப் பெண்களே நம்பூதிரிகளால் திருமணம் என்ற பந்தத்தினால் பிணைக்கப் பெற்று, நம்பூதிரிப் பெண்களாக ஏற்றம் பெற்றபின் அவர்களுக்குப் பல கடுமையான சட்ட திட்டங்களும், கற்பொழுக்கமும் விதிக்கப்பட்டன. 'அந்தர் ஜனம்' என்றாலே; பர்தாவுக்குள்ளிருப்பவர் என்று பொருள் படக்கூடிய வகையில் அவர்கள் 'ஆசாரம்' காப்பவர்களாயினர். இவர்களுக்கு விதிக்கப்பட்ட கற்பொழுக்கக் கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையானவை. இவர்கள், இதற்கென்று செயல்பட்ட குழுவினரால் சந்தேகிக்கப்பட்டால், 'பிரஷ்டையாகி' குடும்பத்தில் இருந்து விலக்கப்படுவர்.

நம்பூதிரிப் பெண்களுக்கு மட்டும் இத்துணை கட்டுப் பாடுகள் ஏன் விதிக்கப்பட்டன? பிள்ளை பெறும் கருவி களாகவே ஏன் பாவிக்கப்பட்டனர்?

ஏனெனில் அவர்கள் பூர்வீகம், மிகுந்த உரிமைகளை உடைய, சுயேச்சையான இயல்பில் அல்லவா வலிமை பெற்றிருந்தது!

புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர், லலிதாம்பிகா அந்தணர் ஜனம் எழுதிய ஒரு சிறுகதை இப்போது நினைவில் வருகிறது.

ஒரு நம்பூதிரிப் பெண்மணியான தாய், அந்தக் காலத்தில் தாழ்ந்த வகுப்பினனான ஒரு புலையனின் குடிலில் மரணப்

படுக்கையில் இருக்கிறாள். மனைக்கலில் (நம்பூதிரியின் இல்லம்) எசமானரிடம் இச்செய்தியைத் தெரிவிக்க ஒருமுறை தான் அந்தப் பெரிய இல்லத்தில் வாழும் உரிமை பெற்றிருந்தவள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள, ஆதங்கத்துடன் புலைக்குடிமகனிடம் வேண்டுகிறாள். அந்தச் சிறு குடிமகனாலும் மனைக்கலின் அரண் கடந்து உள்ளே செல்ல முடியாது. எனினும் அந்தத் தாயின் ஆசையை நிறைவேற்றப் பெருமுயற்சி செய்கிறான், முடியவில்லை.

கதையின் சாராம்சம் இதுவே. அவள் அந்த இல்லத்துக்குரியவளாக இருந்து, கற்பொழுக்கம், ஐயத்துக்கு இடமானதாகக் கற்பிக்கப்பட்டு, பிரஷ்டம் செய்யப்பட்டவள். எனவே, தாய் ஆரியாம்பாளின் நிலைபற்றிய ஊகங்கள் எங்கெங்கோ கொண்டு செல்கின்றன. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: கணவனை இழந்தவள் என்று அவளை அலங்கோலப்ப்டுத்தும் கொடுமை, அவர்களிடையே நிச்சயமாக இல்லை.

இந்து மரபில், வாழ்க்கையின் முதல் படியிலேயே துறவு நெறி முதன்மைப்பட்டிருக்கவில்லை. சமண, புத்த சமயங்களில்தாம் துறவுநெறி கோலோச்சி இருந்தது. சங்கரர், இளவயதிலேயே துறவு நெறி மேற்கொண்டு, சமயத்துக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் மடங்களை நிறுவியதற்கும்கூட, அதுவே காரணம் என்றால் தவறில்லை. ஏனைய சமயங்களின் செல்வாக்கைக் குறைத்து, மக்களை இந்துச் சமயத்தின்பால் ஈர்ப்பதற்காகவும் துறவு நெறி பூண்டு நாடெங்கும் தமது அத்துவைத சித்தாந்தத்தைப் பரப்பினார் எனலாம்.

ஆதிசங்கரரின் வரலாற்றில், அக்கால மகளிர் நிலை பற்றிய அற்புதமான உண்மைகள் தெரிய வருகின்றன. அவர் வாதிட வந்த மண்டனமிசிரரின் மனைவி சரஸவாணி, கல்வியறிவும், ஞானமும் ஒருங்கே அமைந்த பெண்மணியாகத் திகழ்கிறார். தம் கணவருடன் வாதிட வந்த சங்கரரை

வரவேற்று, நடுவராகவும் அவர் பொறுப்பேற்றார். இருவர் கழுத்திலும், மாலை ஒன்றைக் கொடுத்து அணியச் செய்கிறார்.

எந்த மாலை முதலில் வாடத் தொடங்குகிறதோ, அவரே தோற்றவராகிறார். அதாவது, மன இறுக்கம் அதிகமாகி, வெம்மை வெளிப்படும்போது உடலில் படும் மலர் வாடத் தொடங்கிவிடும். மண்டனமிசிரர் தோற்று சரஸவாணி வெளியே வருகையில், சங்கரரின் கால்களில் மண்டனமிசிரர் பணிந்து தோல்வியை ஒப்புக்கொண்டு தம்மைச் சீடராக ஏற்கும்படி வேண்டுகிறார்; ஆனால் சரஸவாணி இதை ஒப்பவில்லை.

இந்து தருமப்படி, கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே ஒரு முழு அங்கமாகின்றனர். எனவே அவரை மட்டும் வாதில் வென்றதாகச் சொன்னால் போதாது. மேலும், அவர் அவளையும் வெல்லாமல், கணவரை மட்டும் சீடராக்கிக் கொள்ள துறவுநெறிக்கு இழுப்பது நியாயமும், தருமமும் அல்ல. எனவே "எனது வினாக்களுக்கு நீங்கள் சரியான விடையளித்தாலே வென்றவராவீர். பின்னர், என்னையும் உங்கள் நெறியில் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று விதிக்கிறார். அவர் தொடுத்த வினாக்களுக்கு உரிய விடையளிக்க சங்கரர் உலகியல் ஞானம் பெற வேண்டி இருந்தது. பின்னர், மண்டனமிசிரர், சுரேந்திராசாரியார் என்று பெயர் பெற்ற சீடராகிவிட, அவர் மனைவி என்ற நிலை விட்டு ஒரு தாய் என்ற உறவோடு சங்கரருடனும், சீடர்களுடனும் சரஸவாணி ஏகினார்.

ஆனால், சரஸவாணி பற்றிய இந்த விவரங்கள் மறைக்கப்பட்டு, அவர் சரஸ்வதியின் அவதாரம் என்ற தெய்வச் சிமிழில் அடைக்கப்படுகிறார். வரலாற்றில், தப்பித் தவறி ஒரு நட்சத்திரம் ஒளிய வந்தாலும், ஓ அது மானுட வடிவல்ல, மானிடப்பெண்ணால் எட்டமுடியாத தெய்வீகம் எட்டு வதற்குரியதல்ல என்ற அறிவுறுத்தலுடன் புராண,

அசாதாரணப்பட்டில் மூடிப் புதைக்கப்பட்டது! பெண்ணின் அறியாமை எவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது!

சங்கரரின் வாழ்க்கை வரலாற்றில், அவர் இறதியில் அன்னைக்கு அந்திமக்கிரியைகள் செய்ய வந்த விவரங்கள் இன்றும் சில ஐயங்களைக் கிளப்புகின்றன. அவர் அன்னைக்கு அந்திமக்கிரியைகள் செய்ய வந்தபோது, நம்பூதிரி சமுதாயம் அதை ஏற்கவில்லை. "பற்றற்று துறவு பூண்டவன், தாய்க்குக் கிரியை செய்வதா? தகாது!" என்று அந்தப் பிராமணர்கள் எதிர்த்தனர்—அதாவது, ஆரியாம்பாளுக்கு, இறுதியிலும் நிறைவான அமைதி கிடைக்கக்கூடாது என்று வம்பு செய்தார்கள். ஆனால் சங்கரர், தாயே தம் முதல்வி என்று தீர்மானமாக அதே இடத்தில் அவளுக்கு எரியூட்டிக் கிரியைகளைச் செய்தார். அந்தப் பிராம்மண சாத்திரங்களைத் தகர்த்தெறிந்தார். சங்கரரின் சித்தாந்தம் உலகம் முழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அவர் பிறந்த இடத்தில், அவர் பெரும்புகழ் அடையவில்லை. எனவே ஆதிசங்கரா சாரியருக்கும், கைம்பெண்களின், அலங்கோல அவமதிப்புக் கொடுமைகளுக்கும் எள்ளளவும் தொடர்பு இல்லை என்பதே உண்மை.

சமணம், தன் நெறிக்குள் பெண்களுக்குத் தாராளமாக இடம் அளித்த சமயம். பெண்களுக்கும் துறவு உரியது; இல்லமே குறிக்கோள் இல்லை என்று உரிமை வழங்கியது. அவர்கள் தம் முடியை (தாமாகவே பிடுங்கிக் கொள்ளும் கொடுமையில்) இழந்து, கடுமையான வாதங்களுக்கும், சோதனைகளுக்கும் தம்மை உட்படுத்திக் கொண்டு துறவு பூண இடமளித்து, அந்நாளைய இந்து சமய சாத்திர நெறியாளரின் சிந்தையை ஊக்கிவிட்டது. கணவனை இழந்த பெண்கள் எல்லா நலன்களையும் துறந்துவிட வேண்டியவர் தாமே?...அவர்கள் முடியைப் பிடித்து இழுத்து முண்டனம் செய்து வெள்ளை போர்த்தினார்...? குரூரமான இந்த வெறி,

ஆணாதிக்க வெறி 'தரும சாத்திரங்களில்' புகுத்தப்பட்டது. இந்தப் புகுத்தப்பட்ட சாத்திரங்களுக்கு 'மருமாதிகாரி'களாக சங்கராசாரியாரின் குரு பீடங்களில் அமர்ந்தவர்கள் தாங்களாகவே நியமனம் செய்துகொண்டாற் போல் பரிபாலனம் செய்தார்கள்; செய்து வருகிறார்கள்.

வைணவ நெறியைக் கடைப்பிடிக்கும் ஆதி மரபினரான தென்கலையார், சமண சமுதாயத்தினருக்கு உரிய நெறிகளை கைக்கொள்வதை மூர்க்கமாக எதிர்ப்பவர்களாக இருந்தார்கள். எனவே அவர்கள் மரபில் எந்தப் பெண்ணும் கணவனை இழந்ததற்காக, முடியை இழக்கக்கூடாது என்று விதிக்கப் பட்டது.

அவ்வாறு ஒரு செயலுக்கு அபலைப் பெண்களை உட்படுத்துபவர். 'நரகத்துக்குச் செல்வார்' என்றுகூட வைணவ தரும சாத்திரங்கள் எழுதப்பெற்றன.

'இந்து நாகரீகத்தில் மகளிர் நிலை' என்ற நூலில் டாக்டர் அல்டேகர் என்ற வரலாற்றாசிரியர், மகளிருக்கு இழைக்கப்பெற்ற இக்கொடுமை பற்றி மிக விரிவாக ஆராய்கிறார். ஆனால், வைணவ நெறியினரில் தொன்மையான தென்கலை மரபிலிருந்து பிரிந்து புதுமைகளுக்கு இடம் கொடுத்தனர், பின் நாளைய வடகலை மரபினர். இவர்கள், பெண்களின் உரிமைகளைப் பறித்து, அலங்கோலம் செய்வதில் (ஸ்மார்த்த) சைவப் பிரிவினரின் புதிய சாத்திரங்களை ஏற்றி, சைவ வைணவ ஒருமைப்பாட்டை நிலைநாட்டினார்கள்! எனவே சங்கராசாரிய மடத்துப் பிராம்மணர், தென்கலைப் பெண்களுக்கு விலக்களித்து, வடகலைப் பிரிவுக் கைம்பெண்கள் முடியை இழக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்! புதிர் விடுபடுகிறதல்லவா?

இன்னும் பார்ப்போமே!

# 17. கீதை ஒளியில்... பெண் (சு) தருமம்

“பாத்திரக் கடையில் மாசம் இருநூறு ரூபாய் கொடுக்கிறார்கள் என்று வேலைக்குப் போகச் சொன்னேன் மாமி! பழிகாரி, பிராமண சாதியில் பிறந்துவிட்டு, சாதி கெட்டு எவங்கூடவோ ஓடிப்போயிட்டா. என்ன செய்வேன். அன்னிக்கே காலை ஒடிச்சி உள்ள போட்டிருக்கணும். வயத்துக் கொடுமை மாசம் இருநூறானால், ஏதோ ஆயிரம் ரெண்டாயிரம் சேர்த்து, கையில் ஒரு வளைன்னாலும் அடிச்சுப் போடலாமே, நாம்தான் சமையல்காரனைக் கட்டிண்டு ஆயுசுபூரா அவஸ்தைப்பட்டாச்சு. ஏதோ இதை பத்தாவது படிக்க வைச்சிருக்கோம்; ஒரு கிளார்க் உத்தியோகம் பண்றவனையேனும் பார்த்துக் குடுக்கணும்னு நாயா, பேயா அலைஞ்சு நாலு காசு சேக்கறேன். இப்படிப் பண்ணிட்டாளே. வெக்கம், மானம், சூடு, சொரணை, ரோசம் ஒண்ணில்லாம இப்படி ஓடுமா?”

இப்படிப் பிரலாபிக்கும் ஏழைத்தாய், புருஷன் இறந்தபின் அடுப்பறையில் வெந்து பட்சணம் போட்டும், சின்ன சமையல் ஏற்றும், (பெரிய சமையலுக்கு ஆண்கள் இருக்கிறார்களே) ஐந்து மக்களைக் காப்பாற்றுபவள். ஓடிப்போன பெண் மூத்தவள். இவள் சாதி கெட்டு பொருளாதார ரீதியாக உயர்நிலைக்குத் தாவினாலும் இந்தத் தாய் மன்னித்து ஏற்கமாட்டாள். ஏனெனில் குல நெறிகளை முழுவதுமாகக் கட்டிக் காப்பவர்கள் இத்தகைய பஞ்சைகளே. சமய சமுதாய ஆதிக்கம் இந்த அபலைப் பெண்களையே பலமாகக் கவ்விக்கொண் டிருக்கிறதென்றால் மிகையில்லை.

எனவே அந்தப் பெண் வீடு தேடி மருமகனுடன் வந்தால் முரட்டுக்காளையாகச் சீறுவாள். பிரசவம்...? ம்ஹூம்... மூச்சு விடக்கூடாது. தலை முழுகிவிட்டேன் சாகட்டும் என்பாள்.

சில பல ஆண்டுகள் சென்றபின் இவள் மகனும் இதுபோன்ற தகராறில் மாட்டிக்கொண்ட பின்னரே, அல்லது இவள் அண்டியுள்ள உயர் மதிப்புள்ள வீட்டாருக்குச் சமமான பொருளாதார மதிப்புடன் மகள் வந்து, அவர்கள் அங்கீகரித்த பின்னரோ, ஒருகால் இவள் ஏற்கக்கூடும். உயர்குலத்துப் பெண் தாழ்ந்து போனால், எவ்வளவு பெரிய சீர்திருத்தவாதியும் மனம் சுருங்காமல் ஏற்றுக்கொள்வதில்லை.

ஏனெனில், இந்தியக் கலாச்சாரம் என்பது இத்தகைய உயர் பெண்களின் வாழ்க்கைச் சுதந்திரத்தில்தான் பின்னிக் கிடக்கிறது என்றால் பொய்யில்லை. இவளுடைய ஒழுக்கத்தில்தான் அது நிலைகொண்டிருக்கிறது.

அந்நாளில் அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் கண்ணன் உபதேசம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அந்தப் போர்க்கள உரை, இன்றளவும் இந்துக்களின் தெய்வீக வேத நூலாக சத்தியப் பிரமாணமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்திய ஆன்மீகத் தத்துவம் என்றால், உடனே கீதையைப் புரட்டும் அறிவாளரும் சான்றோரும்தாம் நினைவில் வருகின்றனர். இந்தப் போர்க்கள உபதேசத்துக்குக் காலம் காலமாக, பல வேத விற்பன்னர்கள், தத்துவவாதிகள், புதிய சித்தாந்தங்களை வகுத்தவர்கள், தத்தம் நோக்கில் உரைகள் எழுதியுள்ளனர். அயல் நாட்டிலிருந்து வந்த அறிவாளரையும்கூட இந்த நூல் கவராமலில்லை. உலக முழுதும் பல மொழிகளில் ஆக்கப்பெற்ற இந்த நூல், இந்துக்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளுவதற்குறிய உயர்ந்த நூலாக விளங்குகிறது.

இந்த நூலில் கண்ணனின் உரைக்குத் தோற்றுவாய் என்று கருதும் முதல் அத்தியாயத்தைப் படிக்கையில், ஒரு பெரிய உண்மை புலப்படுகிறது.

அர்ச்சுனன், எதிர்த்தரப்பில், தன் சுற்றத்தாரையும் வணங்குவதற்குரிய சான்றோரையும், ஆசாரியரையும் காண்கிறான். பலவீனமடைகிறான். போர் செய்வதனால் ஏற்படக்கூடிய பெரு நட்டத்தை இழப்பை, அவன் மனச்



கண்ணால் கண்டு உணருகிறான். அப்படி ஏற்படக்கூடிய பேரிழப்பு எது? "குல நாசம்" என்று இங்கு அறிவுறுத்தப் படுகிறது. பேராசையால் கவரப்பட்டு திருதராஷ்டிரனின் மக்கள் குலநாசம் விளைவிக்கும் பாவத்தைச் செய்ய முன்வந்துள்ளனர். ஆனால், இந்தக் கேட்டை நன்கு உணர்ந்த நாம், இப்பாவத்துக்கு உடன்படாமல் பின்வாங்குவதாக ஏன் கருதக்கூடாது?

குலம் அழிந்தால், குலதருமங்கள் அழிகின்றன. தருமங்கள் அழிந்தால் அதர்மம் பெருகி முழு நாசம் விளையும். இந்த 'அதர்மம்' என்பதில் முதன்மையாக இருப்பது எது? குலப்பெண் கணவரிறந்தபின் மாற்றானைக் கூடும் நிலை, கற்பிழக்கும் நிலை (கணவரிறந்த பின் ஏரியில் விழுவதும், கைம்பெண் கொடூரங்களும் அந்நாள் வழக்கில் இல்லை என்று ஊகிக்கலாம்) இந்தப் பெண்கள் மாற்றாரைச் சாரும் நிர்ப்பந்தம் வரும்போது, வருணக் குழப்பம் நேரிடும், சாதி தருமங்கள் கெடும்; அதனால் குலத்தோரும் அதனை அழிப்போரும் நரகத்தில் வீழ்வார்கள். ஏனெனில், வருணக் குழப்பத்தினால், 'பித்ருக்களுக்குப் பிண்டத்தையும் நீரையும் அளிக்கவல்ல நீர்க்கடன் செய்வதற்குரியவர் இல்லாமல் போகின்றனர்.' எனவே, அர்ச்சுனன் குலநாசம் விளைவிக் கக்கூடிய பெரும்பாவத்தைச் செய்வதிலிருந்து பின்வாங்குவ தாக உரைக்கின்றனர். அவன் நோக்கில், குலநாசத்தைப் பொருட்படுத்தாத பாதகர்களான துரியோதனாதிகளுடன் போரிடுவது, அந்தப் பாவத்தைத் தாமும் செய்வதாக ஆகிறது. இச்செயலை அந்தோ கொடிய பாவம் (அஹோபத மஹத் பாபம்) எனக் குறிப்பிடுகிறான். பெண்கள், குலம், ஜாதி, வருணம் என்ற பிரிவுகளை அப்படியே காப்பதற்குரிய முக்கிய கருவிகளாகக் கருதப்பட்டனர். உண்மை நன்கு விளங்க வில்லையா?

ஆசிரியர், தம் இனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதில் குறியாக இருந்தனர் என்று சொல்வது முற்றிலும்

பொருந்தவில்லை. அவர்கள் வெவ்வேறு இனக் குழுவினருடன் சம்பந்தம் செய்துகொண்டனர். தம் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொள்ள வேற்று இனக் குழுவினரின் அடிமைப் பெண்களுடன் தொடர்பு கொண்டனர் என்பதைக் கண்டோம். கலப்பு வந்து சேராமல் இல்லை. ஆனால் நால்வகை வருணங்கள் உறுதியாக பிளவுபட்ட பிறகு, இந்த மேலான வருணத்தார் தங்கள் வருணங்களைக் கலப்பின்றி வைத்திருப்பதில் அதிகக் கவனம் செலுத்தினார்கள். இந்தக் காரணத்தினால்தான் மேல் அல்லது உயர் வருணங்களில் பிறந்து பெண்கள் மிக அதிகமாக அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

பகவத்கீதையில் நம் கருத்தைக் கவர்ந்து பிணிக்கும் இன்னும் சில கூறுகளும் பெண்களின் நிலையைத் தெளிவாக்குகின்றன. கண்ணன், ஸத்வம், ராஜஸம், தாமஸம் ஆகிய முக்குணங்களின் அடிப்படையில் நான்கு வருணங்களைப் படைத்ததாகக் கூறுகிறான். (அத்-4) இன்னும் அவனவன் தனக்குரிய (ஸ்வதர்மம்) தருமத்தைச் செய்தலே சிறந்தது. பரதர்மம் நன்கு இயற்றப்பட்டாலும், அதைக் காட்டிலும் தனக்குரிய தர்மம் மேலாம் என்றும் அறிவுறுத்துகிறான். (அத்-3) மேற்குறிப்பிட்ட முக்குணங்களின் இயல்பில், வருணங்களைப் பிரிவுபடுத்துவதைப் பார்ப்போம். ஸத்வ குணமுடையவர்களின் இயல்பு, அறிவையும் ஞானத்தையும் வேட்பதாகும்.

சாந்தம், மென்மை, தூய்மை, தியாகம் இவற்றின் பிறப்பிடமாம்-மேலாம் ஞான ஒளியையே உண்மையென வாழும் இவன் சாத்வீகமான நலம் பொருந்திய நல்லுணவை மிதமாக உண்பவன். இவனே மேலாம் வருணத்தினன்.

ராஜஸ குணம், ஆசை, கோபம், வீரம், தோள்வலி, உடலால் திளைக்கக்கூடிய இன்பங்களை வேட்டல், காரம், உப்பு, உவர்ப்பென்ற உஷ்ண உணவுகளை விரும்பி உண்பவன்.

இவனே இரண்டாம் வருணத்தினன். தாமஸ குணம், மந்தபுத்தி, சோம்பல், செயலின்மைக்கு இருப்பிடம் இந்த குணத்திற்குரியவன் ஆறியது, பழையது, ஊசியது, எச்சிலானது எதையும் விரும்பி ஏற்றுக்கொள்கிறான். (தாமஸ ப்ரியம்) (அத்-17) வருணத்தவருக்குரிய கருமங்கள், கடைசி அத்தியாயத்தில் குறிக்கப்படுகின்றன. அவரவர் இயல்புக்கேற்ற கருமங்களால் பிரிக்கப்படுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டு முதல் இரு வருணத்தினரின் தொழில்கள் குறிப்பிடப் படு கின்றன. உழவும் கால்நடை காத்தலும், வாணிகமும், இயல் பாயுண்டாகிய வைச்ய தருமங்களாகும். இட்டபணி ஏவல் செய்து அண்டிப் பிழைப்பது சூத்திரனக்கு இயல்பாயுண்டாய கருமம், தருமம்; (அத்-18) ஒரே மனிதருக்கு இயல்பில் முக்குணங்களும் உள்ளன. மேலான உயர்குண இயல்புகளை வளர்த்துக்கொள்ள முயலுவதே மனித வாழ்வின் மேன்மை, ஏற்றம் என்பது பொதுவிதி என்றாலும் இப்பொது விதியை, தூலமான சில கூறுகள் கட்டுப்படுத்தவில்லையா? இந்தக் குணத்தினால், இன்ன உணவை உண்பான், இப்படி இயங்குவான்; இந்தத் தொழில் அவனுக்குரியது; இதுவே ஸ்வதருமம்; இதை மீறுவது சரியல்ல என்றால் அதற்கு என்ன பொருள்?

ஸத்வகுணம் ஓங்கியிருக்கும்போது மரணமடைவானாயின் ஞானவான்களின் நல்லுலகை அடைகிறான். ரஜோ குணத்தில் காலமாகிறவன் செயலூக்கம் உடையவர்களுக்கிடையே பிறக்கிறவன். தாமஸ குணத்தில் ஊன்றி விழிப் பெய்தாமலே மரணம் எய்துகிறவர்கள் அறிவிலிகளின் கர்ப்பத்தில் பிறக்கின்றனர். (அத்-14)

அவரவர் அவரவர்க்குரிய தருமத்தை, கருமத்தைச் செய்தலே நியாயம். அந்தந்தக் கருமத்துக்குரிய குணங் களிலேயே ஊன்றும் வகையில் தொழிலும் உணவும் உரியன என்று அறிவித்துவிட்டு, மூட யோனிகளில் தாமஸ

குணமுடையவர் பிறக்கின்றனர் என்றால் என்ன பொருள்? அடிமைப் பணி செய்துகொண்டு, எஞ்சிய உணவைப் புசிக்கவே ஜீவ மரணப் போராட்டம் நிகழ்த்துபவன், விழிப்பையோ எய்தக்கூடாது என்றுதானே ஆகிறது? விளக்கை அணைத்தபின் இருளே வா என்று அழைக்க வேண்டுமா?

இந்த அனைத்துப் பாகுபாடுகளும், மனிதன் என்ற பொதுத் தத்துவத்தை நிறுத்திப் பேசப்படுகிறதா? இல்லை.

இதில், பெண் அடக்கம் இல்லை. இவள் ஏற்கனெவே அடிமையாகித் தீர்ந்தவள். இது மீண்டும் ஒன்பதாம் அத்தியாயத்தில் தெளிவாகிறது;

“பார்த்தா! கீழான பிறவிகளாக இருக்கும் பெண்கள் (பாவ யோனிகளில் ஜனித்தவர்களாகிய ஸ்திரீகள்) மற்றும் வைசியர்கள், சூத்திரர்கள் ஆகியோரும் என்னைச் சார்ந்தால் பரகதி அடைகின்றனர்” என்று கூறுகிறான் கண்ணன்.

அவனுடைய பெருங்கருணை மகிமைப்படுத்தப்படும் இந்த சுலோகத்தில் பெண்ணின் நிலையும் கடைசி வருணத்தாரின் நிலையும் துல்லியமாகக் குறிக்கப்படுகிறது.

பெண் என்று வரும்போது, மொத்தமாகவே அவள் பாபயோனியில் பிறந்தவளாகவே கருதப்படுகிறது. அவளுக்கென்று முக்குணப் பாகுபாடு, தனித்தொழிலியல்பு எதுவும் கிடையாது. அருச்சுனனால், தெளிவாக்கவும் உண்மை நிலை அவள் இனவிருத்திக்கு உரிய ஒரு கருவி என்பதேயாம், அதனால் அவள் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது; அறிவு, சிந்திக்கும் ஆற்றல், எல்லாம் கற்பென்னும் ஒழுக்கத்தில் பறிக்கப்படுகின்றன.

இவளுடைய சுயதருமம்தான் யாது? வருண ஒழுக்கப்படி, பதிசேவை செய்து, ஆண் மக்களைப் பெருக்கி ஆணுக்கு முன் உயிர் துறத்தலேயாம்.

வருண ஸங்கரம் என்ற கலப்புக்கள் நிகழாமலிருக்கவே, இவளைக் கட்டிப் போட்டாலும் காற்றையும், கதிரொளியையும் போல் இயல்பான ஆற்றல்களும், ஊக்கங்களும் முழுதும் கட்டுப்படுத்த முடியாதவை. இதன் விளைவே, இன்றும் ஓர் உயர் வருண நங்கை, தாழ்ந்த சாதிக்காரனுடன் மணவாழ்க்கை நடத்தப் போகிறாள்.

இந்தக் கலப்புக்களால் விளைந்த பிளவுகளே, சாதிகளும் மற்றும் பஞ்சமர் என்றும், வருணங்களில் சேராதவர் என்றும் குறிப்பிடப்படும் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் ஊகிக்க முடிகிறது. பெண் எவ்வாறு இந்தப் பிரிவுகளுக்குக் காரணி யானாள் என்று இன்னும் பார்ப்போம்.

# 18. காப்பாளரும் கைவிடப்பட்ட கற்பரசிகளும்

ஒரு திருமணம். மணமகள் நிலவைப் பழிக்கும் முகமும், கார்மேகம் ஒத்த கூந்தலும் என்று கவிகளின் வருணனைக்குப் பொருந்த விளங்குகிறாள். மணமகன் நல்ல கறுப்பு. இந்த ஜோடியைப் பார்க்க வந்தவர்கள் விமரிசனம் செய்யாமல் இருப்பார்களா? பெண் நல்ல நிறம்; மாப்பிள்ளை அத்தனை நிறமில்லை......

'பிள்ளை கறுப்பாக இருந்தால் என்ன? ஆணை கறுத்தால் ஆயிரம் பொன்? இப்படித்தான் பெண்களின் கருத்துப் பரிமாறல் நடக்கும். 'பெரிய ஆபீசராம்' என்று முத்தாய்ப்பட வைக்கப்படும். பெண்ணும் பெரிய ஆஃபீசராக இருக்கலாம் ஆனால் அது முதன்மைப்படுத்தப்படுவதில்லை.

இதுவே எதிர்மாறாக இருக்கட்டும். பெண் கறுப்பாகவும், ஆண் சிவப்பாகவும், இருக்கட்டும். இந்தச் சேர்க்கை, பெண்ணுடன் வரும் ரொக்கம், தங்கம், வெள்ளி அந்தஸ்தில்தான் இணைந்திருக்கும். ஆனாலும், பெண் அட்டைக்கரி, அவன் ராஜாவாக இருக்கிறான். இந்த மூஞ்சிக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டமா? என்று பொங்கிப் பொருமுவார்கள், பெண்களே. இதிலும் இவள் குழந்தைகளைத் தன் வண்ணத்தில் பெற்றுவிட்டால், தொலைந்தது! 'சனியன் அம்மாவைக் கொண்டு அட்டைக்கரியாகப் பிறந்திருக்கு!' என்று இடிப்பார்கள்.

ஆண் கறுப்பாக இருந்து, அவனைக் கொண்டு பெண் குழந்தை பிறந்தாலும், அப்பாவைக் கொண்ட பெண் அதிர்ஷ்டமாக இருக்கும். கறுப்பாக இருந்தாலும் லட்சணம் என்று சொல்லிக் கொள்வார்கள். அவளுக்குத் திருமணமாகும் போதே எதிர்ப்படக்கூடிய பிரச்னை வேறு.

தந்தையின் மேலான ஆதிக்கம், ஒரு குடும்பத்தில் ஓங்கி யிருப்பதையே சமுதாயம் ஒத்துக்கொள்கிறது. பெண்ணும் வளைந்து ஏற்கிறாள்.

எனவே கலப்புக்கள் நேர்ந்து, வருணங்களின் நூல் பிடித்த ஒழுங்குகளும் பிளவுகளும் தாறுமாறான போது, பல்வேறு பிரிவுகள் தோன்றின.

இந்தக் கலப்பு மணங்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டன. தந்தை உயர் வருணத்தினனாகவும், தாய் தாழ்ந்த வருணத்தில் பட்டவளாகவும் இருந்தால், அவ்வளவு மோச மில்லை. அது அனுலோமம். (அதாவது தலைமுடியைப் படிய அதன் போக்கில் வாருவது போன்றது) இந்தக் கல்யாணத் தினால், தந்தைக்கு இழுக்கல்ல. அவன் தன்னோடு இணைந்த தாழ்ந்த வருணத்தவளை, ஏழு தலைமுறைக்குப் பிறகு, தன் வருணத்தினவளாக ஏற்றுக்கொள்ள, சந்ததி ஏற்றம் பெறுகிறது.

இவ்வாறு பிரிவுக்குள்ளான வகுப்புக்களை மனுஸ்ம்ருதி குறிக்கிறது.

| தந்தை | தாய் | கலப்பினம் |
| --- | --- | --- |
| பிராம்மணர் | க்ஷத்திரியர் | முர்த்த வஸிகத |
| ,, | வைசியர் | அம்பாஷ்ட |
| ,, | சூத்திரர் | நிஷாத |
| க்ஷத்திரியர் | வைசியர் | மஹிஷ்யா |
| க்ஷத்திரியர் | சூத்திரர் | உர்கா |
| வைசியர் | சூத்திரர் | கரன |

இந்த ஆறு பிரிவினரில், உயர்ந்த வருணத்துத் தந்தைக்கும் கடைசி வருணத்துத் தாய்க்கும் பிறந்த மக்களின் சாதியை நம்மால் இனம் காண முடிகிறது. நிஷாத் என்ற சொல் காடுகளில் வேட்டையாடித் திரிந்த இனத்தைக் குறிக்கிறது. அந்த இனத்தார் நாட்டிலிருந்தே விலகி நெருப்புக் கொடுப்போர் இல்லாமல் வாழ நேர்ந்திருக்கலாம். என்றாலும் இந்த வமிசத்தவர் அனைவருக்கும் ஏழு தலைமுறைகளுக்குப் பின் உய்வு உண்டு. ஆனால், 'பிரதிலோமம்' என்ற முறையில் தாய் உயர் வருணத்தவளாக இருப்பாள். பிரதிலோமம் (முடியைப் படியவிடாமல் எதிர்நோக்கி வாருவது போன்ற முறை) என்ற முறையில் அவ்வாறு கரை ஏற முடியாத உய்வில்லாத வீழ்ச்சி அது. இந்தக் கலப்புக்களில் பிறவி எடுத்த மக்கள் சமதாயத்தில் தான் பஞ்சமர் என்றும் அவருணத்தினர் என்றும் சொல்லக்கூடிய தாழ்த்தப்பட்ட இனம் தோன்றியது என்று ஊகிக்க முடிகிறது.

பிரதிலோம முறையில் ஏற்பட்ட வகுப்புக்கள் : 2

| தாய் | தந்தை | கலப்பினம் |
|---|---|---|
| பிராம்மணர் | சூத்திரர் | சண்டாளர் |
| பிராம்மணர் | வைசியர் | ஸுதர் |
| பிராம்மணர் | க்ஷத்திரியர் | மாகத |
| க்ஷத்திரியர் | சூத்திரர் | க்ஷத்தர் |
| க்ஷத்திரியர் | வைசியர் | வைதேஹர் |
| வைசியர் | சூத்திரர் | அயோகவர் |

ஸுதர்—தச்சுவேலை செய்பவர்

க்ஷத்தர்—மிருகங்களைக் கொன்று புசிப்பவர்

இந்த வரையறைக்குட்பட்டவர்களில், பிராம்மண அன்னைக்கும், சூத்திரத் தந்தைக்கும் பிறந்த இனம் மிகவும் தாழ்ந்த இனமாக, இன்றளவும் நமக்கு இனம் கண்டுகொள்ளும் வகையில் நீடித்திருக்கிறார்கள். அதாவது, ஒரு பிராமணப் பெண், வரையறை மீறி நான்காம் வருணத்தவரைச் சேர்ந்த குற்றம், ஒரு சபிக்கப்பட்ட பரம்பரையாக இன்னும் தொடர்ந்து கொண்டு வந்திருக்கிறது.

இந்தப் பிரிவுகள், நான்காம் வருணத்தவரையும், பெண்களையுமே மிகவும் தாழ்ந்த நிலையில் தள்ளப்பட்டிருப்பதையும் விண்டுரைக்கின்றன.

இந்த நான்காம் வருணத்தவர் யாவர்? அவர்கள் எப்படித் தோன்றினார்கள்? பெண்களின் நிலைமைக்கு அவர்களைத் தாழ்த்த வேண்டியதன் அவசியம் எப்படி ஏற்பட்டது?

நான்காம் வருணத்தவர் 'பாரதர்' என்ற இனக் குழுவில் தோன்றிய சுதரஸ் என்று க்ஷத்திரிய வம்ச மன்னனின் சந்ததியார் என்று, டாக்டர் அம்பேத்கார் தம் ஆய்வு நூலாகிய, 'சூத்திரர் யாவர்?' என்ற ஆராய்ச்சியில் கருத்துரைக்கிறார்.

இந்த மன்னன் க்ஷத்திரியன்; வேள்விகளியற்ற இருக்கிறான். இந்த இனத்தினர், அரச பதவிகளில் வந்ததும் முதல் வருணத்தவரை இழிவுபடுத்தித் துன்பங்களுக்கு ஆளாக்கியதன் காரணமாக, அவர்கள் இவர்களுக்கு உபநயனம் செய்ய மறுத்துப் பழிவாங்கியதால் நான்காம் வருணம் தோன்றியது. அவர்கள் மேலாம் நிலையிலிருந்து கல்வி உரிமையும் அதனால் சொத்துரிமையும் மறுக்கப்பட்டு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதால் மற்ற பிற வருணத்தவரைக் காட்டிலும் இவர்கள் மீது பகையும் வன்மமும் தோன்றி யிருந்தது. திருமணம் வருண பேதத்துக்கு அப்பாற்பட்டதாக இருந்த நிலைமை மாறி, பெண்கள் கட்டுப்படுத்தப்பட்டனர். டாக்டர் அம்பேத்காரின் இந்தக் கருத்து, பெண்ணின் அனைத்துச் சுதந்திரங்களும் பறிக்கப்பட்டதன் காரணங் களோடு இசையப் பொறுந்துகிறது. இன்றளவும் சாத்திர சம்பிரதாயங்கள் உயர் வருணப் பெண்களுக்கு மிக அதிகமான கேட்டை விளைவித்திருக்கின்றன.

கல்வி, மற்றும் மேம்பாட்டு உரிமை முதல் மொத்த மனித உரிமைகளையே பறித்த ஒரு கலாச்சாரத்துக்குப் பெண்களைப் பூச்சிகளாக்கித் தீர்த்தது. இந்த மேலாம் வருண சமுதாயம், அந்நியர் வந்து ஆக்கிரமித்த போது அவளைப் பாதுகாத்ததா?

வரலாற்றின் ஏடுகளைப் பின்னோக்கித் திருப்ப வேண்டும்.

ஏழாம் நூற்றாண்டில், அராபிய வர்த்தகர்கள் பாரத நாட்டை நோக்கி வரத் தொடங்கினார்கள். எட்டாம் நூற்றாண்டில் 'ஸிந்து'ப் பிரதேசம் அவர்கள் வசமாயிற்று. வர்த்தகர்கள், முகம்மதிய ஆக்கிரமிப்பாளராக இந்துகுஷ்

கணவாய் வழியே இந்நாட்டுக்குள் அடிவைத்தனர். இக்காலங்களில் இங்கு தென்பட்ட பெண்களே, படையினரின் ஆக்கிரமிப்புக்கு முதலில் இலக்காயினர்.

பெண், அந்நிய வித்துக்குக் கட்டாயமாகத் தன் கருப்பையில் இடமளிக்க வேண்டிய கொடுமைக்காளானதும், அக்கால சாத்திர விதியாளரிடையே இது பிரச்னையாயிற்று, அவளுக்குச் சில சுத்தி பரிகாரச் சடங்குகளைச் செய்து. கருப் பத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஸ்ம்மிருதியில் இடம் அளித்தார்கள்.

ஆனால், இது, இங்கொன்றும் அங்கொன்றுமாக இல்லாமல் நூற்றுக்கணக்கில் பரவலாக ஏற்படத் தொடங்கியதும், சாத்திர நெறியாளரை அச்சம் பிடித்தது. அத்துணை அந்நியவித்துக்களும், இவர்களுடைய சமுதாயத்தில் உரிமை பெறுமானால் என்ன விளையுமோ?

எனவே, வித்துக்கு இடமளித்த நிலத்தையே உதாசீனம் செய்துவிட முடிவு கட்டினார்கள்.

கணவனே தெய்வம். இந்த சம்பிரதாய சமுதாயமே தனக்குப் பாதுகாப்பு என்று குருட்டுத் தன்மையுடன் பற்றிக் கொண்டிருந்த பெண் அந்நியனால் குலைக்கப்பட்டதும், நடுத்தெருவில் வந்து வீழ்ந்தாள். முகமதிய ஆட்சியாளரிடம் காமக்கிழத்தியாகவும் பணிப்பெண்ணாகவும் அதற்கும் இட மில்லாத வகையில் சக்கையாகத் துப்பப்பெற்ற நிலையிலும் வீழ்ச்சியுற்றாள்.

கற்பென்றும் தொண்டென்றும் ஒரு தவநெறியே வாழ்க்கை எனப் புகுத்தப்பட்டுப் பதப்படுத்தப்பட்ட பெண்டிர், அந்நியரின் காலடிகளில் வீழ்ந்து இறுதி வாழ்வைத் தொடரவும் இயலாமல் அல்லலுற்றனர்.

இளமையில் தந்தை; குமரிப்பருவம் வந்ததும் கணவன்; பின்னர் முதுமையில் மைந்தன் என்று இவளுடைய

காப்பாளராக இருந்தவர்கள் கால்களால் உதைத்துவிட்டுக் கைகளை மடக்கிக் கொண்டனர்.

எனவேதான் 'பாலனம்' என்ற பொறுப்பு விடுபட்டு, எந்நாளிலும் பெண் சுதந்தரமாக இருக்கத் தகுதியற்றவள்; இன்னின்ன காலங்களில் இவர்கள் ஆளுகைக்குட்பட்டவளாக இருக்கிறாள் என்று மாற்றப்பட்டது போலும்!

ஐந்து கணவர்களும் கைவிட்டதும் பாஞ்சாலி 'கண்ணா?' என்று கூவி அழைத்தாள். புதிது புதிதாய், வண்ண வண்ண மாய் காவியத்தில் சேலை வளர்ந்தது. ஆனால் அன்னாள் நடுத்தெருவில் தள்ளப்பட்ட அபலைகளுக்கு அப்படிக் கூவக் கூடத் தெரியாதே? எனவே சாவதைத் தவிர வேறு வழி யில்லை என்றாயிற்று. வரலாற்றுக்கால 'ஸதி' வழக்கில் வந்தது. அரச குலப் பெண்களே கொத்துக் கொத்தாக எரி வளர்த்துப் புகுந்தார்கள்.

# 19. சதி புராணம்

இவ்வாண்டின் தொடக்கத்தில் வங்கத் தலைநகரில் நிகழ்ந்த பாரதீய பாஷா பரிஷத் அமைப்பின் பரிசளிப்பு விழாவை ஒட்டிப் பரிசு பெற்ற நூல்களை அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. பரிசு பெற்றவர்களில் ஒருவரான இராஜஸ்தானத்து நூலாசிரியர் தனது கட்டுரைத் தொகுப்பு நூலைப் பற்றிய கருத்தை உரைத்தார். இராஜஸ்தானத்துப் பெருமைகளையும் மாண்பையும் விளக்கும் அந்நூலில், கற்புடைப் பெண்டிர் பற்றியும் வருகிறது போலும்? இராஜபுதனத்து நங்கையர் தீக்குளித்து 'சதி' தர்மம் காத்ததைப் புகழ்ந்தும், இன்னமும்

அத்தகைய பத்தினிகளுக்குக் குறைவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். கருத்தரங்குகளுக்குத் தலைமை வகித்தவர் ஓர் இராஜஸ்தானத்துப் பெண்மணியே. கவிஞர்; சிறந்த அறிவாளர்; பரிஷத்தின் செயலாளரில் ஒருவர். அவரால் இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

'இன்னமும் அத்தகைய சதிகள் இருப்பது பெருமையல்ல' என்று எழுந்தார்—அமைதியாகப் போய்க்கொண்டிருந்த நிகழ்ச்சியில் சலசலப்பு நேரிட்டது. விவாதம் முழுவதும் இலக்கியமான இந்தி மொழியில் நிகழ்ந்ததனால், என்னால் வெறும் பார்வையாளராகவே இருக்க முடிந்தது. இந்த நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் அண்மைக் காலங்களில் சாக அடிக்கப்பட்ட அந்த மரபை, உயிர்த்தெழச் செய்த சதி தர்மத்தை நிலைநாட்டும் நிகழ்ச்சிகள் இராஜஸ்தானம், மத்தியப் பிரதேசம் ஆகிய இடங்களில் பாரதத்தின் புகழைப் பரப்பிக் கொண்டிருக் கின்றன. அதுவும் போதாதென்ற வகையில், 'வரதட்சணை சீர்' என்ற சாக்கில், இளம்பெண்களை நாடு முழுதுமான எல்லாப் பகுதிகளிலும் உயிருடன் தீக்குளிக்கச் செய்தும் சதிகளுக்கான சொர்க்கத்துக்கு இந்த இருபதாம் நூற்றாண்டின் இந்துச் சமுதாயம் அனுப்பிக் கொண்டிருக்கிறது. அதில், சந்தனம் முதலிய வாசனைக் கட்டைகள் இல்லை; ஸ்டவ், பெட்ரோல், எரிவாயு என்ற நவீன சாதனங்கள் அப்பணியைச் செவ்வனே செய்கின்றன.

எனவே, இந்த சதி தர்மத்தைப் பற்றியும் இப்போது ஆராய்வது உகந்தது என்று கருதுகிறேன். அந்நியர் ஆக்கிர மிப்புக்கு உட்பட்டால், அரச மாளிகையில் இருந்து நடுவீதிப் புழுதியில் வீழ்ச்சியுறும் நிலையை உணர்ந்திருந்த பெண்கள் பகைவர் நாட்டில் புக மன்னர் இடம் கொடுத்துவிட்டனர் என்ற நிலையிலேயே எரி வளர்த்துப் புகுந்து தம் மானத்தைக் காப்பபாற்றிக் கொண்டனர். சித்தூர் ராணி பத்மினியின் வரலாறு பொன்னேட்டில் துலங்குவதாகும்.

இவ்வாறு பத்தாம் நூற்றாண்டில் பெண்கள் தம் மானம் காக்க வழக்காக்கித் தீர்ந்த தீக்குளிப்புகள், பாதிவிருத்யம், சதி என சர்க்கரைப்பாகில் தோய்க்கப் பெற்றன. இந்நாட்டின் பெண்களைக் காப்பாற்ற இயலாத முதுகெலும்பற்ற முடிமன்னர் வருக்கத்தில் மன்னர் இறந்ததும், மன்னரின் பெருமையை உலகரியச் செய்ய அவருடைய பட்டத்து மனைவியருடன், அந்தப்புரத்தில் சிறைப்பட்டிருந்த கிளிகளும் கூடச் சிதையில் ஏற்றப்பட்டார்கள். யாருமே ஏறுவதற்கில்லை எனினும் சில அடிமைப் பெண்களையேனும் பிடித்துச் சிதையிலேற்றி மன்னர் மதிப்பைக் காப்பாற்றினார்கள்.

இவ்வாறு அரசருக்குரிய க்ஷத்திரிய வருணத்தாரிடமே இந்த 'சதி' தீக்குளிப்பு வழக்கில் பரவியது. மேலாம் வருணத்தினர் தங்களை மீறி இரண்டாம் வருணத்தினர் பெண்களைச் சதியாக்கிப் பெருமைப்படுவதைப் பொறுப் பார்களா, ஆதியில் கௌதமர் என்ற ரிஷி 'பிராம்மணி தற்கொலை செய்துகொண்டால், தனக்கோ கணவருக்கோ சுவர்க்கம் தேட முடியாது' என்று சொல்லி வைத்திருந்ததைக் கூட, மாற்றினார்கள். பிராமண (ஹத்தி) ஸ்திரீஹத்தி என்ற பாவம் அழிக்கப்பெற்று, புண்ணிய நெறியாக மாற்றப்பட்டது. இதை ஊக்குவிக்கும் வகையில், முன்பு ஸதிக்கு விரோதமாக எதுவும் சொல்லாதிருந்த முனிவர் பெருமக்களைத் தேடிப் பிடித்தார்கள். அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக சதி சாத்திர நெறி வகுக்கப்பட்டு பறையடிக்கப்பட்டது.

அறிவு குருடாக்கப்பெற்ற அபலைகளை எரியில் தள்ளி, அவர்களை ஆசைகாட்டிய வாசகங்கள் இவை:—

1. கணவனுடன் சிதையடுக்கி, உடன்கட்டை ஏறும் பெண், அருந்ததிக்குச் சமமாகப் பத்தினிகளுக்குரிய சுவர்க்கம் புகுகிறாள்.

*2.* கணவனுடன் மறு உலகம் செல்பவள், மனித உடலில் உள்ள ரோமக்கால்களின் எண்ணிக்கைக்குச் சமமாக மூன்றரைக் கோடி ஆண்டுகள் சுவர்க்கம் அநுபவிக்கிறாள்.

*3.* மகாபாவம் செய்த கணவனாக இருந்தாலும், பாம்புப் பிடாரன் பொந்தில் இருந்து பாம்பை இழுத்து விடுவதுபோல் கணவனைத் தன் பதிவிரத சக்தியினால் கொடிய நரகத்தில் விழுந்துவிடாமல் மீட்டு அவனுடன் மகிழ் உலகம் (சொர்க்கத்தில்) அநுபவிக்கிறாள்.

*4.* கணவனுடன் உடன்கட்டை ஏறுபவள் மூன்று பரம்பரையினரின் பாவத்தைக் கரைத்து விடுகிறாள். *1)* தன் தாய்வழிப் பரம்பரை, *2)* தன் தந்தைவழிப் பரம்பரை, *3)* புகுந்த வீடாகிய கணவன் தோன்றிய பரம்பரை.

*5.* கணவனையே தெய்வமாக நினைந்தொழுகும் கற்பரசி உடன்கட்டை ஏறுவதால் பதினான்கு இந்திரர் ஆளும் காலத்துக்கு சுவர்க்கத்தில் மிக உன்னதமான மகிழ்ச்சியைக் கணவனுடன் அநுபவிக்கிறார்கள்.

*6.* எல்லா பாவங்களிலும் கொடிய பாவம் பிராம் மணனைக் கொன்ற பாவமே. (பிராம்மணத்தியை அல்ல) அந்தப் பாவத்துக்கு ஆளாகி இருந்த போதிலும் சதி உடன் கட்டை ஏறுவதன் வாயிலாக கற்பரசியின் உயிர்த்தியாகம் அத்தகைய கொடிய பாவத்தில் இருந்தும் அவனை மீட்கிறது. ஹரிதர் என்ற ரிஷி மிகவும் 'காட்டமாக' ஒரு மாத்திரை கொடுக்கிறார்:

'உன்னால் பிறபடுத்தப்பட்ட பெண் பார்த்துக் கொள்வாள். நீ எத்தகைய பாவத்தையும் செய்யலாம்' என்று ஆண் தட்டிக் கொடுக்கப்படுகிறான். ஆனால் பெண்ணோ "மரியாதையாகச் சிதையில் ஏறிவிடு! இல்லாவிட்டால் மீண்டும் மீண்டும் இதுதான்!" என்று பயமுறுத்தப்படுகிறாள்.

மேற்கூறிய ரிஷிமுக வாசகங்கள் எப்போது, எப்படி உதித்தன என்பதற்கெல்லாம் விளக்கங்கள் தேடுவது சிரமமான செயல். ஆனால் தேடினால் எதை எதையோ கண்டுபிடிக்கலாமாகவும் இருக்கும். ஏனெனில் பெண்ணின் கீழ்முக வரலாற்றை ஆராய முடியாதபடி, தெய்வீக வேத முத்திரைகள் என்ற இட்டு வித்தபின், புராணங்கள் என்ற புனைகதைக் களஞ்சியங் களையும் ஆதாரமாக்கிக் கொள்ள இப்புளுகுகளைக் கொட்டி நிரப்பி வைத்தார்கள்.

இந்த வகையில், பிரும்ம புராணம் சொல்கிறது :—

'கணவன் வேற்று நாட்டில் இறந்தால், உத்தம பத்தினி அவனுடைய காலணிகளை மார்பில் வைத்துக்கொண்டு அக்கினியில் புகுவாள்!'

பெற்றுப் பேணி, தன் நிணத்தையும் குருதியையும் தோய்ந்து ஆணினத்தை வாழ்விப்பதையே நெறியாகக் கொண்டிருந்த பெண்ணினத்தை, இவ்வாறு வஞ்சக வார்த்தைகளால் கரைத்து உயிரோடு நெருப்பிலிடும் கொடுமை 'சதி' என்ற. பெயரில் பல நூற்றாண்டுகளுக்கு ஏனென்று கேட்பார் இல்லாமல் நடைபெற்றது.

இராஜாராம் மோஹன்ராய் தோன்றி, இக்கொடுமைக்கு சமாதி கட்ட அரும்பாடு பட வேண்டி இருந்தது. ஆங்கிலேயே அரசின் ஆதரவைப் பெற ஆன பாடும் பட்டது. வேதம் என்றும் புராணம் என்றும் புளுகுகளை அவிழ்த்துவிட்டு நியாயம் தேடிற்று.

அவர்களைப் பார்த்து ராஜாராம் மோஹன்ராய் கேட்டார்: "கணவனை இழந்தவள் தானாகவே சங்கற்பம் செய்து கொண்டு உடன் கட்டை ஏற வேண்டும் என்பதுதானே விதி? உங்கள் வழிக்கே வருகிறேன்; ஆனால் நீங்கள் மரித்த கணவனுடன் அவளை உயிரோடு கயிறு கொண்டு பிணைக்கிறீரே? பின்னர், அவளை வைத்து மேலே சிதை

அடுக்குகிறீர்களே? அவள் எழுந்திருக்கவே இயலாதபடி பெரிய மூங்கில் தடிகளை வைத்து அழுத்துகிறீர்களே? ஹரிதரும் மற்ற முனிவர்களும் இதையெல்லாம் சொல்லி இருக்கிறார்களா...?"

இது அப்பட்டமான பெண் கொலை தவிர வேறொன்றுமில்லை. இந்தியப் பெண்களின் அவல நிலை, அரசாள வந்த அந்நியருக்கும்கூட உறுத்திற்று. வில்லியம் பெண்டிங், சதி ஒழிப்பைச் சட்டமாக்கித் தீர்த்தார். நூற்றாண்டுகளாக அடக்கிப் பதப்படுத்தப்பட்ட இந்தியப் பெண்மை, மாற்றாரின் பரிவுக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானது வியப்பில்லை. அவர்களின் மென்மையுடைய பரிவும் பொறுக்கும் திறனும், உண்மையான உள்ளொழுக்கமும், தங்களுக்கு எத்தகைய கொடிய சோதனைகள் நேரிட்ட போதிலும் அமைதியுடன் ஏற்றுக்கொள்ளத் துணை புரிந்தது.

பல ஆண்டுகளுக்கு முன் டெல்லி தலைநகரம், மற்றும் முகலாய அரசர்கள் வாழ்ந்த இடங்கள், சமாதிகள் என்று சுற்றிப் பார்க்கச் சென்றபோது அக்பரின் வாழ்விடத்துக்கு வந்தபோது, அவரை மணந்த ராஜபுதனப் பெண்மணியின் மாளிகை என்று காட்டினார்கள். இந்திய பாணியில் உப்பரிகை, தூபிகள் என்று விளங்கிய மாளிகையைப் பார்த்தேன். அக்பர் ஒரு போச்சுகீசியப் பெண்ணைக்கூட மணந்திருந்ததாகவும் கூறி அந்த இருப்பிடத்தையும் காட்டினார் வழிகாட்டி; அவருக்கென்று உள்ளே தனி மாதா கோயில் போன்ற தொழுகை இடமும் இருந்ததாக நினைவு.

ஆனால், என் சிந்தையை முற்றிலுமாக நிறைத்துக் கொண்டவர், அந்த ராஜபுதனத்துப் பெண்மணி ஜோத்பாய்...

அக்பர், சிறந்த இராஜதந்திரியாக, இரு சமயப் பரம்பரையினரையும் ஒன்றிணைப்பதான பெயரைப் பெற, இத்தகைய கலப்புத் திருமணங்களுக்கு ஆதரவாக இருந்தார். ஒரு மன்னர் மன்னன், கரம் நீட்டி, தாழ்ந்த இடத்திலிருந்தும் தூக்கிவிடுவதால் அழியாப் பெருமை பெறுகிறான்.

சக்கரவர்த்தியான பிறகு ராஜபுத்திரப் பிரபுக்களும் வீரர்களும் அவர்களுக்கு அடங்கியவர்களே. மேலும் அவர்கள் எழும்பி விரோதமான கிளர்ச்சிகள் செய்யாமல் இருக்க இந்தப் பெண் எடுப்பு பேருதவியாக இருந்திருக்கிறது. இரு தரப்பிலும் பெண் கொடுத்து, வாங்கப்படும் பரிவர்த்தனை அன்று இது. ராஜபுத்திரப் பெண்களே முகமதிய அந்தரப்புரத்தில் வாழக் கொடுக்கப்பட்டனர். இந்தியப் பெண் சுயாதீனமற்ற ஒரு வாணிபப் பொருள் போல்தான் திருமண பந்தத்திலும் இன்றளவும் கொடுக்கப்படுகிறாள். முற்றிலும் எல்லாப் பழக்கங்களிலும் மொழி மற்றும் உணவாகாரங்களிலும் வேறுப்பட்ட ஒரு சூழலில் வெளி உலகமே தெரியாது வளர்ந்த ஒரு மங்கை அடி வைத்தபோது, மாறுதலை ஏற்றுக்கொள்ள எப்படி மௌனமாகப் போராடி இருப்பாள் என்ற நினைவே என்னுள் நிறைந்தது.

வரலாற்றுப் பாட நூலில் அக்பர் மத ஒற்றுமைக்காகச் செய்த இந்த அரிய மேன்மைகளுக்காகப் பாராட்டப்படுகிறார். இந்தப் பாட நூல்களில், தலையில் கிரீடம் வைத்துக் கொண்டு கையில் ரோஜா மலருடன் விளங்கும் மார்பளவுச் சித்ரமான பேரழகி நூர்ஜகானை முதன்மையாக அச்சிட்டிருப்பார்கள். ஆனால் அக்பர் மணந்த ஜோத்பாயின் படமும், முழு அளவில் தலையை மூடும் சீலையும், கணுக்கால் வரை தொங்கும் பாவாடை போன்ற உடையும், கொலுசு, காப்புகளும் தெரிய சிறிய அளவில் இடம் பெற்றிருக்கும்.

அந்த ஜோத்பாய், தாஜ்மகாலைக் கட்டச் சொன்ன மும்தாஜைவிட பேரழகி, நூர்ஜகானைவிட வரலாற்றில் சிறப்புப் பெறுபவள் என்று நினைத்தேன்.

# 20. வரதட்சணை மகாத்மியம்

தமிழ் நாட்டில் இலக்கியம், மக்கள் ரஞ்சகப் பட்டி மன்றங்கள் இந்நாள் வரையிலும் கண்ணகியின் கற்பையும் மாதவியின் கண்ணியத்தையும்தான், கல்லில் அடித்து வைத்துக் கொண்டிருந்தன. இந்நாட்களில் பட்டி மன்றங்களில் சுவை கூட்ட மேலும் பல தலைப்புகள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று, வரதட்சணைக்குக் காரணம் ஆணா பெண்ணா என்பதாகும்.

அண்மையில் ஒரு வரதட்சணை எதிர்ப்பு விழா (?) வுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கருத்தரங்கில் ஒரு நுண்ணறிவாளர், இந்தியாவில் வரதட்சணைக்குக் காரணம், ஓர் ஆணுக்கு ஏழு என்ற விகிதத்தில் பெண்மக்கள் தொகை இருப்பதாகும் என்று கருத்துரைத்தார். இன்னொருவர், பெண்ணுக்குச் சொத்துரிமை கிடைத்துவிட்டால் இந்தப் பேய் அடியோடு அழிந்துபோகும் என்றார். (சொத்து இல்லாத குடும்பங்களில் பிறந்த பெண்களைப் பற்றியோ, கடன் உள்ள குடும்பங்களில் பிறந்த பெண்களைப் பற்றியோ, அவர் நினைத்துப் பார்க்கவில்லை.) பட்டி மன்றத்தில், வரதட்சணைக்கு ஆணே காரணம் என்று முழக்கமிட்ட பெண்ணை எதிர்த்துப் பேசிய இளைஞர், வரதட்சணை வாங்கித்தானாக வேண்டும் என்று நிபந்தனைகள் விதிப்பது மாமனார் அல்ல, மாமியாரே; சகோதரன் மனைவியைக் கொடுமைப்படுத்துவது நாத்தனாரே, பையன் தன் தாய் சொல்லைத் தட்ட முடியாமல் சங்கடப்படுகிறானே ஒழிய அவனே வரதட்சணை கேட்ப தில்லை என்று விளக்கினார். அதிரடிகளும், எதிரடிகளுமாகப் பட்டிமன்றம் கலகலவென்று களை கட்டியது. முடிவில் நடுவர்

வரதட்சணைக்குக் காரணம், ஆண்களும்தான், பெண் களும்தாம் என்று தீர்ப்புக் கூற இரு அணிகளும் தம் தம் வாதிடும் திறமையில் நம்பிக்கையுடன் மகிழ்ந்தார்கள்! விழா இனிது நிறைவேறியது.

கேட்டுக்கொண்டிருந்த எனக்கு, சிந்தனை எங்கெங்கோ போயிற்று. பெண்ணுக்கு அவள் சொந்த மானுட மதிப்புக்கு மேல் ஒட்டிக்கொள்ளும் பொன்னும் பொருளும் அவளையே வெற்றுக் கூடாக்கிவிட எப்போது உரிமை பெறத் தொடங்கின?

ஆணும் பெண்ணும் கூடி மகிழ்ந்து இனம் பெருக்க மக்களைப் பெறுவது என்று இருந்த நிலையில் சமுதாயக் கட்டுக்கோப்பான நாகரீக மலர்ச்சி எய்தியதும், திருமணங்கள் தோன்றின. மனுவின் பெயரால் தொகுக்கப்பட்ட நெறிமுறை களில் எட்டு வகைத் திருமணங்கள் காணப்படுகின்றன.

**1.** பிரும்ம விவாகம், **2.** தெய்வ விவாகம்,**3.** பிராஜாபத்ய விவாகம், **4.** அர்ஷ விவாகம், **5.** ஆசுர விவாகம், **6.** காந்த ருவ விவாகம், **7.** ராட்ஸ விவாகம், **8.** பைசாச விவாகம் என்பவை அவை.

**1. பிரும்ம முறை:** நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரம் மச்சரியம் காத்த பிராம்மணனுக்கு அதே வகுப்பில் உதித்த பண்ணிரண்டாண்டுகளே நிரம்பிய பெண்ணை இரண்டாம் பூப்பெய்து முன், அணிகலன்களுடன் கொடையாக நீர் வார்த்துக் கொடுக்கும் விவாகம் இது. இந்தத் தம்பதிக்குப் பிறக்கும் மகன் இருபத்தோரு தலைமுறையினரைக் கரையேற்ற வல்லவன்.

**2. தெய்வ முறை:** வேள்வி நடத்தும் ஆசிரியருக்கு வேள்வித் தீயின் முன், மகளைத் தாரை வார்த்துக் கொடுப்பதாகும். இந்த மணத்தில் உதிக்கும் புதல்வனால் பதினைந்து தலைமுறையினர் ஈடேறுவார்.

***3.*** *பிரஜாபத்திய முறை:* மணமகன் வீட்டார் கொண்டு வந்து கொடுக்கும் பரிசுப் பொருள்களைப்போல் இருமடங்கு சேர்த்துப் பெண்ணுக்குக் கொடுத்து மணமுடித்தலே இந்த முறை. இந்தத் தம்பதி பெறும் மகன் பதின்மூன்று தலை முறையினரைக் கரையேற்றுவான்.

***4.*** *அர்ஷ முறை:* ஒரு காளை, ஒரு பசு இரண்டையும் பெற்றுக்கொண்டு பெண்ணை மணமகனுக்கு உரியவளாக்கிக் கொடுத்தல். இந்த மணமக்கள் பெறும் ஏழு தலைமுறை யினரின் கரையேற்றத்துக்கு உத்தரவாத மளிக்கிறான். இந்த நான்கு முறைத் திருமணங்களும், உயர் வகுப்பினராகிய பிராம்மணருக்கு உரியதாம். இந்த முறைகளில் காளையையும் பசுவையும் பெற்றுக்கொண்டு மகளை தாரைவார்த்துக் கொடுப்பது, மகளை விற்பதற்குச் சமமாகும் என்று மனுவே, (எந்த மனுவோ) கண்டனம் செய்ததான குறிப்பும் இருக்கிறது.

***5.*** *ஆசுர முறை:* வில்வித்தை, ஏறு தழுவுதல் போன்ற பராக்கிரமச் செயலால் பெண்ணைப் பரிசமாகப் பெறும் மணம்.

***6.*** *காந்தர்வ முறை:* வயது வந்த ஆணும் வயது வந்த பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பித் தாங்களாகவே மணம் புரிந்துகொள்ளல்.

***7.*** *இராட்சஸ முறை:* பெண்ணுக்குத் தெரிவிக்காமலே, ஒருவன் கவர்ந்து சென்று தானே மணக்கலாம் அல்லது பிறருக்கும் மணமுடிக்கலாம்.

***8.*** *பைசாச முறை:* இது முறையான திருமணமன்று. மணமகனைவிட மூத்தவளாகவோ கள்ளுண்ட நிலையிலோ உறக்க நிலையிலோ விருப்பத்திற்கு மாறாகவோ பலாத் காரமாகப் புணர்ந்து உரியவளாக்கிக் கொள்ளுதல்.

பிந்தைய நான்கு முறைகளும் க்ஷத்திரிய வருணத்தவருக்கு உரியவையாக நெறிப்படுத்தப் பட்டன. ராட்சச முறை தவிர்த்த ஏனைய மூன்று முறைகளும் மூன்றாம் நான்காம் வருணத்தவருக்கு உரியனவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நாட்களில், நூல் பிடித்த கோடாக இல்லை எனினும், இந்த எல்லா வகைத் திருமணங்களின் கூறுகளும் அன்றிருந்தாற் போன்றே சமுதாயத்தில் நிலவுகின்றன என்றே சொல்லலாம்.

இந்த நாட்டில் ஆரியர்களின் வருகைக்கு முன், தாய் வழிச் சம்பிரதாயமே மக்கள் பழங்குடிச் சமுதாயங்களில் நிலவி வந்திருக்கிறதென்று கொள்ளச் சான்றுகள் இருக்கின்றன. இதை முந்தைய கட்டுரைகளில் குறிப்பிட்டு இருக்கிறேன். அந்தச் சம்பிரதாயத்தில், பெண் வீட்டை விட்டுப் போக மாட்டாள். பிறந்த வீடு உரிமையுள்ள வீடு. அவளை மனைவி யாக வரிப்பவன் அவள் வீடு தேடி வருவான். அவள் பெறும் மக்களை அவன் தன்னுரிமை பதித்துக்கொண்டு போகமாட்டான்.

இந்த நிலை தந்தை வழிச் சமுதாயமாக மாற்றம் பெறும் போது, மணமகன் சிறிதளவேனும் பொருள் கொடுத்து அவளைத் தன் வீட்டுக்குக் கூட்டிச் செல்லும் வழக்கம் வந்தது. இதை ஏறக்குறைய 'ஜாமீன்' என்ற பொருளில் கொள்ளலாம் என்று தோன்றவில்லை?

பெண் இந்த வீட்டுக்குரியவளில்லை; அவள் கணவன் வீட்டுக்குச் செல்கிறாள் என்ற மாற்றம் வேத காலத்தில் தொடங்கிவிடுகிறது. வேத காலத்து மணப்பெண் தனக்குப் பரிசிலாகக் கிடைத்த பொன், பொருள் எல்லாவற்றையும் கணவன் வீட்டுக்குக் கொண்டு செல்கிறாள். இந்த வீட்டு மகள் வேறு வீட்டுக்குச் செல்கிறாள் என்ற கனிவோடு, அவளுக்குச் சகோதரனும் மற்ற உறவினரும் கொடுக்கும் இப்பரிசுகளே, சீதனம் என்ற அவளுடைய உரிமைப்

பொருளாயிற்று என்று கொள்ளலாம். இதில், பிறந்த வீட்டுச் சொத்தின் உரிமைகள் அவளுக்கு அறவே இல்லை என்ற பெரிய உண்மையும் பொதிந்து கிடக்கிறது. இந்தத் தந்தை வழி மாற்றம் பழைய பாரம்பரியங்களை அறவே துடைத்து விட முடியாது என்ற நிலையில்தான், மணமகனைப் பரிசம் போடுவதும் காளையும் பசுவும் கொடுத்ததுமாகிய வழக்கங்கள் நெறிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். 'ஜாமீன்' சரி; 'எதிர் ஜாமீன்' என்று பேசப்படுவது எதனால்? 'ஜாமீன்' என்ற தொகைக்கு மாறாகவே, நாமே அந்தப் பணத்தைக் கொடுத்துப் பெண்ணையும் கொடுக்கிறோம் என்று தோன்றவில்லை. சிறிது சிந்தனை செய்தால் உண்மை இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று புலனாகிறது. தந்தை வழிச் சம்பிரதாயம் பழக்கத்தில் வரும்போதுதான், மணமகன் சிறிதளவு பொன்னோ, அல்லது பொருளோ கொடுத்து விட்டுத் தன் இல்லத்துக்கு மனைவியை அழைத்துச் சென்றான். ஆனால் முகம்மதியர் நமது நாட்டில் புகுந்த காலங்களில் பெண்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு ஆபத்து ஏற்பட்டதாக அஞ்சினார்கள். 'தாலி' வழக்கம் இந்த முகம்மதியர் ஆதிக்கம் பெற்றதன் விளைவாகவே ஏற்பட்டது என்று ஒரு கருத்தும் கூட வரலாற்றறிஞரிடையே நிலவுகிறது. ஏனெனில் 'தாலி' ஒரு பெண்ணை 'மணமானவள்' என்பதைப் பார்த்த மாத்திரத்தில் அறிவிக்கிறது. மணமான பெண்ணை முகம்மதியப்படை வீரர் தீண்டமாட்டார் என்ற அடிப்படையில், பெண்ணுக்குத் தாலி ஒரு காப்பாகவே அமைந்தது. மேலும் இதே காரணத்துக்காகப் பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதில் அக்காலச் சமுதாயத்தார் மிகவும் தீவரம் காட்டியிருக்க வேண்டும். இந்தத் தீவிரம், பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ளும் ஆண்களுக்கு இல்லாத நிலையில், பணமும் பொருளும் கொடுத்துக் கட்டி வைப்பதாக முடிந்திருக்க வேண்டும். பொன்னும் பொருளும்— கொள்வதற்குப் பதிலாக— கொடுத்தேனும் திருமணத்தை

முடித்துவிட வேண்டும் என்று ஆயிற்று. எனவே, இந்த முறை 'எதிர் ஜாமீன்' என்ற சொல்லால் குறிக்கப் பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. மகளை மணமுடிக்க வருபவன், வரன். இவனுக்குப் பெண்ணைத் தானமாகக் கொடுப்பதுடன், 'தட்சணை' என்று கூட ஒரு பொதியையும் கொடுக்கும் வழக்கம், ஆண் ஆதிக்கம் மேலோங்கி, பெண் சகல உரிமைகளையும் இழந்த சூழ்நிலையில்தான் பரிபூரணமாகிறது.

எப்படியாயினும், முகம்மதியர் வருகை குறிப்பாக தென்னிந்தியாவில் திருமண வழக்கங்களைப் பாதித்திருக்கிறது. முகம்மதியப் படைவீரன், மாற்றான் மனைவியைத் தொடமாட்டார்கள்; அத்த வகையில் ஒரு பெண் திருமணமானவள் என்று அறிவிப்பதற்கே தாலியைக் கழுத்தில் கட்டினார்கள் என்ற ஊகத்துக்கு இடம் உண்டு. பழந்தமிழர் மரபில் கூட இந்தச் சின்னம் தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. எதிர் ஜாமீன் என்ற வழக்குச் சொற்றொடர் ஆய்வுக்குரியது என்று படுகிறது.

எப்படியோ, பெண்ணின் சார்புநிலை திருமணத்தினால் தான் உறுதிப்படுகிறது. அவள் தானே நிற்க முடியாது, உறுதி யற்ற பெண் கொடி, பைங்கொடியானாள். கொழு கொம் புக்கு அவள் தனது சகலத்தையும் உரித்தாகத் தீர வேண்டிய தாயிற்று.

இன்று, வரதட்சணை அல்லது எதிர் ஜாமீன், ஆதி மரபுகள் சொச்சமிச்சமாக ஒட்டியிருந்த சமுதாயங்களிலும் பெண்ணின் மனித மதிப்பை அடியோடு துடைத்துவிட்டது. அது கர்ப் பத்திலிருக்கும் சிசுவை இனம் கண்டு அழிக்கும் அளவுக்கு நம்பிக்கை வேரையே தின்று கொண்டிருக்கிறது. கர்ப்பத்தில் வளரும் சிசு ஆணாக வலிமை பெற மந்திரங்கள் தோன்றிய அதர்வ வேத காலத்தில் தொடங்கி, இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலும், அந்தப் பெண்ணின் மனித மதிப்பு ஏறிவிடாமல் முழ முழமாய் சறுக்கி இன்று

அவளை வெறும் கூடாக்கி, அழிப்பதற்கும் தரும நியாயம் சொல்லும் அளவுக்கு வரதட்சணையை ஆணாதிக்கச் சமுதாயம் வளர்த்திருக்கிறது. இந்நாள் மக்கள் பெருக் கத்தினால் கூடிவரும் பிரச்சனைகளைத் தவிர்த்து மக்கள் சமுதாயத்தை வாழ வைக்க, தெருவுக்குத் தெரு கருச் சிசு, ஆணா, பெண்ணா என்றறிய சோதனை நிலையங்களை ஏற்படுத்திப் பெண் சிசுக்களை அழித்தாலே மக்கள் பெருக்கம் தடுக்கப்படலாம் என்ற மிக அருமையான கருத்துக்கள் நம் பெண்களிடையே கூட நிலவி வருகிறது!

இந்த நிலையில் வரதட்சணை ஒழிப்புக் கருத்தரங்குகள், பட்டி மன்றங்கள் வெறும் பொழுதுபோக்கு கலா நிகழ்ச்சிகளுக்கு மேல் எந்தச் சாதனையைச் செய்துவிடும்?

காசி யாத்திரைக்குக் கைத்தடி, குடை, செருப்பு, விரதத் துக்கு நூற்றெட்டு நெய் அதிரசம், அது வைக்க வெள்ளிக் கூடை (தங்க முலாம் பூசினால் உத்தமம்), கண்ணாடி, பட்டு, கன்னிகையைத் தானம் கொடுக்கும்போது, அந்த மாப்பிள் ளையை சாட்சாத் மகாவிஷ்ணுவாகப் (அல்லது பரமேசுவர னாக!) பாவித்து, தாய் நீர் வார்க்க; தந்தையானவர் காலைக் கழுவ, வெள்ளித்தட்டு என்று திருமண சடங்குகள் ஒவ்வொன்றும் பெண்ணைப் பெற்றவரிடம் இருந்து பொருள் கறக்க இடம் தருவதில் என்ன விந்தை இருக்கிறது?

திருமணச் சடங்குகள்... அவை என்ன சொல்கின்றன? பார்ப்போம்...

# 21. காதல் – சூதாட்டத் துருப்புச் சீட்டா?

**ந**மது புனைகதைகள், நாடகம், சினிமா, தொலைக்காட்சி வழிவரும் சமூக நாடகங்கள் எல்லாவற்றிலும், அடிக்கடி தவறாமல் வரும் காட்சியானாலும், அலுப்பூட்டும்படி புளித்துப்

போகாமல், அன்றுதான் புதிதாய்ப் பார்ப்பது போல் ஓர் ஆவலையும் ஐயப்பாட்டையும் தேக்கி, ஈர்க்கக்கூடிய செய்தி எது என்று கோடிட்டுக் காட்டச் சொன்னால்... ஒரே ஒரு செய்திதான் சட்டென்று நினைவில் முட்டி வரும்.

பெண் பார்க்கும் படலம்தான் அது. இப்போதெல்லாம் தொலைக்காட்சிச் சித்திரங்களில் பெண் தொடர்பான முன்னேற்றக் கருத்துக்களைச் சொல்வதற்குரிய ஒரு களம் என்ற வகையில் 'பெண் பார்க்கும்' நிகழ்ச்சிகளே, முதலிடம் பெருகின்றன. அவள் சிங்காரித்துக்கொள்வதும், இந்த ஒப்பனைகளில் தேற வேண்டுமே என்று, மிகப் பெரிய போட்டித் தேர்வில் வென்று, முதல் தர உத்யோகத் தகுதியைப் பெற்ற பெண்ணும் பலவீனத்துக்காளாவதும் இக்காட்சிகளில் இடம்பெற்றிரா விஷயங்களில்லை. "ஓ, பெண் கொண்டு வந்த காபி, பிரமாதம்" என்று பிள்ளையோ பிள்ளை வீட்டாரோ பாராட்ட, "எங்கள் பெண்ணே தயாரித்த காபி!" என்று தாயும் தந்தையும் பெருமைப்பட, பெண், பூபாரம் அழுத்த தலை குனிந்து, "எல்லாம், 'சிங்கம்' மார்க் காபித்தூளின் மகிமை!" என்று அசட்டுச் சிரிப்பு எட்டிப் பார்க்கச் சொல்வதும், இன்றைய நவீன தொலைக்காட்சி விளம்பர உத்திகள். சோப்பு, சீப்பு, பற்பசை, துணி ஈடான பல பயன்படு பொருள் களுக்குமேல், கடலைமாவு, சமையலெண்ணய் பிசுக்குப் போக்கும் தூள்வரை அத்தனை பொருள்களையும் இவ்வாறு பெண்ணுடன் சம்பந்தப்படுத்தி, அவளும் ஒரு பயன்படு பொருளே என்று அஃறிணைக் கூட்டத்தில் தள்ளப்படுவதை அவளே மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறாள். எனவே திருமணம் என்று வரும்போது ஒவ்வொரு பெண்ணும் காட்சிப் பொருளாகப் பரிசோதனைப் பொருளாக மாறும் ஓர் அவல நிகழ்ச்சி, முன் எந்தக் காலத்தைக் காட்டிலும் இந்நாட்களில் முக்கியமாக இடம் பெற்று இருக்கிறது. வீட்டில் மூத்த தலைமுறை ஆண்கள் மூன்றாம் தலைமுறைச் சிறுமிக்குத் திருமணம் நிச்சயித்த காலங்களில் இத்தகைய பரிசோதனைகள்

அவளைக் காட்சிப் பொருளாக்கியதில்லை. அந்தக் காலத்தில் அவள் எந்த உரிமையைப் பற்றியும் எந்த உணர்வும் இல்லாத வெறும் சடப்பொருள். கல்வி, அறிவு கிடையாது. கூண்டுக்குள் குருடாக்கி வளர்க்கப்பட்ட கிளி. பெண் பூப்பெய்திய பின்னரே திருமணம்; அதுவும் பிள்ளை வீட்டார் வந்து கேட்க வேண்டும் என்ற மரபுடைய சமுதாயங்களிலும் இத்தகைய 'பெண் பார்க்கும் படலம்' இருந்தாலும், இன்றைய இழிநிலை இருந்ததில்லை. பெண் 'ஆளான' நாளிலிருந்தே வெளி உலகுக்கும் அவளுக்கும் இடையே திரை விழுந்துவிடும். பெண் கேட்டு வரும் இடங்களில் இருந்து பெண் மக்களே பரிசோதனைக்கு வருவார்கள். அநேகமாக இத்தகைய சமுதாயங்களில் ஆணே தேடி வந்து பரிசம் போட்டு மணந்து கொள்ளும் முறை இருந்ததால், பெண்ணுக்குக் கடுகளவும் மதிப்பு இல்லாமல் போய்விடவில்லை.

இன்றோ, 'நாகரிகம்' வந்த நிலையில், சாதி மரபுகள் கட்டுப்பாடுகள் அநேகமாகத் தகர்ந்து, பூப்பெய்திய பின்னரே திருமணம் என்ற வழக்கு வந்துவிட்டது. திரைக்குப் பின் பெண்கள் கட்டிப் போடப்படுவதில்லை; பள்ளி, கல்லூரி என்று கல்வி பெறுவதும், பொது இடங்களில் பணியாற்றச் செல்வதும், பொருளாதாரம் சார்ந்து தன் காலால் நிற்கக் கூடிய நிலையை எய்தியிருப்பதும், கண்கூடு. அதுவுமின்றி, வயதுவந்த ஆணும் பெண்ணும் கலந்து பழகும் சந்தர்ப்பங்கள் பல இருக்கும் நிலையில், தாமாக ஒருவரை ஒருவர் விரும்பி மணம் செய்துகொள்ளும் அளவுக்கு முன்னேறி இருப்பதையும் பார்க்கிறோம். ஆனால் இந்தக் கட்டத்தில்தான் பெண்ணின் சுதந்திர நிலை பளிச்சென்ற ஒளியில் விழும் கருநிழலாக அவள் 'மதிப்பு' அழுத்தமாகப் புலப்படுகிறது.

வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதைகள், நாடகங்களில் சினிமாக்களில் அளவு மீறிப் பழகும் காதலர்களைக் காட்டுவார்கள். வயதுவந்த பின், பொருளாதார சுதந்திரம்

உள்ள நிலையில், இருவரும் ஓடிப் போய்த் திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதானே? அதுதான் நிகழாது.

ஆண் தீவிரம் காட்டுவதெல்லாம், அவளை அநுபவிக்கும் ஒரே 'த்ரில்'லுக்குத்தான். பெண் கட்டுப்பட்டுக் குட்டுப்பட்டே முதிர்ந்திருப்பவள் அல்லவா? சட்டென்று வேலியைத் தகர்த்துவிட மாட்டாள். எனவே, திருமணம் என்று நிர்ப்பந்தம் செய்வாள். வேலி தகர்ந்தாலும், இந்த வகையில் அவள்தான் பதை பதைத்துப் போவாள். தன் பெற்றோரை அவர்கள் வீட்டுக்கு அனுப்புவாள். இந்த வகையில் சங்க இலக்கியத்துத் தலைவன் தலைவி நிலையையும் கூடச் சொல்லலாம், தோழி வந்து, 'வரைவு கடாதலை' வலியுறுத்துவது ஏன்...

இப்போதுதான் உண்மையான சோதனைகள், இடுக்கிப் பிடிகள் எல்லாம் பெண்ணைத் தாக்குகின்றன. அவர்கள் கோரிய வரதட்சணை, சீர்வரிசை எல்லாவற்றுக்கும் பெண் வீட்டார் தலையசைத்து ஒப்ப வேண்டும். ஏனெனில் 'காதல்' என்ற ஒன்று குறுக்கிட்டுப் பெண்ணுக்குக் கரும்புள்ளி குத்திவிட்டதே? இந்தக் கட்டத்தில் அந்தப் பிள்ளையாண்டான், கயவன் என்று வெளிப்பட்டாலும்கூட, பெண்ணைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ளும் பெற்றோர் அபூர்வம்— அதுமட்டுமல்ல, பெண்ணே, தன் கற்பு உணர்வால் பின் நகர இடம் கொடுக்கமாட்டாள் — இத்தனையும் வந்தபின், அந்தப் பிள்ளையாண்டான், தன் உறவினர் குழாத்துடன் 'பெண் பார்க்க' வரும் நாடகத்தையும் அரங்கேற்றுகிறான்; பெண் வீட்டாரும் — ஏன் பெண்ணும் உடன்படுகிறாள். அவளைக் காட்சிப் பொருளாக்கிப் பேரம் நடக்கிறது. இங்கு 'காதல்' பிள்ளை வீட்டாருக்குத் துருப்புச் சீட்டாகப் பயன்படுகிறது.

"பெண் பார்ப்பதெல்லாம் எதற்கு?" என்று, இந்த நிலைக்கு வந்த பெண், கதைகளில், சினிமாக்களில்கூடக் கேட்கமாட்டாள்! இந்தப் பெண்பார்க்கும் படலம், இவ்வாறு எல்லாப் பொழுது போக்கு அம்சங்களிலும் திருப்பித் திருப்பி,

சாதி—மதப் பாகுபாடு இல்லாமல் சித்திரிக்கப் படுகிறது. ஓட்டலில், பார்ட்டியில், சினிமாவில் நாகரிக அறிமுகமாகப் பார்ப்பதும்கூட, அதிமாக வலியுறுத்தப் படுவதில்லை.

எந்தப் புடவை உடுத்திக்கொள்வது? அலுவலகத்தில் என்ன காரணம் சொல்லி அநுமதி கேட்பது? என்ன டிபன் செய்வது? எந்தப் பாட்டைப் பாடுவது? என்று ஓராயிரம் பிரச்னைகளில் பெண் நிம்மதி இழக்கும் நிலையும், இறுதியில், “ஊருக்குப் போய்க் கடிதம் எழுதித் தெரிவிக்கிறோம்” என்று சொல்லிவிட்டு மறக்காமல் வழிச் செலவுத் தொகையைப் பெற்றுக்கொண்டு செல்வதும், நாகரீகப் பரிமாணங்களாக மேவிவிட்டன.

இதற்கு உடன்படமாட்டேன் என்று சொல்லக்கூடிய பெண், தன் வாழ்நாளில் திருமணம் என்ற நிகழ்ச்சியையே காணாதவளாகி விடுவோமோ என்று அஞ்சுகிறாள்.

இவ்வாறு பெண்ணைப் பொறுக்க, தேர்ந்தெடுக்க மணமகனுக்கு உரிமை இருப்பதுபோல் அவளுக்கு ஏன் தன் துணைவனைத் தேர்ந்துகொள்ளும் உரிமை இல்லாமல் போகிறது? பெண் எப்போது இவ்வகையில் ஒரு காட்சிப் பொருள் நிலைக்கு இழிந்தாள்?

பின்னோக்கிப் பார்த்தால், வேத முறைகளைப் பின் பற்றித் தோன்றிய, தரும சூத்திரங்கள் நெறிப்படுத்தப்பட்ட பின்னரே, பெண்ணின் சார்பு நிலை கட்டாயமாக வலி யுறுத்தப்பட்டதென்று காண்கிறோம்.

பெற்றோர் மகளுக்கு மணமகனைத் தேர்ந்தெடுக்கையில், அறிந்த குடும்பத்தினராக, குலம், கோத்திரம் உகந்ததாக இருக்கவேண்டும் என்ற கருத்து மட்டும் குறிப்பாகிறது. ஏன்? அரசகுடும்பச் சுயம்வரங்களிலும் கூட, பெரும்பாலும், பெண் தனக்கு விருப்பமானவனைத் தேர்ந்தாள் என்பது, ‘நள—தமயந்தி’ கதை தவிர வேறு வரலாறுகளில் காணப்பட

வில்லை. ஆனால், மணமகன் ஒரு பெண்ணைத் தேர்ந்து கொள்ளச் சில விதிமுறைகள் நெறிப்படுத்தப் பட்டிருக் கின்றன.

தருமசூத்திரங்களில் காணப்படும் ஒரு முறை—

வெவ்வேறு இடங்களில் இருந்து, கொண்டுவரப்பட்ட மண்களைத் தனித்தனி உருண்டைகளாக்கி— (எட்டு உருண்டைகள்) வைத்திருப்பார்கள். திருமணத்துக்குரிய பெண், ஓர் உருண்டையை எடுத்து வர ஏவப்படுவாள்.

இந்த மண் உருண்டைகள், ஒவ்வொன்றும் ஒவ்வோர் இடத்திலிருந்து கொண்டுவரப் பட்டிருக்கும்.

1. இருபோகம் விளையும் வயல்
2. மாட்டுக் கொட்டில்
3. வேள்விச் சாலை
4. வற்றாத ஏரி
5. சூதாடும் இடம்
6. நாற்சந்தி
7. வறண்ட நிலம்
8. சுடுகாடு

பெண் இருபோகம் விளையும் வயல் மண்ணை எடுத்து வந்தால், அவள் வரும் வீட்டில் தானியங்கள் கொழிக்கும் பெண்ணைக் கொள்ளலாம். மாட்டுக் கொட்டில் மண்ணைக் கொண்டு வந்தால் கன்று காலிகள் செழித்து, பால்வளம் பெருகும், பெண்ணைக் கொள்ளலாம். வேள்விச் சாலை மண் அவள் கையிலேறினால், அவள் தெய்வீக அருள் பெறுவாள். வற்றாத ஏரி மண்ணை எடுத்து வந்தால் அவள் தொட்டது துலங்கும்; தவிர்க்க வேண்டாம், சூதாடும் இடத்து மண்ணை எடுத்து விட்டால், அவளுக்கும் அத்தகைய இயல்பு

வருவதாக இருக்கும். இதனால் இந்தப் பெண் கொள்வதற் குரியவள் அல்ல. நாற்சந்தி மண்ணைக் கொண்டு வருபவள், அலைபாயும் மனதுடையவளாக இருப்பாள். இவளும் தவிர்க்க வேண்டியவளாகிறாள். வறண்ட பாலை மண்ணை எடுத்து வருபவள்தரித்திரத்தைக் கொண்டு வருவாள்; அதனால் இவள் வேண்டாம். சுடுகாட்டு மண் அவள் கைகளில் ஏறுமானால், அந்தோ, இவள் கொண்டவனுக்கு யமனாவாள்! இவள் மிதிக்கும் மண்ணே தகாதது. இந்த மண்ணுருண்டைகள், அவளுடைய மண வாழ்வை நிர்ண யிப்பது போன்று, கணவனைத் தேர்ந்தெடுக்க அவளுக்கு எந்த ஒரு வழியும் இல்லாமலாகிறது. இதே மண்ணுருண்டைப் பரிசோதனையை அவனுக்கு அவள் வைக்க முடியுமா?

தேர்ந்தெடுக்கும் உரிமை காலம் காலமாக அவனுக்கே இருந்து வருகிறது. நீர் நிறைந்த குடத்தை இடுப்பிலேற்றி வரச் செய்தல்; சுண்ணாம்பு கொண்டு வரச் சொல்லல் என்ற பரிசோதனைகள் இருந்த இடத்தில், பாடத் தெரியுமா, ஆடத் தெரியுமா, ஆங்கிலம் பேச வருமா என்ற வினாக்கள் எழுந்தன இக்காலத்தில். வங்கியில் அல்லது வேறு இடங்களில் நிரந்தரச் சம்பளத்தில் வேலை செய்பவளாக, குடும்பப் பாங்கானவளாக, அடக்கமுள்ளவளாக என்ற விதி முறைகள் வீசப்படுகின்றன.

அக்காலத்தில், திருமணம் என்பது, ஆணுக்கு எல்லா வசதிகளையும் கொடுக்கக்கூடியவளாக, அதே வம்சம் விளங்க ஆண் மக்களைப் பெற்றுத் தருபவளாக ஒரு பெண்ணைத் தன் ஆளுகைக்குக் கொண்டு வரும் சடங்காகத்தான் இருந்தது என்றால் தவறில்லை.

பெண்ணின் அறிவைக் காட்டிலும், அவள் உடலமைப்பும், மென்மையான குணங்களுமே வேட்கப்பட்டன.

பிறிதொரு இடத்தில், "நன்னடத்தையும், அளவான அவயவங்களின் இசைவும், மென்மையான கூந்தலின் இரு

சுருண்ட பிரிகள் வலதுபுறக் கழுத்தில் நீண்டு இருக்கும் படியுமான பெண்ணின் கையைப் பற்றும் ஆணுக்கு அவளால் மகிழ்ச்சி உண்டு; சந்ததி விளங்கும். கையைப் பற்றும்போது, அவளுடைய கட்டைவிரலைத் தன் பிடிக்குள் வைத்துக் கொள்ளும்படி பற்ற வேண்டும். ஆறு ஆண்மக்களை இவள் பெற்றுத் தருவாள்" என்று காணப்படுகிறது.

ருக் வேதத்தில், ஆதிப் பகுதிகளில், பெண் குழந்தைகளை விரும்பாத நோக்கு எதுவும் புலப்படவில்லை. ஆனால் அதர்வ வேதத்தில், கருவில் இருக்கும் பிண்டம் ஆணாக இருக்க வேண்டும், பெண்ணாக இருக்கலாகாது என்று வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனை இடம் பெறுகிறது.

பிள்ளை இல்லையே என்ற குறை தீர்க்க வேண்டும் பிரார்த்தனைகளிலெல்லாம், 'ஆண் மகவு பிறக்கட்டும்' என்ற வேண்டுதலையே மேலேங்கி நிற்கிறது...

திருமண நோக்கமே இதுதான்... ஆண்பிள்ளைகளை அவள் பெற வேண்டும்!

# 22. சுமங்கலியும்-பத்துப் புத்திரர்களும்

*"ஸுமங்கலி ரியம் வதூரிமாம் ஸமேத பச்யத,*
*ஸௌபாக்ய மஸ்யை தத்வாயா யாஸ்தம் விபரேதன!"*
*"தசாஸ்யாம் புத்ரானாம் தேஹி! பதிம் ஏகாதசம்க்ருதி!"*
*விவாஹ மஹோத்ஸவத்திலே... மகா ராஜ ராஜ ஸ்ரீ...*

அவர்கள் ஆசீர்வாதம், பெண்ணுக்கு லட்சம் கட்டி வராகன்... பட்டுப் புடவை, பட்டு ரவிக்கை... (அல்லது பிரஷர்

குக்கர், மிக்ஸி போன்ற நவீன சமையலறைச் சாதனம், அல்லது ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய உறையாகவும் இருக்கலாம்.)

'மொய் வைத்தல்' என்று சாதாரணமாகக் குறிக்கப்படும் (முக்கியமான!) கல்யாணச் சடங்கை, பிரும்ம, அல்லது வேத விதிப்படி செய்வதான இந்து திருமணச் சடங்குகளில் 'ஆசீர்வாதம்' என்று கௌரவமாகக் குறிக்கிறார்கள். இந்த ஆசீர்வாதச் சடங்கில், புரோகிதர் மேற்கூறிய மந்திரங்களை ஓதி, மணமகளுக்கான பரிசுகளை வழங்குவது இன்றளவும் வழக்கில் உள்ளது. வேத விதிப்படி என்று ஒழுங்கு செய்யப் பட்ட பழைய நாளையத் திருமணங்களில் நான்கு நாட்கள், புதிய தம்பதி தொடர்ந்து தீ வளர்த்துப் பேணி இல்லறத்தான் என்று பழைய கால ஒழுக்கத்தில் புகுந்ததற்கு அடையாளமாகச் சடங்கு செய்வார்கள். ஐந்தாம் நாள் இறுதியாக 'ஓமம்' செய்தபின், இந்த ஆசீர்வாதச் சடங்கு நிகழும். அப்போது வேத வாசகங்களால் மணமகளையும் மணமகனையும் அந்தணர் பலர் கூடி ஆசீர்வதிப்பது வழக்கம்.

ஆனால் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, இந்நாட்களில் பழைய சடங்குகள் வெறும் சின்னங்களாகப் போக, (அல்லது பொருளற்ற கேலிக் கூத்துகளாகிப் போக) புதிய சடங்குகள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

நிழற் படங்களுக்காக வீடியோ காட்சிகள் எடுப்பதற்காக, தாலி கட்டும் சடங்கு முதல் மீட்டும் மீட்டும் ஒழுங்கு செய்யப்படுகிறது. ரிசப்ஷன், லைட் மியூஸிக் என்ற நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் பெற்று, தீ வளர்த்தல், ஆசீர்வாதம் என்ற அம்சங்களைச் சுருக்கச் சடங்குகளாக்கி, முகூர்த்தம் நிகழ்ந்த கையுடனே முன் தள்ளி, மணமகனையும், மணமகளையும் வைதீகக் காப்புத் தளையில் இருந்து விடுவித்துவிடுகின்றன.

எனவே, இன்றைய பல இலட்சக்கணக்கான வேத விவாகங்கள் எனப்பெறும் சடங்குகள், முழுதுமே கேலிக்

கூத்தாகக் கொள்ளும்படி முக்கியத்துவம் இழந்துவிட்டன. இது எந்த அளவில் மணமகனையும் மணமகளையும் ஆன்மீக ரீதியாகப் பிணிக்கிறது என்பது ஐயத்துக்குரியது.

ஆனால், இந்த மந்திர வாசகங்கள், சில சடங்குகள், புரோகித வருக்கத்தைக் காப்பாற்றுவது போல், கேலிக் கூத்தான நிலையிலும் பொருள் பிரித்துக் காண மனமின்றி, கெட்டியாகப் பற்றிக்கொண்டு, அந்தப் பிடியின் மாயையில் பெண்ணின் அறிவைக் குழப்பும் செயலைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றன.

"ஸுமங்கலி ரியம் வதூ" என்று தொடங்கும் முதல் இரண்டு வரி வாசகமும், மிக மிகத் தொன்மையான ருக் வேதப் பாடல்களில் காணப்படுபவை. தூர்யா என்ற மணமகளுக்கும், ஸோமா என்ற மணமகனுக்கும் நிகழ்வதாகக் கற்பிக்கப்பட்ட திருமணத்தில் கூறப்படும் மொழிகளாகும். சொல்லப் போனால், ருக்வேத கால மகளிரின் சமுதாய நிலை, திருமணம் போன்ற விவரங்களைப் பற்றிய சான்றுகளை, இத்தகைய பாடல்களின் வாயிலாகவே அறிகிறோம்.

மேற்கூறிய 'வாழ்த்து' வாசகம் இடம்பெறும் நிகழ்ச்சி— திருமணம். மணமகள் தன் மணாளனின் கரம் பற்ற, அலங்கரித்துக் கொண்டு, சான்றோர் பெருமக்கள் நிறைந் திருக்கும் அவைக்கு வருகிறாள். முதல் இரண்டு வரிகளான 'ஸுமங்கலி ரியம் வதூ ரிமாம் ஸமேத பச்யத ஸௌபாக்ய மஸ்யை தத்வாயா யாஸ்தாம் விபரேதன" என்ற மொழிகளின் பொருள், 'எல்லா மங்கலங்களும் பொருந்திய இந்த மணப் பெண்ணைப் பாருங்கள்! நீங்கள் யாவரும், இவளுக்கு எல்லாப் பேறுகளும் இசையட்டும் என்று வாழ்த்தி விடை பெற்றுச் செல்லுங்கள்!" என்பதாகும்.

இங்கு காணப்பெறும் 'ஸுமங்கலி' என்ற சொல்லை முதலில் நாம் பார்க்கலாம்.

இந்நாளில் இச்சொல், பெண்ணின் தாலி, பூ, பொட்டு, சேலைக்கட்டு என்ற புறச் சாதனங்களையே குறிப்பாக்குகிறது. ஆனால் உண்மையில், இச்சொல், நல்ல மங்கலங்களை உடைய பெண்—அதாவது, உடல் பலமாக, ஒரு புருஷனைக் கூடி, மக்களைப் பெறக்கூடிய இளமையும், அதற்குரிய முழு வளர்ச்சியும், இயல்புகளும் பெற்றவள் என்ற பொருளையே குறிப்பாக்குகிறது. இது, பிற்காலத்தில் வலி யுறுத்தப் பெறும் 'கட்டுக் கழுத்தி' என்ற நிலைக்கு முன்பாக—திருமணமாகு முன்னரே ஒரு பெண்ணைக் குறிக்கும் சொல்லாக வருகிறது. இவள் ஆரோக்கியமுள்ளவளாக, இளமையும் எழிலும் கூடியவளாக, மணவாழ்வை மகிழ்வோடு ஏற்கும் எதிர்பார்ப்பும் ஆவலும் உடையவளாக, நல்ல அதிர்ஷ்டம் கூடியவளாகக் காணப்படுகிறாள். ("வதூ" என்று குறிக்கப் பெறுவதால் இந்த மணமகள் என்று கொள்ளலாம்) இவளுக்கு எல்லா நற்பேறுகளும் இசையட்டும் என்று நீங்கள் வாழ்த்திவிட்டு உங்கள் இல்லங்களுக்குத் திரும்புங்கள் என்ற வாசகங்களையே நாம் இங்கு காண்கிறோம்.

இந்தத் திருமண வாசகங்கள் அடங்கிய பாடல்களில், தாலிக்கட்டோ, குங்குமத் தீற்றலோ, சேலை கொடுத்தலோ, மோதிரம் மாற்றலோ போன்ற எந்தச் சடங்கும் காணப் படவில்லை. ஸவிதாவின் மகளான சூரியா, ஸோமனாகிய மணாளன் கைத்தலம் பற்றித் தேரேறி அவனுடைய இல்லத்துக்கு வருகிறாள்.

(இது சூரியனின் கதிர்கள் சோமனாகிய சந்திரனில் கலந்து ஒளியூட்டும் ஒரு இயற்கை நிகழ்வின் வருணனை என்றுகூடக் கொள்ளலாம்.)

இவ்வாறு இவள் புறப்படுமுன், சான்றோர் வாழ்த்தி ஆசி கூறிவிட்டுத் திரும்பிவிடுவார்கள். இன்றைய ஆசீர்வாதத்தின் முதல் இரண்டு வரிகளின் பொருளும் இடமும் இவையே.

ஆனால், இன்றைய ஆசீர்வாதங்களில் அடுத்ததாகக் காணப்பெறும் இறுதி வரி, "தசாஸ்யாம் புத்ரானாம் தேஹி: பதிம் ஏகாதசம் ஜருதி!" என்பதாகும்.

இதன் பொருள் பத்துப் புதல்வர்களை இந்தக் கணவனுக்குப் பெற்றுத் தருவாயாக! பின்னர், இக்கணவனையே பதினோராவது புதல்வனாகக் கொள்வாய்!"

இந்த வாசகம், உண்மையில், மணப்பெண், மணமகனின் இல்லத்துக்கு முன்வந்து இறங்கியதும் அவளைப் பலவாறாக வாழ்த்தும் வாசகங்களில் வருகிறது. "இந்த இல்லத்தின் அரசிபோல் நீ எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வாய்; இந்த இல்லம், இதன் நாயகனான உன் கணவன், மற்றும் அவனுடைய உறவு சார்ந்த குடும்பத்தினர், கன்று காலிகள், என்று எல்லோருடனும் பொறுப்பை நிருவகித்து, அன்பால் பேணி ஆள்வாய் என்ற வாழ்த்துரையோடு, பத்துப் புதல்வர்களை இக்கணவனுக்குப் பெற்றுத் தருவாய்; பின்பு பதினோராவது...உன் கணவனையே புதல்வனாகக் கொண்டு நலம் பேணுவாய்!" என்று முடிக்கப் பெறுகிறது.

வேதகாலத்து வாழ்த்தே 'நூறாகப் பெருகட்டும்' என்ற மொழியாக இருந்திருக்கிறது. நூறு என்ற சொல்லே மிக அதிகமான எண்ணிக்கை என்ற பொருளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப் பெறுவதாக நான் நினைப்பதுண்டு. இன்றும் நமது வழக்கு மொழிகளில் "நூறுதரம் படித்துப் படித்துச் சொன்னேன்; கேட்கவில்லை" என்றோ, "ஒரு நூறு நடை நடந்தேன். பணம் பெயரவில்லை" என்றோ, 'நூறு' என்ற சொல்லை நாம் பயன்படுத்துகிறோம் ('துரியோதனாதியர் நூறு பேர்' என்பதும் அப்படித்தான் வழக்கில் வந்திருக்கும். ஒரு பெண் நூறு மக்களைப் பெற முடியுமா? என்று நினைத்ததுண்டு. அண்மையில், இந்த நூறு புதல்வர் உண்மையை நிலைநாட்ட, ஒரு தமிழ் தொலைக்காட்சி நாடகப் பாத்திரம், நூறு பேருடைய பெயர்கள் ஒப்புவிக்கக் கேட்டேன்!)

சாவித்திரி தன் பெற்றோருக்கு நூறு புத்திரர்கள் பெற வரங் கேட்டதாகச் சொல்வதுண்டு.

"அப்படி நூறு என்பது வாழ்த்துச் சொல்லாக இருந்த காலத்தில், அது வழக்கு வாழ்த்துத்தான். உண்மையில் பத்துப் புதல்வர்களுக்கு மேல், நீ ஒரு வாழ்க்கையில் சுமக்க வேண்டாம். ஏனெனில் நீ வாழ்நாள் முழுவதும் கணவனைப் பேணிக் காக்க வேண்டும். இதனால் பத்துக்கு மேல் பதினோராவது மைந்தன் கணவனே என்று வைத்துக்கொள் என்று குடும்பக் கட்டுப்பாடு அறிவுறுத்தப் பெறுகிறது. "உன் கணவன் முதுமை நிலை அடைந்துவிட்டான் என்று அலட்சியம் செய்துவிடாதே! அவனையே புதல்வனைப் பேணுவது போன்ற வாஞ்சையுடன் பாதுகாத்து வா!" என்றும் மறைமுகமாக வற்புறுத்துகிறது இப்பாடல் அடிகள்.

ஆக, இந்த மூன்று வரிகளையும், ருக் வேத காலத்திலிருந்து திருமண மந்திரங்களில் வைத்து இன்றளவும் சொல்லும் முறை வழக்கில் வந்திருக்கிறது.

இந்த வழக்கு, ஒருவகையில் குருட்டுத்தனமாகவும், முட்டாள்தனமாகவும், கருதும்படியும் தொடர்ந்து வருகிறது.

ஒரு சமயம், தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டப் பகுதியில் ஒரு புராதன முருகன் கோயிலில் குருக்கள் நிறைந்த ஈடுபாட்டுடன் கணீரென்ற குரலில் முருகனின் திருநாமங் களைக் கூறி, வழிபடுபவர் மனமொன்றித் துதிக்கும் வண்ணம் அர்ச்சனை செய்ததைக் கேட்டேன். பிரசாதத் தேங்காய் மூடித் தட்டை, என்னிடம் கொடுக்கையில் அவர் மொழிந்த ஆசி மொழிகள் ஒரு கணம் என்னை அதிர்ச்சியுறச் செய்தது.

"தசாஸ்யாம் புத்ரானாம் தேஹி! பதிம் ஏகாதசம் க்ருதி" என்ற வாசகத்தைக் கேட்டால் பின் எப்படி இருக்கும்?

இதையேனும் ஓரளவு சீரணித்துக் கொள்ளலாம்.

என் நெருங்கிய உறவினர். கணவன் முகத்தை நன்றாகப் பார்த்தறியாத குழந்தைக் கைம் பெண்ணாக வாழ்க்கையைத் தொடங்கி, சகோதரர்களின் ஆதரவில் வாழ்ந்தவர். அவருடைய அந்தச் சகோதரருக்கும் மனையாளில்லை. இந்த அம்மையார் ஆண்டுதோறும் தன் கணவனுக்குப் பிதிர்க் கடன் ஆற்ற 'திதி' கொடுப்பார். அவருக்குத்தான் முப்புரி நூல் கிடையாதே? எனவே, தம்பி, அவள் கைத்தருப்பத்தை வாங்கி, அந்தக் கடனைச் செய்வான். அந்த அம்மை தனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து 'திவசம்' செய்து வந்திருப்பவளாக இருக்கும். ஏன்? கல்யாணம் என்ற ஒன்றின் பலனே, அவளை முண்டனம் செய்து அலங்கோலப்படுத்துவதற்கும், இறந்தவனுக்குச் சிரத்தையாக இத்தகைய நீர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கும் என்றே முடிந்திருக்கிறது.

அத்தகையதொரு திதி நாட் சடங்குகளை நான் நேரில் காணும் சந்தர்ப்பம் ஒரு சமயம் வாய்த்தது. அப்போது அவருக்கு எழுபத்தைந்து வயதிருக்கலாம். சகோதரனும் அறுபதைக் கடந்தவர்—சடங்குகள் முடிந்த பின் இறுதியில் மங்கள வாசகம் கூறிப் புரோகிதர் முடிக்கையில், "தசாஸ்யாம் புத்ரானாம் தேஹி' பதிம் ஏகாதசம் க்ருதி!" என்றாரே பார்க்க வேண்டும்!

நான் நிச்சயமாக என் செவிகளையே நம்பவில்லை. ஆனால், புரோகிதர் அதே சொற்களைத்தாம் சொன்னார்.

அவளுக்கும் புருஷனில்லை; தம்பிக்கும் மனைவியில்லை. (இறந்துபோய் இருந்தாள்) பின் இந்த ஆசி மொழிகளின் பொருள் என்ன?

என்னுள் இந்த முரண்பாடுகள் புழுவாகக் குடைய லாயிற்று.

வைதீக சம்பந்தமாக நடைபெறும் எந்த நிகழ்ச்சிகளிலும், மங்கள, அசுப, அல்லது தெய்வீகமான சமயம் சார்ந்த எந்தக் கூட்டத்திலும், பெண் வருக்கத்துக்கு என்ற இரண்டாம்

பட்சநிலை, தனித்து ஒதுக்கப்பட்டிருப்பதை உணர முடியும். சமய குரு, அல்லது ஆசாரியர், இந்த ஸ்த்ரீ வருக்கம்—பூணூல் போடத் தகுதியற்ற வருக்கம் பிழைத்துப் போகட்டும் என்று கருணை கூர்ந்து 'தீர்த்தம்' கொடுத்து ஆசி வழங்குவார். இந்த வருக்கத்தினர், தாழ்த்தப்பட்ட கௌவரவ அடிமைக் கூட்டம். எவ்வளவுக்கு மிகுதியாகக் கூடுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் சமய குரவர்களின் கருணாவிலாசமும், புகழும் பெருகுகின்றன. இவர்களைக் கவருவதற்கே, திருவிளக்குப் பூசை, மாங்கிலியச்சரடு, உற்சவம் என்பது போன்ற சடங்குகள். பெருமளவில் இந்நாள் நிகழ்கின்றன. சமய குரவர்கள் சந்தேக விளக்கங்கள் கூறி அறிவார்ந்த பெண்களையும் தங்கள் ஆளுகைகளை விட்டுப் போக விழிப்புணர்வு பெற்றுவிடாமல் ஆட்கொள்கிறார்கள்.

"சுவாமிகளே, நவராத்திரி ஒன்பது நாட்களும் ஏன் தைக்கக் கூடாது என்று சொல்கிறார்கள்? ஊசியில் அம்பாள் தவமிருப்பது மெய்தானா?" என்று கேட்கும் பெண், குறைந்த பட்சம் ஒரு பி.எஸ்ஸி, அல்லது எம்.எஸ்ஸியாக இருக்கலாம். அவளுடைய விஞ்ஞான அறிவு, சுவாமிகளிடம் சந்தேக விளக்கம் கேட்கும் ஒரு பயனைக் கொண்டு வந்திருக்கிறது. "...அப்படிச் சொல்றது, சம்பிரதாயந்தான். நவராத்திரி ஒன்பது நாட்கள் விசேஷ நாட்கள், பெண்களுக்கு. ஊசி எடுத்துத் தைத்து, கைகளில் குத்தி, இரத்தம் வந்தால் மனச்சஞ்சலம் உண்டாகும். இதெல்லாம் எதற்கு? அதனால்தான், பெரியவர்கள், தைக்கக்கூடாது என்று ஒரு சம்பிரதாயம் வைத்திருக்கிறார்கள்..." திருவருட் புன்னகை சந்தேக விளக்கமாக மலருகிறது.

பெண்களுக்கு, சமயச் சடங்குகள், அல்லது தானாகச் செய்யக்கூடிய, தெய்வ வழிபாட்டு உரிமையும்கூட, ஒருவகையில் மறுக்கப்பட்டிருந்தாலும், ஆண்கள் கூடிச் செய்யும் எந்தச் சடங்குக்கும் வேண்டிய எல்லாப் பணிகளையும் பெண்கள்

செய்ய வேண்டும். இடம் துப்புரவு செய்து, கோலமிட்டு, பொருட்களைச் சுத்தமாக்கி வைத்து, கடினமாக உடலுழைப்புப் பணியை அவளே செய்ய வேண்டும். அத்துடன், அவளுடைய பங்கேற்பாக, ஒரு சில சலுகைகள் அனுமதிக்கப்பட்டிருந்தன.

குடும்பப் பெண்களுக்கு முறையான கல்வியும் கலைப் பயிற்சியும் மறுக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களாகச் சமையலறை எல்லைக்குள், சில தோத்திரங்களும் பாடல்களும் பாடுவதற்கு அநுமதிக்கப் பெற்றிருந்தார்கள். வாழ்க்கையே முடக்கப்பட்ட நிலையில் மூலையில் இருந்த சில பெண்கள் அவர்கள் எல்லைக்குள் மீனாட்சியம்மன் கல்யாணம், பார்வதியம்மன் சோபனம் என்று பாடல்களைப் பாடி ஆறுதல் பெற்றிருக்கிறார்கள். இந்தப் பாட்டுத் திறனுடன் ஒருத்தி சுமங்கலியாக, (கட்டுக்கழுத்தியாக) இருந்தால் அவளுக்குத் திருமணம் போன்ற 'சுப' நிகழ்ச்சிகளில் ஒரு பெருமை கூடும்.

வேத வாசகங்கள், மேள தாளங்களுக்கிடையே புரோகிதரின் குரல் ஒலிக்கும். "பெண்கள் பாடட்டும், கௌரி கல்யாணம் பாடட்டும்!" இந்த அடிமை வருக்கத்தினரின் குரல், மங்கள ஒலி என்ற மினுக்கைப் பெற்று, அவையில் ஒலிக்கப் பெறும் சலுகை!

இது திருமண விழாவுக்கு மட்டுமல்ல புதுமனை புகுவிழாவோ, காதுகுத்துக் கல்யாணமோ, பூணூல் சடங்கோ, ஆண் குழந்தையின் 'அட்சராப்பியாச' விழாவோ, எதுவானாலும் "பெண்கள் பாடட்டும்...! 'கௌரி கல்யாணம்' பாடட்டும்!" என்ற ஆணை வரும்.

எங்கோ மூலையில் இருந்து சுருதி இராகம் என்ற எந்த ஒழுங்கான பயிற்சியும் இல்லாத கிழக்குரல் ஒன்று ஒலிக்கும்.

*"கௌரி கல்யாணமே வைபோகமே!*
*வசுதேவகுல பால அசுரகுல காலா*

*சசிவதன ருக்மணி சத்ய பாமா லோலா*
*கௌரி கல்யாணம்...''*

என்று சைவ வைணவ ஒருமைப்பாட்டை நிலைநாட்டும் பெண்களின் இந்தப் பாட்டு வெறும் மங்கள வாசகம் என்று எனக்குத் தெரியும். ஆனால் சர்வகனம் பொருந்திய புரோகிதர், குருமார்கள் வேத வாசகங்களைச் சொல்லும்போது இவ்வாறு முரண்பாடு வருமா?

ஒருகால் இந்த இரண்டாம் பட்சப் பெண் ஜன்மத்துக்கு வேத வாக்கியத்தின் கன பரிமாணங்கள் புரியவில்லையோ? இதை நன்கு உணர்ந்த ஒரு பெரியவரிடம் கேட்க வேண்டும் என்று சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்தேன்.

ஏனெனில் இந்த மாதிரியான கேட்கக்கூடாத அஞ்ஞான சந்தேகங்கள் கேட்பதே பாவமாயிற்றே! "பெண்ணாய்ப் பிறந்துவிட்டு, வேத வாசகத்துக்கு நீ சந்தேகம் கேட்கிறாய்!" என்ற அம்புதான் பாய்ந்து வரும்.

எனவே, சந்தர்ப்பத்திற்குக் காத்திருந்தேன் வாய்த்தது. வேதம் ஓதி உணர்ந்த முதிய புரோகிதர்; வாழ்க்கையின் நடப்பியல், உண்மை இரண்டையும் புரிந்துகொண்டவர். என்னிடம் பெருமதிப்பு உடையவர். அவர் கூறினார்:

"உங்கள் சந்தேகம் சரிதானம்மா. இதில் அறிந்தவர் எவருமே இல்லை. அரைகுறைகள், அறியாமை தான் அதிகம். வேத வாசகங்கள் உச்சரிப்பு ஒலிகளினால்தான் முக்கியத்துவம் பெறுகின்றன. பிழைப்புக்காக, கிளிப்பிள்ளை போல் சில வாசகங்களைச் சொல்லிச் சொல்லி உருப்போட்ட பின் புரோகிதம் செய்கிறார்கள். பொருளைப்பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? சமூக மதிப்பு இல்லாத இந்தப் புரோகிதத் தொழிலுக்கு யார் வருகிறார்கள்? வேறு கல்வி பயில முடியாதவர்கள் புத்தியும் சக்தியும் இல்லாத வயிற்றுக்கில்லாப் பிள்ளைகளை, பிழைப்பும் சாப்பாடும்

இலவசம் என்று இந்த நிறுவனத்தை ஆதரிக்கும் பெரியவர்கள் இழுத்துப் போடுகிறார்கள். எந்தச் சொல்லைச் சொன்னால் அது உச்சரிப்புப் பிழையினால் தவறான விபரீதப் பொருளாகக் கூர்மை பெறாதோ, அதையே மங்கள வாசகமாகச் சொல்லப் பழக்கப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வளவுதான். நிச்சயமாக, அது எந்த சந்தர்ப்பத்துக்கும் பொருந்தாத சரியில்லாத வாசகம்தான்!'' என்றார்.

ஆக, இந்த வேத வாசக விஷயமும் பெண்களின் கல்யாணப் பாட்டுப் போன்ற வெறும் 'மங்கள வாசகம்'தான் என்று புரிந்தது.

ஆக, ருக்வேதப் பாடலில் காணும் 'சுமங்கலி' என்ற சொல்லுக்கு இன்றைக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் புனைவுகள் சிறிதும் பொருந்தா. இவள், தாலி, மெட்டி, மஞ்சள், குங்குமம் முதலிய புறச் சின்னங்களால் உருவாக்கப்பட்டவள் அல்ல.

கணவன் வீட்டுப் பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றக்கூடிய, கன்றுகாலிகளை, மாமன்மாமி, சுற்றத்தார் அனைவரையும் பேணி, அன்பையும் வன்மையையும் பெருக்குபவளாக, கணவனுக்குகந்த திடமான பெண்மணியாகப் பத்துப் புதல்வர்களைப் பெற்று, முதிய வயதிலும் அவனுக்குப் பணிவிடை செய்யக்கூடிய ஆரோக்கியத்தையும் பெற்றிருப்பவள்—இவளே சுமங்கலி. இந்த மங்கலங்கள் பொருந்தியவள் 'வது' என்ற மணமகளாகிறாள்.

# 23. சப்த பதித் தோழமை

'திரிசங்கு சொர்க்கம்' என்ற சொற்றொடர்...அங்குமில்லை. இங்குமில்லை என்ற இரண்டுங்கெட்டான் நிலையை அறிவுறுத்துவதுடன், திரிசங்கு என்ற மன்னனின் பெயரையும்

சிரஞ்சீவியாக்கியிருக்கிறது. இவன் பூத உடலுடன் சொர்க்கம் செல்ல விரும்ப இவள்மீது அளவற்ற அபிமானம் கொண்ட குரு விசுவாமித்திரர், இவனுக்காக ஒரு சொர்க்கத்தையே நிறுவினாராம். இவள் நிலை அங்குமில்லை இங்குமில்லை என்ற தனித்துவம் பெற்றது.

இந்தத் திரிசங்குவின் ஆதிப் பெயர் சத்யவிரதன் என்று தெரிகிறது. இவருடைய தந்தையாகிய மாமன்னனும், குருவாகிய வசிஷ்டமாமுனியும் நெருங்கிய நண்பர்கள். அரசகுமாரன் சத்தியவிரதன், நகரில் உள்ள ஓர் இளம் பெண்ணைக் கண்டு மையல் கொண்டான். அவளைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றான். அந்த இளம்பெண், மணமானவள். இன்னொருவனின் மனைவியை விரும்பிய துடன் மட்டுமின்றி, அவளைக் கவர்ந்து சென்றது குற்றம் என்று அவளை நாடு கடத்தினான் தந்தை. ஆனால் சத்யவிரதன், அவள் மாற்றான் மனைவியாகித் தீர்ந்து விடவில்லை; ஏனெனில் அவள் சப்தபதிச் சடங்கு நிறைவேறு முன் அதாவது மந்திரத்தின் கடைசி அடியைச் சொல்லுமுன் அவளைக் கொண்டுவந்ததால், தண்டனைக்குரிய குற்றத்தைத் தான் செய்துவிடவில்லை என்று வாதாடினான். இது வசிட்ட முனி அறிந்த நீதிதானே? அவர் இவனுக்காகப் பரிந்துரை செய்யாமல் வாளா இருந்தது கண்டு சத்யவிரதன் கடுங் கோபமுற்றான். விசுவாமித்திரர் கடுந்தவசில் ஆழ்ந்த அச்சம யத்தில் அவர் மக்கள் வறுமையினால் வருந்த சத்யவிரதன் கானகத்தில் அவர்களைக் காப்பாற்றி, விசுவாமித்திரரின் மட்டற்ற அபிமானத்துக்கு உரியவனானதாகப் புராண வரலாறு தொடருகிறது. இவன் மூன்று பாவங்களைச் செய்த தால் 'திரிசங்கு' என்ற பெயர் பெற்றதாகவும் குறிப்பிடப் படுகிறது.

இந்த வரலாற்று, முக்கியமாக 'சப்தபதி' என்ற திருமணச் சடங்கைப் பற்றிய விபரம் காண்கிறோம். ஓமத்தீயைச் சுற்றி

மணமகனும் தத்தம் ஆடைகள் முடிச்சால் பிணிக்கப்பட்ட நிலையில் வலம் வரும் இச்சடங்கு இன்றளவும் நம் இந்தித் திரைப்படங்களில் கூடப் பின்பற்றப்படுகிறது—திருமணச் சடங்கின் முக்கிய நிகழ்ச்சியாக.

தீயைச் சுத்தி, ஏழடி இணைந்து வைக்கும் இச்சடங்குக்குரிய மந்திரம், மிகத் தொன்மையான காலத்தில், (சத்யவிரதன் வரலாறு குறிப்பிடப்படும் புராண காலம்) மணமகளைப் புறச்சின்னம் எதையும் சுமக்கச் சொல்பவளாக இல்லை. மேலும் இந்த மந்திரப் பாடலின் மொழிகள், ஒருவருக்கு மற்றர் உட்பட்டதான குறிப்பைப் புலப்படுத்துவதாகவும் இல்லை. நாங்கள் உள்ளார்ந்து அன்பு கொண்டு இணைந்தவர்களாய் வாழ்க்கைப் பாதையின் துவக்கமான ஏழடிகளை வைத்து ஒன்றுபடுகிறோம் என்று உறுதி பூணும் மகிழ்ச்சிச் செய்தியைப் பலர் முன் அக்கினி சாட்சியாக அறிவிப்பதாகவே இச்சொற்கள் விளங்குகின்றன.

1. இந்த வாழ்வின் உயிர்ப் பசுமையின் இணைப்பால் நாம் ஓரடி வைப்போம்.

2. உயிர்த்துவத்தின் ஆற்றலாய் ஈரடி வைத்து முன் ஏகுவோம்.

3. வண்மையும் செழுமையும் கொழிக்க மூன்றாம் அடியை வைப்போம்.

4. இன்பத்துக்கும் மகிழ்ச்சிக்கும் நாம் இணைந்து நான்காம் அடி வைப்போம்.

5. நல்ல சந்ததிகளைப் பெற இருவரும் கூடி ஐந்தாம் அடி வைப்போம்.

6. ஒருவருக்கு மற்றவர் என்று உறுதியாய் நிலைப்போம் **ஆறாம்** அடியில்—

என்று ஆறு அடிகளையும் இருவரும் சேர்ந்து சொல்லும் மந்திர மொழிகளுடன் வைக்கின்றனர். ஏழாவது அடி ஒருவரை நோக்கி மற்றவர் சொல்வதாக இருவரும் இதைத் தனித்தனியே சொல்லிப் பிறகு அவையோரை—அக்கினியைத் தொழுது நிற்பதாக முடிகிறது.

ஏழாவது அடி—

7. ஓ, நீ எனது வாழ்க்கைத் துணையாக வந்து இணைந்தாய்; இந்த ஏழாவது அடியுடன்...

நாம் என்றென்றும் ஒருவருக்கொருவராக இணைந்து பல புதல்வர்களைப் பெற்று, அவர்களும் நீடூழி வாழத் தொழுது நிற்போம்.

இதுவே சப்தபதிச் சடங்கு எனப் பெறுகிறது.

முன் குறிப்பிட்ட 'ஸுமங்கலி ரியம்வது' என்ற மொழிகள் காணப்படும் திருமண விவரங்களில் இச்சடங்கு இல்லை. என்றாலும், சப்தபதிச் சடங்கு வேத விவாகங்களில் பழங்காலத்திலேயே இடம்பெற்று—அதுவே முக்கியச் சடங்காக இருந்திருக்கிறது என்று கொள்ளலாம். இந்தச் சடங்கு தோன்றிய காலத்தில், பெண் உபநயனம் பெறும் உரிமை பெற்று, வேள்வி செய்யும் தகுதியுடையவளாக இருந்திருக்க வேண்டும். இந்தத் திருமணச் சடங்கு, பெண் பூப்பெய்திய பின், நன்கு வளர்ச்சியுற்ற பெண்ணையும், உற்ற ஆணையும் இணைக்கும் சடங்காகவே காணப்படுகிறது. மண வாழ்க்கையின் நோக்கமாகிய பயன்களையும் அவற்றை எய்துவதற்கு இன்றியமையாத பிற கூறுகளையும் ஏழு அடிகளில் வைத்து, வாழ்க்கைப் பாதையின் நுழைவாயிலாகத் திருமணச் சடங்கை அறிவுறுத்துகிறது, இம்மொழிகள்.

இந்தச் சடங்கு, வடநாட்டில் முக்கியத்துவம் பெற்ற அளவுக்குக்கூட தென்னாட்டில் முக்கியத்துவம் பெற்றிருக்க வில்லை. இச்சடங்கு ஒன்றே திருமணத்தை உறுதி செய்த

அந்த நாட்களில், பெண் தன் கணவனை முழுமனதோடு விரும்பித் தேர்ந்து, மணவாழ்வுக்கு உட்படுபவளாக இருந்திருக்க வேண்டும்.

வருண பேதங்கள், பெருமளவாக, மானுட சமுதாயத்தைக் கூறு போட்டிராத நாட்களில் நாகரிகமான இத்தகைய திருமணம் மட்டுமே வழக்கில் இருந்திருக்க வேண்டும்.

ஆனால் வருண பேதங்களும், வருக்க வேற்றுமைகளும் ஆழ்ந்த பிளவுகளாக மனித சமுதாயத்தைக் கூறு போடத் தொடங்கிய பிறகு, பெண் கட்டுப்படுத்தப்படுவது அவசியமாயிற்று. எனவே திருமண முறைகளிலும் பல்வேறு பாகுபாடுகள் வந்திசைந்தன. பல்வேறு மாறுதல்களைக் கற்பிக்க வேண்டியதும் அவசியமாயிற்று. ஏனெனில் ஏழு வயது சிறுமியை மணவாழ்வில் பந்தப்படுத்த வேண்டிய கட்டாயம் புகுந்தபிறகு, உள்ளார்ந்த மணம் கொண்டு மொழியும் மந்திரச் சடங்குகள் அவருக்கு எந்த விதமான கடமையுணர்வையும் மனதோடு அறிவுறுத்தாது. முதலில் தன்னைக் கட்டியவன் தனக்கு மேலானவன், சமமானவன் அல்ல; அவனே குரு, அவனே தெய்வம் என்ற உணர்வை அவள் உள்ளத்தில் அழியாப் பதிவாகப் பதிக்க வேண்டும்.

அந்த இளம் உள்ளத்தில் இந்தப் பதி தத்துவம், தன் உயிரினும் மேலான மதிப்புடையதாக ஏற்றம் பெற வேண்டும். ஒரு பெண் தனிமையில் இருப்பதும், சுதந்தரமாக வாழ்வதும் மிகவும் கேவலமான நிலை, சமுதாயம் ஒப்புக்கொள்ள முடியாத இழிநிலை என்ற அளவில், திருமணச் சடங்கு, சமயம் சார்ந்து, முக்கியப்படுத்தப்படும்போது 'கணவன்' என்ற பதவி அல்லது உயர்மதிப்பின் கௌரவமே, அவனுடைய உண்மையான தகுதிகளைக் காட்டிலும் அவளுக்கு 'மகத்தான'தாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பயன்களைக் குறிப்பாக்கித் திருமணச் சடங்குள் அதிகமாகச் சேர்க்கப்பட்டன.

ருக்வேத காலத்தில் இல்லாத சடங்குகள் அதர்வ வேத காலத்தில் வழக்கில் வந்தன.

மனைவியின் மதிப்பு, கணவனிடம் அவள் கொண்டுவரும் வண்மை வரிசைகளைப் பொறுத்து ஏற்றம் பெற்றன.

'அம்மி மிதித்தல்' என்று பிற்காலத்தில் வழக்கில் வந்த சடங்கு துவங்கப் பெற்றது.

ஒரு கல்லின்மீது தம்பதி இருவரும் ஏறி நிற்க, நீண்ட ஆயுள், உறுதியான இல்லறம் (பெண்ணும் ஆணும் பிரிந்து போவது இயல்பாக இருந்த சூழலில்) இரண்டையும் வலியுறுத்தும் வகையிலான சடங்குதான் இது. "மண்ணின் மடியிலே உறுதியாக அமைந்த இக்கல்லைப் போல் (மழைக்குக் கரையாமல்) நிலைத்து நீடித்து நாங்கள் வாழ, 'ஸவிதா' அருள் புரியட்டும்" என்ற பிரார்த்தனையுடன் இருவரும் கல்லில் ஏறி நிற்கும் சடங்கு, பிற்காலத்தில், பெண்ணை மட்டும் கணவன் 'அம்மிக்' கல்லில் ஏற்றி வைத்து, 'இந்த அம்மியைப் போல் ஜடமாக, எத்துணை நசுக்குப்பட்டாலும் அசையாத கற்புடையவளாக இருப்பாய்' என்று அச்சுறுத்தும் சடங்காக மாறியது. உபநிடத காலங்களில், திருமணச் சடங்குகள் இன்னும் விரிவாயின. பெண், ஆண் மகனைப் பெறுவதற்கான ஒரு கருவி போன்ற சாதனம். இவள் இணங்காவிட்டால் ஆண் வற்புறுத்தலாம் என்ற உரிமை ஆணுக்கு ஆதிக்கப் பார்வையை நல்கியது.

அடுத்து, 'பிராம்மண'ங்கள் இன்னும் சில சலுகைகளை, ஆண்களுக்கே விட்டுக் கொடுத்தன.

மனைவி கணவனில் சரி பாதி என்ற சரிகைக் குஞ்சம் பளபளவென்று கண்களைப் பறித்தாலும், அவன் உணவு கொண்ட பின்னரே, எஞ்சியதை அவள் உண்ண வேண்டும் என்றும், அவன் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசக்கூடாதென்றும் சாத்திரக் கயிறுகள் அவள் ஜீவாதார உரிமைகளைப் பிணிக்கவும் விதிகள் எழுதப்பட்டன. (சதபதப்ராம்ணம்)

பின்னர் தரும சூத்திரங்கள் என்ற கோட்பாடுகள் தொடுக்கப்பட்ட காலத்தில் திருமணச் சடங்குகள் பூரணமாக மனைவியை, சிறுமியை பொம்மையாக்கித் தீர்த்தன.

கணவன் நூற்றாண்டு வாழட்டும் என்று, எரி வளர்த்துத் தேவர்களை வேண்டும் வேள்வியைக் கூட மணமகள், தன் சகோதரன் உதவியுடன் திருமணத்துக்கு முன்பாகச் செய்கிறாள். இதுவும் தாலி கட்டிய பின்னர் அவள் செய்யும் சடங்காக, லாஜ 'ஹோமம்' மணமகளின் சகோதரன் பொரியிடல் என்ற பெயரில் இன்றும் வழக்கில் இருக்கிறது. திருப்பாவை அருளிய கோதை நாச்சியார் தம் கனவைச் சொல்கையில், தாலியைப் பற்றியோ குங்குமம் தீற்றுவது பற்றியோ குறிப்பிடவில்லை. ஆனால்—அம்மி மிதித்தலையும், பொரியிடுவதையும் குறிப்பிடுகிறார். வேத காலத்து சப்த பதியில் இருந்து வேறுபடும் வகையில், தொடர்ந்து வந்த காலங்களில் மந்திர வாசகங்கள் முற்றிலும் மாற்றப்பட்டன. இவ்வாசகங்கள் அனைத்தும் கணவன் மனைவிக்குச் சொல்லும் மொழிகளாகவே அமைந்து, அவளைக் குரலற்றவளாகத் தீர்த்திருக்கின்றன.

1. விஷ்ணு உனது உணவின் தேவையை நிறைவேற்ற முதல் அடியை எடுத்து வைப்பாய்.

2. விஷ்ணு உனது உடல் வலிமையைக் கூட்ட, இரண்டாம் அடியை எடுத்து வைப்பாய்.

3. விஷ்ணு உனது விரதங்கள்—தவங்களை நிறைவேற்ற, மூன்றாம் அடிக்கு உன்னைக் கொண்டு செல்லட்டும்.

4. விஷ்ணு, உனது நான்காம் அடியை நட்பின் மலர்ச்சியுடன் அழைத்துச் செல்லட்டும்.

5. விஷ்ணு, உனது ஐந்தாவது அடியை, கன்றுகாலிகளாகிய வளர்ப்புப் பிராணிகளின் நலன்களை முன்னிட்டு அழைத்துச் செல்லட்டும்.

*6.* விஷ்ணு, உனது ஆறாவது அடியை சப்தருஷிகளின் ஆசிகளோடு நடாத்திச் செல்லட்டும்.

7. இந்த ஏழாவது அடியுடன், நீ எனது தோழியாகிறாய்!

இந்தச் சப்த பதிக்கும் முந்தைய சப்த பதிக்கும் இடையே உள்ள வித்தியாசங்களைப் பாருங்கள்!

உணவின் தேவைக்கு (அவளுக்கும்தான்...உழைத்தாலே உணவு!) குடும்பத்துச் சமையல்காரி, உடல் வலிமை, வைத்த சுமையை ஏற்று, உழைக்க வேண்டுமே? விரதங்கள்—தவங்கள்—சுயநலங்கள், சுயதேவைகள் சுருக்கி, கணவன் வீட்டாருக்காக உயிர்வாழும் பொருட்டு—உழைக்கும் பொருட்டு, சில பழகு நெறிகளில் விரதங்கள் தவங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

நட்பின் மலர்ச்சி...இத்தனை சுமைகளையும் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஏற்கலாமா? சிரித்த முகத்தோடு "இது என் பேறு" என்று ஏற்க வேண்டும்.

கன்று காலிகளாகிய வளர்ப்புப் பிராணிகள் உனது ஜீவாதார உரிமைகளைக் காட்டிலும் அருமையானவை. வளமை பெருக்கும் செல்வங்கள். எனவே இந்தப் பொரு ளாதார வளமை எக்காரணம் கொண்டும் உன்னால் அலட்சிய மாகக் கருதப்படலாகாது! அது ஓங்க வேண்டும். சப்த ருஷிகள் பூசனைக்குரியவர்கள். இவர்கள் தந்தையார் (தாய்வழிச் சமுதாயப் பரம்பரை என்ற ஒரு உணர்வின் ரேகை கூட உன்னிடம் மிஞ்சலாகாது. தந்தையர்... ருஷிகளே தலைவர்கள்) இவர்கள் அருள் தேவை.

இத்தனை அடிகளையும் வைத்த பிறகு (நிபந்தனைகளுக்குப் பிறகு) நீ என் தோழியாவாய்!

தோழமை என்ற பெயரில் வளையம் நெருக்கும்போது, அவள் உண்மையில் தோழியாகவா இருக்க முடியும்? தோழி என்ற பெயரில், நெருக்கப்பட்டு, இயக்கப்படுகிறாள் என்பதே உண்மை.

இந்நாள், இச்சப்தபதி மந்திரத்தையும் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு தாலிகட்டுச் சடங்கு அவளை வாழ்நாள் முழுதும் உணர்வு ரீதியாகவும், பிணித்துக் கொண்டிருக்கிறது.

# 24. வினா - விடை - அச்சுறுத்தல்

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன், அறிவியல் தொழில் நுட்பப் பட்டம் பெற்று, அருகிலுள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியப்பணி ஏற்க வந்திருந்தாள். அந்த நிறுவன வளாகத்தில், பெண் ஆசிரியைகளுக்கான தங்கும் விடுதி வசதி கிடையாது. இவளுக்காக அண்டை அயல் வட்டங்களில், ஓர் அறை அல்லது, பகுதி வீடு (வாடகை) தேடி அவளுடன் நானும் அலைந்தேன். திருமணமாகாத இளைஞன் என்றால்கூட வாடகைக்கு இடம் கிடைத்துவிடும்; பெண்களுக்கு இடமே கிடைக்காது என்பதை அந்த அநுபவத்தில் தெரிந்துகொண்டேன். பிக்குப் பிடுங்கல் இல்லாத முதிய தம்பதிகூட இவ்வாறு தன்னந்தனியாகச் சம்பாதித்து வாழ வந்த பெண்ணுக்கு வீட்டில் ஓர் அறை வசதி செய்து கொடுக்க விரும்பவில்லை... ஓர் ஆணின் ஆதிக்கத்தில் இல்லாத திருமணமாகாத, பொருளாதார வசதியுடைய பெண் என்றால் அவள் ஒழுக்கம் நிச்சயமாகக் கண்களில் எண்ணெய் விட்டுக்கொண்டு கண்காணிப்பதற் குரியதென்று எல்லோரும் ஒட்டு மொத்தமாகக் கருதுவது ஏன்?

அந்தப் பெண்ணுக்கு இருபது மைல்களுக்கப்பால் ஓர் உழைக்கும் மகளிர் விடுதியில் இடம் கிடைத்தது. அவளுக்குக் காலை எட்டு மணிக்குள் தன் பணியிடம் வரவேண்டும். ஏழு மணிக்கே கிளம்ப வேண்டும். அந்நேரம் அங்கு காலையுணவு தயாராகாது; மதிய உணவும் கொள்ள முடியாது. ஆனால், இந்த ஒரு நேர உணவுக்கான தொகையும் விடுதித் தொகையுடன் கொடுத்தே ஆக வேண்டும். இந்தச் சங்க

டங்களைத் தவிர்க்க முடியாமல், அவள், ஒரு சில மாதங்களில் இந்த வேலையை விட்டு விட்டே போனாள். பதினைந்து ஆண்டுகளில் இந்த நிலைமை சீராகிவிடவில்லை. திருமணமாகாமல், ஒரு பெண், தனிவாழ்வு வாழ முடியுமா என்ற வினா, இன்றைய இளம்பெண்களை மிகவும் அச்சுறுத்துகிறது. 'வரதட்சணைப் பேய்க்கு இடம் கொடுக்க மாட்டேன்' என்று கல்லூரி நாட்களில் வீர சபதம் செய்யும் பெண்ணும் கல்லூரி நாட்களை விட்டு, வாழ்க்கைப் பட்டறையில் இடிபடும்போது, தனது வரதட்சணைக்குத் தானே சேமித்துக் கொள்ளத்தான் முற்படுகிறாள். அன்றாடம் கயவர்களிடமிருந்தும் கல்லூரி விடலைகளிடமிருந்தும் தன்னைப் பாதுகாப்பது தாலி என்ற மந்திரக்கயிறே என்று நினைக்கிறாள். ஏன், ஒரு கதையில், இப்படி ஒரு கதாநாயகி பொய்த்தாலி ஒன்றைக் கட்டிக்கொண்டு அலுவலகம் வந்து போகிறாள்.

இவளுடைய தோழியின் சகோதரன் இவளை உள்ளூறக் காதலிக்கிறான்—ஆனால் அயலான் மனைவி என்ற உணர்வு அவனுடைய உத்தம குணத்தைக் காட்ட—அவன் தன்னை அடக்கிக் கொள்கிறான். பின்னர், சகோதரி வாயிலாக இவள் தாலி வெறும் கயிறு என்று அறிந்தபின் மகிழ்ச்சி கரைபாய—சுபம்-சுபம்-சுபம்...

ஒரு பெண் ஓர் ஆணின் பாதுகாப்பில் தான் இருக்கலாம்; இல்லாவிட்டால், அவளால் தன் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற ஒரு நீதி, ஒவ்வொரு பெண்ணுக்கும் வழிவழியாகத் தாயின் இரத்தத்தில் ஊறும் நாட்களிலேயே போதிக்கப்படுகிறது.

முற்போக்குச் சித்தாந்தம் பேசும் வீட்டிலேயே, பட்ட மேற்படிப்புப் படித்த பெண்ணுக்கு முப்பதினாயிரமும் சீர் வரிசைகளும் கொடுத்துத் திருமணம் உறுதி கொள்கிறார்கள். "உங்கள் பெண் எப்படி இதற்கு ஒத்துக்கொண்டாள்?" என்று

கேட்டால், “அவள் ஒத்துக்கொள்வாளா? குதிக்கத்தான் குதித்தாள். அந்த ஆளைப் போய்க் கேட்பேன் என்றுதான் கிளம்பினாள். பெரியவங்க எல்லாம் குறுக்க விழுந்து அப்படி யெல்லாம் கேட்டு கலியாணத்தை நிறுத்தினா, உனக்கு இந்த ஆயுசில கலியாணம் ஆகாது. கலியாணம் இல்லாம நிப்பியா? முடியுமான்னு நிறுத்திவிட்டோம்.” என்று சிறிதும் தயக்கம் இன்றி ஒத்துக்கொள்கிறார்கள்.

திருமணமான நிலையிலேயே ‘பெண்’ என்பவள் வேட்டைக்குகந்த பிராணி என்ற சமூக (அவல) மதிப்பைப் பெற்றிருக்கும்போது, இந்த அபாயம். நீ கன்னியாயிருந்தால், எந்தக் கணமும் உன்னை விழுங்கக் காத்து இருக்கிறது என்ற கருத்தை அன்றாடம் நமது மக்கள் தொடர்பு சாதனங்கள் ஆணுக்கு ஊக்கமாகவும் பெண்ணுக்கு அச்சமாகவும் இடைவிடாது உருவேற்றிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கருத்து எப்படி உருவாகி, நிலைத்து, இன்னும் நூற்றாண்டுக் காலங்களில் வலிமை பெற்று, பெண்ணை எந்த முன்னேற்றத்தின் பயனையும் பெற இயலா வண்ணம் பிணித்துக் கொண்டிருக்கிறது?

இதைக் கூர்ந்து சிந்தித்தால், பெண்ணின் அறிவுக் கண்ணை மறைக்கும் ஒரு சாதனமாகவே திருமணம் அவளுக்கு வலியுறுத்தப்படுவதாகப் புலப்படுகிறது. இவள் அறிவு பெற்றுவிட்டால், சுயமாகச் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டால், ஒருபக்க நியாயங்களை உணர்ந்துகொள்வாளே?—

மேலும், வஞ்சிக்கப்படுபவர் விழித்துக்கொண்டால், காலம் காலமான பொய்ச் சித்தாந்தங்கள் புகையாகிப் போய்விடுமே?

பிரஹத்தாரணிய உபநிடதத்தின் ஆறாவது பிராம் மணத்தில், யாக்ஞவல்க்யர்-கார்க்கி உரையாடல், இக்கட்டுரைத் தொகுப்பில் இடம் பெற்றாக வேண்டும் என்று கருதுகிறேன்.

பிரும்மவாதி என்று போற்றப்படுபவர், இந்து சட்டவிதிகளாகிய தரும சாத்திரங்களை நெறிப்படுத்தியர் என்று புகழ்பெற்ற யாக்ஞவல்க்யர், ஜனகனின் அவையில் இருக்கையில் கார்க்கி அவரை நாடி வருகிறாள். இன்றும், பண்டைய வேதகாலப் பெண்மணிகளின் சிறப்பைச் சொல்கையில், ‘மைத்ரேயி, கார்க்கி போன்ற பெண்மணிகள்’ என்றே குறிக்கப்படுவதைப் பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். இந்த இரண்டு பெண்மணிகளின் வரலாற்றிலும் யாக்ஞவல்க்யர் வருகிறார்.

பிருஹத்தாரணிய உபநிடதத்தில் - ஆறாவது பிராம்மணம், கார்க்கியை வாசக்னு என்பவரின் மகளாக அறிவிக்கிறது. இவளுக்குத் திருமணமாயிருந்ததாகக் குறிப்பு இல்லை. இவள் உபநிடதத் தொகுப்பில் அழியா இடம் பெறுவதற்குக் காரணம், இவள் பெண்களுக்குத் தகாதது என்று தடுக்கப்பட்டாற் போலிருந்த அறிவுப்பாதையில் தனது சிந்தனையைத் திருப்பியதுதான். ஒரு பெண்ணாகப் பிறந்தவள், ஜனகரின் பேரறிவாளர் நிறைந்த அவையில் சிறந்த பிரும்ம தத்துவ மேதையாகிய யாக்ஞவல்க்யரிடம் அந்த ‘பிரும்மம்’ பற்றிய ஐயப்பாட்டை எழுப்பினாள் என்றால், அது சாதாரண விஷயமா?

“நான் உம்மிடம் சில ஐயங்களைப் போக்கிக்கொள்ள விழைகிறேன்” என்று கூறும் கார்க்கி, அவரை ஏதோ சவாலுக்கு அழைப்பது போல் தொனிக்கிறது. யாக்ஞவல்க்யர் ஒப்புக்கொள்கிறார். உரையாடல் தொடங்கியது.

“ஓ, யாக்ஞ? இந்த நானிலம் நீரடுக்குகளின் பரப்பில் நிலைபெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த ஆதாரம் எங்கு நிலை கொள்கிறது?”

“கார்க்கி, நீர் வாயுவின் அடுக்கில் நிலை கொண்டிருக்கிறது.”

"யாக்ஞ, வாயுக்கு ஆதாரம் எது?"

"கார்க்கி, இது ஆகாயமாகிய வெற்றிடத்தால் நிலை கொண்டிருக்கிறது."

"அப்படியானால், ஆகாயத்துக்கு மூலம் யாது?"

"கார்க்கி! இது கந்தருவர்களின் பிரதேசத்தில் நிலைபெற்றது."

"யாக்ஞ! இந்தப் பிரதேசம் எங்கிருக்கிறது?"

"...இது சூரிய மண்டலத்தில் நிலைபெறுகிறது."

"யாக்ஞ, சூரிய மண்டலம் எங்கே நிலைபெறுகிறது?"

"கார்க்கி, இது சந்திர மண்டலத்தில் நிலைபெறுகிறது."

"அது எங்கே இருக்கிறது?"

"அது நட்சத்திர மண்டலத்தில் நிலைகொண்டது."

"அது எங்கே நிலைபெறுகிறது?"

"அது கடவுளர்களின் பிரதேசத்தில்..."

"கடவுளர்களின் பிரதேசம்?"

"இந்திரன் உலகில்..."

"இந்திர உலகம் எங்கே இருக்கிறது?"

"பிரஜாபதியின் உலகில் உள்ளது."

"பிரஜாபதியின் பிரதேசம் எங்கே உள்ளது?"

"அது பிரும்ம உலகில் இருக்கிறது, கார்க்கி!"

"பிரும்ம உலகம் எங்கு உள்ளது யர்க்ஞ?"

"இனிமேல் கேட்காதே! எதை நீ கேட்கக்கூடாதோ அதைக் கேட்கிறாய்; உன் வினாக்களை இத்தடன் நிறுத்து! மீறினால்...உன் தலை உருளும்!"

ராஹுல் ஸாங்க்ருத்யாயன், மனித சமுதாய வரலாற்றை விவரிக்கும் நூலில் சமுதாயம், சுரண்டுபவர் சுரண்டப்படுபவர்

என்ற வருக்கங்களாகப் பிரிவுபட்ட பின் இந்த வருக்கபேதம் நிலைத்தாலே, பிரபு வருக்கமும், அரச வருக்கமும் தங்கள் போக வாழ்க்கையை நடத்த முடியும் என்று வந்த அவசியங் களை விவரிக்கிறார். உழைத்துப் பிழைக்கும் வருக்கம் தாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்துவிடா வண்ணம், மாயமான பரலோகக் கற்பிதங்களில் அவர்கள் மனங்கள் அமிழ்ந்துவிடும் வகையில், தத்துவங்கள் கற்பிக்கப்பட்டன என்று விளக்குகிறார். அந்த வகையில், அவர் எழுதிய வரலாற்றுச் சித்திரங்களான—'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலில், இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

'பிரும்மம்' என்ற புதிரை, அடுத்து வரும் தலைமுறைகள் முழு முதலாக வைத்துக்கொண்டு கவலையின்றி, வருக்கபேத சமுதாயத்தை ஆளமுடியும் என்றே தோற்றுவித்ததாகக் குறிப்பாக்குவார்.

இந்தப் புதிரை உடைக்கும் வகையில் கார்க்கி எழுப்பிய வினாக்கள், பிரும்மவாதிகளான—காவலர்களான, மேலாம் வருக்கத்தாருக்கு அடிமடியில் கைவைத்த திகிலையும் ஆத்திரத்தையும் கிளப்பியதில் வியப்பில்லையே?

"கார்க்கி! இது வெறும் அச்சுறுத்தல் அன்று! நிச்சயமாகவே நீ மேலும் வினாக்களைத் தொடுத்திருந்தால், உன் தலை உருண்டிருக்கும்!" என்று கார்க்கியின் அத்தையான மூதாட்டி கூறுவதாக அவர் எழுதியுள்ளார்.

ஆனால், இத்தகைய வரலாறுகள் இடம் பெறுகையில், ஒரு பக்கம் வரலாறு என்ற நிலையில் நிகழ்வுகள் குறிப்பாக்கப்பட்டாலும், ஆணாதிக்க சமுதாயம் வலுப்பெற்ற நிலையில் தொகுக்கப்பட்ட இந்த நூல்கள், இவ்வாறு கார்க்கியின் வினாக்கள் அச்சுறுத்தலோடு மடக்கப்பட்ட சம்பவத்தை முடித்துவிட இடம் கொடுக்கவில்லை. இதே உபநிடதத்தில் எட்டாம் பிராம்மணத்தில் மீண்டும் வருகிறது.

இப்போது கார்க்கி, அவையில் கூடியிருக்கும் பெரியோரைப் பணிந்து தொழுது, தான் அவருடைய அறிவைச் சோதிக்கும் முகமாகவோ, அல்லது பிரும்ம தத்துவத்தின் ஐயப்பாடு காரணமாகவோ வரவில்லை என்றும், இரண்டே இரண்டு வினாக்களை மட்டும் ஏந்தி வந்திருப்பதாகவும், கேட்க அனுமதி வேண்டும் என்று கோருகிறாள்.

முன்பு விட்ட வரலாற்றின் தொடர்ச்சியன்று இது அதே வரலாறு, கார்க்கியை அவர்கள் விரும்பும் விதத்தில் சித்திரிக்கிறது எனலாம். பழைய ஐயப்பாட்டு வினாக்களே இரண்டாகச் சுருக்கமாகிக் கேட்கப்படுகின்றன.

'ஆகாயத்தில் நிலை கொள்கின்றன' என்று வந்த மறுமொழியிலேயே கார்க்கி நெளிந்து, "ஓ, யாக்ஞவல்க்யரே! வணங்குகிறேன். தாங்கள் நன்கு விளங்க எனக்கு விடையளித்துவிட்டீர்கள். இப்போது சொல்லுங்கள், இந்த ஆகாயம் எதில் நிலை கொள்ளுகிறது?"

இப்போது யாக்ஞவல்க்யர், பிரும்ம தத்துவத்தைப் பற்றிக் கூறுகிறார். இவ்வுலம் பிரும்மத்தில் நிலைகொள்கிறது-இதற்கு நிறம், உருவமில்லை... என்ற விவரங்கள். (ராஹுல்ஜியின் கருத்துத்தான் வலிமை பெறுகிறது; நமக்குப் புரியவில்லை.)

கார்க்கி, நிறைவு கொண்டு, அவரை வணங்கி அவையோரிடம் விடைபெற்றுச் செல்கிறாள்.

இதிலிருந்து ஒரு நீதியும் நமக்குக் கிடைக்கிறது.

யாக்ஞவல்க்யர், பிரும்ம தத்துவ விளக்கத்தைக் கூற மறுத்து, மரண தண்டனையைக் கூறி அச்சுறுத்தியும், அவள் மேலாம் அறிவுத் தாகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மீண்டும் வந்து, பிரம்மஞானம் பெற்றாள்—என்பதே நீதி.

இதே யாக்ஞவல்க்யர்க்கு—இரு மனைவியர். ஒருத்தி காத்யாயனி; மற்றவள் மைத்ரேயி, யாக்ஞவல்க்யர்—எல்லாம்

துறந்து இறுதித் தவம் மேற்கொள்ளக் காட்டுக்குச் செல்லுமுன் தனது 'சொத்துக்களை' இரு மனைவியருக்கும் பகிர்ந்து கொடுக்க விரும்பினார். அப்போது, மைத்ரேயி மட்டும் "இந்த சொத்துக்களினால் என்ன பயன்? மேலாம் பிரும்மஞானம் மட்டுமே தங்களிடம் நான் பெற விரும்புகிறேன்" என்றுரைத்ததாகவும், அவர் அவளுக்கு அந்த அறிவை நல்கியதாகவும் வரலாறு. இதனால், மைத்ரேயி, பட்டுப் பட்டாடை, செல்வம், பிள்ளை என்ற உலகியல் அநுபவங்களுக்கு அப்பாற்பட்ட ஞானத்தை வேட்டவள் என்று வரலாற்றில் புகழ் பெறுகிறாள். யாக்ஞவல்க்யரும் போற்றப்படுகிறார்.

இத்தகைய பெண்கள் அடிக்கடி வந்துவிட்டால்? திருமணம், இக உலகப் பேறுகள் என்று சொல்லப்படும் அறிவு மறைக்கும் பட்டுக் குஞ்சலங்களின் உட்பொருள் அவர்களுக்கு விளங்கிவிட்டால்?

எனவே, பெண்ணுக்குத் திருமணம் சார்பு நிலை, தான் தருமம் என்று வலியுறுத்தப்படுவதற்கும் மேலாக, திருமணமாகாமல் நிற்பதனால் சமுதாய ஒழுக்கத்தையே குலைக்கிறாள் என்ற நோக்கில் ஓர் அம்பு செருகப்பட்டது. பெண்ணாய்ப் பிறந்ததன் பாவமே ஓர் ஆண் குழந்தைக்குத் தாயாவதில்தான் விலகுகிறது! இந்த ஆண் குழந்தையைத் திருமணத்தின் வாயிலாகவே பெறமுடியும். திருமணம்...!

அவளுக்கு அறிவு தேவையில்லை; உடல்வாகு, அடக்கம், பணிவு, பொறுமை, உழைப்பு, தியாகம்...

திருமணமாகாமலே சமுதாயத்தில் நிற்கவேண்டிய நிலை வந்துவிட்டால்? இப்படியும் ஒரு நிலை இருந்திருக்க ஆதாரம் இருக்கிறது.

ஏனெனில் யமனே! நீ ஏற்றுக் கொள்வாய்! இவளை உனக்கு அர்ப்பணிக்கிறோம்! என்ற பொருளில், அவளை

யமனுக்கு மணவாட்டியாக்கும் ஒரு பாடல் வருகிறது. இதற்குச் சரியான பொருள் விளக்கப் படவில்லை.

திருமணமாகாத பெண், உயிர் வாழக்கூடாது; அவள் யமனுக்கு மணவாட்டியாகப் போகலாம் என்று நமது வைதீக சமயத்தார் வழிகாட்டுகிறார்களா? இதனால்தான் போலும், இந்த இருபதாம் நூற்றாண்டு இறுதிக்கட்ட சமயகுரு ஒருவர், இந்து சமுதாயத்தில் கன்னிப் பெண் வாழ இடம் கிடையாது; எனவே ஒரு வாழை மரத்தை உரித்துத் தாலியைக் கட்டிக்கொண்டு, மரத்தை வெட்டி, தாலியைக் களைந்து வைதவ்யக் கோலம் மேற்கொண்டு வாழலாம் என்று கருணையுடன் திருவாய் மலர்ந்தருளினாரா என்று புரியவில்லை!

'வளர்ந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொள்வது ஒரு கூடை பாம்பை வைத்துக் கொண்டிருக்கும் அபாயம்!' என்று இல்லறம் நடத்தும் பெற்றோருக்கு 'தரும'க் கட்டாயம் அறிவுறுத்தப்படுவதும் இதனால்தானோ?

# 25. பொருளுரிமைக்காரி—பொருளேயானாள்

"......ஐயர் இருக்கிறாரா?..."

"இல்லையே? வெளியூர் போயிருக்கிறார். வர ஒரு வாரம் ஆகும்" என்று முன்னுச்சி நரைத்த அவர் மனைவி கூறுகிறாள்.

"இருபத்தெட்டாந் தேதி ஒரு ஃபங்ஷன். ஒரே நேர விருந்து. ஜாங்ரி போடணும். நூற்றைம்பது பேருக்குச் சாப்பாடு... அதனால் அட்வான்ஸ் சொல்லி தந்துட்டுப் போகலாம்னு வந்தேன்..."

"இருபத்தெட்டாந் தேதியும் அவருக்கு வர சவுரியப்படாது. ஊரிலே ஏதோ காரியம்..."

"...அடாடா...? ஒரு நேரந்தான் அம்மா? உங்களுக்குத் தெரியாதா? நம்ம வீடுன்னா, எங்கிருந்தாலும் வந்துடுவாரே? எங்க தாத்தா நாள் தொடர்பு; எந்த விசேஷம்னாலும், ஐயர்தான்."

"...அது தெரியும். ஆனா, இப்ப சந்தர்ப்பமில்ல. அவர் பெண் நாகலட்சுமி தவறிப் போயிட்டா. இருபத்தெட்டாந் தேதி பன்னண்டு நாளாறது..."

"த்ஸ்...த்ஸ... பாவமே?... அப்படியாயிட்டுதா?... அப்ப...எங்கே போயி வேற ஆளைத் தேடுவது..." என்று வந்தவர் தவிக்கின்றார் சிறிது நேரம்.

"...ஆ, அவரோட வருவனே, சேதுன்னு ஒரு பையன்? அவன்கூட எல்லாம் செய்வான். அவன் விலாசம் தெரியுமா?"

"அவன் இப்ப இங்க இல்லியே? பம்பாய் போயிட்டான்" என்ற பெண்மணி சிறிது யோசனையுடன், "உங்களுக்கு ஆட்சேபமில்லைன்னா நான் வரேன். ஜாங்கிரியும் போட்ட சமையலும் கச்சிதமா முடிச்சிடுவேன். கல்யாணம், டிபன், காபின்னாத்தான் முடியாது. ஒரே சமையல்தானே?..." என்று சொல்கிறாள்.

"நீங்களா?" சற்றே திகைக்கிறார் வந்தவர்.

"நான் எல்லாம் செய்யறததான். போன வாரம்கூட கவுசல்யாம்மா வீட்ல, நிச்சயதார்த்தத்துக்கு நானும் என் பெண்ணும்தான் போய்ச் செய்தோம்..."

"என்ன ரேட்டு?"

"எழுபத்தஞ்சு...அவாள்ளாம் நூத்திருபதுன்னு நூத்தி அம்பதுன்னு வாங்குவா. ஆனா, எங்க சமையலும்

அற்புதமாயிருக்கும். கொட்டாம சிந்தாம, பாழ் பண்ணாம பண்ணுவோம். தயங்காதேங்கோ. நீங்க கௌசல்யாம்மாவைக் கேட்டுப் பாருங்கோ. இதோ தெருமூலைதான்."

'ரேட்டுக்காக'வேனும் அவர் இதை ஒப்புவார் என்று அந்த அம்மை நினைக்கிறார். ஆனால் வந்தவரோ "பெண்டுகள் இந்த மாதிரிச் சமையலுக்குச் சரியில்லை. ஏதோ, திவசம், சமாராதனை என்றால் போனால் போகிறதுன்னு வைக்கலாம்" என்று திரும்பிப் போகிறார்.

உயர்ந்த சாரத்தின் மேல்முண்டாசுத் தலையும் அடர் மீசையுமாக மேஸ்திரி வசதியாக அமர்ந்த கொத்துக் கரண்டியினால் அந்த உலகை ஆள்கிறார். கூனிக்குறுகி உலர்ந்து நைந்த உழைப்பின் உருவங்களாகப் பெண்கள் சும்மாட்டுக் கந்தையின்மீது, கல்லோ, மண்ணோ, கலவையோ சுமந்து சாரத்தில் ஏறி இவர்களுக்கு உதவுகின்றனர். மேஸ்திரி அங்கு உட்கார்ந்து காபி அருந்துவார், பீடி குடிப்பார், வெற்றிலை போடுவார்; ம்; ஆகட்டும்! ஆகட்டும்! என்று 'சித்து'ப் பெண் பிள்ளைகளை அதிகாரத்துடன் முடுக்கிய வண்ணமிருப்பார். இவர்கள் கட்டுமானத்துக்கு வேண்டிய தண்ணீர் சுமக்க வேண்டும்; பெருக்க வேண்டும்; சலிக்க வேண்டும்; ஓராயிரம் பிற வேலைகளில் தங்கள் ஆற்றலைக் கரைத்து விளக்க வேண்டும். ஆனால் பெயருக்கு மெல்லியல்; ஊதியத்துக்கு வலிவில்லாதவள்.

குழுத்தலைமை, தாய்த்தலைமை, முதல்வி என்ற ஆதிமதிப்பில் இருந்து இழிந்து, வீடென்ற எல்லைகளுக்குள் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்ற அறியாமையில் பெண் ஊறிவிட்ட பிறகு, உடலுழைப்பு இவளுக்கே உரியதாக ஒட்டிவிட்டது. கல்வி இல்லை என்றே தீர்ந்துவிட்டது. ஆதிச் சமையற்காரி, ஆதிக் குடிசைக்காரி, ஆதிப் பயிர்த் தொழிலாளி, ஆதி நெசவாளி என்று தொழில்களை வீட்டு வளைவில் செய்ய முற்பட்டவள் பெண்தான். ஆனால் இந்நாளில்,

உடலுழைப்புத் தொழிற்களத்திலும் இவள் ஆணுக்கு உதவியாளர் என்ற சார்பு நிலையில்தான் நிற்கிறாள். வாணிப ரீதியில் ஒரு உற்பத்திச் சாதனம் தொழிற்களத்தில் உருவாகிறதென்றால், அங்கும் ஆண் முன்நின்று தன் மதிப்பை முதல் தரமாக்கிக் கொண்டு இவள் உழைப்பை இரண்டாம் பட்சத்திற்குக் கொண்டு வந்திருக்கும் நிலைமையிலேயே இன்று எல்லாத் துறைகளிலும் பார்க்க முடிகிறது.

இவளுடைய 'கல்வி' இவளுடைய 'திறமை' இவளுடைய 'மதிப்பு' அனைத்தும், உடலியல் சார்ந்ததாகவே முற்றுப்புள்ளி குத்தப்பட்டதுதான், இதற்குக் காரணம் எனலாம்.

பெண்ணுக்கும் வேள்வியில் பங்கு கொள்ள, உரிமையுண்டு; இந்த உரிமையை, ஆண், உபநயனம் போன்ற சடங்கில், திருமண காலத்தில் நல்குகிறான் என்று சொல்லப்படுகிறது.

கைத்திரிய பிராம்மணம், இதை வ்ரதோபநயனம் என்றுரைக்கிறது. இன்றளவும் கூடத் திருமணச் சடங்குகளில், 'அக்கினிக்கு முன்' கணவன்—மனைவியராக மணமக்கள் அமர்ந்திருக்கையில், மணமகன், அவள் இடுப்பில், முப்புரிகளாலாகிய முன்ஜப்புல் (தருப்பம்?) கயிற்றைக் கட்டுகிறான். இந்தக் கயிறு 'யோக்த்ரா' ஒன்றும் கட்டுப்படுபவர், (பசு போன்ற பிராணி?) 'யாஹ்யா' என்றும் குறிப்பிடப் பெறுகின்றனர்.

இடுப்புக்குக் கீழ் அவள் தூய்மைப்படுத்தப் பெறும் சடங்கு என்றும் இதற்குப் பொருளுரைக்கப்படுகிறது.

இவளே வேள்விப் பொருள்; இவளிலிருந்து தோன்றும் சந்ததி—ஆண்—வேள்வியின் பயன்.

இதை உள்ளொளியை வேட்கும் உபநயனச் சடங்குக்கு ஒத்ததென்று கூறலாமா?

இந்தச் சடங்கு விதியில் எத்தனை அரிய பொருள் பொதிந்திருக்கிறது? பெண்ணே! உனது முக்கியத்துவம், இடுப்புக்குக் கீழ் மட்டுமேதான்? இதற்கு முன், தாய்ச் சம்பிரதாய ஒழுக்கத்தில் நீ சதந்திரமானவளாக இருந்திருக்கலாம்; ஆனால் நீ இப்போது, இந்த ஆணுக்கே கட்டுப்படுத்தப்படுகிறாய்; வளர்ப்புப் பிராணியைக் கயிறு கொண்டு பிணிப்பதுபோல உன்னைப் பிணிக்கிறோம் என்று, சொல்லாமல் அறிவுறுத்தும் சடங்கே இது 'வரதோப நயனம்' என்ற சொல், உட்பொருளை மறைக்கும் சர்க்கரைப் பூச்சு.

பெண் கல்வி என்று, கண் திறப்புச் செய்ய வேண்டிய அவசியத்தை இந்த இருபதாம் .நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரசியல் விடுதலைக்குக் குறிவைப்புச் சாதனமாகப் பல தலைவர்களும் வற்புறுத்தினார்கள். ஆனால் அதிலும் எத்துணை வேற்றுமைகள், கூர்ந்து நோக்கினால்?

பெண் கல்வி, பெண் மானம், என்றெல்லாம் தலைப்பிட்டுப் பெண்ணுக்காகக் குரல் கொடுத்த முதல் தமிழ் நாவல் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை. ஸ்திரீகள் தங்களுக்குப் படிப்பிக்கும்படி புருஷர்களை வேண்டுவதாகப் பாடுகிறார்.

*உத்தமவான்களே—சத்திய பூமான்களே,*
*உங்கட்குக் கண்களான பெண்களாம் எங்களுக்கு,*
*வித்தையைப் படிப்பியுங்கள்-(தயவு செய்து)*

இப்படிப் படிப்பிப்பதால் நாங்கள் உங்களை மீறிப் போய் விடுவோம் என்று சிறிதும் ஐயம் கொள்ள வேண்டாம், என்று கைமேல் அடித்துப் பெண்கள் சத்தியம் செய்து கொடுப்பது போல் இப்பாடல் எழுதப்பட்டிருக்கிறது.

*"கொஞ்சம் நீர் கோபஞ்செய்யில் அஞ்சிடுவோம் —எங்கள்*
*குற்றம் பொறுக்கச் சொல்லிக் கெஞ்சிடுவோம்*

*தஞ்சமதாகவுமை நம்பிடுவோம்—உம்மேல்*
*சாகித்தியம் செய்து தினம் கும்பிடுவோம்...!*

(படிப்பு எதற்கு என்று புரிகிறதல்லவா?) பின்னும் பார்ப்போம்—

*"உத்தியோகம் தந்தாலும் ஒரு கைபார்ப்போம் —தினம்*
*உதவி செய்துங்கள் தொழில்களைத் தீர்ப்போம்*
*பத்தியாய் குடித்தனம் தலை ஏற்போம்—கல்வி*
*பாலருக்குப் போதித்து நல்வழி சேர்ப்போம்—எங்கள்*
*பதி நீரே—சர்வ*
*நிதி நீரே—தினம்*
*கதி நீரே—கன*
*மதி நீரே—நல்ல (வித்தையைப் படிப்பியுங்கள்)*
*இரவில் நீர் தூங்கினபின் படுப்போம்—நீங்கள்*
*எழுமுன் எழுந்து வேலைகளைத் தொடுப்போம்,*
*தருமவதிகள் என்று பெயர் எடுப்போம்..."*

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். பட்டியல் நீண்டு போகும் இனியும் தொடுத்தால் என்றாலும், இந்த வரிகளையும்விட முடியவில்லை.

எங்களுக்குக் கல்வி கொடுத்து விட்டால்,

*"அடித்தாலும் முகம்கோணிச் சுழிப்போமா?—கல்லா*
*உதவாத கணவரானாலும் பழிப்போமோ?"*

என்றும் கேட்கச் செய்கிறார் ஆசிரியர். கல்வி, கண்களை மூடிக்கொண்டு கணவன் என்ற பிம்பத்தைத் தொழுது வாழ்வதற்கே என்ற இலட்சியம் புலனாகிறது.

"பெண்ணே, நீ அச்சத்தை விட்டொழி, ஓராணுக்காக உன்னைப் பொம்மை போல் அலங்கரித்துக் கொள்ள ஒருநாளும் உடன்படாதே!" என்று அறிவுரைகள் நல்கிய காந்தியடிகள் பெண் கல்வியைக் குறித்து என்ன கருத்துத் தெரிவிக்கிறார் என்ற ஆவல் உண்டாகிறதல்லவா?

பெண் கல்வியைத் திட்டமிடும்போது, ஓர் உண்மையை மனதில் கொள்ள வேண்டும். ஆண் வீட்டுக்கு வெளியே தம்பதியின் புற உலகில், உன்னதமாகக் கருதப்பட வேண்டியவன் (Supreme). எனவே அதற்குத் தகுந்தாற் போன்று, அவனுக்கு அதிகமான கல்வியும் ஞானமும் அளிக்கப்பட வேண்டும். வீட்டு உலகம்—மனையியல் பெண்ணுக்கே உரியது. வீட்டை நிருவகிக்க, குழந்தைகளைப் பெற்று வளர்க்கக்கூடிய கல்வி அவளுக்கு அளிக்க வேண்டும்—

பெண்களுக்கென்று ஏற்படுத்தப்படும் கல்விக் கூடங்களில் ஆங்கிலக் கல்வி தேவையில்லை...

ஆணும் பெண்ணும் சமமானவர்கள் தாம்; ஆனாலும் அவர்கள் தத்தம் இயல்புகள் முழுமையாகப் பரிணமிக்க, கல்வி ஒரே மாதிரி இருத்தலாகாது என்று மேலும் உரைக்கிறார் தேசத்தந்தை.

நமக்கு ஏதோ விளக்கெண்ணெய் நாவில் பட்டாற்போல் இல்லை? இவளுடைய முழுத்திறமையும் அறிவும் ஆற்றலும், ஆணுக்கு உதவியாக, சமைத்துப் போட்டு, பணி செய்து வீட்டைப் பேணி, குழந்தைகளைப் பார்த்து...எந்த முரண்பாட்டிலும் விட்டுக் கொடுத்து, தலைவணங்கி, பொருளாதார உற்பத்தி உரிமை எல்லாம் அவனுக்கே யாக்கி...இந்தக் கல்விதான் வலியுறுத்தப்படுகிறது.

கொஞ்சம் மாறுதலாக, விடுதலைக் காற்றை நாம் பாரதியின் வரிகளில்தான் சுவாசிக்க முடிகிறது.

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்து வந்தோம்*
*எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை*

என்றெல்லாம் தெம்பு கொடுக்கிறார். அத்துடன் கல்வியின் குறிக்கோள் ஓர் ஆணின் சுகத்துக்கு இல்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

*'சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள் தீயிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்'*—என்று தீர்த்து விடுகிறார்.

பின்னர், வெறும் மனையடிக் கல்வி இல்லை என்பதை.

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும் ஓது பற்பல நூல் வகை கற்கவும், இலகு சீருடை நாற்றிசை நாடுகள் யாவுஞ் சென்று, புதுமை கொணர்ந்திங்கே—நாங்கள் பாரத தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்!" என்று வட்டத்தை மிகப் பெரிதாக்கி விடுகிறார். இத்தனையும் செய்தபின், ஏற்றி, 'ஆண் மக்கள் போற்றிட' என்று சொல்லி அவர்கள் மனந்திரும்பிப் புதிய நெறியை ஏற்றுப் போற்றியாக வேண்டியதையும் குறிப்பாக்குகிறார்.

இது புதிய காற்று; புதிய சுவாசம்; புதிய மணம்.

தாய் முதன்மைச் சமுதாயம், கூட்டு நாயகச் சமுதாயம், தந்தையாண்மைச் சமுதாயமாகி, பிரபுத்துவ நெறி, முதலாளித்துவ நெறி என்றெல்லாம் மாற்றங்கள் சமுதாயத்தின் செயல்பாடுகளில், மக்களின், நிலைகளில் பல்வேறு மாறுதல்களைக் கொண்டு வந்தன. வருக்க பேதங்களை நீடிக்கச் செய்யும் நியதிகளே, ஒடுக்கப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்தும் சீர்திருத்தங்களிலும் உயிரோட்டமாக இருந்து வருகின்றன. இந்த அனைத்து மாறுதல்களிலும், அன்றிலிருந்து இந்நாள் வரையிலும், இந்த

உயிரோட்ட நாயகியாகத் திகழ்பவள் பெண்ணே. ஆதிப்பீடத்தில் இருந்து அடுக்களைச் சிறைக்குள் வந்த நாளிலேயே பொருளாதார உரிமை பறி போயிற்று. இவள் சார்ந்த கொம்பே, முட்களாக மாறி இவளைக் குலைத்ததையும் ஏற்றாள். சாத்திரங்களும், மரபுகளும், கலைகளும் காவி யங்களும், இவளைப் பூச்சியாகப் பதப்படுத்தவே உருவாக்கப் பட்டன. காலந்தோறும் என்ற நூற்றாண்டுகளின் பயணத்தில், இவளுடைய தெளிவான பார்வையே, மரபுகளின் மைப்பூச்சில் தன் சிறையிருக்கிறதெனலாம். சிறைச்சுவர்கள் என்று தெரியாமலே அதன் வண்ணங்களில் மயங்கிப் போகிறாள்.

"கற்பு நெறி எனக்கு மட்டுந்தானா?" என்று பாரதி என்ற மாகவிஞன் சொல்லிக் கொடுத்தும் கேட்கத் தெரியவில்லை.

அலுவலகத்து மேலாளனுக்குப் புகைக் குச்சி பற்ற வைத்து, உடலழகு தெரிய நடந்து பேசி, வாணிபச் சரக்கோடு சரக்காக அதன் மதிப்பைக் கூட்டி, பெற்ற ஊதியத்தைக் கணவனுக்குக் குடிக்கக் கொடுப்பதினால் கற்பரசியாக இருப்பதாக எண்ணுகிறாள்.

ஒழுக்கத்துக்கு அப்பால் வந்துவிட்ட கருவைத் தன்னுடைய மாசாக ஏற்றுக்கொண்டு தீக்குளிக்கத் தயங்குவதில்லை. எஞ்சியதைச் சாப்பிடவே உழைக்க வேண்டும் என்று இயங்குகிறாள்.

அன்றாடம், பெண்ணின் பெருமை பேசப்படாத அரங்கு இல்லை. ஓ, பெண்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கும்...எல்லாத் துறைகளிலும்...

# 26. விழிமின்! எழுமின்!

"அம்மா, கனவிலே பாட்டி வந்தாங்க... நல்லா இருக்கிறியான்னு கேட்டாங்க?" என்று அருமை மகள் கூறும்போது—

தாய் மகிழ்ச்சியுடன் 'அப்படியா?' என்று கேட்கவில்லை, பாட்டி, மங்கலமில்லாதவள். கைம்பெண். "அப்படியாம்மா? நல்லாருக்கியான்னு கேட்டாளா? மாரியம்மன் கோயில்ல கற்பூரம் கொளுத்தி வச்சுக் கும்பிடம்மா? ஒண்ணும் வராது!" என்று தாய் மகளின் தலையில் பரிவுடன் கையை வைக்கிறாள். "ஏம்மா? பாட்டிதானே வந்தாங்க?"

ஆமாம்மா. மாரியம்மாதா வந்திருக்கிறதாச் சொல்வாங்க. ஊரில், அங்க இங்கே அம்மை பூட்டிருக்கு. நாம பயப்படக் கூடாது. அவ நல்ல படியாப் பார்த்துப்பா..." என்று மாரியம் மனைத் தஞ்சம் அடைகிறாள்.

இது என்ன நம்பிக்கை?

கனவிலே கட்டுக்கழுத்தி வந்தால் தெய்வ ஆசீர்வாதம், கைம்பெண் வந்தால் மாரித்தெய்வத்தின் அச்சுறுத்தலா?

தாய் வழிபாடு, தந்தைவழிச் சமுதாயமாக வந்த ஆரியர்களிடம் முதலில் இருந்ததில்லை. இந்தியப் பழங்குடி மக்களுடன் போராடியும், வென்றும், சமரசம் செய்து கொண்டும், அந்தப் பழங்குடி மரபுகளையும் கலாசாரங் களையும் தங்கள் கலாசாரங்களோடு ஏற்றுக்கொண்ட விளைவுகளையும் என்று ஊகிக்கும்படி, இன்று நம்மிடையே பல நம்பிக்கைகள் நிலவுகின்றன.

ருக் வேதப் பாடல்களில் பெண் தெய்வங்கள் போற்றப்பட்டாலும், இயற்கையின் ஆற்றல்களின் மாண்புகளே, அத்தெய்வங்களுக்கு வடிவாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

கெடுதல், அச்சுறுத்தல், உயிர்ப்பலி ஆகிய கூறுகளை அத்தெய்வ வழிபாடுகளில் காண முடியவில்லை.

மனிதன் முதன்முதல், இறப்பையும், பிறப்பையுமே தன் அறிவுக்கு எட்டாத பெருவியப்புக்குரிய நிகழ்வுகளாகக் கண்டான். ராஹுல்ஸாங்க்ருத்யாயன், தம் 'மனித சமுதாயம்' என்ற நூலில் கூறுகிறார்:

மனிதன் அடிபட்டதும், குருதி பெருகுகிறது; குருதி பெருகி ஓடியபிறகு, அவன் சத்திழந்து, வீழ்ந்து, மரணநிலையை அடைந்துவிடுகிறான். இதற்குப் பிறகு அவனை எழுப்ப முடியவில்லை. எனவே, குருதி அவன் அறிவுக்கு விலைமதிப் பற்ற பொருளாயிற்று. இதேபோல், பிறப்புக்குக் காரணமாக அவன் பெண்ணின் பிறப்புறுப்பை அற்புதமாகக் கருதினான். அந்தச் சின்னத்தையே வணங்கத் தலைப்பட்டான். இதுவே பின்னர், ஆணின் உறுப்புடன் சம்பந்தப்படும் இணைவாக— லிங்க வடிவாயிற்று என்று கருத்துரைப்பார். தாய் வழிபாடும், குருதிப் பலியும், ஆதிச் சமுதாயத்தின் முதல் அச்சங்களைத் தவிர்த்துக் கொள்ளும் இறை நம்பிக்கைகளாக உருவெடுத்தன. இந்தத் தொல் குடியினரின் மரபுகள் தாய்வழிச் சம்பிர தாயங்கள், இங்கே நிலவியபோது, தந்தையாண்மை சமுதாயத்தினரான ஆரியர் வந்ததும், நிகழ்ந்த மாற்றங்களும் பல்வேறு சான்றுகளால் குறிப்பிடப்பட்டிருப்பதை இதுகாறும் கண்டோம்.

சுருங்கக் கூறினால் இந்தச் சமுதாய வரலாறே, பெண்ணின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி, அவள் இயக்கங்களை ஒருவழிப்படுத்த, ஓர் அடிமை மனப் பான்மையில் நிறைவுகொள்ள, பதப்படுத்தும் வரலாறாகவே வந்திருக்கிறதெனலாம்.

இந்தியாவில் தாயர் உரிமை நூலை எழுதிய, அறிஞர் எவர்ரென்ஃபெல்ஸ், குழந்தை மணம், ஆண் மேல்நிலைத்

தொடர்புடைய மணம், கைம்பெண் சாத்திரம், சதி முதலிய கூறுகளை முக்கியமாகக் குறிப்பிடுகிறார்.

கற்பு என்று ஒரு நெறி, வலியுறுத்தப் பெறுகிறது. பெண்ணுக்கு மட்டுமே மாரி, பிடாரி எல்லையம்மன் என்ற சிறுபெண் தெய்வங்களனைத்தும் அந்தந்த இடத்தைச் சார்ந்த வரலாறுகள்—பல விவரங்களைத் தருகின்றன. குறிப்பாக, ரேணுகாதேவி அம்மன், மாரியின் அம்சமாகக் கருதப்படுகிறாள்.

கார்த்த வீரியார்ச்சுனன் என்பவன் கந்தருவன் என்றும், ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகா அவனைப் பார்த்து மனம் தடுமாறினாளென்றும் அதனால் மணலால் லிங்கம் பிடித்துப் பூசை செய்ய முடியாமல் கற்பு நெறி குலைந்ததால், ஜமதக்கினி முனிவர் வெகுண்டு, தனயன் பரசுராமனை அவள் சிரம் துணிக்கச் சொன்னாரென்றும் பரசுராமன் தந்தை சொல்லேற்றுத் தாயைக் கொன்றான் என்றும் கதை சொல்லப்படுகின்றது.

தந்தையின் வாக்கை நிறைவேற்ற, பரசுராமன் தாயை கோடாரியால் வெட்டிக் கொன்றான். தந்தை மனமகிழ்ந்து வரம் கேட்கச் சொல்ல தனயன் வரம்பெற்றுத் தாயை எழுப்பினான் என்பது வரலாறு.

இந்தக் கதையில் முக்கிய நெறியாகிய கற்பும், தந்தைதான் பெரியவர் என்ற நீதியும் வலியுறுத்தப்படுகின்றன.

ரேணுகை, தாய்ச் சம்பிரதாயக் கன்னியாக, சுதந்தரமாகக் கார்த்த வீரியார்ச்சுனன் என்ற க்ஷத்திரியனை விரும்பி இருக்கலாம். பெண்ணின் விருப்பமே இங்கு பறிக்கப்படுகிறது. முனிவராகிய அந்தணருக்கு மனையாட்டி என்றால், ஒடுக்கப்பட்ட துறவு வாழ்க்கை, முனிவர்கள் பல பெண்களைக் கூடலாம். ஆனால் முனிபத்தினிக்குக் கற்பு உயிரைக் காட்டிலும் பெரிதும் பெரிது. எனவே தலை துண்டிக்கப்

படுகிறது. இந்த வரலாற்றின் பின்பகுதியில் ரேணுகா, தெய்வமாகிறாள். ஒரு தேவனுக்குத் தேவி என்றில்லாத ஆங்காரத் தேவதை தலைமட்டுமே தெரியும் அம்மன் உருவங்கள் பலவும் இவ்வாறு தாயுரிமை அழிக்கப்பட்ட வரலாற்றின் சின்னங்களாக, தந்தையாதிக்கம்—பின்னர் ஆணாதிக்கச் சமுதாய தெய்வங்களில் உயர்வரிசைகளில் இல்லாவிட்டாலும் குடித் தெய்வங்களாக, ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அநியாயமாகப் பறிக்கப்பட்ட உயிர் என்ற வகையில் இத்தெய்வங்களின் கோபமே மனிதருக்கு ஏற்படும் நோய், பிணிகளுக்கெல்லாம் காரணம் என்ற கருத்தும் நம்பிக்கையும் தோன்றியிருக்க வேண்டும். பாரதம் போன்ற வெப்பப் பிரதேசத்தில் ஏற்படும் அம்மை நோயின் கடுமைக்கு, ஆதியிலேயே இவ்வாறு தேவனற்ற ஒரு தெய்வம் காரணமாக நம்பப்பட்டு வந்திருக்கிறது.

உயிருடனிருக்கும்போது செய்த கொடுமைகளுக்குப் பரிகாரமாக, அவளைத் தெய்வமாக்கிவிடும் நடப்பே இங்கு தொடர்ந்து வந்திருக்கிறது என்று கருதலாம். ருக்வேதப் பெண் தெய்வங்கள், பல புதல்வர்களுக்கு அன்னையராக, சகோ தரிகள் புதல்வியர் என்ற நிலையில் விளங்குகின்றனர்.

ஆனால், கொற்றவை, பகவதி, போன்ற இந்தத் தெய்வங்கள் அவ்வாறு ஆண் தொடர்பு இல்லாத நிலையில், உக்கிர சக்தி வடிவங்களாகவே திகழ்கின்றனர். பிற்காலத்தில், இந்த இரு மரபுகளும் இன்னும் பந்தப்படும் வகையில், காளி, பரமசிவனின் தேவியென்றும் திருமாலின் சோதரி என்றும் சமுதாயத்தின் உயர்வருண—மேல்படி மக்களும் வழிபடற் குரியவர்களாக இணைக்கப்பட்டனர் என்று ஊகிக்கலாம்.

சிவசக்தி நடனம் என்ற ஒரு புராண வரலாறு, இன்றும் தில்லை நடராசப் பெருமானையும், அங்கு ஏற்கெனவே கோயில் கொண்டிருந்த எல்லைக் காளியையும்

தொடர்புபடுத்திக் காட்டும். காளி அந்தத் தலத்தில் கோயில் கொண்டிருந்தாள். நடராசப் பெருமாள் அங்கு வந்ததும் இடத்துக்காக ஒரு போட்டி நடனம் தொடங்கியது. நடனத்தில், காளி அற்புதமாக ஆடினாள். நடராசப் பெருமானால் காளியை வெல்ல முடியும் என்று தோன்றவில்லை. அவர் ஒரு தந்திரத்தைக் கையாண்டார். ஒரு காலை ஆகாயத்தில் தூக்கினார். இந்த நடனத்தைப் பெண்ணாகிய காளியினால் பின்பற்ற முடியவில்லை. எனவே தலைகுனிந்து தன் தோல்வியை ஒப்புக்கொண்டாள். இடத்தை விட்டுக் கொடுத்து எல்லைக்கு அப்பால் சென்றாள் என்பது வரலாறு.

பெண்ணை, இத்தகைய, கற்பொழுக்கம் சார்ந்த, ஒரு வரையறையில் பிணிப்பதை இந்நிகழ்வு அறிவுறுத்துகிறது. அவள் காலைத் தூக்கி ஆடும் ஆட்டத்துக்குப் பாலியல் சார்ந்த ஒரு பொருளைச் சுட்டி, அவளைக் கட்டுப்படுத்துகிறது. அவளுடைய சுதந்திரத்தின் நாணம் என்ற ஒரு கடிவாளக் கயிறைப் பூட்டும் இந்த நெறி பெண்ணுக்குரிய அடிமைக் கலாசார மரபின் முதல் பிணிப்பாகப் புகுத்தப்பட்டது. இந்த நாணம் அவளைத் தன்னை எப்போதும் பாலியல் தொடர்பான ஓர் எண்ணத்திலேயே அமிழ்த்திக் கொண்டிருக்கும். அதைத் தொடர்ந்து, அச்சம், அறியாமை என்ற எல்லாம் அவளுடைய 'குண நலன்களாக' வரையறுக்கப்பட்டு விட்டன. 'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்று போற்றப்பட்ட போது, கண்மூடிய அஞ்ஞானத்துடன், அதில் மகிழ்ந்து போயிற்று, இந்தப் பெண்குலம். இன்றும், அது தொடர்ந்து வருகிறது.

துர்க்கை, காளி, பராசக்தி, மாரி என்ற தாய் வழிபாட்டுத் தெய்வங்கள் இந்நாளில், மூலை முடுக்குகள் விடாமல் பல பெயர்களில் கோயில் கொண்டுள்ளனர். சந்தோஷி மாக்கள், சீதளா தேவியர், கண்ணகி, பகவதி, என்று நாடு முழுதும்,

இத்தெய்வ வழிபாடுகள் அணிமைக் காலங்களில் செல்வாக்குடன் பரவி வருவதைக் காண்கிறோம்.

இந்த வழிபாட்டில், அதிகமாகப் பங்கு பெறுபவர் பெண்களே. கூட்டம் கூட்டமாகப் பெண் மக்கள் குழுமுகிறார்கள். புகழ்பெற்ற தேசியத் தலைநகரில் உள்ள கோயில் துர்க்கையம்மனுக்கு இராகுகால அபிஷேகம். குடம் குடமாகப் பால் வந்திறங்கி ஒரு வெண்மைப் புரட்சியையே, நீர்க்கால்களில் அவிழ்த்து விடுகிறது. அணியணியாகப் பெண்கள், கன்னியர், வந்த வண்ணமிருக்கிறார்கள். இக்கன்னியர், ஸல்வார்-கமீஸ், அணிந்து வருகிறார்கள்; தாய் மொழியில் பேசுவதைக் கூட அநாகரிகமாகக் கருதுகிறார்கள்.

இவர்கள் ஸ்டெதஸ்கோப் பிடிப்பவர்களாக இருக்கலாம், காரோட்டலாம்; பேனா பிடிக்கலாம், ஆணையிடும் அதிகார பதவியைப் பெற்றிருக்கலாம். நீதிமன்றங்களில் வழக்காடு பவர்களாக இருக்கலாம். இங்கே வரும் வருக்கத்தினர் அனைவரும், சமுதாய அளவில் முன்னணியில் நிற்பவர்களே. ஆனால் இந்தப் பெண்கள், எலுமிச்சம்பழத்தைக் கொண்டுவந்து மூடிகளாக்கி, சாற்றைக் கல்லில் பிழிந்துவிட்டுக் கிண்ணம்போல் திருப்பி, கையில் கொண்டுவந்த குப்பி நெய்யை அதில் கவிழ்த்து, திரி போட்டு துர்க்கை சந்நிதியில் விளக்கு ஏற்றிவிட்டு மூன்றோ ஐந்தோ சுற்றுக்கள் சுற்றி விட்டும் போகிறார்கள். ஏன்? பிரார்த்தனை.

கருமாரி கோவிலிலோ, மாங்காட்டு அன்னையின் கோவிலிலோ ஞாயிற்றுக்கிழமைப் பேருந்தகளில் வந்து குவியும் கன்னியரோ, தாயரோ ஏராளம்...

இவர்கள் அனைவரும் இந்த உக்கிர தேவிகளை வழிபடுவதற்குரிய பிரார்த்தனை எதுவாக இருக்கும்?

தாயே, உனது கடாட்சம், என் துணிவுக்கு ஆதரவாக இருக்கட்டும், என்று கேட்கிறார்களா? உனது வீரியத்தை,

உனது ஆற்றலை தனித்து நிற்கும் உன் செம்மையை எங்களுக்கு அருள்வாய் என்று வேண்டுகிறார்களா? கயமையும் மோசடியும் நிறைந்த இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில், அஞ்சியஞ்சி ஒழுக்கத்துக்கும் கற்புக்கும் ஊறு வராமலிருக்க வேண்டுமே என்று சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு, இந்த மூடக் கட்டுப்பாடுகளையும் மூத்த பொய்மைகளையும் உடைத்தெறிய வல்லமை தா என்று வரம் நாடி வருகின்றனரா?

இந்த வரங்களெல்லாம் கேட்கவும்கூட, அவர்கள் தாங்களாகச் சிந்திக்க வேண்டுமே?...

இவர்களை இந்த வழிபாட்டைச் செய்ய ஆணையிட்டிருப்பவர்கள், காவியுடைச் சாமியார்களோ, தாடி மீசை, உருத்திராட்சப் பூசாரிகளோ தாமே?

ஆறு வாரம் எலுமிச்சை விளக்கேற்றுங்கள்; அதற்குள் மங்கள மஞ்சள் ஏறத் திருமணம் நிச்சயமாகும்.

ஆறு வாரம் அம்பாள் சந்நிதியில், மஞ்சள்சரடு கொண்டு கட்டுங்கள், உங்கள் புதல்வியின் கழுத்தில் மஞ்சள்சரடு தவழும்.

இராகுகாலப் பூசை, அபிசேகம் செய்யுங்கள், உங்கள் போக போக்யங்களை அநுபவிக்க ஒருவன் வந்து குதிப்பான்!

அம்மன் சந்நிதிகளில் எத்தனை மஞ்சள்சரடுகள்? எனது, உடல் உள்ளம், திறமை, பொருள், எல்லாவற்றின் மீதும் ஓர் ஆணின் முடிச்சு இறுகட்டும்; அவன் ஆதிக்கம் என்னைச் சிறைப்படுத்தட்டும், என்னை ஓர் ஆண் குழந்தைக்குத் தாயாக்கட்டும்...கண்களை மூடிக்கொண்டு, மூடத்தலத்திலேயே இவர்களை வழிநடத்திச் செல்வதில், சமயச் சக்திகள் விழிப்புடன் இருக்கின்றன.

ஆயிரமாயிரமாகக் கல்லூரிகளில் கல்வி கற்றும் தொழில் செய்தும், சமத்துவம் சமத்துவம் என்று முழங்கியும், இவர்கள் அறிவுக் கண்கள், இரண்டாம் பட்ச மயக்கத்தையே சொர்க்கம் என்று எண்ணி மயங்கிக் கொண்டிருக்கிறது. நான் ஏன் இந்தச் செய்கைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்கும் அறிவு சுத்தமாக மூடிக் கிடக்கிறது.

வரதட்சணைக் கொலைகள், குரூரக் கற்பழிப்புக்கள் ஒழிக்கப்பட்டது என்று நினைத்திருந்த 'ஸதி' எரிப்பின் மீட்சிகள், பெண் சிசுக் கொலைகள், பெண் கருவழிப்புக்கள் எல்லாம், ஒரு பக்கம் ஓங்கி வரும் பெண் எழுச்சிக் கருத்துக்களை, ஓங்கி அடித்து அமுக்கும் ஆதிக்கத்தின் எதிரொலிகளே. ஆனால் 'காலந்தோறும்' வரலாறாகத் தொடர்ந்து வந்திருக்கும் அடக்குமுறை ஆதிக்கக் கூறுகள், சமயப் போர்வை போர்த்தாலும், சாத்திரப் போர்வை போர்த்தாலும், அது கிழிபட்டு வீழும் நாள் அருகாமையிலேயே இருக்கின்றதென்று நம்புவோம். புதிய சமுதாய சமத்து வத்துக்குப் பெண்ணே வழியமைப்பாள்.

卐

## ராஜம் கிருஷ்ணனின் பிற படைப்புகள்

கூடுகள்
பாதையில் பதிந்த அடிகள்
அமுக்கு
தோட்டக்காரி
மண்ணகத்துப் பூந்துளிகள்
சுழலில் மிதக்கும் தீபங்கள்
கோபுர பொம்மைகள்
ஆண்களோடு பெண்களும்
புதிய சிறகுகள்
சேற்றில் மனிதர்கள்
*(பாரதீய பாஷா பரிஷத் மற்றும் இலக்கியச் சிந்தனை பரிசுபெற்றது)*
வீடு
கரிப்பு மணிகள் *(இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது)*
முள்ளும் மலர்ந்தது
விலங்குகள்
வேருக்கு நீர் *(சாகித்ய அகாதமி பரிசு பெற்றது)*
பெண் குரல் *(கலைமகள் பரிசு பெற்றது)*
புயலின் மையம்
மானுடத்தின் மகரந்தங்கள்
கூட்டுக் குஞ்சுகள்
இறுதியும் தொடக்கமும்
அலைவாய்க்கரையில்
ரோஜா இதழ்கள்
குறிஞ்சித்தேன்
வளைக்கரம் *(சோவியத் நாடு நேரு பரிசு பெற்றது)*

**சிறுகதைத் தொகுதி**

- களம்
- கனவு
- அவள் *(சரஸ்வதி பரிசு பெற்றது)*

**வரலாறு**

- பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி

**கட்டுரை**

- காலந்தோறும் பெண்மை
- காந்தி தரிசனம்
- யாதுமாகி நின்றாய்

## எமது பெண்ணிய நூல்கள் சில...

### கட்டுரை

| | |
|---|---|
| பெண் விடுதலை | ராஜம் கிருஷ்ணன் |
| காலந்தோறும் பெண் | ,, |
| காலந்தோறும் பெண்மை | ,, |
| இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை | ,, |
| யாதுமாகி நின்றாய் | ,, |
| பெண்ணுரிமை – சில பார்வைகள் | மைதிலி சிவராமன் |
| சமூகம் ஒரு மறு பார்வை | ,, |
| பெண்ணியம் | Dr. இரா. பிரேமா |
| பெண்ணியம் அணுகுமுறைகள் | ,, |
| கற்பு கலாச்சாரம் | ,, |
| பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் | Dr. முத்துச் சிதம்பரம் |
| தமிழக நாட்டுப்புறவியலில் பெண்கள் | ,, |
| பெண் – வார்ப்பும் வளர்ப்பும் | பேரா. பாரதி |
| பெண்ணிய நோக்கில் பாரதி | பேரா. சி.என். குமாரசாமி |

### நாவல்

| | |
|---|---|
| பெண் | அகிலன் |
| சிநேகிதி | ,, |
| பொன்மலர் | ,, |
| சித்திரப் பாவை | ,, |
| எங்கே போகிறோம்? | ,, |
| வீடு | ராஜம் கிருஷ்ணன் |
| கூட்டுக் குஞ்சுகள் | ,, |
| பாதையில் பதிந்த அடிகள் | ,, |
| சத்திய வேள்வி | ,, |
| வனதேவியின் மைந்தர்கள் | ,, |


024400